பொன் குலேந்திரன் (கனடா)-வின்

# சிறுவரின் சிந்தனைக்கு

## ௨௬ சிறு கதைகள்



# சிறுவரின் சிந்தனைக்கு
# 27 சிறு கதைகள்

## எழுதியவர்
## பொன் குலேந்திரன் (கனடா)

# சிறுவரின் சிந்தனைக்கு
# *27 சிறு கதைகள்*

*ஆசிரியர் : பொன் குலேந்திரன் (கனடா),*
*kulendiren2509@gmail.com*

*அட்டைப்படம்,*
*மின்னூலாக்கம் : பிரசன்னா, udpmprasanna@gmail.com*

*எழுத்துப் பிழை திருத்தம் : வித்யா ஶ்ரீ,*
*vidhyasreethirugnanam@gmail.com*

*மின்னூல் வெளியீடு : FreeTamilEbooks.com*

*உரிமை : CC-BY-SA – கிரியேட்டிவ் காமன்ஸ். எல்லாரும் படிக்கலாம், பகிரலாம்.*

# பொருளடக்கம்


உங்கள் மாமாவிடம் இருந்து......5
கதை 1 என் அம்மா......6
கதை 2 வௌவால் மனிதன்......8
கதை3 யால ஜங்கில் கலியாணம்......12
கதை4 நத்தார் பரிசு......19
கதை 5 அப்பா செய்த கணக்கு......24
கதை6 சோம்பேறியின் சாதனை......29
கதை7 மெலடியும் ரொபினும்......34
கதை8 மூன்று குட்டி சாத்தான்கள்......41
கதை 9 தொலைந்த புத்தகம்......44
கதை 10 துவண்டு விடும் அனிச்சா......49
கதை 11 அன்புள்ள ஆட்டுக்குட்டி......53
கதை 12 பூஜாவின் பூனைக்குட்டி......58
கதை 13 கரும்பலகையும் கணினியும்......64
கதை 14 மௌனி டீச்சர்......65
கதை 15 நடராஜவுக்கு நல்ல மனசு......72
கதை 16 தெரு நாய்......75
கதை 17 எனக்கு நேரமில்லை......78
கதை 18 குக்கூ கடிகாரம்......82
கதை 19 அப்பாவின் பரிசோதனை......84
கதை20 பொம்மை......86
கதை 21 கஸ்தூரியின் காலணி......91
கதை 22 நத்தார் தாத்தாவுக்கு ஒரு கடிதம்......96
கதை 23 எனது பார்க்கர் 51 பேனா......98
கதை 24 கழுதையும் ராஜாவும்......107
கதை 25 அணில் பிள்ளை......110
கதை 26 என் தம்பி......115
கதை26 கழுகு மனிதன்......123

# <u>உங்கள் மாமாவிடம் இருந்து</u>

*இந்த தொகுப்பில் உள்ள 27 ‘ சிறுவர்களின் சிந்தனைகளை தூண்டும் சிறுகதைகள்’ஒவ்வொன்றும் வித்தியாசமானவை. இவை ஒரு வருட காலத்தில் எழுதியவை .இவை , ஹாரி பாட்டர் (HARRY POTTER) போன்ற கதைகள் இல்லை. இவை வாழ்கையில் நடந்த சம்பவங்களை வைத்து எழுதியவை .இந்த தொகுப்பில் வரும் முதல் கதை ‘தாய் தினத்துக்கு’ எழுதிய கதை .பலரின் பாராட்டை பெற்றக்கதை .தாயின் பாசத்தை எடுத்து சொல்லும் கதை .சிறுவர்கள் என்று வரும் போது பெற்றோர் ,புத்தகம் , பேனா, டீச்சர் ,கரும்பலகை போன்றவை சிறுவர் மனதில் நிற்கும் . பெற்றோர் எதை செய்ய சொன்னாலும் சிறியவர்கள் சிலர் தங்களுக்கு நேரமில்லை என்பர் . அதுக்கும் ஒரு கதை உண் டு. சிறுவர்கள் விரும்புவது பொம்மை , ஆடு, பூனை நாய்,அணில்பிள்ளை,காலணி .அவைகளுக்கும் இத்தொகுப்பில் கதைகள் உண்டு. சில சிறுவர்களுக்கு ஒரு செய்தியை சொல்லும் உருவகக் கதைகளும் உண்டு . வீட்டில் ,தம்பி மேல் பற்று உள்ள சிறுவர்கள் பலர் உண்டு .கடைசிக்கு முதல் கதை என் நண்பனின் தம்பி பற்றியது . கடைசிக் கதை ஒரு ஊருக்கு நண்மை செய்யும் கழுகு மனிதனுடையகற்பனைக் கதை. கதைகளை பொறுமையாக இருந்து வாசித்து சிந்தியுங்கள் . அதில் நீங்கள் எங்கே பொருந்துகிறீர்கள்? என்பதை நீங்களே தீர்மானியுங்கள் .*

**நன்றி.**

# கதை 1 என் அம்மா

என் குடும்பத்தில் அம்மா, அப்பா, அக்கா,அண்ணா, மாமா , அம்மம்மா , முத்து ஆகிய நான் குடும்பத்தில் சிறியவன் , கடைக்குட்டி பயல். ஒன்பதாம் வகுப்பில் படித்தக் காலம் அது . ஐம்பதில் 'சிவாஜி கணேசன்' முதலில் நடித்த ' பராசக்தி' படம் வந்திருந்த காலம் . அந்த படத்தை என் இரு நண்பர்கள் பார்த்து விட்டு அதில் வந்த வசனங்களை திருப்பித் திருப்பி எனக்குச் சொல்லியது பராசக்தி படம் பார்க்க என்னைத் தூண்டிற்று . அப்போது இருந்த யாழ்ப்பாணம் வெலிங்டன் தகரச் சுவர்கள் உள்ள சினிமாத் தியேட்டரில் வங்கில் இருந்து பார்க்க 1950 இல் கலரி 55 சதம் . அது பெரிய காசு. அந்தக் காலத்தில்,முட்டை தேங்காய் ஒன்று ரெண்டு சதம். இப்ப அந்த இரண்டு சதம் புழக்கத்தில் இல்லை .

நான் இரண்டாம் கிளாசில் இருந்து படம் பார்ப்பது வழக்கம். அப்போது இரண்டாம் கிளாசில் கதிரையிலிருந்து பார்க்க ஒரு ரூபாய் ஐம்பத்தைந்து சதம் . என் அப்பாவிற்க்கு கக்சேரியில் வேலை. அவர் மாத முடிவில் சம்பளம் கிடைத்தவுடன் எனக்கு 'ஒரு ரூபாய்' என் மாத பாக்கெட் செலவுக்கு தருவார் . அதை நம்பி வாழ்ந்தவன் நான் . அந்த பணத்தில் ,'அம்புலிமாமா' என்ற சிறுவர் சஞ்சிகை ,ஐஸ்கிரீம்,சூசியம் கடலை,கொய்யாப்பழம் போன்ற நொட்டுத் தீனீகள் வாங்குவேன். சில சமயம் அம்மம்மாவுக்குச் சுருட்டு வாங்கி வந்து கொடுத்தால் பத்து சதம் தருவாள் . அது மாதம் மூன்று தடவைகள் அவளிடம் இருந்து எனக்கு வரும் வருமானம்.

****

" அப்பா எனக்கு இரண்டு ரூபாய் தரமுடியுமா?. பராசக்தி படம் பார்க்க இரண்டாம் கிளாஸ் செலவோடு கடலை ,ஆரஞ்சு ,பார்லி செலவையும் சேர்த்துக் கேட்டேன் ".

"அக்காவைப் போய் காசு கேள். அவ வைச்சிருப்பா" அப்பாவின் பதில் வந்தது.

டீச்சராக வேலை செய்யும் என் அக்காவிடம் போய் கெஞ்சிக் இரண்டு ரூபாய் கேட்டேன்.

" முத்து எனக்கு இன்னும் சம்பளம் வரவில்லை . என்னிடம் காசு இல்லை . நீ போய் அண்ணாவைக் கேள் ;அவன் தருவான் " . அக்கா பதில் சொன்னாள்.

வங்கியில் வேலை செய்யும் என் அண்ணாவிடம் போய் இரண்டு ரூபாய் காசு கேட்டேன்.

"எனக்கு இன்னும் சம்பளம் வரவில்லை. என் சைக்கிள் ரிப்பேர் செலவு வேறு இருக்கு. அம்மம்மாவை போய் கேள்." அண்ணாபதில் சொல்லிவிட்டு நிற்காமல் போய் விட்டான்.

என் அம்மம்மா . படு சிக்கனக்காரி அவளுக்குக் கிடைப்பதோ, என்பாட்டா இறந்த பின் வருகிற சிறு பென்சன் தொகை . அவர் இறந்து ஆறு வருஷம். கிடைக்கிற பென்சன் அவளின் மருந்து, டாக்டர் செலவுக்கு சரி. அதிலை கோவிலுக்கும்,சுருட்டுக்கும் ,வெற்றிலை பாக்குக்கும் காசு தேவை. எதற்கும் அவளைக் கேட்டுப் பார்ப்போம், என்று அவளிடம் போய் இரண்டு ரூபாய் கேட்டேன்.

*" ஐயோ ராசா எனக்கு பென்சன் இன்னும் வரவில்லை. சுருட்டு வாங்க மட்டும் காசு வைச்சிருக்கிறேன் . என்னிடம் இரண்டு ரூபா இல்லை. உண்டை மாமாவிடம் போய் கேள் அவர் தருவார் "அம்மம்மா பதில் சொன்னாள்.*

*அம்மாவிடம் போய் இரண்டு ரூபாய் கேட்டேன்.*

*" நான் பில்கள் கட்டவேண்டும். பால்காரன், பேப்பர் காரன், கக்கூஸ் காரனுக்கு காசு கொடுக்க வேண்டும் ,எலெக்ட்ரிக் பில் , வீட்டு வாடகை கட்ட வேண்டும் என்று, அம்மாவிடம் இருந்து பதில் வரலாம்" என்று எதிர்பார்த்தேன்.*

*"அதுசரி, உனக்கு இப்ப எதுக்கு இரண்டு ரூபாய் "?அவள் கேட்டாள் .நான் காரணம் சொன்னேன்.*

*நான் அங்கும் இங்கும் இரண்டு ரூபாய் கேட்டு அலைவதைப் பாரத்துக் கொண்டு இருந்த என் அம்மாவுக்கு என் மேல் அனுதாபம் வந்தது .*

*ஐம்பது வருடங்களுக்கு முன் என் பாட்டா அவளுக்கு வாங்கிக் கொடுத்த தகர டிரங்குப் பெட்டியைதன் மடியில் இருந்த சாவியை எடுத்து அவள் திறந்தாள். டிரங்குப் பெட்டிக்குள் சாவி போட்ட ஒரு பெட்டி.. அதை வேறு சாவி போட்டுத் திறந்தாள். அதுக்குள் சிறு கொட்டைப்பெட்டி . அதுக்குள் அவள் மடித்து வைத்திருந்த காசில் என்னிடம் ஒரு புது இரண்டு ரூபாய் நோட்டு ஒன்றை எனக்குத் தந்தாள். .என்னால் நம்ப முடியவில்லை. அவளைக் கட்டிப்பிடித்து ஒரு முத்தம் கொடுத்தேன்.*

*அம்மாவின் முகம் மலர்ந்தது . அது தான் தாய்ப் பாசம்.*

********

# கதை 2 வௌவால் மனிதன்

*சில ஆண்டுகள் டீ. வி காட்சிகளில் தனது வீர, தீர செயல்களால் சிறுவர்களினதும் வயது வந்தவர்களினதும் பாராட்டைப் பெற்ற 'வௌவால் மனிதன் ஹரி' நிம்மதியாக தூங்கிக் கொண்டு இருந்தான்.*

*ஒரே மக்கள் கூட்டத்தின் குரல்கள் "ஒழிப்போம் ஒழிப்போம் வௌவால்களை ஒழிப்போம் ;கொரோனா வைரசை எமக்கு தந்த வௌவால்களை ஒழிப்போம்; நிறுத்துவோம் ! நிறுத்துவோம் ! வௌவால்களை நாம் உண்பதை நிறுத்துவோம்...!"*

*முகமூடியையும் ஆடையையும் களையாமல் படுத்த 'வௌவால் மனிதன் ஹரியை' வௌவால் மனிதனின் தாய், 'லூசி' எழுப்பினாள்.*

*"தம்பி எழும்படா !எழும்படா !எங்கள் இனம் அழியப்போகுது. இந்த மனித இனம் எம் இனத்தை சுவைத்து உண்டு விட்டு, இப்போ கொரோனா வைரசை உருவாக்கியது 'எம் இனம்' என்று எம்மேல் குற்றம் சாட்டுகிறது".*

*"எம்மை பாராட்டியவர்கள் ஏன் திடீர் என்று இப்படி மாறி விட்டார்கள் அம்மா".*

*"ஆமாடா தம்பி, " நீ வௌவால் மனிதனாக நடித்து பல உயிர்களைக் காப்பாற்றியவன்" என்று உன்னைப் பாராட்டியவர்கள் ஏராளம். உன் உடை போன்ற உடைளை அதிக விலைக் கொடுத்து கடையில் வாங்கி, அணிந்து, உன்னைப் போல் நடித்தவர்கள் இந்த மனிதர்கள். எங்கள் இனத்தை சுட்டு உண்டார்கள். இப்போ எங்கிருந்தோ வந்த 'கொரோனாவைரஸ்' எங்கள் உடம்பில் இருந்து வந்தது என்றும், எங்கள் இனத்தின் மேல் நாங்கள் பயங்கர வாதிகள் என்று எம்மேல் குற்றம் " அதியன் சாட்டுகிறார்கள் இந்த மனிதர்கள் ".*

*" அதேன் அம்மா...! எங்கள் இனத்தை இந்த தேசத்தில் வெறுக்க ஆரம்பித்தனர் "?*

*"உனக்குத் தெரியுமா தம்பி ...!சீனாவில், வௌவால்கள் பாரம்பரியமாக 'நல்ல அதிர்ஷ்டம் மற்றும் மகிழ்ச்சியின் அடையாளமாக கருதப் பட்ட இனம்' என்று . தாம் மகிழ்ச்சியாக இருக்க எம்மை உண்டார்கள்.உலகளவில் எம் இனத்தில் 1400 க்கும் மேற்பட்ட இனம் உண்டு, துரதிர்ஷ்டவசமாக, (COVID-19) என்ற கொரோனா வைரஸ் நோய் எம் இனத்தில் இருந்து தோன்றியிருக்கலாம், என்ற ஆதாரம் அற்ற வதந்திகள் ,இலங்கையில் அரசியல் காரணத்துக்கு தோன்றிய வததிகள் போலடா தம்பி, அதுவல்லாமல் COVID-19 பரவியதால், சீனாவில் உள்ள மக்கள் தங்கள் வீடுகளில் அல்லது அதற்கு அருகில் உறங்கும் வௌவால்களை வெளியேற்றுமாறு கூறத் தொடங்கியுள்ளனர்.*

*" அம்மா எமது இனம் சுற்றுச்சூழல் அமைப்புக்கு பல முக்கியமான உதவிகளை வழங்குகின்றன. நாங்கள் உயிரியல் மற்றும் பொருளாதார-பூச்சிக்கொல்லிகள் அதோடு பல முக்கியமான தாவரங்களுக்கு மகரந்தச் சேர்க்கை மற்றும் விதைப் பரவலுக்கு உதவுகிறோம். ஆரோக்கியமான வயதான எம்மை , புற்றுநோய் தடுப்பு, நோய் பாதுகாப்பு, பயோமெடிக் பொறியியல், சுற்றுச்சூழல் அமைப்பு செயல்பாடு மற்றும் தகவமைப்பு பரிணாமம் பற்றிய ஆய்வுகளுக்கும் பாவிக்கிறாரகள். எமக்கு 'பறக்கும் மனிதன்' போன்ற தோற்றம், பார்வை உள்ளது . மனிதனை மனிதன் உண்டது போல் எம்மை சுட்டு திண்டார்கள். அது யார் குற்றம் ? எம் குற்றம் அல்லவே...! வௌவால்கள் பற்றிய எதிர்மறையான தாக்கங்கள் கொண்டு வதந்திகளை நம்பி வாழும் மனிதர்களுக்கு 'பொது அறிவியல் கல்வி' அவசியம் தேவை . அது அவர்களின் பாதுகாப்பிற்கு அவசியமானது. அதோடு இன்றியமையாதது." வௌவால் மனிதன் ஹரி சொன்னான்.*

*" தம்பி நாங்கள் குட்டி போட்டு பால்கொடுப்பதால் , எம்மை பறவை இனத்தில் சேர்க்க முடியாது. மேலும் பாலூட்டிகளின் காதுமடல் வெளிப்புறத்தில் இருக்கும். இந்த பண்பும் நாங்கள் பாலூட்டிகள் ,என்பதை நிரூபிக்கிறது.*

*எங்களுக்கு மனிதனைப் போல் கண் உண்டு. இருந்தாலும் எங்களுக்கு கண் பார்வைத்திறன் தேவையில்லை. நாங்கள் "சவுண்டு ரேஞ்சிங்" என்ற ஒலி அலை முறையை பாவித்து இருளில் மோதிக் கொள்ளாமல் எம் விருப்பத்திற்கு ஏற்ப பறந்து செல்கிறோம் . இதற்கு அல்ட்ரா சவுண்ட் ( Ultra Sound) என்ற ஒலி அலைகள் உதவுகின்றன. மனிதர்களால் 80 முதல் 20 ஆயிரம் ஒலி அலைகளை மட்டுமே உணர முடியும். அல்ட்ராசவுண்ட் பல்வேறு துறைகளில் பயன்படுத்தப்படுகிறது. மீயொலி சாதனங்கள் பொருட்களைக் கண்டறிந்து தூரத்தை அளவிடப் பயன்படுகின்றன. '**அல்ட்ராசவுண்ட் இமேஜிங்**'(Ultra sound imaging ) அல்லது **சோனோகிராபி** ( Sonography) பெரும்பாலும் மருத்துவத்தில் பயன்படுத்தப்படுகிறது. தயாரிப்புகள் மற்றும் கட்டமைப்புகளின் சோதனையற்ற சோதனையில், கண்ணுக்குத் தெரியாத, குறைபாடுகளைக் கண்டறிய 'அல்ட்ராசவுண்ட்' பயன்படுத்தப்படுகிறது. தொழில்துறை ரீதியாக, அல்ட்ராசவுண்ட் ரசாயன செயல்முறைகளை சுத்தம் செய்ய, கலக்க மற்றும் துரிதப்படுத்த பயன்படுத்தப்படுகிறது.*

*எமது தொண்டையில் இருந்து ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் ஹெர்ட்ஸ் (1,50, 000 Hz) அளவில் ஒலி உண்டாகிறது. இது எமக்கு 'கடவுள் தந்த கொடை' தம்பி . இதை மனிதன் பிரதி எடுத்து தனது மருத்துவ பாவனைக்கு பாவிக்கிறான் . என்னிடம் இருந்து பல பயன்களைப் பெற்றுக் கொண்டு இப்போ எங்கள் இனத்தை இந்த உலகில் இல்லாமல் அழிக்கப் பார்க்கிறான் . இதில் எதோ ஒரு சர்வதேச அரசியல் கலந்து இருக்குதடா தம்பி "*

*"ஏன் அம்மா அப்படி சொல்கிறீர்கள்? "*

*" எடேய் தம்பி , எங்கள் இனம் உலகம் பூராவும் வாழ்கிறது . அதேன் சீனாவில் இந்த வைரஸ் ஆரம்பித்தது?. அவர்கள் பாம்பு ,தவளை , குரங்கு,பூனை, நாய் என்று கண்டதும் கடையதும்*

*உண்பது உண்மை. அதனால் வேறு விலக்குகளில் இருந்தும் ஏன் இந்த வைரஸ் தோன்றி இருக்க கூடாது. இலங்கையில் காட்டுக்கு துவக்கோடு போய் எம்மை புறா, மான், காட்டுப் பன்றி, உடும்பு போன்றவற்றை சுடுவது போல் சுட்டுக் கொண்டு வந்து சாப்பிடுவதை பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறேன். அது பொருளாதாரம் பின் தங்கிய தேசங்களுக்கும், பொருளதாரம் விருத்தி அடைந்த மேற்கத்திய நாடுகளுக்கும் அந்த கொரோனா வைரஸ் பரவி இருக்கு தம்பி" வௌவால் மனிதனின் அம்மா சொன்னாள்.*

*" இப்ப புரியுது அம்மா. இது சிக்கலான சர்வதேச அரசியல் 'பனிப் போர்' என்று, அமெரிக்கஜனாதிபதி சொல்லுகிறார். இது சீன வைரஸ் என்று ஒருத்தரும் இது வரை 'வௌவால் வைரஸ்' என்று சொல்லவில்லை. சர்வதேச அரசியலுக்கும் இந்த வைரசுக்கும் ஒரு தொடர்பு அவசியம் இருக்க வேண்டும். பல தேசங்களின்பொருளாதாரத்தையும், மக்களின் உயிர்களை வெகுவாக பாதித்து விட்டது, இந்த கொரோனா வைரஸ். இந்த வைரஸ் ஒரு உயிரியல் ஆயுதமாக உரு எடுத்துள்ளது, என நான் நினைக்கிறேன். இது அணு ஆயுதத்தை விட மோசமானது. இதன் இரகசியத்தை நான் கண்டுப்பிடித்து உலகை அழிவில் இருந்து காப்பாற்றுகிறேன் அம்மா. உன் ஆசி எனக்குத் தேவை" என்று கூறிய படியே தாயின் காலில் விழுந்துஆசி பெற்றப் பின் வௌவால் மனிதன் ஹரி புது ஆடை அணிந்து புலனாய்வுக்குப் புறப்பட்டான்.*

*****

*வௌவால் மனிதன் ஹரி முதலில் குறி வைத்து சென்றது, சீனாவின் மத்திய ஹூபே மாகாணத்தில் 11 மில்லியன் மக்கள் வசிக்கும் துறைமுக நகரமான 'வூஹானுக்கு'*

*பாதிக்கப்பட்டவர்களில் பலர் நகரத்தின் ஹுவானன் கடல் உணவு மொத்த சந்தையில் வேலை செய்தனர். செய்திகளின் படி இங்கு வேலை செய்த ஒருவரில் கொரோனா நோய் ஆரம்பித்தது இந்த சந்தை ஜனவரி 1 ஆம் தேதி மூடப்பட்டது. வௌவால் மனிதன் பறந்து சென்று பல கட்டிடங்ளை பார்த்தான். எல்லா கட்டிடங்களும் ஒரு கட்டிடத்தை தவிர மூடி இருந்தன. அந்த கட்டிடத்தில் விளக்கு எரிந்து கொண்டு இருந்தது. அந்த கட்டிடத்தின் சிறு ஓட்டை வழியே அந்த பெரிய அறைக்குள் சத்தம் போடாமல் உள்ளே போக, 'வௌவால் மனிதன் ஹரியால்' முடிந்தது. அது ஒரு உயிரியல்ஆராய்ச்சி கூடம் என்று அறிய அவனுக்கு அதிக நேரம் எடுக்கவில்லை. கூண்டுக்குள் சுண்டெலிகள், பன்றி குட்டிகள், பாம்புகள்,பூனை, நாய், குரங்குகள், வௌவால்கள் இருந்தன. நான்கு விஞ்ஞானிகள் உடல் முழுவதும் பிற கிரகவாசிகள் போன்ற தோற்றத்தில் ஆடை அணிந்து ஆராய்ச்சியில் ஈடுபட் டுக் கொண்டிருந்தனர். அப்போது ஹரி கண்ட காட்சி அவனுக்கு அதிர்ச்சியை கொடுத்து. மூன்று வௌவால்களை வைத்து பரிசோதனை செய்து கொண்டு இருந்தனர். அவர்கள் பேசியது*

*‘குறியிடப் பட்ட சீன மொழி’ ( coded chinese language) வெளவால் மனிதனுக்கு அது தெரியும், அவன உலகத்தில் பல நாடுகளுக்கு பறந்து சென்று வந்தவன் .*

*அவர்களின் பேசியது “ நாம் கண்டுப்பிடித்த இந்த உயிரியல் ஆயுதம் மிகவும் சக்தி வாய்ந்து ; கண்ணுக்குத் தெரியாது;ஆணு ஆயுதத்தை விட திறமை உள்ளது; இனி பல தேசங்கள் எமது சீன தேசத்தை நம்பி வாழவேண்டும் ; இந்த உயிரியல் ஆயுதத்தை பாவித்து முழு உலக நாடுகளையும் எமக்கு கீழ் விரைவில் கொண்டு வரலாம் . இதுக்கு தடுப்பு மருந்து எங்களிடம்உண்டு. இந்த கொரோணா வைரசைத் தடுக்கும் மருந்தை எமது தேசம் மட்டுமே உற்பத்தி செய்யும் . பேக்டோரிகள் (FACTORY) வேலை செய்ய ஆரம்பித்து விட்டன. இதெல்லாம் உயர் மட்டத்தில் இருந்து வந்த கட்டளைப் படியே செய்கிறோம்”.*

*அவர்களின் பேச்சினை தனது செல்லில் பதிவு செய்து அங்கு நிற்காமல் அறைக்கு வெளியே பறந்து சென்றான் ஹரி . தாயிடம் வெளவால் மனிதன் நடந்ததை சொல்லி அந்த பதிவு உரையாடலை போட்டுக் காட்டினான்.*

*“அடப்பாவிகளா..! இந்த ஆயுதத்தை பாவித்து உலகையே ஆக்கிரமிக்க பாக்கிறீர்களா ! உண்மையில் நீங்கள் தான் பயங்கரவாதிகள் . தம்பி இது வாட்ஸ் ஆப்பிலும்(whats app) முக நூல் (face book), இன்ஸ்டாக்ராம்(instagram) ஆகியவற்றில் விளம்பரம் செய். ஊடகங்களுக்கு செய்தியை கொடு . உலகத்தைக் காப்பாற்று " என்றாள் தாய் .*

****

# ***கதை3 யால ஜங்கில் கலியாணம்***

*என் பேரன் விஸ்வா'க்கு பதினைந்து வயது. அவன் ஒரு கணினி பைத்தியம். இணையத்தில் கணினி இரகசியங்களை ஆய்வு செய்வான்மற்றும் கணினி விளையாட்டுக்கள் விளையாடுதிலும் தனது பெரும்பாலான நேரத்தை செலவிடுவான். அவன் ஒரு தீவர சிந்தனையாளன் . அவனது கற்பனை சக்தி அபாரம்.*

*அன்று அவன் பள்ளியில் இருந்து திரும்பியதும், விரைவாக முகம் கழுவி, சிற்றூண்டி உண்ட பிறகு, ஒரு பெரிய புன்னகையுடன் என் பக்கத்தில் வந்து அமர்ந்தான். நான் ஒரு புத்தகம் வாசிப்பில் பிசியாக இருப்பதை போல் பாசாங்கு செய்து அவனை அலட்சியம் செய்தேன். அவன் என் கவனத்தை கவர என் முகத்தைப் பார்த்தப்படி சில வினாடிகள் காத்திருந்தான்.*

*"டடாபொப் (DADAPOP), நான் உங்களுக்கு ஒரு நல்ல செய்தி சொல்ல இருக்கிறேன். நீங்கள் என்னோடு பேசாமல் இருக்குறீர்களே?" என்று அவன் உரையாடலை தொடங்கினான்.*

*எனக்கு "டடாபொப்" என்ற அடைப்பெயர் அவன் உருவாக்கிய பெயர். அப்படிஅழைப்பதன் காரணம் ,அவனோடுமாலில்உலாவச் செல்லும் போது அவன் விரும்பும் பாப்கார்ன் வாங்கிக் கொடுப்பேன். அதை சுவைத்து உண்டப் பின் எனக்கு டடாபொப் என்று என்னை அவன் அழைக்கத் தொடங்கினான். அதுவே என் குடும்பத்தில் எனக்கு பேரனும் பேத்தியும் வைத்த செல்லப் பெயராகிவிட்டது.*

*"அந்தப் புத்தகத்தை மூடி வைத்துவிட்டு நான் சொல்லப் போகும் முக்கிய செய்தியைக் கேளுங்கள் " என்றான் விஸ்வா உரத்த குரலில். அவன் பொறுமையை இழந்து விட்டான் என்று எனக்குத் தெரிந்தது. அவனை தொடர்ந்து நான் கவனியாது விட்டால் அழத்தொடங்கிவிடுவான்.*

*நான் வாசித்த புத்தகத்தை மூடிவிட்டு அவனைப் பார்த்துச் சொன்னேன்,*

.

*"ஐ ஆம் சாரி விஸ்வா. உன் நல்ல செய்தி என்ன சொல்?"*

*" டடாபொப் ,எனக்கு சிறு கதைப் போட்டியில் ஸ்கூலிலை முதல் பரிசு கிடைத்திருக்குது!"*

*" கன்கிராஜுலேசன்ஸ் விஸ்வா .என்ன கதை அது? "*

*"இலங்கை ஜங்கில் கதை"*

*"என்ன இலங்கை ஜங்கில் கதையா? உனக்கு இலங்கை ஜங்கில் பற்றி என்ன தெரியும்?. நீகனடாவில் பிறந்தவனாச்சே! இலங்கைக்கு ஒரு போதும்  நீ போக வில்லையே'' என்றேன் நான்.*

*கதை சுவாரசியமான கதையாகத் தான் இருக்க வேண்டும் என நினைத்தேன். நான் இலங்கையில் ஒரு சர்வேயராக (Surveyor) வேலை செய்த போது வன்னி, வில்பத்து, யால, மகியன்கன பொலநறுவை, கந்தளாய் ஆகிய பகுதிகளில் உள்ள காடுகளைப் பற்றி நன்கு அறிந்தவன்.*

*''அது சரி விஸ்வா ,நீ இலங்கைக்கு ஒரு போதும் போகவில்லையே. அந்தக் காடுகளைப் பற்றி உனக்கு எப்படித் தெரியும்?*

*'' என் அம்மா பிறந்தது கொழும்பில், என் அம்மம்மா பிறந்தது யாழ்ப்பாணத்தில். அவ வாழ்ந்தது தெற்கு இலங்கைப் பகுதிகளில். அவர்கள் எனக்கு வன்னி, வில்பத்து யால காடுகளைப் பற்றி பல கதைகள் சொன்னார்கள். யாலாவில் உள்ள கதிர்காம முருகன் கோவிலைப் பற்றியும் சொன்னார்கள். நான் யூடியூப்பில போய் பார்த்து மேலும் அந்தக் காடுகளை பற்றியும், கதிர்காமத்தைப் பற்றியும் தகவல் அறிந்தேன். அதுவே எனது கதைக்கு கருவாக அமைந்தது. டடாபொப் உங்களுக்குத் தெரியும்எனக்கு இயற்கையென்றால் தனி மரியாதை என்று'', என்றான் விஸ்வா.*

*''இப்போ தெரிகிறது உன் கற்பனை எப்படி உருவாகியது என்று. எந்தக் காட்டு சூழலில் கதையை உருவாக்கினாய்''?*

*''நான் தேர்நதெடுத்தது தென் இலங்கையில் கதிர்காமம் உள்ள யாலவன காட்டை . மயில், பிளமிங்கோ, காட்டுக்கோழி, ஆந்தை போன்ற பறவைகள், யானைகள், சிறுத்தை ,மான், நரிகள், கரடி, காட்டுப் பன்றி, எருமைகள், ஓநாய் போன்ற மிருகங்கள், முதலை, உடும்பு, பாம்பு, ஆமை போன்ற ஊர்வனங்கள் உள்ள காடுமற்றும்அழகான பறவைகள் வெளிநாடுகளில் இருந்து சீசனுக்கு யால காட்டுக்கு விசா இல்லாமல் வந்து போகும்''.*

*" அது சரி யாலவில் லயன் கிங் இல்லையா."*

*"நீங்கள்ஏன் இலங்கை காட்டில் சிங்கம் இல்லையா? என்றுகேட்கிறீர்கள் என்று எனக்குத் தெரியும்".*

*"ஏன் என்று சொல்லு பார்ப்போம்''?*

*" இலங்கை காட்டில் சிங்கம் இல்லை. புலியும் சிறுத்தையும் தான் உண்டு. இலங்கையின் தேசிய கொடியில் சிங்கத்தின் படம் இருப்பதாலும் பெரும்பான்மை மக்கள் சிங்கபாகு வழி வந்தவர்கள் என்பதாலும்சிங்கம் இலங்கைக்காட்டில் இருக்க வேண்டும் என்பதில்லை".*

*" ஓ அப்படியா? அப்ப சிங்கள நாட்டில் சிங்கம் இல்லாத கதை சுவாரசியமாகத்தான் இருக்க வேண்டும். கதை யாலவில் உள்ள காட்டில் உயிரினங்கள்பல இருக்கும் போலத் தெரிகிறது. எனக்கு உன் கதையை கேட்க வேண்டும் போல இருக்கு " என்றேன் நான் ஆவலுடன்.*

*அவனுக்கு நான் அவன் கதையை கேட்க ஆவலாக இருந்ததையிட்டு சந்தோஷத்தை கொடுத்தது. உடனேதனது பையில் இருந்து சில ஆவணங்களை எடுத்து, தான் உருவாக்கிய "* ***யால ஜங்கிலில் திருமணம்****" என்ற கதையைப் படிக்கத் தொடங்கினான்.*

*"ஒரு நிமிஷம் விஸ்வா கதை நடக்கப் போகும் யால காட்டை முதலில் எனக்கு அறிமுகப்படுத்து. இலங்கையில் எங்கே இந்த 'யால வன பூங்கா' அமைந்துள்ளது?" நான் ஒன்றும் தெரியாதவன் போல அவனது அறிவை சோதிக்கக் கேட்டேன்.*

*"யால வனப் பூங்கா, இலங்கையின் தெற்கு ஊவா மாகாணத்தில் அமைந்துள்ளது. பல சுற்றுலாப்பயணிகள் விஜயம் செய்யும் தேசிய பூங்கா யால. பல வகையான விலங்கினங்களும், பறவைகளும், உயிரினங்களையும் தாயகமாகக் கொண்டது. கொழும்பில் இருந்து 250 கி.மீ தூரத்தில் உள்ளது. இலங்கையில் உள்ள 70 மிக முக்கிய பறவை பகுதிகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. 250 பறவை இனங்கள் சீசனுக்கு வந்து போகும். கும்புக்கன் ஓயா மற்றும் மானிக்க கங்கை இக் காட்டை தழுவிச் செல்கிறது. காட்டில் வாழும் உயிரினங்களுக்கு இந்த இரு ஆறுகளே தாகத்தை தீர்க்கிறது. பல சிறு குளங்களும் உண்டு".விஸ்வா யால காட்டினது சூழலைப் பற்றி விபரம் சொன்னபோது நான் திகைப்படைந்தேன்.*

*"உன் கதையை நல்ல இயற்கை வளம் உள்ள சூழலில் தான் அமைத்திருக்கிறாய். மேலே கதையைச் சொல்லுக் கேட்போம்" என்றேன் நான் ஆவலோடு.*

*" யாலவில் உள்ள புள்ளி மான் கூட்டங்களில் முருகன் என்ற ஆண் மானும்,வள்ளிஎன்ற பெண் மானும் அடிக்கடி மாணிக்க கங்கையில் நீர் குடிக்கும் போது சந்தித்தன. தினச் சந்திப்பினால் , அவர்களுக்கிடையே காதல் பிறந்தது" என்று சொல்லி சிரித்தான்.*

*"அப்போ காதல் கதையா. சரி சரி மேலே சொல்லு. அது இருக்கட்டும் விஸ்வா, மான்களின் பெயர்களைமுருகன்,வள்ளி என்று ஏன் வைத்தாய் . வேறு பெயர்கள் உனக்கு கிடைக்கவில்லையா"? நான் ஒன்றும்தெரியாதவன் போலக் கேட்டேன்.*

*"அதற்கு காரணம் இருக்கிறது டடாபொப். " இலங்கையில் பிரபல்யமான முருகன் கோவிலான கதிர்காமம் கோவில் யாலவில் உள்ளது" என்று அம்மம்மா சொல்லி கேள்விப்பட்டேன். முருகன், யாலவில் உள்ள கதிர்காமம் என்ற கிராமத்தில் வேடவப் பெண்வள்ளியை முருகன் சந்தித்து காதலித்து திருமணம் செய்ததாக அம்மம்மா சொன்னாள். எனவே நான் இரு மான்களுக்கும் அந்த பெயர்கள் பொருத்தமான பெயர்கள் என நினைத்தேன்" என்றான் விஸ்வா.*

*அவனது கற்பனையை என் மனதுக்குள் பாராட்டிக் கொண்டேன்.*

*"சரி கதையை மேலே சொல்லு கேட்போம் ".*

*"துள்ளித் திரிந்த புள்ளி மான் வள்ளியின் உடலில் இருந்த அழகான புள்ளிகள்,முருகனை அம்மானின் மேல் ஆசையை உருவாக்கியது. வள்ளிமுருகன் தலையில் இருந்த இரு கம்பீரமானதும், வேல் போல் கூர்மையுமான கொம்புகளால் கவரப்பட்டாள். அவர்கள் தினமும் மாணிக்க கங்கை கரையோரத்தில்சந்தித்து ஒருவரை ஒருவர் உராசியபடி உறவாடினர். ஓடி விளையாடினர். பயிர்களை ஒன்றாக மேய்ந்தனர். அவர்கள் இருவரையும் "டொட்" என்ற ஒரு குள்ள நரி கவணித்து கொண்டிருந்தது . டொட்டுக்கு வள்ளி மீது ஒரு கண். முருகன் மேல் பொறாமை. தன் தந்திர புத்தியைப் பாவித்து அவர்களைப் பிரிக்கும் திட்டமொன்றை போட்டது ,'டொட்'என்ற நரி.*

*"அது சரி விஸ்வா, நரிக்கு "டொட்"என்ற புதுமையான ஆங்கிலப் பெயரை ஏன் வைத்தாய்? கருணா என்ற தமிழ் பெயராக வைத்திருக்கலாமே"?*

*"நரியும் வேட் டை நாயும்" என்ற டிஸ்னி கார்டூனில் வரும் நரிக்குப் பெயர் 'டொட்' வேட்டை நாய்க்குப் பெயர் "கூப்பர்".அதனாலை அந்த பெயர்கள் என்டை நினைவுக்கு வந்தது. வைத்தேன். காதலர்களை காவல் காத்த ஓநாய்க்கு பெயர் "கூப்பர்".*

*"சரி மேலே கதையைச் சொல்லு".*

*"ஒரு நாள் முருகனும் வள்ளியும் திருமணம் செய்து கொள்ள முடிவுசெய்தார்கள். வன விலங்குகள், பறவைகள், ஊர்வனங்கள் அவர்களின்திருமணத்துக்கு உதவிசெய்ய முன்வந்தன. வாழையும், தென்னையும், மாமரமும் திருமண வாசலை மாவிலை தோரணம் கட்டி அலங்கரித்தன. கணேஷ் என்ற யானை திருமண விழாவில் பூசாரியாக இருக்க சம்மதித்தார். தேனீக்கள் திருமணச் சடங்கிற்கு தேன் கொண்டு வந்தன; மாடுகள் சடங்குக்கு தேவைப்பட்ட*

பால் கொடுக்க முன்வந்தன; முயல்கள் மற்றும் அணில்கள்கிழங்கு மற்றும் கொட்டைகள் ஆகியவற்றை திருமணச் சாப்பாட்டுக்கு கொண்டு வந்தன;திருமணத்திற்கு தேவையான வாசனைத்திரவியங்களை சந்தன மரம் மற்றும் மல்லிகை மலர் முன்வந்து வழங்கின;குளத்து தாமரை மலர்கள் சடங்கு மண்டபத்தை அலங்கரித்தன; திருமண வைபவ நிகழ்ச்சிகள் முடிந்த பிறகு, பாடும் , குயில்கள், ஹம்மிங் பறவைகளும் ஒன்று சேர்ந்து இசைக் கச்சேரி நடத்த முன்வந்தன;மயில்கள், காட்டு வான்கோழிகள், வண்ணத்துப்பூச்சிகள், பாம்புகள்,நடன நிகழ்ச்சிகள் நடத்தின; இரண்டு குரங்குகள் விகடமாக குத்துக்கரணம் அடித்து தமது செயற்திறனை காட்டின.

வள்ளியை கடத்த திட்டமிட்ட 'டொட்' நரிக்கு உதவ,ஒரு மிருகங்களும் முன் வரவில்லை. சிறுத்தை உறுமி, ''வள்ளியை நீ கடத்தினால் உன் மேல் நான் பாய்ந்து உன்னை கொன்றுவிடுவேன்'' என்று டொட்டை எச்சரித்தது. தம்பதிகளை காவல் செய்த கூப்பர் என்ற ஓநாய்க்குப் பயந்து, டொட் திருமண விழாவில் கலந்து கொள்ளவில்லை. அதன் கடத்தல் திட்டம் மற்ற விலங்குகள் மூலம் முறியடிக்கப்பட்டது.

யால ஜங்கில் திருமணம் வெற்றிகரமாக நடந்த போது மழை பொழிந்துஎல்லோர் மனங்களையும் குளிர வைத்தது. இடியிடித்து கொட்டு மேளம் கொட்டியது. மின்னல் திருமண விழாவுக்கு வேண்டிய வெளிச்சத்தைக் கொடுத்தது. வானவில் வானில் தோன்றி வானத்தைப் பல வர்ணங்களில் வில் போன்ற கோலம் இட்டுஅலங்கரித்தது.

மாணிக்க ஆற்றில் உள்ள ஒரு சிறிய தீவில் தேன் நிலவைக் கழிக்க முருகனும் வள்ளியும் தீர்மானித்தனர். தங்கள் திருமணத்துக்கு ஆதரவு தந்த யால வனபூங்காவில் வாழும் எல்லா ஜீவராசிகளுக்கும் தங்கள் விருப்பத்தை அறிவித்தன. தேன் நிலவு பயணத்துக்குதிருமண தம்பதிகளுக்கு போக்குவரத்து வழங்க காத்திருந்தது காட்டு எருமை. விலங்குகள் மற்றும் பறவைகள் சேர்ந்து தேனிலவுக்கு முருகனும் வள்ளியும் பயணம் செய்யம் காட்டு எருமையின்வாலில் மரக் கட்டைகளை கட்டி, எருமை நகரும் போது அது உருவாக்கும் ஓசையானது'திருமணதம்பதிகளின் வாகனம் வருகிறது' பராக்...! பராக்...! என ஓசை வரச் செய்தனர். கணேஷ் எக்காளம் இட்டு பிளிரியது. எருமைத் தம்பதிகளோடு தீவை நோக்கி நகரத் தொடங்கியது. எருமை மேலே முருகனும் வள்ளியும் வீற்றிருந்தனர். எருமையின் வாலில் கட்டப்பட்ட சிறு மரக்குத்திகள் பெரிய ஓசையை உருவாக்கின. ஜீவராசிகள் சத்தம் போட்டு ஆரவாரம் செய்தன.

மாணிக்க கங்கை கரையில் ஜோடிகளை இறக்கிய பின்னர், தேன் நிலவு தீவில் ஆற்றின் குறுக்கே தன் முதுகின் மேல் அழைத்துச் செல்ல முதலை முன்வந்தது. முதலை மேல் ஜோடிகளின்

*மீண்டும் ஒரு மகிழ்ச்சியான பயணம் இருந்தது. வேறு மிருகங்கள்இல்லாத அத்தீவில் முதலை ,ஜோடிகளை இறக்கிவிட்டது. அவர்கள்சந்தோஷமாக ஓடி விளையாடவும், போதுமான இடமும், உண்ண பல வகை பழ மரங்களும், புற்தரையும்; துணைக்கு பறவைகளும், கங்கையில் துள்ளி விளையாடும் மீன்களும்,தேனிலவுத் தீவில் இருந்தன. தேன் கூடுகளில் இருந்த தேனீக்கள் தேனிலவுக்காக வந்த புதுமணத் தம்பதிகளுக்கு தேன் வழங்கத் தயாராக இருந்தன. குயில்கள் பாட்டு பாடி வரவேற்றன". கதைச் சொல்லி முடித்து என்னைப் பார்த்தான் விஸ்வா.*

*நான் உடனே அவனை பார்த்து " விஸ்வா, உன் கதையை காட்டில் வாழும்ஜீவராசிகளோடு தொடர்பு படுத்தி, இயற்கைக்கு மதிப்பு கொடுத்து எழுதியதுபிரமாதம் . இக்கதை 'லயன் கிங்' போன்று ஒரு டிஸ்னி படத்துக்கு உகந்த கதையாக இருக்கும் என்பது என் கருத்து"என்று அவனை பாரட்டினேன்.*

*அதற்கு அவன் "என்னால் இக்கதை படமாக மாற்ற முடியும் டடாபொப்"என்றான் உறுதியோடு.*

*"நீஎன்ன சொல்லுகிறாய் .அதை எப்படி செய்ய முடியும்? இக்கதையை படமாக்குவதற்கு பணம் தேவையே. "*

*"டடாபொப் சற்று சில நாட்கள் நீங்கள் பொறுத்திருந்து பாருங்கள். ஒரு கிழமைக்குள் இக் கதையை உங்களுக்கு படமாக்கி காட்டுகிறேன்" உறுதியோடு பதில் சொன்னான் விஸ்வா.*

*ஒரு கிழமை கழித்து அவன் என்னை அழைத்து என்னை தனது கணினியில் தனது கதையை கருவாக வைத்து உருவாக்கப்பட்ட 'யால ஜங்கில்' திருமணப் படத்தைகாட்டினான். என்னால்அதை நம்ப முடியவில்லை.*

*"அது சரி விஸ்வ,இதை எப்படி படமாக மாற்றினாய்? நான் அவனைக் கேட்டேன்.*

*"இதற்கு மைக்கிரோசாப்ட் மூவி மேக்கர் (Movie Maker) என்ற சாப்ட்வேர் உண்டு . அதைப் பாவித்து படத்தை உருவாக்கினேன்" என்றான் விஸ்வா.*

*எனக்கு அவன் சொன்னது கிரேக்க மொழி பேசவது போல் இருந்தது. நான் எனது நன்றியைத் தெரிவிக்கும் முகமாக அவனது கன்னங்களில் முத்தமிட்டேன்.*

*“விஸ்வா இந்த “யால ஜங்கில் திருமணம்”படத்தை யூடியூபில் (YouTube) போடு. எல்லோரும் பார்க்கட்டும். கதை, வசனம், டைரக்ஷன், பட உருவாக்கம் ‘விஸ்வா’ , என்று உன் பெயரைப்போட மறந்திடாதே” என்றேன் சிரித்தபடி.*

*“தாங்ஸ் ,உங்கள் ஆலோசனைகளுக்கு டடாபொப். அதன் படி நான் செய்வேன்” என்றான் விஸ்வா.*

****

# கதை4   நத்தார் பரிசு

***“அம்மா ‘நத்தார் தாத்தா’  என்பவர் பெரிய பணக்காரரா”?***

*“ஏன் அப்படிக் கேட்கிறாய் அந்தோணி”?*

*“இல்லையம்மா என்னோடு படிக்கும் என் ஆருயிர் பணக்கார நண்பன் அடைக்கலநாதன் (நாதன்) சொன்னான். ‘நத்தார் தினத்துக்கு’ முதல் இரவு அவன் தூங்கி காலை எழும்போது அவன் கட்டிலில் அவன் விரும்பிய பரிசுகளை ‘நத்தார் தாத்தா’ வைத்துவிட்டுப் போவாராம்” .*

*“உன் நண்பன் சொல்வது உண்மையாக இருக்கலாம். பெற்றோர் சொற்படி குழப்படி செய்யாமல் நடக்கும் தம்பிள்ளைகளுக்கு  பெற்றோர் நத்தார் தாத்தா வேஷம் போட்டு நத்தார் தினமன்று பரிசுகள் கொடுப்பார்கள்”.*

*“அப்போ எனக்கு இந்த நத்தாருக்கு நான் விரும்பும் பரிசு கிடைக்குமா அம்மா ? “ அந்தோணி தாயைக் கேட்டான்.*

*“நீ அடிக்கடி உருக்கமாக உன் இனிய குரலில் பாடும் பாடல், “கேளுங்கள் தரப்படும் தட்டுங்கள் திறக்கப்படும் தேடுங்கள் கிடைக்கும் என்றார், இயேசுதேடுங்கள் கிடைக்கும் என்றார். அந்தப் பாடலலைப் படி மகனே . நீ கேட்பது உனக்குக் கிடைக்கும் . நீ தினமும் யேசுவை பிரார்த்தனை செய். அவர் உன்மேல் கருணை வைப்பார்” தாய் நேசமணி சொன்னாள்.*

*“அப்போ நான் விரும்பும் பியானோ கிடைக்குமா அம்மா?”*

*“விலை உயர்ந்த பரிசு கேட்கிறாயே மகனே! உன் அப்பா இருந்திருந்தால் ஒரு வேளை கடன் வாங்கியாவது உனக்கு வாங்கி தந்திருப்பார் . இயேசுநாதரின் சித்தம் உன் பாக்கியம் .”*

*இது நத்தார் தினத்துக்கு சில மாதங்களுக்கு முன் தாயுக்கும் மகனுக்கும் நடந்த உரையாடல்.*

****

*அந்தோணியின் தந்தை சூசைப்பிள்ளை ,அரசில் போலீஸ் அதிகாரியாக இருந்தவர் . நேர்மையானவர். பல கொலை கேசுகளைக் கண்டுப்பிடித்து குற்றவாளிக்குத் தண்டனை வாங்கிக் கொடுத்தவர். அவர் போதை மருந்து வியாபாரம் செய்த ஒரு அரசியல்வாதியை ஆதாரத்தோடு பிடித்து வழக்கு தொடர்ந்ததுக்கு, அரசியல்வாதியின் அடியாளர்களால் கொலை செய்யப்பட்டவர்.*

*அதன் பின் நர்சாக இருந்த அவரின் மனைவி நேசமணியும் மகன் அந்தோணியும் தனித்துப் போனார்கள்.*

*அந்தோணி 'கொழும்பு பரிசுத்த மேரி தேவாலயத்தில்' பக்தி பாடகர் குழு உறுப்பினர்களுக்குத் தலைமை தாங்கி பியானோ வாசித்துப் பாடல்கள் பாடுவான். அவனின் குரலில் மயங்கியவர்கள் பலர். அவனில் இருந்த திறமையைக் கண்ட தேவாலயத்தின் பிரதம போதகர் தேவசகாயம் அவனைத் தேவாலயத்தில் உள்ள பியானோவில் பயிற்சி பெற அனுமதித்தார். அவனின் பியானோ வாசிப்பைக் கேட்டு தேவாலயத்துக்கு வரும் பக்தர்கள் மெய் மறந்து நிற்பார்கள்.*

*"மறைந்த எங்கள் இன்ஸ்பெக்டர் சூசைபிள்ளையின் மகனுக்கு இவ்வளவு இசை திறமையா...!" என்று தமக்குள் பேசிக்கொண்டனர். எந்த திறமை இருந்தென்ன! சொந்தத்தில் அவன் வீட்டில் பியானோ வைத்திருக்கும் வசதி அவனுக்கு இருக்கவில்லை .*

*அடிக்கடி அவனுடைய பணக்கார நண்பன் அடைக்கலநாதன் வீட்டில் உள்ள பியானோவில் தன் இசையின் திறமையை காட்ட அவனால் முடிந்தது. "அந்தோணிக்கு நல்ல எதிர்காலம் உண்டு" என்று அடைக்கலநாதனின் செல்வந்தரான தந்தை சூசைதாசன், நேசமணிக்கு சொல்லுவார். அவருக்கும் நாதன் ஒரு மகன் மட்டுமே.*

***

*காலப்போக்கில் அந்தோணி நோய்வாய்ப்பட்டான். மருத்துவ பரிசோதனைகளின் பின் " அவனின் இரு சிறுநீரகங்கள் வெகுவாக பழுதடைந்து விட்டது" என டாக்டர் அறிவித்தார். அது நேசமணிக்கு பெரும் அதிர்ச்சியைக் கொடுத்தது.*

*"என்ன டாக்டர் இந்த சிறு வயதில் என் மகனுக்கு சிறுநீரக வியாதியா"?*

*" பயங்கர விபத்தினால் உடல் பாகங்கள் நசுங்கி, சிதைந்து போகுதல்,*
*மற்றும் பாம்பு கடி ,இரத்தஅழுத்தம் , சர்க்கரை வியாதி, அதிக மருந்து அருந்துதல் ,அதிகமான தீக்காயம் ஏற்படுதல் முதலிய சமயங்களில் உடல்*
*தசைகள் அதிகமாக பாதிக்கப்பட்டு, தசைநார்கள்*
*கூழாகி, சிறுநீரகங்களிலுள்ள பில்டர்களை அடைத்து விடுவதால், சிறுநீரகங்கள் செயல் இழந்து விடுவதும் உண்டு" டாக்டர் மோகன் சொன்னார்.*

.

*" இப்போ எனக்கு நினைவுக்கு வருகிறது டாக்டர். இவனுக்கு ஆறு வயதாக இருக்கும் போது மாடிப் படியில் இருந்து கீழே விழுந்து ஒரு வாரம் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றான். அதோடு எட்டு வயதில் சிறு அம்மை நோய் அவனுக்கு வந்தது" .*

*" அது மட்டுமல்ல காரணம். இது மரபணு சம்பந்தமாகவும் இருக்கலாம்".*

*" எனக்கு நினைவுக்கு வருகிறது டாக்டர் . என் கணவர் ஒரு நாள் எனக்குச் சொன்னார். தன் தந்தை சிறு நீரக வியாதியால் இறந்தார் என்று. அந்த காலத்தில் இந்த நோய்க்குத் தகுந்த வைத்தியம் இருக்கவில்லை.*

*கணவன் இறந்து ஐந்து வருடங்களில் மகனுக்கு சிறுநீரக நோய் இருப்பதை அறிந்த தாய் செய்வது அறியாது திகைத்து நின்றாள். இறந்த கணவனின் பென்சனையும் தனது சம்பளத்தையும் நம்பி வாழ்பவள் நேசமணி .*

*''டாக்டர் ,எனக்கும் என் கணவருக்கும்பதினாறு வருடங்களுக்கு முன்பு தான் அந்தோணி எங்கள் வாழ்வில் அடியெடுத்து வைத்தான். அவன் இந்த உலகிற்கு வந்ததை நினைத்து கொண்டாடினோம். அந்த தருணம் முழுவதும் எங்கள் மனதில் சந்தோஷம் மட்டுமே நிறைந்திருந்தது. இவன் கேட்டதை எல்லாம் இவன் தந்தை வாங்கிக் கொடுத்தார். என் மகனுக்கு இசைக் கருவிகள் என்றால் மிகவும் பிடிக்கும். வாயில் வைத்து இசை மீட்கும் 'மவுத் ஆர்கன்' கருவி ஒன்றை இவன் அப்பா இவனின் ஆறு வயது பிறந்த தினத்துக்கு வாங்கி கொடுத்தார் .அது ஒன்றே இவனிடம் உள்ள இசைக் கருவி. அதனால் என்னவோ, அவனது கனவும் ,'தான் ஒரு இசைக் கலைஞராக வேண்டும்' என்பதாகவே இருந்தது. ஆனால் இப்போது நீங்கள் சொல்வதைக் கேட்டால் அவன் கனவு நடவாது போல் தெரிகிறது டாக்டர் .என் கணவர் இப்போ என் மகனின் தேகநிலை பற்றி அறிய உயிரோடு இல்லை .இந்த சிறு நீரக வியாதி பற்றி சற்று விபரமாக எனக்கு சொல்ல முடியுமா?. டாக்டர் இதற்கு வைத்தியம் இல்லையா''? நேசமணி ,டாக்டர் மோகனைக் கேட்டாள்.*

*''இடுப்புப் பாகத்தின் கீழ்ப்பகுதியில் கிட்னி என்ற இரண்டு சிறுநீரகங்கள் அமைந்துள்ளன. இவற்றின் பிரதான தொழில் சிறுநீரை உற்பத்தி செய்தல். சரீரத்திலிருந்து அகற்றப்படவேண்டிய நீர், கழிவுப்பொருட்கள் ஆகியன சிறுநீரில் அடங்கியுள்ளன. கழிவுப்பொருட்களை அகற்றுவதுடன் இரத்தஅழுத்தம், உப்பு,அமிலம், ஹீமோகுளோபின் ( Hemoglobin) ஆகியவற்றைக் கட்டுப்படுத்து கின்றன. '' இரண்டு சிறுநீரகங்களும் தாக்கப்பட்டு 60-70% வரை சிறுநீரகம் வேலை செய்யாது இருந்தால் மட்டுமே ஒரு நோயாளிக்கு சிறுநீரகச் செயலிழப்பு உண்டு'' என்று நாம் சொல்லுவோம். 90% க்கு மேல் அவை வேலை செய்யாவிடின் அந்த நோயாளிக்குக் கடுமையான சிறுநீரகச் செயலிழப்பு என்று சொல்லுவோம் . உங்கள் மகனுக்குச் சிறுநீரகங்களும் தாக்கப்பட்டு பரிசோதனை அறிக்கைப் படி 80% வரை சிறுநீரகம் வேலை செய்யாது இருக்கிறது . விரைவில் நிலமை மோசமடைந்து உங்கள் மகனின் உயிருக்கு ஆபத்து ஏற்படாலம் .''*

*''இதற்கு தீர்வு இல்லையா'' டாக்டர்.*

*“ ஏன் இல்லை. ஒன்று இரத்த சுத்தி செய்யும் டயாலிசிஸ் என்ற முறையைப் பாவிக்கலாம் .ஒரு கிழமைக்கு இது மூன்று நாட்கள் செய்யும் சிகிச்சை. இது ஒரு தடவை செய்ய அதிகப் பணம் செலவாகும் . உங்கள் மகன் நீண்ட காலம் உயிர் வாழ ஒரு நிரந்தர தீர்வு வேண்டும் என்றால் ,அவனுக்கு உடனடியாக சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்தாக வேண்டும்.*
*இதற்கு அதிக பணம் செலவாகும் .அதோடு யாரவது ஒருவர் தனது ஒரு சிறுநீரகத்தை தானம் செய்ய முன் வரவேண்டும் . அதோடு அந்த சிறுநீரகம் பொருந்த வேண்டும் ” டாக்டர் மோகன் சொன்னார் .*

*“நான் அவனை இழக்கத் தயாராகவில்லை டாக்டர் . “ அவன் எப்படியும் தன் வாழ்க்கையுடன் போராடி வென்று விடுவான்” என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அவனது மாற்று அறுவை சிகிச்சைக்கான பணம் திரட்ட என்னால் முடியாது . இந்த சிறு வயதிலா இவனுக்கு இந்த வியாதி டாக்டர்?”*

*“ சிறு வயது முதல் முதிர் வயது வரை சிறுநீரகச் செயலிழப்பு எவருக்கும் வரக்கூடும். இது ஆண், பெண் இருசாராருக்கும் வரும். ஆனால் முன்பு அடிக்கடி, சிறுநீரக நோய்கள் வந்தவர்களுக்கு வர அதிக வாய்ப்புண்டு.*

*பிள்ளிகளிலும் பெரியவர்களிலும் இந்தக் காரணம் வேறுபடுகிறது.*
*வளர்ந்தவர்களில், சடுதியான சிறுநீரக செயலிழப்புக்குக் காரணமாய் இருப்பவை பாம்புக்கடி, சிறுநீரக அழர்ச்சி, நஞ்சு, போதைப்பொருள், பாரிய சத்திரசிகிச்சை, கடுமையான தொற்று நோய்கள் என்பன. வளர்ந்தோரில் காணப்படும் நாள்பட்ட சிறுநீரகச் செயலிழப்புக்கு பொதுவான காரணம், நீண்ட கால சிறுநீரக அழர்ச்சி, இரத்த*
*அழுக்கம், புரேஸ்ரேட் நோய், சிறுநீரக்தில் உண்டாகும் கல் என்பனவும் ,பொலிசிஸ்ரிக் சிறுநீரக நோயும் ஆகும். சிறுநீரகத் தொற்றுக்கள், சில வேளைகளில் தாமாகவே சிறுநீரகச் செயலிழப்பை உண்டாக்குகின்றன. எப்படியாயினும் சிறுநீரகச் செயலிழப்பு உள்ளவர்களில் சிறுநீரகத் தொற்று, சிறுநீரகத் தொழிற்பாட்டை மிக மோசமாக்கி விடும்.*

*பிள்ளைகளிலே சிறுநீரகத் தொற்று, சிறுநீரக அழர்ச்சி என்பன அதிகமாகக் காணப்படினும் அவர் களுக்குச் சிறுநீரகச் செயலிழப்பு வருவது மிகவும் அரிது. அநேகருக்கு நாட்பட்ட சிறுநீரக செயலிழப்புக்குக் காரணம் கண்டுகொள்வது மிகவும் கடினம்” டாக்டர் மோகன் விளக்கம் கொடுத்தார்.*

***

*நத்தார் தினத்துக்கு முன் தினம் அந்தோணியின் பெயருக்கு ஒரு பதிவு தபால் வந்திருந்தது .*

*நேசமணி அந்த கடிதத்தைப் பிரித்து வாசித்தாள்.*

*என் ஆருயிர் நண்பன் அந்தோணிக்கு,*

*நான் நலமாக உள்ளேன். உன் நலம் பற்றி என் அப்பா சொல்லி கேள்விப் பட்டேன் .என்னால் அதை நம்ப முடியவில்லை. இந்த சிறு வயதில் உனக்கு சிறுநீரக வியாதி எப்படி வந்தது ? 'நீ வாழ்ந்து இசை துறையில் எவ்வளவோ சாதனைகள் படைக்க வேண்டும்' என்பது எனதும், என் பெற்றோரினதும் விருப்பம். உன் வியாதி பற்றி என் அப்பா எங்கள்*
*குடும்ப டாக்டரோடும் ,உன் அம்மாவோடும் கலந்து பேசினார். அதன் முடிவை நீ எதிர்பார்க்க மாட்டாய். நான் எழுதினால் நீ நம்ப மாட்டாய் .என் நண்பன் வாழ வேண்டும்*
*;என்னுடைய பியானோவில் இசை மீட்க வேண்டும்;நான் சாகும்*
*வரை அதைக் கேட்க வேண்டும் ;இது என் ஆசை .அதற்கு என் இரு சிறுநீரகங்களில் ஒன்றை உனக்கு தானம் செய்ய என் பெற்றோருடன் கலந்து பேசி முடிவுக்குவந்து விட்டேன் .*
*இந்த சிகிச்சைக்கான முழு செலவையும் என் அப்பா பொறுப்பு ஏற்பார் . நீ சில மாதங்களில் சிகிச்சை பெற்று சுகமக வந்தவுடன்நான் உனக்கு நத்தார் பரிசினை தருவேன்.*
*என் பியானோவில் எனக்கும்உனக்கும் பிரியமான பாடல் - " கேளுங்கள் தரப்படும் தட்டுங்கள் திறக்கப்படும் தேடுங்கள் கிடைக்கும் என்றார் ,இயேசு தேடுங்கள் கிடைக்குமென்றார். "*

*என்றபாடலை நான் உன்னைக் கேட்கும் போதெல்லாம் எனக்கு நீ வாசித்துக் காட்ட வேண்டும்.*

*இப்படிக்கு,*

*உனது ஆருயிர் நண்பன்,*

*அடைக்கலநாதன் .*

*அக் கடிதத்தை வாசித்து முடித்த நேசமணியின் கண்களிலிருந்து கண்ணீர்த் துளிகள் கடித உறையில் விழுந்தன. தூரத்தில் பரிசுத்த மேரி தேவாலயத்தின் மணி ஓசை காற்றில் மிதந்து வந்தது.*

****

# கதை 5  அப்பா செய்த கணக்கு

*தனக்கென பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்ட கதிரையில் அமர்ந்தவாரே மனைவி பாக்கியம் கொண்டு வந்து கொடுத்த சர்க்கரை போடாத கொத்தமல்லித் தண்ணியை வேண்டா வெறுப்புடன் சுவைத்தவாறு அன்றைய ஆங்கிலப் பத்திரிகையில் வெளிவந்திருந்த பிரபல்யமான சுடோகு (Sudoku ) என்ற 9 x 9 கட்டங்கள் 1 முதல் 9 வரை உள்ள எண்களோடு தன் மூளைக்கு பயிற்சி கொடுக்க சண்முகலிங்கம் விளையாடிக் கொண்டிருந்தார். அவர் முதலாம் வகுப்பில் தேறிய கொழும்பு பல்கலைக்கழக கணிதப்பட்டதாரி. அதுவும் பிரபல மாமேதை கணிதப் பேராசிரியர் எலியேசரின் அன்புக்கும் பாராட்டுக்கும் பாத்திரமான மாணவன். பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளர் பதவிக்கிடைத்தும் அதைத் தனது சொந்த ஊரில் கடைசி காலத்தில் தந்தைக்கு அருகே இருக்க வேண்டும், என்ற காரணத்தால் உதறித்தள்ளிவிட்டு யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபலக்கல்லூரி ஒன்றில் ஆசிரியரானவர்.*

*“ யாழ்ப்பாணத்தில் அந்த கல்லூரியின் பெயர் பிரபல்யமாகி, தீவுப் பகுதிகளில் இருந்து வந்து, மாணவர்கள் அக்கல்லூரியில் சேர்ந்து படிக்க ,சண்முகலிங்கம் மாஸ்டரே காரணமாக இருந்தார்” என்பது பலருக்குத் தெரியும். தலைமை ஆசிரியராகக் கூடிய வாய்ப்புகள் அவருக்கு கிட்டியும் ,கல்லூரியைப் பரிபாலனம் செய்வதில் நேரத்தை விரையம் செய்ய விரும்பாது தொடர்ந்து மாணவர்களுக்குத் தனது கணித அறிவை புகட்டிவந்தவர். தான் படிப்பித்த கல்லூரியில் சதுரங்க விளையாட்டையும் அறிமுகப்படுத்தி மாணவர்களின் மூளைகளை தர்க்க ரீதியாகச் சிந்திக்கத் தூண்டியவர். அக்கல்லூரியில் பத்து வருடங்களாகக் கணித ஆசிரியராக கடமையாற்றிவருபவர். பல என்ஜினீயர்கள்,விரிவுரையாளர்கள் , வைத்தியர்கள், கணக்காளர்கள் போன்றோரை உருவாக்கியவர். “ ஒரு காலத்தில் கணிதப் பேராசிரியர் சுந்தரலிங்கம் இருந்தது போல், தற்காலத்தில லிங்கம் பெயர் நிலைக்க ஒரு சண்முகலிங்கம்” என்று பலர் பேசுமளவுக்கு பிரபல்யமானார் சண்முகலிங்கம் மாஸ்டர். அவரை சண் மாஸ்டர் என்று மாணவர்கள் அழைப்பார்கள்.உயர்தர வகுப்புக்கான அவர் எழுதிய “தர்க்க கணிதம்”புத்தகத்தை ஓடித் தேடி வாங்கி சித்தியடைந்தவர்கள் பல மாணவர்கள். ஒரு முறைக்கு இரண்டு தடவை விளக்கமாய் சொல்லிக் கொடுத்தும் புரிந்து கொள்ள முடியாத பல மாணவர்களின் தலையை முத்தமிட்டு முடக்கிய அவரது வலது கைவிரல்கள், தான் பதம் பார்த்த மாணவர்களின் தலையை ,எண்ணிக்கையை வைத்திருக்கிறதோ என்னவோ தெரியாது.*

*சண்முகலிங்கத்தின் ஒரே மகன் கணேஷலிங்கம். தகப்பனின்திறமையில் நம்பிக்கை இல்லாதவன்.. “யாழ்ப்பாணத்தில் சண்மாஸ்டரை அறியாத மாணவர்கள் இல்லை” என்று*

*சொல்லலாம். அதுவும் யாழ்ப்பாணத்தில் இருந்து பொறியியல் துறையில் பல்கலைக் கழகத்திற்கு பிரவேசித்த நூற்றுக்குத் தொன்னூறு விகிதமான மாணவர்கள் சண் மாஸ்டரின் பார்வையின் இறுக்கத்திலும், குட்டின் கைவண்ணத்தில், தர்க்க ரீதியான விளக்கத்திலும் வளர்ந்து பொறியியலார்கள், கணக்காளர்கள் ஆனவர்கள்.*

*"இலங்கையில், கணிதத்தில் தமிழ் மாணவர்களின் தரத்திற்கும் ,கனடாவில் மாணவர்களின் தரத்திற்கும் எத்தனையோ வித்தியாசம். என்ன சொன்னாலும் அந்த தரத்திற்கு கனடா கிட்ட வராது" என்று கனடா பிரஜையான தனது சகோதரி பெருமை அடித்துக் கொள்வார் . ஆனால்சண் மாஸ்டர் , தனது ஒரே மகன் கணேஷலிங்கம் கணக்கில் உதவி கேட்டு தன்னிடம் வராததையிட்டு தனது மனைவி பாக்யத்திடம் அடிக்கடி குறைபட்டு கொள்வார்.கணேஷலிங்கம் தன் விருப்பப்படி படித்தது வேறு கல்லூரியில். காரணம் அப்பா படிப்பிக்கும் கல்லூரியில் படித்தால் அவருக்குக் கீழ் கணக்கு படிக்க வேண்டி வருமே என்ற பயமோ! தெரியாது.*

*"அப்பா, அவன் போக்கிற்கு விட்டு விடுங்கள். தேவைப்பட்டால் உங்களிடம் வந்து கேட்பான்தானே. யாழ்ப்பாணத்தில்நீங்கள் படித்த காலத்தில் டியூசனை நம்பி படித்த பிள்ளைகள் போல் இல்லை, இக்காலத்துப் பிள்ளைகள். படிப்பிக்கும் முறையும் வேறுபட்டது. கம்பியூட்டர், கால்குலேட்டர் உதவியை நம்பி படிப்பவர்கள் தற்கால மாணவர்கள். உங்களுடைய பழைய படிப்புக்கும் முறை இங்கு அவ்வளவுக்குப் பொருந்தாது" என்று பாக்கியம் எடுத்துச் சொன்னாலும் சண்முகலிங்கம் அதை ஏற்றுக் கொள்வதாகயில்லை. தன்னைப் போல் , தன் மகனும் கணக்கில் நிபுணராக வரவேண்டும். டாக்டரின் மகன் டாக்டராகும் போது ஏன் என் மகன் கணக்கில் நிபுணராக முடியாது?என்பது தான் அவரது ஒரே குறிக்கோளும் வாதமும் . சண் மாஸ்டருக்கும் மகனுக்கும் அடிக்கடி மோதல்கள் ஏற்பட்டு அவர் மனைவி பாக்கியம் தலையிட்டுத் தீர்த்து வைப்பாள். சண்டைகள் அடிக்கடி வந்து போனாலும் மாதம் சம்பளம் வந்ததும் மகனுக்கு, பாக்கெட் செலவுக்கு நூறு ரூபாய் கொடுக்க மட்டும் தவறமாட்டார். என்னவென்றாலும் தனது பெயர் சொல்ல "லிங்கம்" வழிவந்தவனல்லவா !தன் மகன் கணேஷலிங்கம்.*

******

*பள்ளிக்கூட கணக்கு புராஜெக்டை செய்து முடிக்க முடியாமல் திணறிக் கொண்டிருந்த மகனைப் பார்த்ததும் சண் மாஸ்டரால் பொறுக்க முடியவில்லை. எதோ கணக்கொன்றுக்கு பதில் காணமுடியாமல் அவன் திணறுகிறான் என்பதை அவருக்கு புரிந்து கொள்ள அவருக்கு அதிக நேரம் எடுக்கவில்லை.*

*“என்னடா கணேஷ் என்ன பிரச்சனை? தலையை அடிக்கடி சொறிந்துமண்டையை போட்டு உடைக்கிறாய். எதற்காக அந்தரப்படுகிறாய்? கணக்கில் எதாவது பிரச்சனையா?”*

*“இல்லை அப்பா. என்னுடைய கம்பியூட்டருக்குள் வைரஸ் வந்துவிட்டது. அதாலை டீச்சர் தந்த கணக்கு புராஜெக்டை செய்ய முடியாவில்லை. நாளைக்கு புராஜெக்டை டீச்சருக்கு கொடுத்தாக வேண்டும். கம்பியூட்டர் இல்லாமல் அதை செய்வது கஷ்டம்.”*

*“கால்குலேட்டரைப் பாவிக்க வேண்டியது தானே.”*

*“கால்குலேட்டர்பேட்டரியின் சார்ஜ் போயிட்டுது. அதாலை சரியாக வேலை செய்யுதில்லை”.*

*“எங்கை எனக்கு காட்டு; உன்டை புராஜெக்டை. என்னால் முடிந்தால் உனக்கு உதவுகிறேன்”, தானாகவே மகனுக்கு உதவ முன் வந்தார் சண்.*

*“என்ன அப்பா என்னோடை ஜோக்கா விடுகிறீயள்?கம்பியூட்டர் இல்லாமல் இதை செய்யும் அளவுக்கு நீங்கள் அவ்வளவு கெட்டிக்காரரா?. சும்மா என் நேரத்தை வீண் அடிக்காதீர்கள். நான் போய் என்னுடைய நண்பன் சுரேஷின்லாப்டொப்பை வாங்கி வந்து செய்யப் பாக்கிறேன்.” என்றான், தந்தையின் திறமைமேல் மேல் நம்பிக்கை இல்லாத கணேஷ்.*

*“இல்லயடா ராசா. கம்பியூட்டரில் செய்யும் போது விளங்கி செய்யமுடியாது. நான் சில நிமிடங்களில் உனக்கு விளங்க வைத்து பதிலை கண்டுபிடிக்கிறேன்”.*

*“வேண்டாம் அப்பா. என்னுடைய புராஜெக்ட் உங்களுக்குப் புரியாது. என்டை புராஜெக்டோடை நீங்கள் விளையாடாதீர்கள். நான் சுரேஷிடம் போய் அவனுடைய லாப்டொப்பை வாங்கி வந்து செய்கிறேன்” என்று சொல்லிவிட்டு தந்தையின் பதிலை எதிர்பார்க்காமல் அவசரம் அவசரமாக வெளியே புறப்பட்டுப் போனான் கணேஷ்.*

.

*அரைமணி நேரத்தில் நண்பனின் லாப்டொப்போடு கணேஷ் திரும்பினான். தனது மேசையில் தன் புராஜெக்ட் விளக்கத்தோடு செய்து விடை கண்டுப்பிடித்துவைத்திருப்பதைபார்த்தபோது கணேசுக்கு ஆச்சரியமாக இருந்தது. அவனால்நம்ப முடியவில்லை. ‘இது அப்பாவின் வேலை தான்’ என்றது அவன் மனம்.*

*“என்ன அப்பா இது உங்கள் வேலையா”*

*“ஆமடா ராசா. நீ வந்த பிறகு உனக்கு விளங்கப்படுத்துவோம் என்று காத்திருக்கிறன்.”*

*"என்ன பகிடியா விடுகிறீயள். உங்களுடைய விடை பிழை என்பது நிட்சயம். கம்பியூட்டரில் நான் போட்டு வரும் விடையைப் பாருங்களேன் .அப்பத் தெரியும்."*

*"சரி உன் இஷ்டம் போல் செய்து பாரேன்."*

*கணேஷ் கம்பியூட்டரில் பல நிமிட நேரம் செலவழித்து விடையை கண்டுபிடித்த சந்தோஷத்தில் "ஐ காவ் டன் இட் (I have done it) என்று தன் இரு கைகளையும் மேலே தூக்கி கொக்கரித்தான்.*

*"நல்லது. இனி கம்பியூட்டரில் கிடைத்த விடையோடு நான் கொம்பியூட்டர் பாவிக்காமல் ஐந்து நிமிடத்தில் செய்து கண்டுப்பிடித்த விடையுடன் ஒப்பிட்டுப் பார்;செய்த முறைக்கு விளக்கமும் கொடுத்திருக்கிறன்", என்றார் சிரித்தபடி சண் .*

*"அப்பா. நிட்சயமா உங்கள் விடை பிழையாகத் தான் இருக்கப்போகுது. உங்கள் விருப்பத்தை நான் ஏன் மறுப்பான். உங்கள் விடை பிழையாக இருந்தால் என்ன பந்தயம்.?"*

*"விடை பிழையாக இருந்தால் நான் உனக்கு இனி மாதம் மாதம் பாக்கட் செலவுக்கு இருநூறு ரூபாய் தருவேன். விடை சரியாக இருந்தால் இனி நீ என்னிடம் மறுக்காமல் பொறுமையாக இருந்து கணக்கு கேட்டு படிக்க வர வேண்டும். என்ன சம்மதமா?*

*"இந்த பந்தயத்துக்கு நான் சம்மதம் அப்பா".*

*கணேஷ் இரண்டு விடைகளையும் ஒப்பிட்டுப் பார்த்தான். இரண்டு விடைகளும் சரியாக இருந்ததை அவனால் நம்பமுடியவில்லை .அடடா !என் அப்பா தன்னுடைய தலைக்குள் கம்பியூட்டர் ஒன்றை மறைத்து வைத்திருக்கிறாரா? சற்று யோசித்தான் கணேஷ்.*

*"என்னடா ராசா என்ன யோசிக்கிறாய்? விடைகள் ஒத்துப் போகிறதா?*

*"தோல்வியை நான் ஏற்றுக் கொள்கிறேன் அப்பா. நாளையில் இருந்து எனக்கு ஒரு மணி நேரம் கணக்கு படிக்க ஒதுக்கி வையுங்கள். ஆனால் மாதம் ஒரு முறை எனக்கு தரும் நூறு ரூபாயை நிறுத்த வேண்டாம்."*

*"நூறு ரூபாய் என்ன ?அடுத்த மாதம் முதல்இருநூறு ரூபாய் தருகிறேன் .நீ தோல்வியை ஒப்புக் கொண்டு என்னிடம்கணக்கு படிக்க சம்மதித்ததற்கு" என்றார் புன்சிரிப்புடன் சண் மாஸ்டர்.*

*கணேஷ் தனது அப்பாவை இறுக்கக் கட்டிப் பிடித்து கன்னத்தில் முத்தம் கொடுத்தான். சண்மாஸ்டருக்கு தன் ஆயுள் நீண்டுவிட்டது போன்ற ஒரு உணர்வு.*

******

## [கதை6 சோம்பேறியின் சாதனை]

*" அவன் ஒரு சோம்பேறி" எனப் பலரிடம் பெயர்வாங்கினவன். நேரம் தவறாது சாப்பிட்டுவிட்டு தூக்கத்தில் கனவுகாண்பது தான் அவன் பொழுது போக்கு. " தகப்பன் ,சகோதரர்களுடைய உழைப்பில் வாழ்பவன்" எனப் பலரின் விமர்சனத்துக்கு உள்ளானவன். " வாழ்க்கையில் தன்னால் ஒன்றுமே சாதிக்க முடியாதென நினைத்து தற்கொலை செய்வது தான் சரி" , என முடிவுக்கு வந்தான். தனிமையை நாடி கையில் கையிற்றுடன் ஒரு காட்டுப் பக்கத்தைத் தேடி நடந்தான். நடந்த களைப்பில் ஒரு மரத்துக்கடியில் கையிற்றை வைத்துவிட்டுச் சற்று நேரம் தூங்கினான். திடிரெனக் கையில் யாரோ கடிப்பது போல் இருந்தது அவனுக்கு. திடுக்கிட்டு விழித்தான். பல கட்டெறும்புகள் வரிசையாக அவனை பார்த்துச் சிரித்தபடி நின்றன.*

*" என்னைக் கடித்தவிட்டு ஏன் என்னைப் பார்த்து சிரிக்கிறீர்கள்?" என்றான் சோம்பேறி.*

*"சிரிக்காமல் என்ன ,எங்களை உன்னைப் பார்த்து அழச்சொல்லுகிறாயா? எங்களைப் பார் ...! நாங்கள் எப்படி சுறுசுறுப்பாய் வேலை செய்துகொண்டிருக்கிறோம் என்று" என்றது ஒரு எறும்பு.*

*"எனக்கு என்ன அப்படி வேலை இருக்குது செய்வதற்கு. வேலை கேட்டுப் பல இடங்களுக்குப் போனால் வேலை இல்லை என்கிறார்கள்."*

*"மனிதா எங்களை குளவி, தேனீ போன்ற சமூகப் பூச்சிகள் என்பார்கள்" என்றது எறும்பு.*

*"அப்படியென்றால்?"*

*"சமூகத்தில் ஒரு தலைவனுக்குகீழ் எப்படி பலர் பலவிதமான தொழில்கள் செய்கிறார்களோ, அதே மாதிரி தான் நாங்களும் செயலாற்றுகிறோம். அதுவுமல்லாமல் சமூகத்துக்கு பல உதவிகளைச் செய்கிறோம். எங்கள் இனத்தின் உற்பத்திக்கு முக்கிய கர்த்தா யார் தெரியுமா?"*

*"யார் ?"*

*"அதோ இருக்கிறாளே குவீன் என்ற அந்த அரசி தான். அவளின் முழு நேர வேலை*

*ஆயிரக்கணக்கில் முட்டைகளியிட்டு எம்மினத்தைப் பெருக்குவது. அவள் 15 வருடங்களுக்கு மேல் வாழக் கூடியவள். அவளிடம் வேலைசெய்பவர்கள் தான் அவளின் வேலைக் கூட்டம். ஒவ்வொருவருக்கும் வயதுக்கேற்ப பல வேலைகளுண்டு. அதோ பார்த்தாயா, இலைகளை வெட்டித் தூக்கிக் கொண்டு செல்பவர்களை . அதில் கூட பலம்வாய்ந்த வீரர்கள் தான் தடித்த இலைகளை வெட்டுவார்கள். அதுவுமன்றி எம்மை எதிர்க்க வரும் வேறு எறும்புக் கூட்டத்துடன் போர் புரிந்து தம்முயிரைப் பலி கொடுத்து எம்மை காப்பாற்றுவார்கள்.*

*“இலைகளை வெட்ட வெகு தூரம் செல்ல வேண்டிவருமோ?”*

*“பார்த்தாயா! பார்த்தாயா !உன் சோம்பேறித்தனம் உன்னை விட்டு போகவில்லையே. இலைகளை வெட்ட நூறு மீட்டருக்கு அதிகமாக பிரயாணம் செய்ய வேண்டிவரும். சில சமயங்களில் 35 மீட்டர் உயரம் ஏறி இலைகளை வெட்டியப்பின் தங்களுடைய நிறைக்கும் பார்க்க இரு மடங்கு கூடிய நிறையுள்ள இலைகளை அவைகொண்டு செல்லும். ஒரு இரவுக்குள் ஒரு அல்லது இரு தடவை இப்படி வெட்டிய இலைகளைச் சுமந்து செல்வார்கள்.”*

*“இலைகளை என்ன செய்வார்கள்.?”*

*“தம் பொந்துக்குள் அவ்விலைகளை சிறு துண்டுகளாகவெட்டி ,பூஞ்சை (Fungus) வளர்த்து உணவாக சாப்பிடுவார்கள். அதுவும் ஒரு வகை விவசாயமுறை.”*

*“அடேயப்பா...! இந்த சிறிய உடம்பினால் இப்படி பெரிய வேலை செய்ய முடிகிறதே!”*

*“இன்னும் இவர்களிடம் இருந்து நீ படிக்க வேண்டிய பாடங்கள் அனேகம் இருக்கு. மனிதர்களிடையே தொடர்பு கொள்ளும் திறமையை விட எங்களிடம் அத்திறமை கூடுதலாகவுண்டு. எதாவது இனிப்பான பொருளை ஒரு எறும்பு கண்டால், சில நிமிடங்களுக்குள் வரிசையில் பல எறும்புகள் அதை பகிர்ந்து எடுத்துச்செல்லச் செல்லும். ஆனால் மனிதன் அப்படியல்ல. ‘தனக்கு மாத்திரம் தான் ,தான் கண்டு பிடித்தது சொந்தமென’ நினைப்பவன். இரகசியமாக மற்றவர்களுக்கு சொல்லாமல் தனக்குள் வைத்திருப்பான். அப்படி வரிசையாக செல்லும் எறும்புக் கூட்டத்துக்கு தடை ஏதும் வைத்தால் திடீரென அந்தப் பாதையை மாற்றி வேறு சுருக்கமான வழியில் யாம் செல்லும் திறமை வாய்ந்தவர்கள். சுருக்கமான வழியில் நாம் அடைய வேண்டிய இலக்கை அடையக் கூடியவாகள் . எங்களின் செயல்முறைகளை அவதானித்து கணினியில் தகவல்களை எடுத்துச்செல்லும் வழியினை பற்றிய ஆராய்ச்சிகளை மனிதன் நடத்தியுள்ளான்."*

*“எப்படி தகவல்களை பரிமாறிக் கொள்கிறீர்கள்? உங்களால்தான் பேச முடியாதே?*

*“ஆன்டெனா (Antena) எனப்படும் உணரிகள் மூலம் தட்டி ஓசை எழுப்பியும் மணத்தின் மூலமும்தகவல்களைப் பரிமாறிக் கொள்வோம்.”*

*“அது சரி எங்களைப்போல் உங்களிடையேயும் பல சாதிகளுண்டா?”*

*“ எங்களில் கிட்டத்தட்ட 12000 எறும்பு வகைகள் உண்டு.”*

*“நீங்கள் நல்லவர்களா?”*

*“நாம் நல்லவர்களா அல்லது கெட்டவர்களா என்பது சூழ்நிலையைப் பொறுத்தது. இப்போது உன்னை கடித்ததினால் தான் எங்களைப்பற்றி பல விஷயங்களை உன்னால் அறிய முடிந்தது. அது நல்ல விஷயமில்லையா"?*

*“வேறு எந்த விதத்தில் நல்ல காரியங்களைச் செய்கிறீர்கள்?”*

*“ஏன் இல்லை. பூமிக்குள் காற்று உட்புக உதவுகிறோம். சில தீங்கு விளைவிக்கும் பூச்சிகளை அழித்து மனித இனத்துக்கு உதவுகிறோம். தேவையற்ற தாவரங்களை இல்லாமலாக்குகிறோம். விதைளை பரப்பி பயிர்கள் வளர உதவுகிறோம்.”*

*“கொஞ்சம் பொறு ...மனித உயிரைக் காப்பாற்றி இருக்கிறாயா? “*

*“ஏன் இல்லை . கதை ஒன்று சொல்கிறேன். கேட்கிறாயா?.*

*“கதையா? சொல்லு சொல்லு.”*

*ஒரு நாள் ஒரு விறகு வெட்டி காட்டுக்குள் சென்று மரம் வெட்டி களைத்து வீடு திரும்பும் போது பாம்பு ஒன்று கடித்ததினால் உடம்பெல்லாம் விஷம் ஏறி மயங்கி விழுந்துவிட்டான்.”*

*“பிறகு பிறகு. அவன் இறந்துவிட்டானா?”.*

*“இல்லை. சில மணிநேரத்துக்கு பிறகு கண்விழித்து பார்த்தான். அவனால் நம்பமுடியவில்லை. உடம்பெல்லாம் எறும்புகள் கடித்ததினால் அவன் உடம்பில் இருந்த விஷம் நீங்கி அவன் பிழைத்தான்.*

*“ அது எப்படி?”*

*“அவன் விழுந்தது, ஒரு எறும்பு புற்றுக்கு மேல். தம் உயிரை பலி கொடுத்து அவனைக் காப்பாற்றியிருக்கின்றன அந்த எறும்புகள்.”*

*“அடேயப்பா ...!பெரும் தியாகிகள் எனச் சொல்லு.”*

*“அது மட்டுமா !இன்னொரு நாள் ஒரு புறாவை வெடிவைத்து கொல்ல ஒரு வேடன் குறி வைத்த போது அவன் காலைக்கடித்து அவனுடைய குறியைத் தவறச் செய்து, சில எறும்புகள் புறாவின் உயிரைக் காப்பாற்றிவிட்டன.”*

*“புறா நன்றி சொல்வில்லையா?.”*

*“ஏன் இல்லை ஒரு நாள் அதே எறும்புகள் மழைத் தண்ணிரால் அடித்துச் செல்ல இருந்த போது ஒரு பெரிய இலையை புறாக்கள் தங்களுடைய அலகினால் கொத்தி கீழே வீழ்த்தி எறும்புகள் அதில் ஏறி தப்பிச் செல்ல உதவியுள்ளது.”*

*“இப்ப எனக்கு எப்படி உதவப் போகிறீர்கள்?"*
*“நீ மற்றவர்களை நம்பி சோம்பேரியாய் வாழாமலிருக்க வழி சொல்லப் போகிறோம்.”*

*“வழியா!சொல்லுங்கள். முடிந்தால் செய்துப் பார்க்கிறேன்.”*

*“அதோ தெரிகிறதே, அது என்ன ?”*

*“குப்பைமேடு. இது தெரியாதா எனக்கு”*

*“ வடிவாகப் பார். “*

*“ ஓ பேப்பர்களும், பாட்டில்களும், கார்ட் போர்ட் பெட்டிகளும்.”*

*“இவைதான் குப்பைக்குள் பொக்கிஷங்கள். 'குப்பைக்குள் கோமேதகம்' என்று கேள்விப்பட்டிருப்பாயே?”.*

*“கேள்வி பட்டனான். குப்பைக்குள் பொக்கிஷமா? என்ன கதைக்கிறீர்கள்”*

*“ஆமாம் குப்பையில் உள்ள மட்டைகள், பேப்பர்களை பொறுக்கி, மடித்து எடுத்து, கப்பல் துறைக்கு எடுத்துச் செல். அவற்றைப் பதப்படுத்தி பேப்பர் செய்ய வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். அவர்களிடம் கொண்டு போய் கொடு. உனக்கு நாலு காசு கிடைக்கும்” .*

*“சரி ,நீங்கள் சொல்லுகிறீர்களே ? என செய்துப் பார்க்கிறேன். எனக்கு காசு கிடைத்தால் அதிலை கமிஷன் கேட்க மாட்டியளே?”*

*“உன் மனித புத்தி உன்னை விட்டு போகாது. நீ சொந்தக்காலில் நின்றால் எமக்கு சந்தோஷம். எங்களுக்கு வேலை கணக்கு இருக்கு .நாங்கள் வாறோம்”. எறும்புகள் புறப்பட்டுச் சென்றன.*

*******

*பல மாதங்களுக்கு பின் இதே எறும்புகள் அந்த சோம்பேறியை குப்பை மேட்டில் சந்தித்தன.*

*“ஏய் சோம்பேறி ...! எப்படி இருக்கிறாய் ?” என்று அழைத்தன.*

*“என்னை சோம்பேறி என்று கூப்பிட வேண்டாம். நான் இப்ப ஒரு தொழிலாளி. சொந்தமாக உழைப்பது மட்டுமன்றி, இயற்கையை சுத்தப்படுத்தி வாழ்கிறேன்” என்றான்.*

*“நீ ஒரு சாதனையாளன் என்று சொல்."என்றன சிரித்தபடி எறும்புகள்.*

*“ஆமாம் .உங்கள் அறிவுரைக்கு நன்றி” என்றான் சோம்பேரியாக இருந்து சாதனையாளனாக மாறியவன்.*

****

# கதை7 மெலடியும் ரொபினும்

*சிறுவர்களுக்கு நாய் வளர்ப்பதென்றால் பிரியம் அதிகம். தங்களோடு சேர்ந்து விளையாட சகோதர சகோதரிகள் இல்லாவிட்டால் நாயொன்றை வளர்த்து அதோடு விளையாட விரும்புவார்கள். வகுப்பில் உள்ள சினேகிதிகள் வீட்டில் நாய் வளர்ப்பதையும் அது தங்களோடு சேர்ந்து விளையாடுவதையும் கதை கதையாய் சொல்வதைக் கேட்டு தானும் ஒரு நாயை வளர்க்க வேண்டும் என ஆசைப்பட்டாள் மஞ்சுளா. பாவம் மஞ்சுளா, அவளோடு வீட்டில் சேர்ந்து விளையாட, கூடப் பிறந்தவர்கள் எவரும் இல்லை. அவள் ஒரு தனிப்பிள்ளை. பெற்றோர்கள் வேலைக்கு போய் விட்டால், அவள் தனிமையில் இருந்து புத்தகம் வாசிப்பாள். மற்றைய பிள்ளைகளைப் போல் அவளுக்கு டீ.வி பார்க்கும் ஆசை கிடையாது. சில சமயங்களில் தோட்ட வேலை செய்வாள். தன் தனிமையைப் போக்க தனக்கு ஒரு நாய் குட்டி வேண்டும் என்று பெற்றோரை அடிக்கடி நச்சரித்துக் கொண்டிருந்தாள் மஞ்சுளா. தம்பி வேண்டும் என்ற நச்சரிப்பு போய், நாய் குட்டி வேண்டும் என்ற நச்சரிப்பாக மாறியது.*

*மஞ்சுளாவுக்கு நல்ல குரல் வளம் இருந்தது. தன் இனிய குரலில்குளிக்கும் போது பாடுவாள். அவளுக்கு இசை மேல் ஆர்வம் இருப்பதைக் கண்ட அவள் பெற்றோர், அவளைப் பியானோ வாசிக்க பயிற்சி கொடுக்கக் கூடிய டீச்சரிடம் அனுப்பினார்கள். வெகு விரைவில் தன் சொந்தக் குரலில் பாடி, பியானோ வாசிக்க மஞ்சுளாவால் முடிந்தது. இசை மேல் ஆர்வம் அவளுக்கு கடவுள் கொடுத்த வரம். சில சமயங்களில் தன் தனிமையைப் போக்க பியானோ வாசித்தபடி பாடுவாள்.*
*அவளது பிறந்த நாளுக்கு அவளோடு விளையாட கறுத்த லாப்ரடோர் நாய் குட்டி ஒன்றை அறுநூறு டாலர் கொடுத்து வாங்கி, பரிசாக பெற்றோர்கள் கொடுத்தார்கள். அவளுக்கோ தன்னோடு விளையாட ஒரு ஜீவன் வந்துவிட்டதே! என்ற சந்தோஷம் தாங்கமுடியவில்லை.*

*“நீ கேட்டப்படி நாய்குட்டி வாங்கித் தந்தாச்சு. அது சரி, குட்டிக்கு என்ன பெயர் வைக்கப்போறாய் மஞ்சு?” தாய் மகளைக் கேட்டாள்.*

*தனக்கு விருப்பமான இசை சார்ந்த பெயர் ஒன்றை வைக்கவே மஞ்சுளா விரும்பினாள்.*

*“ நாய் குட்டிக்கு “மெலடி” என்று பெயர் வைக்க இருக்கிறேன் அம்மா” என்றாள், சற்று நேரம் சிந்தித்து விட்டு மஞ்சுளா.*

*“மலடியா?. இது ஒரு பெண்நாய். ஏன் மலடி என்று பெயர் வைக்கிறாய்? அது நல்ல பொருத்தமான பெயராக இல்லையே” தாயிடமிருந்து பதில் வந்தது.*

*“மலடி இல்லை அம்மா, மெலடி . அம்மா மெலடியின் அர்த்தம் உனக்குத் தெரியுமா? ஆங்கிலத்தில் “மெலடி” என்றால் தமிழில் ‘இன்னிசை’ என்பது அர்த்தம்.”*

*“அடடா !அப்படியா. உனக்கு விருப்பமான இசையோடு சம்பந்தப்பட்ட பெயரைத்தான் தேர்ந்தெடுத்திருக்கிறாய். எப்ப மெலடி, பாட்டுக்காரி ஆகப்போகிறாள்” சிரித்தபடி தாய் கேட்டாள்.*

*“இக்குட்டி குரைப்பதை கேட்டாயா அம்மா. ஏதோ இசையை கேட்பது போல் இல்லையா உனக்கு? அதோடு ஒருவரும் நாய்க்கு வைக்காத புதுமையான பெயர் இது.”*

*“சரி சரி உன் விருப்பம். ஆனால் ஒன்றுமட்டும் சொல்லுகிறன் மெலடிக்கு அதிகம் செல்லம் கொடுக்காதே. நல்ல வீட்டுப் பழக்கங்களைப் பழக்கிப்போடு. வீட்டுக்குள் மல சலம் கழிக்க விடாமல் பார்த்துக்கொள்”, மஞ்சுளாவின் தாய் மகளுக்கு நிபந்தனை விதித்தாள்.*

*“சரி அம்மா. அதிகம் செல்லம் கொடுக்காமல் வளர்த்தால் நல்ல பழக்கங்களைப் பழகும்” என்றாள் மஞ்சுளா.*

******

*“ மெலடியின் வளர்ச்சி விரைவாக இருந்தது. மெலடிக்கு வீட்டில் எவராவது சாப்பிடும் போது தானும் சாப்பிட வேண்டும்” என்ற ஆசை இருந்தது. மஞ்சுளாவின் தாத்தா சாப்பிடும்போது அவர் அருகே போய் நின்று வாலையாட்டி வாய்பார்க்கும். எதாவது சாப்பிட கொடுக்காவிட்டால் அவரின் கவனத்தை கவர உறுமத் தொடங்கும். பழங்கள் என்றால் நல்ல விருப்பம். மெலடியின் சுறுசுறுப்பைப் பார்த்து வீட்டில் எல்லோரும் வியந்தார்கள். மஞ்சுளாவின் தாத்தா அமைதியாக புத்தகம் வாசிப்பது மெலடிக்கு பிடிக்காததென்று. தன் அருகே வந்து தன்னோடு விளையாட வா ,என்று அழைப்பது போல வாலை ஆட்டியபப்படி குரைக்கத்தொடங்கும்.*

*“மெலடி சும்மா சத்தம் போடாமல் இரு என்று சொன்னால் சற்று நேரம் குரைக்காமல் இருந்துவிட்டு திரும்பவும் குரைக்கத் தொடங்கும். பேசமுடியாத ஜீவன் என்றாலும் தன் செயல் மூலம் தனக்குத் தேவையானதை விளக்கப்படுத்திக் கேட்கக் கூடியது மெலடி . இரவு பத்துமணி என்றவுடன் அமைதியாகி, நித்திரைக்கு கால்களை நீட்டியபடி படுத்துவிடும். அதற்கென அதிக*

விலை கொடுத்து கூடொன்றை மெலடிக்கு வாங்கிக் கொடுத்தார்கள். ஆரம்பத்தில் மெலடியை கூடு கூடு என்று சொன்னால் கூட்டுக்குள் போக விரும்பாது. ஏதோ சிறைக்கு போவதாக அதுக்கு எண்ணம். படிப்படியாக அதன் உணவை கூட்டுக்குள் வைத்தால் தானாகவே கூட்டுக்குள் போகப் பழகிக்கொண்டது. வெகு விரைவில் மெலடி கூடு என்றால் மறுக்காமல் உள்ளே போய்விடும். மெலடிக்கு ஒரு மெத்தை ஒன்று உண்டு. அதில் சொகுசாகப் படுப்பதை விரும்பும். காலப் போக்கில் மஞ்சுளாவோடு கட்டிலில் ஒன்றாக மாடியில் படுக்கத் தொடங்கியது. மஞ்சுளாவின் போர்வையைத் தான் எடுத்துவிடும்.

காலை ஆறு மணியென்றால், விழித்து மஞ்சுளாவின் கவனத்தை குரைத்து கவரும். தனக்கு மல சலம் கழிக்க போக வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டுவது போல இருக்கும். மெலடியைத் கூட்டிலிருந்து திறந்துவிட்டால், அது முதலில் வெளித்தோட்டத்துக்குத் தான்போகும் வாசலுக்கு. வாசலில் ஒரு மணி தொங்கிக் கொண்டிருக்கும். அதை பாவிக்கும் பயிற்சியை மெலடிக்கு மஞ்சுளா கற்றுக் கொடுத்திருந்தாள். வெளியே தோட்டதுக்குப் போகவேண்டும் என்றால் மெலடி தன் முகத்தால் அந்த மணியை அடிக்கும். அதன் அறிவுக் கூர்மையைக் கண்டு மஞ்சுளாவின் தாத்தாவாகிய நான் வியந்தேன். வாய் பேசமுடியாத ஜீவனாக இருந்தாலும் தன் செயல் மூலம், முகபாவனை மூலமும்தொடர்பு கொள்ளும். மெலடி தன் பார்வையால் எல்லோரையும் கவரக் கூடியது. யாராவது கதவைத் திறந்து விட்டால் மெலடி தோட்டத்துக்குப் பாய்ந்தோடும் வேகம் ஒரு புலியைப்போல் இருக்கும். தன் காலைக் கடனை முடித்துக் கொண்டு தோட்டத்தில் சற்று உலாவி வரும்.

குளிர் காலத்தில் ஸ்னோவில் புரண்டு விளையாட மெலடிக்கு விருப்பம். கனடாவில் குளிர் அதிகமுள்ள நியூபவுன்லாந்து மாகாணத்தில் உள்ள லப்ரேடார் பகுதியைபூர்வீகமாக கொண்டப்படியால் அதற்கு ஸ்னோவில் விளையாட ஈர்ப்பு அதிகம். அதோடு நீரில் நீந்தவும் விருப்பம்.

“மெலடியை இவ்வளவு விலை கொடுத்து வாங்கும் முன்பே இந்த நாயின் இனத்தைப் பற்றி விசாரித்தாயா?” என்று மகளிடம் கேட்டேன்.

“இல்லாமலா தாத்தா. நாய்குட்டியை விற்கும் முன்பு கடைக்காரன் என்ன சொன்னான் தெரியுமா”?

“என்ன சொன்னான்”?

“இந்த நாய் இனம் தன் சொந்தக்காரருக்கு அருகேயே எப்போதும் இருக்கப் பார்க்கும். சரியான புத்திசாலியான நாய் இனம். இதோடு பழக்குவது இலேசு . வீட்டுக்காரருடன் ஒத்துழைக்கும்.

‘தேடிப் பிடிப்பதில்’ இந்த இனம் பெயர் போனது. இவை மஞ்சள், சாக்கலேட் , கறுப்பு நிறங்களில் உண்டு. முன்னைய ‘அமெரிக்க ஜனாதிபதி கிளின்டனும்’,‘ரஷ்ய ஜனாதிபதி பூடினும்’ கூட இந்த இன நாயை தான் வைத்திருந்தனர். வளர்ந்தால் கிட்டத்தட்ட 45 கிலோ நிறையை அடையும். இந்த இன நாயின் தோல் குளிரையும் நீரையும் தாங்கக் கூடியது. பலமுள்ள தாடையுள்ளவை. வேலை செய்யும் போது உதவிக்குப் பயன்படும். இது ஒரு மீட்டுக்கொடுக்கும் நாய் .அதனால் தான் ‘லப்ரடோர் ரிட்ரீவர்’ (LabroderReteriver) எனவும் சருக்கமாக் Lab எனவும் அழைப்பார்கள். இந்த குட்டி நல்ல கலப்பு இல்லாத உயர் சாதி லாப்ரடோர் குட்டி . இந்த சாதி நாய்கள் நியூபவன்லாந்து மாகாணத்தைச் சேர்ந்தவை. மீன் பிடிகாரரின் தொழிலுக்குப் பெரும் உதவியாக இருப்பது இச்சாதி நாய்கள். நன்றாக நீந்தக் கூடியவை. அதுவுமல்லாமல் மோப்பம் பிடிக்கக் கூடியவை. கனடாவில் பிரபல்யமான சாதி நாய்களில் இதுவும் ஒன்று தாத்தா’’ என்று அந்த நாய் குட்டியின் சாதியை பற்றி ஒரு சிறு பிரசங்கமே எனக்கு வைத்தாள் மஞ்சுளா. அவ்வளவுக்கு மெலடி பற்றி என் பேத்தி அறிந்து வைத்திருந்தாள்.

*******

வட அமெரிக்க ரொபின் குருவியின் ஆயுட் காலம் 12 வருடங்கள். மெலடியின் ஆயுட்காலமும் அவ்வளவே. மெலடி கருமையான தோற்றத்தைக் கொண்டிருந்தாலும் அதில் ஒரு கம்பீரமும் இருந்தது.மெலடி எவ்வளவு குரைத்தாலும் பொறுமையாக தோட்டத்துக்கு ரொபின் வந்து போகும். அதன் வருகை, இளவேனிற்காலம் ஆரம்பமாகப்போவதைக் குறிக்கும். ரொபின் பார்ப்பவர்களைக் கவரக் கூடிய அழகிய தோற்றமுள்ள குருவி. ரொபின் குருவி ஆண் குருவியானாலும் பார்க்க பிரகாசமான நிறத்தைக்கொண்டது. அதன் கண்ணைச்சுற்றி உள்ள வளையமும், களுத்தில் உள்ளவெள்ளைநிற அடையாளமும், அதன் வயிற்றில் உள்ள கடும் ஆரஞ்சு நிற வர்ணமும் அதை ஆண் குருவியாகக் காட்டிற்று.

ரொபின் போடும் ஓசையானது ஒரு இன்னிசைப் போல இருக்கும் . ஜுலை முதல் ஆகஸ்ட் மாதங்கள் வரை அவை தன் குரலின் மகிமையைப் பாடிக்காட்டுவதால் “பாடும் குருவி’’ என மக்களிடையே ரொபின்பெயர் வாங்கியது. தன்னோடு போட்டியாக ஓசை எழுப்ப ஒரு உயிர் வந்ததையிட்டு ஆரம்பத்தில் மெலடிக்கு பொறாமையாக இருந்தது.அதனால் ரொபின் பாடும் போதெல்லாம் மெலடி குரைக்கும். ஆனால் காலப்போக்கில் ரொபின் போடும் இனிமையான ஓசையால் மெலடி கவரப்பட்டது. அதனால் ரொபினை தோட்டத்தில் இருந்து துரத்திவிட மெலடி விருப்பப்படவில்லை. தன்னை யாராவது தாக்க வந்தால்,ஒரு வித கீதத்தை பாடி மற்றைய ரொபின் குருவிகளை வரமால் பாதுகாத்து விடும்.

*வீட்டுக்குப்பின்பகுதியில் உள்ள தோட்டத்துக்கு அடிக்கடி வந்து போகும் ரொபின் குருவியும், ஒரு கொழுத்த அணிலும், இரு முயல்களும் வருவது மெலடிக்கு பிடிக்காது. அணில் ரொபினோடு ஒன்றாக தானியங்களை உண்பதைக் கண்டு மெலடி குரைத்து தன் எதிர்ப்பைக் காட்டும். அணில் ரொபினோடு நட்பு கொள்வது மெலடிக்கு பிடிப்பதில்லை. ரொபினுக்கும் அணிலுக்கிடையே நட்பு வளர்வதை மெலடிக்கு பிடிக்கவில்லை போலும். முயல்கள் இரண்டும், தம்பதிகள் போல் வருவதால் எங்கே மெலடி தங்களை கடித்துக் குதறி விடுமோ ! என்ற பயம் இருந்ததினால் சில நாட்களில் தோட்டத்துக்கு வராமலே நின்று விட்டன.*

*அதுவும் ரொபினோடு ஆரம்பத்தில் மெலடிக்கு பிரச்சனை. ரொபின் ஒரு அழகான குருவி. தோட்டத்துக்கு வருவது ஆண் குருவி. ஆரம்பத்தில் அவர்களைத் தோட்டத்துக்குள் கண்டால் வீட்டுக்குள் இருந்தபடியே குரைத்து, அவைகளைத் தோட்டத்திலிருந்து துரத்த தன்னை வெளியே விடும்படி ஆராவாரப்படும். தோட்டத்துக்குபோகும் கதவைத் திறந்து விடும்படி மணியை அடிக்கும். குருவிகளையும் முயல்களையும் போய் பயமுறுத்த அதற்கு ஆவல். அவைகளை துரத்தியப் பின்னர் திரும்பி வந்து வீட்டுக்குள் வர கண்ணாடிக் கதவை தன் கால்களால் தட்டும்.*

*“ கதவைத் திறவுங்கள் எனக்குப் பசிக்கிறது. நான் சாப்பிட வேண்டும்” என்பது போல இருக்கும் அதன் செயல். கதவை மெலடி வீட்டுக்குள் வர திறந்து விட்டால், உடனே அது உணவும் தண்ணீரும் வைத்திருக்கும் இடத்துக்கு ஓடும். தண்ணீரை மடக் மடக் என்று குடித்தபின்னரே தன் காலை உணவைச் சாப்பிடும்.*

*மெலடிக்கு ஆங்கிலத்திலும் தமிழிலும் நாம் பேசுவது விளங்கும். “மெலடி இரு” என்று ஆங்கிலத்தில் சொன்னால் பதுமையாக இருக்கும். “ மெலடி சத்தம் போடாதே” என்று தமிழில் சொன்னால் குரைப்பதை நிறுத்திவிடும். “மெலடி யூ ஆர் ஏ குட் கேர்ள்” என்றால் வாலை ஆட்டியப்படி தனது மகிழ்ச்சியைக் காட்டி  அருகே வந்து தன்னைத் தடவச் சொல்லி முகத்தை நீட்டும். மஞ்சுளா பள்ளிக்கூடதுக்கு போய் திரும்பும் வரை முணுமுணுத்தப்படியே இருக்கும் .மஞ்சுளா வீடு திரும்பியப்பின் சந்தோஷத்தால் அங்கும் இங்கும் ஓடி தன் கவனத்தை அவளிடம் இருந்து கவரப்பார்க்கும்.*

*மெலடிக்கு ஆப்பிள் என்றால் நல்ல விருப்பம். நான் ஆப்பிள் சாப்பிடுவதைக்கண்டால் என் காலடியில் உணவு கேட்டு வந்து நிற்கும். ஏக்கம் உள்ள பரிதாபப் பார்வை. எவரும் அதன் மேல் பரிதாபப்பட்டு உணவு கொடுத்துவிடுவார்கள். மனிதர்களுக்கு சாக்கிலேட், ஐஸ்கிரீம்மேல் விருப்பம் இருப்பது போல ,மெலடிக்கு அவை மேல் அதிக விருப்பம்.*

*நீண்ட வால். கருமையான மினு மினுக்கும் உடல் , அழகிய துருதுருத்த கண்கள். கூரிய பற்கள். இந்த அமைப்பினைக் கொண்டது மெலடி. ஒரு வயதாகும்முன்பே நல்ல வளர்த்தி. வீட்டு வாசலில் யாரவது வந்து வாசல் கதவைத் தட்டும் முன்னரே அவர்கள் வருகையை மோப்பம் பிடித்து குரைக்கத்தொடங்கும். மஞ்சுளாவின் நண்பர்களைக் கண்டால் நல்லவரவேற்பு அளிக்கும். அவர்களோடு வெளியேப்போய் உலாவி வருவது மெலடிக்கு பிடித்தமான தொன்று.*

*********

*அன்று தமிழ் புத்தாண்டு தினம். மஞ்சுளாவின் அம்மா சர்க்கரைப் பொங்கல், வெண்பொங்கல், வடை ஆகியவற்றை தயார் செய்தாள். சுவாமிக்கு படைக்கும் போது காகம் கனடாவில் இல்லாததால் தோட்டதுக்கு வரும் ரொபினுக்கு படைக்க நினைத்து வாழை இலையில் கொஞ்சம் வெண்பொங்கலையும் சக்கரைப் பொங்கலையும் வைத்து தோட்டத்துக்கு வரும்,குருவிகள் உண்பதற்கு வைத்தாள். இதை கவனமாக மெலடி கவனித்துக் கொண்டிருந்து, அம்மா வீட்டக்குள் வந்த பின் மெலடி மெதுவாக தோட்டத்துக்கு சென்றது.*

*மஞ்சுளாவின் தாய் அதைக் கவனித்துவிட்டாள்.*

*''ஏய் மெலடி. ரொபினை சாப்பிட விடு. உனக்கு தனியாக பொங்கல் வைத்திருக்கிறேன்'' என்றாள் சத்தம் போட்டு. மெலடி அதை கேட்காதது போல தோட்டத்துக்குப் போய் மஞ்சுளாவின் தாய் வாழை இலையில் வைத்த பொங்கலை ரொபின்உண்பதை அமைதியாக அவதானித்தப்படி நின்றது. தன் குரலை உயர்த்தி குரைக்கவில்லை. சில நிமிடங்கள், சில நேரத்துக்குப் பின் மெலடிக்கு என்ன தோன்றியதோ தெரியாது ,மெதுவாக தானும் போய் ரொபினோடு சோந்து பொங்கலைப் பகிர்ந்து உண்ண ஆரம்பித்தது.*

*பொங்கலை சாப்பிட வந்த அணிலை குரைத்து துரத்திவிட்டது. அந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த எனக்கு மெலடியின் செயல் ஆச்சரியத்தைக் கொடுத்தது. என்னால் அக்காட்சியை நம்பமுடியவில்லை. என் மகளையும் என் பேத்தி மஞ்சுளாவையும்கூப்பிட்டு மெலடியின் சகோதரத்துவ உணர்வைத் சுட்டிக் காட்டினேன். அவர்களாலும்அந்தக் காட்சியை நம்பமுடியவில்லை.*

*'' இப்போ ரொபினும்,மெலடியின் சினேகிதனாகிவிட்டது போலத் தெரிகிறது. அவர்களுக்கிடையே ஒற்றுமையாக வாழ ஒரு உடன்படிக்கை ஏற்பட்டுவிட்டதாக்கும்'' என்றேன் நகைச்சுவையாக நான்.*

*“ஆமாம் . நாம் காணமுடியாத காதல் அவர்களுக்கிடையே உருவாகிவிட்டது. ஆரம்பத்தில் மெலடிக்கும் ரொபினுக்கும் இடையே ஊடல். அந்த ஊடல் போய் காதலாக மாறிவிட்டது,என்றேன் நான்.”*

*“ஆம் தாத்தா. மெலடிக்கு நல்ல இளகிய மனசு” என்றாள் சிரித்தபடி மஞ்சுளா.*

*“பார்த்தாயா மஞ்சுளா. மிருகங்களுக்கும் பறவைகளுக்கும் இடையே கூட காதல் ஏற்பட இனம் தேவையில்லை. மெலடிக்கு தோட்டத்துக்கு வருவது ஆண் ரொபின் என்று கூடத் தெரியும் போல எனக்குத் தோன்றுகிறது.” என்றேன் நான்.*

*“ இது ஊடல் போயின் காதல் என்பது போல் அவர்களுக்கிடையே வளர்ந்த காதல். எங்களுக்கு இவ்விசித்திரமான காதல் புரியாது தாத்தா” என்றாள் மஞ்சுளா.*

****

# கதை8 மூன்று குட்டி சாத்தான்கள்

*மிக நீண்ட காலத்திற்கு முன்பு பூமியில் விசித்திரமான மற்றும் மந்திர உயிரினங்கள் மட்டுமே வாழ்ந்தன. மேகங்களில் பயணம் செய்து அதை நிர்வகிக்கும் அளவுக்கு உயரமாகக் குதிக்க வேண்டும் என்று கனவு கண்ட மூன்று சிறிய மேகனன். வின்னன், மலையன் என்ற குட்டிச்சாத்தான்கள் வாழ்ந்தார்கள் . அவர்களின் உயரம் மூன்று அடிகள் மட்டுமே. அவர்களை எல்லோரும் குள்ளர்கள் என்று கேலி செய்தனர். அவர்களுக்கு பெண் கொடுக்க ஒருவரும் வரவில்லை. கவலையில் தற்கொலை செய்ய ஒரு காட்டுக்குப் போனார்கள். ஒரு மரத்தில் கையிற்றை கழுத்தில் கட்டி தூக்கு போட்டு இறக்கப்போகும் சமயம் அந்த மரத்தின் கீழ் ஒரு முனிவர் கண் மூடி தவம் செய்து கொண்டு இருந்தார். அவரை வணங்கி தங்களைத் தூக்கு போட்டு அவர்கள் சாகத் தயாராகும் சமயத்தில் முனிவர் கண் விழித்தார்.*

*“என்ன செய்யப் போகிறீர்கள்” முனிவர் அவர்களைக் கேட்டார்*

*“எங்களுக்கு உலகில் வாழப் பிடிக்கவில்லை .எங்களை எல்லோரும் குள்ளர்கள் என்று கேலி செய்கிறார்கள். அதனால் நாங்கள் தற்கொலை செய்யப் போகிறோம் சாமி ”*

*“உங்களுக்கு என்ன பைத்தியமா? உங்களுக்குள் சிந்தித்து செயல்படும் திறமை இருக்கு .உங்கள் மூவருக்கும் ஒரு வேலை தருகிறேன், அதை என் திருப்திக்கு செய்தால் என் சக்தியைப் பாவித்து உங்களை வளர்ந்தவர்களாக மாற்றுகிறேன் சம்மதமா ?”முனிவர் சொன்னார் .*

*“சம்மதம் . என்ன வேலை சொல்லுங்கள் சாமி” என்றனர் மூவரும் .*

*ஒவ்வொரு குட்டிச்சாத்தான்களுக்கும் அவர்கள் விரும்பிய வேலையை வழங்க முனிவர் முடிவு செய்தார்.*

*“வாழ்க்கையில் நீங்கள் எதை அதிகம் செய்ய விரும்புகிறீர்கள்?” முனிவர் கேட்டார்.*

*“சுவாமி எனக்கு மேகங்களில் பயணம் செய்ய வேண்டும்” மேகனன் சொன்னான் .*

*“சுவாமி எனக்கு விண்கல்லில் பயணிக்க வேண்டும்” வின்னன், சொன்னான். .*

*“சுவாமி எனக்கு சுமார் 8850 மீட்டர் உயரமுள்ள இமயமலையின் உச்சியைத் தொட வேண்டும்” மலையன் சொன்னான் .*

*“நீங்கள் மூவரும் விரும்பியப்படி நடக்கும் . ஒரு மாதத்தில் உங்கள் அனுபவம் பற்றி திரும்பி என்னிடம் வந்து எனக்கு என்ன செய்தீர்கள் என்று சொல்லவேண்டும் . அதன் பின் நான் தீர்மானித்து உங்கள் உயரத்தை ஆறடியாக அதிகரிப்பேன் சம்மதமா”.*

*“சம்மதம் சாமி”, மூவரும் ஒருமித்துச் சொன்னார்கள்.*

*தன் சக்தியின் ஒரு பகுதியை அவர்களின் தலைகளில் கை வைத்து முனிவர் வழங்கினர்.*

*மறு நிமிடம் மேகனன் பல உருவ தோற்றமுள்ள மேகங்களில் அமர்ந்து ஓடும் ''மேகங்களே! ஒரு சொல் கேளீர்'' என்று பாடிய படியே பயணிக்கத் தொடங்கினான்.*

*வின்னன் பூமியை நோக்கி வெகு வேகமாக போகும் ஒரு பெரிய விண்கல்லில் அமர்ந்து '' கல் எல்லாம் விண்கல்லாகுமோ!'' என்று பாடி பயணிக்கத் தொடங்கினான்.*
*மலையன் எந்த வித சிரமமும் இன்றி இமயமலை உச்சியை அடைந்து மலை ஓரம் வீசும் குளிர் காற்று'' என்று பாடியப்படியே உலகத்தை பார்த்தான். இருவர் மலையின் உச்சியை அடைய பனி நிறைந்த பாதையில் முயற்சித்துக் கொண்டு இருந்ததைக்கண்டான்.*

*பல மேகங்களில் பயணித்த மேகனனுக்கு கீழே அவன் கண்ட காட்சி அவனைஅதிர்ச்சியடைய வைத்தது .அந்த ஊரில் மழை வெகு காலம் இல்லாமல் மரம் செடிகள் இல்லமால் கருகி போயிருந்தன. நிலம் வெடித்து இருந்தது; குடிப்பதுக்கு தண்ணீர் இல்லாமல் பெண்கள் வெகு தூரம் குடங்களை கமுவிக் கொண்டு தண்ணீர் தேடிச் செல்வதைக் கண்டான்.*
*'' என்ன இது. எதுக்கு இந்த ஊர் ,இந்த நிலையில் இருக்கிறது ?பயணித்த மேகத்திடம் மேகனன் கேட்டான்.*
*'' இந்த ஊர் மக்கள் கொலை, திருட்டு, சாதி மத கலவரங்கள் செய்தார்கள் .அதற்கு கடவுள் கொடுத்த தண்டனை. கார்கிமுகில் அந்த ஊர் பக்கம் போக பயந்தது .அதனால் அங்கு மழை பெய்யவில்லை '' என்றது மேகம்.*
*'' இறைவன் கொடுத்த தண்டனை போதும் .அவர்கள் தங்கள் தவறை உணர்ந்து விட்டார்கள். கார்மேகம் இனிநீ பயம் இல்லாமல் அந்த ஊருக்கு போய் மழையைக் கொடு'' என்றான். மேகனன் சொன்னதைக் கேட்டு கார்மேகம், அந்த வறட்சியில் இருந்த ஊருக்கு மழை பொழியத் துவங்கியது . மரம் செடிகள் துளிர் விட்டன.*

*சுமார் அரை கி.மீ நீளமுள்ள விண்கல்லின் மேல் அமர்ந்து பயணித்த வின்னனுக்கு ,விண்கல் எங்கே போகிறது என்று புரியவில்லை . அவன் அதைப் பார்த்துக் கேட்டான், '' இந்த வேகத்தில் எங்கே போகிறாய் ?''*

*''இது தெரியாதா உனக்கு . பூமாதேவியை சந்திக்கப் போகிறேன்''.*

*'' ஐயோ கடவுளே...! இந்த பெரிய பிரபஞ்சத்தில் வேறு இடம் இல்லையா உனக்கு போவதற்கு. நீ பூமியில் போய் மோதினால் அந்த ஊரின் பெரும் பகுதியும் மக்களும் அழிந்து விடுவார்கள்.''*
*'' நான் அப்போ கடலில் போய் மோதுகிறேன்''*
*''எதுவும் நீ செய்ய வேண்டாம். கடலில் நீ மோதினால் பேரலைகள் தோன்றி மக்களை அழித்து விடும். அதனால் நீ உன் திசையை மாற்றிச் செல். உனக்கு தேவையானால் உயிர்கள் இல்லாத வேறு ஒரு கிரகத்தோடு போய் மோது . சில நேரம் நீண்ட பயணத்தின் பின் நீ எரிந்து விடுவாய். இது எனக்கு நீ செய்யும் உபகாரமாக இருக்கட்டும்'' வின்னன் சொன்னான்.*

*சரி ,நீ நல்லது செய்ய நினைப்பதால் நான் சென்று பூமியைத் தாக்கமல் பார்த்துக் கொள்கிறேன்'' என்றது விண்கல்.*
*''நன்றி. நீ சம்மதித்ததுக்கு'' என்றான் வின்னன்.*

*இமயமலையின் உச்சியை அடைந்த இமையன் குளிரால் நடுங்கினான் .எங்கு திரும்பினாலும் பனிமலை . மலையின் ஒரு பகுதி பனி மலை உருகி சரிவு எற்றபடப் போவதை இமையன் கண்டான். அந்த சரிவு மலை ஏறுபவர்கள் திசையில் செல்லும் அபாயம் உண்டு , என்பதை அறிந்தான். மலை ஏறுபவர்களை மலையன் அங்கிருந்து வெகு சீக்கிரத்தில் வேறு இடத்துக்கு*

*நகரும் படி,அவர்களை  எச்சரித்தான். அவனின் எச்சரிப்பால் அவர்கள் மூவரும் உயிர் தப்பினார்கள்.*
*மூவரும் தங்களின் ஒரு மாதப் பயணத்தை முடித்து முனிவரிடம் சென்று தாங்கள் செய்த வேலைகளின்   விபரத்தை  சொன்னார்கள். முனிவர் அவர்கள் செய்த மனிதபிமான காரியங்களை அறிந்து அவர்களை பாரட்டி அவர்கள் மூவரையும் ஆறடி மனிதர்களாக்கினார்.*

****

# கதை 9  தொலைந்த  புத்தகம்

நான் புதினொராம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்த காலமது. அன்று வகுப்பில் நடந்த சம்பவம் இன்றும் என் ஞாபகத்தில் நிற்கிறது.அப்போது என்னிடம் வேறொருவரிடமும் இல்லாத ஒரு நல்ல இரசாயன ஆங்கிலப் பாடப் புத்தகம் இருந்தது. அப்புத்தகத்தை என் மாமா லண்டனிலிருந்து தனக்குத் தெரிந்தவர் ஒருவர் மூலம் கொடுத்து அனுப்பியிருந்தார் .புத்தகத்துக்கு சட்டைப்போட்ட மாதிரி அப்பா கச்சேரியில் இருந்துக்கொண்டு வந்து வைத்திருந்த பிரவுண் பேப்பரில் கவர் போட்டு என் பெயரை தெளிவாக வெளிக் கவரில் கொட்டை எழுத்துக்களில் எழுதி வைத்திருந்தேன். புத்தகத்தின் உரிமை எனது என்பதை வலுப்படுத்த, புத்தகத்தின் பெயரை மட்டும் கொண்ட முதலாம் பக்கத்தின் மேல் வலது மூலையில், எனது பெயரையும் எனது கல்லூரியின் பெயரையும் எழுதியிருந்தேன். அந்தப் புத்தகத்தை எனக்கு இரசாயனப் பாடம் எடுக்கும் என் வகுப்பு ஆசிரியரும் தன் பாவனைக்கு அடிக்கடி கேட்டு வாங்குவார். காரணம் அதில் மற்றைய புத்தகங்களில் இல்லாத பல விடயங்கள் தெளிவாக விளக்கப் பட்டிருந்ததேயாகும்.

என் நண்பர்களான சிவம் , ரவி, மகேஷ் மூவருக்கு மட்டும் வகுப்பு நேரங்களில் அதைப் பாவிக்கக் கொடுப்பேன். அவர்களும் பாவித்து விட்டு உடனே கொடுத்து விடுவார்கள். அதற்கு கைமாறாக சிவம் எனக்கு தன் புத்தகத்துக்குள் தான் வைத்திருக்கும் மயிலிறகின் ஒரு துண்டைத் அன்பளிப்பாகத் தந்தான். புத்தகத்தில் அதை வைத்தால் படிப்பு மூளையில் நன்றாகப் பதிந்துவிடும் என்பது அவன் நம்பிக்கை. நான் அதை என் புத்தகத்தில் வைக்காது என் தம்பியிடம் கொண்டு போய்க் கொடுத்தேன். அவனுக்கு மயிலிறகு என்றால் விருப்பம். அது குட்டி போடும் என்ற நம்பிக்கை. ஒவ்வொரு நாளும் குட்டி போட்டிருக்கிறதா என்று தன் புத்தகத்தைத் திறந்துப் பார்ப்பான்.

‘‘அண்ணா உனக்கு இந்த மயிலிறகைத் யார் தந்தது’’தம்பி என்னைக் கேட்டான்.

‘‘ என்நண்பன் சிவம் தான். அவனுக்கும் உன்னைப்போல மயிலிறகு மேல் ஆசை’’ என்றேன். எனக்கு பச்சைத்தண்ணி மாங்காய் என்றால் மிகவும் பிடிக்கும். அதுவும் உப்பு மிளகோடு வகுப்பில் ஆசிரியருக்குத் தெரியாமல் சாப்பிடுவதென்றால் அது தனி உருசி.அந்த மாங்காயை ரவி தன் வீட்டில் இருந்து புத்தகத்தைப் பாவித்ததற்கு கைமாறாகக் கொண்டுவந்து தருவான். மூன்று நண்பர்களும் பகிர்ந்து உப்பு மிளகுத் தூளுடன் பகிர்ந்துண்போம். மகேஷ் உப்பு மிளகுத்தூளை வீட்டில் இருந்து கொண்டு வருவான். அதோடு மகேஷ் தன் விலை உயர்ந்தபார்க்கர் பேனாவை வகுப்பில் என் புத்தகத்தை பாவித்ததற்காக எனக்கு எழுதத் தருவான். அதை எழுதும் போது எனக்கு ஒரு பெருமை.'பாக்கர் 51' என்ற போனாவுக்கு அந்த காலத்தில் ஒரு தனி மதிப்பு. என்னிடம் இருந்த சுவான் பேனைவின் மதிப்பு குறைந்தது. இது

ஒரு வகை பண்ட மாற்றம் என்றும் எடுத்துக் கொள்ளலாம். எங்களுக்கிடையே உள்ள நட்பை மேலும் இந்த பண்ட மாற்று முறைபலப்படுத்தியதென்றே சொல்லலாம். அதைக் கண்ட மற்ற மாணவர்கள் பொறாமைப் பட்டனர். எங்கள் நான்கு பேருக்கிடையில் தான் வகுப்பில் முதலாம் மாணவானாக வருவதற்கு கடும் போட்டி .
எனக்கு இரசாயனப் பாடம் என்றால் சுத்த சூனியம். இரசாயனப் பாடத்தில் உள்ள சமன்பாடுகளை நினைவில் வைப்பதென்றால் எனக்கு பிடிக்காததொன்று. பௌதிகமும், கணிதமும் தான் எனக்கு விருப்பமான பாடங்கள். சிவாவுக்கும் ரமேசுக்கும் இரசாயனப் பாடம் சுமாராக போகும். ரவி மாத்திரம் அதில் கெட்டிக்காரன். அதற்கு காரணம் அவனின் தகப்பனார் இரசாயனத்தை பட்டப்படிப்பிற்கு பாடமாக எடுத்ததே. அவரிடம் வீட்டில் உதவி பெறுவான். இரசாயன பரீட்சைக்கு ஒரு கிழமை இருந்தது. பரீட்சை என்று வந்தவுடன் மாணவர்களிடையே போட்டி பொறாமை அதிகம். சில சமயம் போட்டிக்காக நோட்ஸ் புத்தகங்கள் திடீரென்று மறைந்துவிடும். பின் பரீட்சை முடிந்தவுடன் எங்கேயோ மூலையில் அனாதையாக கிடக்கும். இது எல்லாக் கல்லூரிகளிலும் நடப்பது சகஜம். வகுப்பில் ஆசிரியர் சொல்வதைக் கேட்டு குறிப்பெடுக்காமல், கவலையீனமாக இருக்கும் மாணவர்கள் கையாளும் யுக்தி, மற்றைய மாணவர்களின் நோட்ஸ் புத்தகத்தைத் திருடுவது தான். அதனால் நான் எப்போதும் எச்சரிக்கையாக இருந்தேன். தினமும் வகுப்புக்கு வரும் போது எனக்கு தேவையான புத்தகங்களையும் நோட்ஸ் காப்பிகளையும் மாத்திரமே எண்ணிக் கொண்டு வருவேன். புத்தகங்கள் இருக்கும் பை என் கைகளை விட்டுப் பிரியாது.
ஒரு நாள் இரவு படிக்கும் போது மாமா எனக்கு அனுப்பிய இரசாயனப் பாடப் புத்தகத்தைத் தேடினேன். என் புத்தகப் பையில் அது இருக்கவில்லை. என் மனம் திக்கென்றது. என் மேசைமுழுவதும் தேடினேன். இருக்கவில்லை. ஒரு வேளை என் தம்பி வேடிக்கைக்காக எடுத்தானோ !என்று நினைத்து அவனைக் கேட்டேன். " நான் உன் அறைப் பக்கமே வரவில்லை" என்று சுருக்கமாகப் பதில் அளித்துவிட்டுபோய்விட்டான். எனக்கு அன்று வகுப்பில் கடைசியாக அதை இரசாயனப் பாடம் எடுக்கும் ஆசிரியர் பார்த்துவிட்டு என்னிடம் திருப்பிக் கொடுத்தது நினைவிருந்தது. புத்தகத்தை மறக்காமல் என்புத்தகப் பைக்குள் வைத்ததும் எனக்கு நல்ல ஞாபகம் இருந்தது. ஆசிரியர் புத்தகத்தை அன்று திருப்பித் தந்த பின் அதை பார்க்கக் கூட ஒருவருக்கும் கொடுக்கவில்லை. அப்படி இருந்தும் அது மறைந்தது எனக்கு ஆச்சரியமாயிருந்தது. அதே மாதிரி புத்தகம் ஊரில் வாங்க முடியாது.
புத்தகத்தை காணாது பதறிப் போனேன் நான். இந்த முறை இரசாயானப் பாடம் பெயில். அந்த புத்தகத்தைத் தான் நம்பி இருந்தேன். இரசாயனப் பாடம் எடுக்கும் ஆசிரியர் அதில் இருந்து தான் கேள்விகளை தெரிவு செய்தாலும் செய்வார் என்று என் நண்பர்கள் சில தினங்களுக்கு முன் சொன்னது நினைவுக்கு வந்தது. அது தான் புத்தகம் காணாமல் போகக் காரணமாகயிருக்கலாம் ,என்றது என் மனம். என் நண்பர்களில்ஒருவரும்அந்தக் களவைச் செய்யமாட்டார்கள் என்பது எனக்குத் தெரியும். எனது சந்தேகம் முழுவதும் ரத்தினத்தின் மேல்தான் இருந்தது. அவனுக்கு வகுப்பில் பட்டம் 'கள்ளன் இரத்தினம்'. சிலமாதங்களுக்கு முதல் ஒரு மாணவனின் பேனாவை

திருடி பிடிபட்டு பிரின்சிபாலிடம் தண்டனை வாங்கினவன். ஆனால் படிப்பில் அக்கறையில்லாத அவனுக்கு புத்தகத்தில் ஏன் அக்கறை?. ஒரு வேளை யாரும் தூண்டிவிட்டதால் புத்தகத்தை எடுத்தானோ. அவனுக்கு என் மேல் எந்தவிதமான கோபமும் இல்லை. அதனால் அவன் செய்திருக்க மாட்டான் ,என்றது மனம். அடுத்தது எனது சந்தேகம் கோபால் மேல் தான் போனது. அவன் என்னோடு படிப்பில் போட்டி .நான் இரசாயனப் பாடத்தில் பெயில் ஆகவேண்டும் என்பதற்காக செய்திருப்பானோ?. இருக்காது. அவனுடைய தாயார் கூட எங்கள் கல்லூரியில் தான் ஆசிரியையாக வேலை செய்கிறார். அதனால் அவன் செய்திருக்கமாட்டான் என்றது மனம். ஏன் என்றால் அவன் களவு எடுத்து பிடிபட்டால் தாய்க்கு அது அவமானமாகிவிடும் ,என்று அவனுக்குத் தெரியும். வீட்டில் புத்தகம் காணாமல் போனதை அப்பாவுக்கோ அம்மாவுக்கோ நான் சொல்லவில்லை. எப்படியும் புத்தகம் திரும்பக் கிடைத்துவிடும்என்ற நம்பிக்கை எனக்கு இருந்தது.

அடுத்த நாள் வகுப்புக்குப் போனவுடன் முதல் காரியமாக ஆசிரியரிடம் போய் புத்தகம் காணாமல் போனதைப் பற்றி முழு விபரமும் சொல்லி முறையிட்டேன். “நேற்று நான் புத்தகத்தை பார்த்துவிட்டு உன்னிடம் திருப்பித் தந்துவிட்டேனே. அதற்குப்பிறகு தான் காணாமல் போனதா?” என்று கேட்டார்.

“ ஆம் சார். புத்தகத்தை நீங்கள் தந்த பிறகு என் பைக்குள் வைத்தது எனக்கு நல்ல ஞாபகம் இருக்கு. அதற்கு பிறகு ஸ்கூல் பீஸ் கட்ட ஆபீசுக்கு கொஞ்ச நேரம் போய் வந்தேன். அதுக்குள்ளாகத் தான் காணாமல் போய் இருக்கவேண்டும் என நினைக்கிறேன்” என்றேன்

“யாரும் சந்திரனின் இரசாயனப் பாடப் புத்தகத்தை மறந்து போய் வீட்டுக்கு எடுத்துப் போயிருந்தால் கொடுத்துப்போடுங்கோ. புத்தகத்தைக் காணவில்லையாம்” என்றார் ஆசிரியர். ஒருவரும் பதில் சொல்லவில்லை. இரத்தினம் மாத்திரம் “ நாங்கள் ஏன் சார் எடுக்கப் போறோம். எங்களிடமும் இரசாயனப் பாடப் புத்தகம் இருக்குதுதானே” என்றான் பதிலுக்கு. “சந்திரனின் இரசாயனப் புத்தகம் போல் வேறு புத்தகம் கிளாசிலை இல்லை. அது அவனுக்கு மாமா லண்டனில் இருந்து அனுப்பியது. அதில் பரீட்சைக்கு உபயோகமாக கூடிய விஷயங்கள் அடங்கியிருக்கு. அதாலை யாரும் பாவிப்புக்காக எடுத்திருந்தால் தயவு செய்து திருப்பிக் கொடுத்துப் போடுங்கோ, பிரச்சனையைப் பெரிதாக்காமல். இல்லாட்டால் எல்லாருடைய பைகளையும் சோதனை போட வேண்டி வரும். களவு எடுத்த ஆள் அகப்பட்டால் பிறகு தண்டனை பாரதூரமாயிருக்கும்” என்று ஆசிரியர் எச்சரிக்கை செய்தார். பதில் ஒன்றும் வரவில்லை. அன்று வகுப்பு முடியும் மட்டும் என் மூன்று நண்பர்கள் உட்பட ஒருவரும் என்னோடு பேசவில்லை. அவர்களுக்கு என் மீது கோபம் போலும்.

புத்தகம் போனது போனது தான். பரீட்சைக்கு இரு தினங்களுக்கு முன்பு யாழ்ப்பாணம் காங்கேசன் துறை வீதியில் உள்ள பழம் புத்தகக் கடைகள் ஒவ்வொன்றாக வேறு எதாவது இரசாயனப் பாடப் புத்தகம் படிக்கக் கிடைக்குமா ?என்று ஏறி இறங்கினேன். எனக்கு அப்பா தந்த பாக்கெட் காசில் வாங்குவோம் என்று தீர்மானித்தேன். கடைசியாக களைத்துப் போய் ஒரு சிறு கடைக்குள் நுளைந்து கடைச் சொந்தக்காரரிடம் “பத்தாம் வகுப்புக்குத் தேவையான

இரசாயனப் பாடப் புத்தகம் எதாவது இருக்குமா?'' என்று கேட்டேன். அவர் என்னை மேலும் கீழும் பார்த்துவிட்டு '' கொஞ்சம் பொறும் தம்பி. ஒன்று இருக்கவேண்டும். ஆனால் பாவித்த புத்தகம்'' என்று சொல்லிவிட்டு உள்ளே போய் ஒரு புத்தகத்தோடை வந்தார். இந்த புத்தகத்தைப் பார்த்து, உமக்கு விருப்பம் இருந்தால் வாங்கும்'' என்று புத்தகத்தை என் கையில் கொடுத்தார்.. அப்புத்தகத்தை கையில் வாங்கியவுடன் அதிர்ச்சியடைந்தேன். என் கண்களால் நம்பமுடியவில்லை. என் புத்தகம் எப்படி இந்தப் புத்தகசாலைக்கு வந்தது?. புத்தகத்துக்கு நான் போட்டிருந்த பிரவுண் பேப்பர் கவர் இருக்கவில்லை. என் பெயர் எழுதிய முதல் பக்கமும் கிழிக்கப்பட்டிருந்தது. ஆகவே அது எனது புத்தகம் தான் என்று அவருக்கு நிரூபிக்க என் பெயர் புத்தகத்தில் இல்லை.

'' என்ன தம்பி புத்தகம் பிடித்துக் கொண்டதா?''என்றார்.

நான் பதிலுக்கு '' ஐயா இந்தப் புத்தகம் என்னிடமிருந்து மூன்று நாளைக்கு முன் காணாமல் போன புத்தகம். புத்தகத்துக்கு நான் போட்டிருந்த பிரவுன் பேப்பர் கவரை கிழித்துவிட்டார்கள். அதில் என் பெயர் எழுதியிருந்தேன். முதல் பக்கத்திலும் பெயர் எழுதியிருந்தேன். அதுவும் கிழிபட்டுவிட்டது.'' என்றேன் கவலையுடன்.

'' அப்படியா. இரண்டு நாளைக்கு முன் தான் ஒரு ஸ்டுடண்ட் இந்த புத்தகத்தை கொண்டுவந்து விற்றான். அப்ப புத்தகம் இந்த நிலையில் தான் இருந்தது'' என்றார்.

'' அந்த ஸ்டுடண்டின் பெயர் தெரியுமா? அல்லது தோற்றத்தைச் சொல்லமுடியுமா?''

அவர் கொஞ்ச நேரம் யோசித்தபின், '' மன்னிக்கவும் தம்பி. நான் பழைய புத்தகங்கள் வாங்கி விற்று வியாபாரம் செய்து பிழைக்கிறவன். இப்படிப்பட்ட பிரச்சனையில் தலை போட எனக்கு விருப்பமில்லை. கொண்டு வந்து தந்த பேரையும் தோற்றத்தையும் சொல்லமுடியாது. ஆனால் அந்த பையன் இந்த கடைக்கு முதல் தடவை தான் வந்திருக்கிறான். இது உமது புத்தகம் என்று நீர் சொல்லுகிற படியால் நான் வாங்கின விலையை கொடுத்துவிட்டு எடுத்துப்போம். இதைப்பற்றி போய் யாரிடமும் முறையிட்டு எனக்கு தலையிடியைத் தராதேயும் என்ன?'' என்றார்.

அவர் சொன்னதும் எனக்கு நியாயமாகப் பட்டது. எனக்கு வேண்டியது அவசரத்துக்கு புத்தகம். அதுவும் நான் தொலைத்த புத்தகம் எனக்கு கிடைத்துவிட்டது. மறு பேச்சில்லாமல் அவர் கேட்ட பணத்தை கொடுத்து விட்டு தொலைந்து போன புத்தகம் கிடைத்துவிட்டதே !என்ற சந்தோஷத்தில் கடையைவிட்டு கையில் புத்தகத்துடன் வெளியே வந்தேன். இந்த வேலையை யார் செய்திருப்பார்?. வகுப்பில் இருக்கும் இருபத்தைந்து மாணவர்களில் ஒருவராகத்தான் இருக்க வேண்டும். நிட்சயமாக என் மூன்று நண்பர்களில் ஒருவராக இருக்கமுடியாது. இரத்தினம் ,தானில்லை என்று சொல்லிவிட்டான். ஆகவே மீதி இருபத்தி ஒரு மாணவர்களில் ஒருவராகத்தான் இருக்கவேண்டும். சிந்தித்துக்கொண்டு நடந்த எனக்கு வீடு வந்தது கூடத்தெரியவில்லை.

என் அறைக்குள் போனதும் ஆவலுடன் புத்தகத்தை பிரித்தேன். ஏதோ பிரிந்து போன கன்றுக் குட்டி தாயுடன் சேர்ந்தது போன்ற உணர்வு எனக்கு. புத்தகத்தின் கடைசி பக்கமும்

*கிழிப்பட்டிருந்தது. அந்தப் பக்கத்தில் தான் ''எனது அன்பளிப்பு'' என்று எனது லண்டன் மாமாவின் கையெழுத்திருந்தது. ''களவெடுத்தவன் தடையங்கள் இல்லாமல் செய்து விட்டான். கெட்டிக்காரன்'' என்றது என் மனம்.*

****

*அமிலங்கள் பற்றிய பக்கத்தை வாசிக்க புத்தகத்தின் பக்கங்களைத் திருப்பினேன். அங்கு இரு பக்கங்களுக்கிடையே இருந்த ஒரு சிறிய மயிலிறகுத்துண்டு என்னைப் பார்த்து சிரித்தது. நான் அதை புத்தகத்திற்குள் வைக்கவில்லையே?. அப்போ அது எப்படி அங்கு வந்தது. சிந்தித்தேன். யார் வேலையாக இருக்கும், என்றது என் மனம். விடை கிடைத்தது. என்னால் நம்பமுடியலில்லை, யார் என்புத்தகத்தைத் திருடி விற்றது என்று. குற்றவாளி எப்போதும் குற்றம் புரியும் போது ஒரு துப்பை தனக்குத் தெரியாமல் விட்டுச் செல்வது வழக்கம். அது தான் என் புத்தகத்தின் மறைவிலும் நடந்திருக்கிறது.*

********

# கதை 10 துவண்டு விடும் அனிச்சா

முகவுரை

பெண்கள் பலவிதம் . கோபம் , கர்வம், அசடு, புத்திசாலி , சுயநலம் போன்ற நீண்ட குண பட்டியல்அவர்களுக்கு உண்டு. அதில் தொட்டால் அல்லது உரத்து பேசினால் துவளும் உள்ள குணம் சில பெண்களுக்கு அனிச்சமலரைப் போல் உண்டு .அந்த குணம் உள்ள அனிச்சயின் கதை இது.

****

“ஒருகாலத்தில் ,பூநகரி ஏரிக்கு அருகில் அல்லி ராணியின் பூந்தோட்டம் இருந்தது” என்று வரலாறு சொல்கிறது. இப்பிரதேசம் ஒரு குறிப்பிடத்தக்க தொல்லியல் ஆய்வுக் களமும் ஆகும். அதோடு துறைமுகமாக இருந்தது . அதோடு வடக்கையும் தெற்கையும் இணைக்கும் வழியாக இருந்து வருகிறது. பூநகரி சங்குபிட்டி பாலம் யாழ்ப்பாணத்துக்குச் செல்வதற்கான மாற்றுப் பாதையாகும்.பூநகரியில் விளையும் மொட்டைக்கறுப்பன்,பச்சைப்பெருமாள் ஆகிய பாரம்பரிய நெல்லினங்கள் மூலம் உற்பத்தி செய்யப்படும் அரிசி ,உலகின் தலைசிறந்த அரிசி வகைகளுள் ஒன்றாகும்.‘பச்சைபெருமாள் அரிசி’ நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தவல்லது. பூநகரி அரிசியை மக்கள் அதிகம் விரும்புவதால் உள்ளூர் சந்தை முதல் உலக சந்தை வரையில் நல்ல கேள்வி நிலவுகின்றது.

பூநகரியில் பெண்கள் மாகாணப் பாடசாலை உண்டு . இக்கிராமத்தில் வாழ்ந்த பிரபல எழுத்தாளர் ஆசிரியர் ‘மணி என்ற மணிவண்ணன்’ ஒரு இயற்கை விரும்பி. தான் பிறந்த கிராமத்தையும் அதன் இயற்கை வளத்தையும் நேசிப்பவர். தமிழ் ஆசிரியரான மணி கவிதை எழுதுபவர் . தனது கிராமத்தில் பூக்கும் மலர்களைப் பற்றி எழுதி பாராட்டுப் பெற்றவர் .
வானை நோக்கி வளர்கிறது மரம். அது ஒளியின் மீது கொண்ட நாட்டத்தின் அழகான குறியீடு மலர். “ஒவ்வொரு மலருக்கும் ஒரு நிறம் உண்டு;மணம் உண்டு; அதேபோல் ஒவ்வொரு மலருக்கும் தனித்தனிக் குணம் உண்டு” என்கிறது ஆன்மீகம். இப்பூவுலகெங்கும் மரம், செடி, கொடி, சமுத்திரம், மலை, பறவைகள் மனித இனம், விலங்குகள் என்பன இயற்கையில் பரிணமித்துள்ளன. இவைகள் அனைத்தையும் விட ,மிகவும் அழகான தோற்றத்தை தன்னகத்தே கொண்டுள்ளவை தான், மலர்கள் என்பதும் மறுப்பதற்கில்லை. மரம், செடி, கொடிகளில் பூக்கும் மலர்களின் நிறம், அதன் மருத்துவக் குணம், சுகந்தம், கவர்ச்சியான தோற்றம் என்பன இவ்வுலகில் உள்ளோரை பிரமிக்க வைக்கின்றன ,என்பது நிதர்சனமாகும். மிலேனியம் ஆண்டாக மிளிரும் இன்றைய காலகட்டத்தில் கூட வீட்டுத் தோட்டங்கள், பூஞ்சோலைகள்,பூங்காவனங்கள் என்பனவற்றில் கோடான கோடி பூக்கள் தினமும் மலர்வதை அவதானிக்கலாம். இதனாலன்றோ “எத்தனை கோடி இன்பம் வைத்தாய் இறைவா!” என்று இயற்கையைப் போற்றினர், நமது முன்னோர்கள். அதே வேளை “எத்தனை கோடி பூ மலரும்” என்றார் கவிஞர் கண்ணதாசன். அத்தகைய மலர்களின் சிறப்புகளையும், மருத்துவப் பண்புகளையும் விளக்கிக் கூறுவதே இக்கதையின் நோக்கமாகும்.

மலர்கள் நமக்கு இயற்கை நல்கிய கொடை .அவைகளில் தான் எத்தனை எத்தனை வர்ணங்கள், பல்வேறுபட்ட வடிவங்கள், விதம் விதமான நறுமணங்கள், மருத்துவக் குணங்கள் என்று அதன் தாற்பரியங்களை அடுக்கிக் கொண்டே செல்லலாம். “கண்ணுக்குக் கவர்ச்சியாகவும், மனதுக்குச்

*சாந்தியையும், கிளர்ச்சியையும் நல்குவது பூக்கள் தான்'' என்பது வெள்ளிடை மலை. மலர்கள் புனிதமானவை. இறைவனுக்கு அர்ப்பணிக்கக் கூடியது. மணமக்கள் கழுத்தில் மாலையாகப் பொலிவது மலர்கள் தான் என்பதையும், நாம் அறிந்தவை தான். மகரந்தங்களால் இனிக்கும் தேனை வழங்கி வருவதும் மலர்களே. பல்வேறு சிறப்பு மிக்க அத்தகைய மலர்கள் மனித குலத்திற்குப் பிணி நீக்கும் ஔடதமாகவும், முன்னோர்கள் பயன்படுத்தி வந்தனர் என்றும் அறிய முடிகின்றது. சித்த மருத்துவ நூலைப் புரட்டிப் பார்த்தோமாகில் பல்வேறு வகையான மலர்களின் மருத்துவக் குணங்கள் சிறப்புறக் கூறப்பட்டுள்ளதை அவதானிக்கலாம். ஒவ்வொரு மலருக்கும் ஒவ்வொரு வகையான மருத்துவக் குணம் உண்டு. இன்று கூட தென் இந்தியக் கிராமங்கள் சிலவற்றில் நோய்களுக்குப் பூக்களை மருந்தாகிப் பயன்படுத்தி எளிய முறையில் சிகிச்சை பெறுகின்றனர். இது செலவில்லாமல் சுலப மருத்துவம், என்பது கண்கூடாகும். பலகோடி மலர்கள் உலகில் உள்ளன. இருப்பினும் நமது அனுபவம் மற்றும் பழக்கத்தில் உள்ள மலர்களின் மருத்துவக் குணம் பற்றி அறிந்து கொள்வது மிகவும் முக்கியமானதாகும்*

*நமது உடலுக்குப் பலமும், மனதுக்கு நலமும், வாழ்வுக்கு வளமும் சேர்க்கிற ஆற்றல் மலருக்கு உண்டு. மலர் தூவி இறைவனை வழிபடுங்கள்.*
*'' முகர்ந்தால் நொந்து மூடி வாடும்அனிச்சம் பூ. ஆனால் விருந்தினரோ முகம் கோணி நோக்கினாலே வாடி விடுவர்'' என்ற பொருள் உள்ள குறளில் அனிச்சம் மலரை வள்ளுவர் குறிப்பிட்டது அனைவரும் அறிந்ததே.*
*இது போன்ற அனுபவங்கள் பலருக்கும் சில சமயம் நேரிடத்தான் செய்கிறது. அது சரி. அனிச்சம் பூ பற்றி அறிந்திருக்கிறீர்களா? இது பொதுவாக ஒரு களைச் செடியாகக் கருதப்படுகிறது.*
*அனிச்சம் பூவின் தாவரப் பெயர்ஆங்கிலத்தில் 'ஸ்கார்லெட் பிம்பெர்னல்'( Scarlet Pimpernel) என்று அழைக்கப்படுகின்றது.*
*மேலை நாடுகளில் அனிச்சம் பூவை வைத்து வானிலை அறிவார்களாம். வானம் மூடினால் மலரும் மூடுமாம். அதனால் "Poor Man's Barometer" என்றும் அறியப்படுகிறது.*

****

*தனது பூநகரி கிராமத்தில் காட்டில் பூக்கும் மலர்களில் அனிச்சம் மலர் மிகக் குறைவு , என்பதை மணிஅறிவார்*
*திருமணமாகி பல வருடங்களுக்கு பின் தனக்கும் துணைவி மல்லிகாவுக்கும் பிறந்த மகளுக்கு 'அனிச்சி', என்று மணி பெயர் வைத்தார் .*
*பிறந்த போதில் இருந்தே அனிச்சி சாந்த முகமும் பயந்த சுபாவம் உள்ளவள் . உரத்த சத்தம் போட்டு யாரும் பேசினால் அவள் அழுது முகம் சுருங்கி விடுவாள் . ஒரு நாள் மணிக்கும், மல்லிகாவுக்கும் வீட்டில் வாக்குவாதம் நடந்தது . சத்தம் கேட்டு ஓ' வென்று அனிச்சி அழுதுவிட்டாள் . அதன் பின் மணியும் மல்லிகாவும் அனிச்சி முன் வாக்குவாதம் செய்வதில்லை . இன்னோரு வீதியில் இருவர் சண்டை போடுவதை கூறி ஒ' வென்று அனிச்சி அழுது விட்டாள்.*
*மணி வீட்டில், பல மலர் செடிகள் உண்டு .*
*'' அப்பா உங்களிடம் ஒரு கேள்வி கேட்கட்டுமா ''?*
*''கேள் மகளே'' .*
*''எனக்கு ஏன் யாருக்கும் இல்லாத அனிச்சி என்ற புது பெயர் வைத்திருக்கிறீர்கள்''?*
*'' உனக்கு தெரியும், எனக்கு மலர்கள் மேல் ஆசை என்று . பொதுவாக ரோஜா , மல்லிகா, செவ்வந்தி, அல்லி, தாமரை என்று பொதுவாக பெயர் வைப்பார்கள் . அனேகருக்கு அனிச்ச மலர் ஒரு மென்மையான , தொட்டவுடன் துவளும் மலர் என்பது தெரியாது. உனக்கு அந்த மலரின் குணம் உண்டு .அதனால் அந்த பெயரை உனக்கு வைத்தேன்'' .*

*“ நன்றி அப்பா என்னக்கு விளக்கம் கொடுத்ததுக்கு . இந்த மலர் பூநகரியில் மிக குறைவு அப்பா”.*

*“எனக்கு அது தெரியும். என் தோட்டத்தில் ஒரு அனிச்சம் செடி உண்டு. அனிச்சி ,நீ பலரால் பாராட்டப்படுவாய் ; இருந்து பாரேன் உனக்கு என்ன நடக்க போகுது என்பதை ” மணி மகளுக்கு சொன்னார்*

****

*பூநகரி கிராமத்தில் உள்ள பாடசாலையில் படித்த மாணவிகளில் பணக்கார பக்கமும் ஏழை பக்கமும் இருந்தது. அனிச்சி ஏழ்மையான பக்கத்தைச் சேர்ந்தவள். அனிச்சியின் பெற்றோர் தங்கள் வருமானத்திற்காக மலர் செடிகள் வளர்த்து கோவிலுக்கு விற்பது வழக்கம். அனிச்சிக்கு பத்து வயது .அவள் ஒவ்வொரு நாளும் மலர் தோட்டத்தில் பெற்றோருக்கு உதவி செய்வாள். அவளுக்கு வாழ்க்கையின் ஆடம்பரங்கள் எதுவும் இல்லை, ஆனால் அவளுக்கு நடந்த சிறிய விஷயங்கள் மகிழ்ச்சியாக இருந்தது. தனியாக நின்று மலர்களுடன் பேசுவாள் .குருவிகளுக்கு தானியம் போடுவாள் . கிராமத்தின் பண வசதி குறைந்த சமூகத்தை சேர்ந்த பெண் அனிச்சி . பணக்கார பெண்கள் அவளை விரும்பாததால் ,வகுப்பில் மற்றவர்கள் அதிகம் பேசுவது குறைவு . ஆனால் உதவி செய்வதில் முன்னுக்கு நிற்பாள். மிகவும் கனிவான இதயமுள்ள பெண் அனிச்சி . மற்ற பெண்களைப் போலல்லாமல் அவளிடம் விலை உயர்ந்த காலணிகள் அல்லது புதிய உடைகள் அல்லது நகைகள் இல்லை. அவள் வகுப்பில் தனியாக உட்கார்ந்து படிப்பாள் .இந்த பெண்கள் அனைவரையும் தன் நண்பர்களாகக் கொண்டிருப்பதைப் பற்றி கனவு காண்பாள். மதிய உணவின் போது அனிச்சி பொதுவாக சாப்பிட வீட்டிற்கு செல்வாள் . வகுப்பில் தனியாக சாப்பிடுவதை விட இது நல்லது, என்று அவள் முடிவு எடுத்தாள்.*

*அவளது ஆசிரியை ,அவள் மீது மிகவும்அன்பாகவும் , கனிவாகவும் இருந்தாள் . மற்ற பெண்களை அனிச்சியைப்போல் அமைதியாகக் இருக்க எப்போதும் ஊக்குவிப்பார் . அது ஒருபோதும் நடக்கவில்லை.*

*அன்று ஆகஸ்ட் 21 ஆம் தேதி அவளது வகுப்பு ஆசிரியையின் பிறந்த நாள் மற்றும் ஒவ்வொரு ஆண்டும் மாணவிகள் ஆசிரியருக்கு ஒரு நல்ல பரிசை கொடுப்பார்கள் .அனிச்சி ஒருபோதும் பரிசு கொடுப்பது இல்லை, காரணம் அவளிடம் பணம் இல்லை.அதனால் யாரும் அவளிடம் எதுவும் சொல்ல மாட்டார்கள். ஒரு பணக்கார மாணவி சுனிதா, மற்ற சிறுமிகளிடமிருந்து பணத்தை சேர்த்தாள் .ஆசிரியைக்கு பரிசு மற்றும் வாழ்த்து அட்டை வாங்க முடிந்தது . அடுத்த நாள் சுனிதா உடல்நிலை சரியில்லாமல் இருந்ததால் பள்ளிக்கு வராததால் சிறுமிகள் வருத்தப்படுவதை அனிச்சி கவனித்தாள்.அனிச்சி மதிய உணவுக்காக வீட்டிற்குச் சென்று, அப்பாவிடம் கொஞ்சம் பூக்களை தோட்டதில் பறிக்க முடியுமா? என்று கேட்டாள். அவள் ஒருபோதும் தன் பெற்றோரிடம் எதையும் கேட்டதில்லை.*

*“ பள்ளிக்கூடத்தில் என்ன நடந்தது, அவளின் நண்பிகள் ஆசிரியருக்கு பரிசு கொடுக்க முடியாமல் எப்படி வருந்துகிறாள் ” என்று தன் தந்தையிடம் சொன்னபோது, அவளுடைய தந்தை அவளுக்கு ஒரு அனிச்ச மலர் கொத்தை தேர்ந்தெடுத்து கொடுத்தார் . அனிச்சி தனது மதிய உணவை ஒரு அட்டை தயாரிப்பதில் கழித்தாள் . அவளுடைய தந்தை அவளது பூக்களை சிவப்பு நாடாவால் போர்த்தினார். அனிச்சி மதிய உணவுக்குப் பிறகு தொடங்கிய வகுப்பிற்கு விரைவாக ஓட வேண்டியிருந்தது. அவள் வகுப்பு கதவைத் தட்டினாள், தாமதமாக வந்ததற்கு ஆசிரியையிடம் மன்னிப்பு கேட்டாள். அவள் பூக்களோடும் மற்றும் வாழ்த்து அட்டையுடன் ஆசிரியரிடம் நடந்து செல்வதைக் கண்டு வகுப்பு அதிர்ச்சியடைந்தது. அவள் கையில் இருந்த புதுமையான பூக்கள் மிகவும் அழகாக இருந்தன. அவள் அதை ஆசிரியையிடம் கொடுத்தாள். ஆசிரியை அவளைப் பார்த்து புன்னகைத்து அட்டையைத் திறந்தார். ஆசிரியை அதை சத்தமாக வாசித்தாள், "முழு வகுப்பிலிருந்தும் பிறந்தநாளுக்கு இந்த குறள் வாழ்த்துக்கள்:*

*“மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து*
*நோக்கக் குழையும் விருந்து”*

வகுப்பு முழுவதும்  திருக்குறள் கேட்டு -அதிர்ச்சியடைந்தது.

ஆசிரியை , கண்களில் கண்ணீருடன்  அனிச்சிக்கு மிகப் பெரிய அரவணைப்பைக் கொடுத்தார்.ஆசிரியை செய்வதைப் பார்த்து முழு வகுப்பும் அடிவந்து, இறுக்கமாக அனிச்சிக்கு அணைப்பைக் கொடுத்தது. அவர்கள் அனைவரும் அவளுடன் அழுதார்கள், அனிச்சியின் நண்பராக இருப்போம், என்று உறுதியளித்தனர்.
இப்போது ஆறு மாதங்களுக்குப் பிறகு அனிச்சிக்கு வகுப்பில் அதிக நண்பர்கள் உள்ளனர். எல்லா சிறுமிகளும் அவளை நேசிக்கிறார்கள், அவர்கள் அனைவரிடமும் அவள் சிறந்தவள் என்பதை அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள். அனிச்சி, இப்போது தன் பள்ளிக்கு செல்வதை விரும்புகிறாள். அன்பும், கனிவான இதயமும் தான் நம்மை சிறந்த மனிதர்களாக ஆக்குகின்றன.

*****

# ***கதை 11 அன்புள்ள ஆட்டுக்குட்டி***

*யாழ்ப்பாண 'குடா'நாட்டில் தென்மேற்கு வலிகாமம் பகுதியில் உள்ளஅளவெட்டிக்கிராமத்தை வழுக்கை ஆறு, தழுவிச் செல்கிறது. பலவாய்க்கால்கள் இணைப்பால் தோன்றியதால் அதற்கு வாய்க்கால் என்றபெயர்மருவி'வழுக்கை ஆறு' என்றுபெயர் வந்தது. ஒருவரும் அந்த ஆற்றில் வழுக்கி விழுந்ததாக கிராம வாசிகள் கேள்விப்பட்டதில்லை. பதினேழு மைல்கள் பயணம் செய்து அராலி அருகே ஏரியில்கலக்கும் ஆறு அது.ஒருகாலத்தில்பழமையில்ஊறியகிராம விவாசாயி குடும்பங்கள் அந்த ஆற்றினைநம்பிவாழ்ந்தார்கள்.*

*ஆற்றுக்கு அருகே உள்ள சுடலை வைரவர் கோவில் கிராமத்துமக்களின்காவல் தெய்வம். ஒவ்வொரு வருடமும் அதற்குப் பொங்கி, ஆடு,சேவல்பலிகொடுத்துப்படைப்பார்கள், இந்த வழிபாட்டுச் சடங்கை '**காவு கொடுத்தல்'** என்பர்.*

*பலியிடத் தயாராயுள்ள 'கிடாய்' அல்லது 'சேவல்' கழுத்தில் மலர்களாலான மாலை அணிவித்து அதன் மீது மஞ்சள் கலந்த நீர் தெளிக்கப்படுகிறது .அது மூன்று முறை தலையை குலுக்கும் போது சம்மதம் தெரிவித்து விட்டதாகக் கருதி அதை பலியிடுகிறார்கள் . பலி கொடுக்கப்பட்ட 'கிடாய்' அல்லது'சேவலின்' இறைச்சியை உணவாக்கி சுடலைவைரவருக்குமுதலில் படைத்துவிட்டு அதன் பிறகு அந்த அசைவ உணவை உண்ணும் வழக்கத்தைஊர்வாசிகள் கடைப்பிடித்து வருகிறார்கள். இதுஆடி மாதம் நடக்கும்சடங்காகும் . பொங்கல் பொங்கி பலி கொடுத்துப் படைக்கத்தவறினால் ஊரில் தொற்று நோய் பரவி பலரின் உயிர்களை பலி எடுத்து விடும்'' என்று மக்கள் நம்பினார்கள்.*

*****

*'துரை' என்று அளவெட்டிக் கிராமத்தில் அழைக்கபடும், சின்னத்துரை தனது இருபது பரப்புக்காணியை நம்பி வாழும் விவசாயி. புகையிலையும் , வாழையும்,வெங்காயமும்மரக்கரியும்செம்மண் காணியில் பயிரிட்டு குடும்பம் நடத்தி வந்தான் துரை. காணியில்உள்ளநல்ல தண்ணீர்க்கிணறுஅவனின் விவசாயத்துக்கு பெரிதும் உதவியது. சின்னத்துரையின்தகப்பன் செல்லத்துரை விட்டுச் சென்ற முதிசம், அந்த இருபது பரப்புக் காணி . துரையின் மனைவி தங்கம்மா,சாத்திரம்சொல்வதிலும், ஜாதகம் எழுதுவதிலும் கெட்டிக்காரி.அந்தக்கலையைத்தங்கம்மாஅவளின்சித்தப்பாவும் ஊரெழு சாஸ்திரியுமான சதாசிவத்திடம் இருந்து கற்றவள். மூட நம்பிக்கையில் ஊறியவள். பிறந்தகுழந்தைக்கு ஜாதகம்போடுவதுமுதல்கொண்டுதிருமணப் பொருத்தம்,காதுகுத்தல்,ருதுசாந்தி விழா,திருமண நாள் குறித்து கொடுப்பாள் . வாழ்க்கையில் நடக்கப்போவது தீர்க்கத்தரிசி போல்சொல்லக் கூடியவள். அரசியல்வாதிகள் அவளை நாடி வந்ததுண்டு. அளவெட்டி மற்றும் சுற்றுப் புறக் கிராம மக்களின் மதிப்பைப்பெற்றவள். துரை குடும்பத்தில்அவளின் வருமானம் வேறு.*

இரண்டு வருமானங்களும்மூன்று பிள்ளைகள் உள்ள துரையின் குடும்பத்திற்குபோதுமானதாகஇருந்தும் பணஆசைஎவரைவிட்டது?. துரையின்இருபது பரப்புக் காணிக்குப்பக்கத்துக்குபதினைந்து பரப்புக் காணி சுடலைவைரவர் கோவிலுக்கு எதிராக இருக்கும் காணி. அதனால்வைரவரின்பார்வையால்அக்காணியில் விளைச்சல் அதிகம்என்று ஊர் பேசிக் கொண்டது. அவரின்மாமனுக்குஅக்காணி சொந்தம். துரைக்குஅவரோடு எல்லைப் பிரச்சனை. அந்தக் காணியையும் வாங்கி தன் காணியோடு சேர்த்து முப்பத்தைந்து பரப்பாக்க துரையின் திட்டம்.அந்தக் காணியை தனக்கு விலைக்குத்தரும் படி எவ்வளவோ துரை கேட்டும், மாமன்விற்க சம்மதிக்கவில்லை. அக்காணியை தன் ஒரே மகளுக்கு சீதனமாக கொடுக்கவைத்திருப்பதாக காரணம் சொன்னார் மாமனார்.

''காணி எல்லை சரியாக அளக்கப் படவில்லை'' என்றுகாணி உரிமைக்கு வழக்கு நடந்தது. இதுவரைஏராளமானபணம் செலவு செய்துவிட்டார் துரை. அவருக்கு அது மானப் பிரச்சனை . துரையின் மூத்தவன் சோமு,அவனுக்குப் படிப்பு போகவில்லை. எட்டாம் வகுப்போடு படிப்பை நிறுத்தி விட்டு தகப்பனுக்கு விவசாயத்தில் உதவினான் . இரண்டாவது மகன் சாந்தன்.பத்தாம் வகுப்போடு படிப்பை முடித்து விட்டு கிராமத்தில் உள்ள சங்கு கடையில் பலச்சரக்கு வாடிக்கையாளர்களுக்குசாமான்களைப் பார்சல் செய்துக்கொண்டிருந்தான் . கடைசிப் பிள்ளைஎட்டு வயது ருக்மணி. அவள்படிப்பில் படுச்சுட்டி. .வகுப்பில் எப்போதும் முதலாவதாக வந்தாள். அவளது எழாவது பிறந்த நாளுக்கு துரை அவளுக்குஒரு அழகானஆட்டுக்கடாய் குட்டி ஒன்றை பரிசாக 'சுன்னாகச் சந்தையில்' வாங்கிக் கொடுத்தார். அதை துரை வாங்கியதன் நோக்கம் வேறு. அந்த ஆட்டுக் குட்டிக்கு கழுத்தில்இரு மணிகள் தொங்கின. ருக்குவுக்குஅந்த ஆட்டு குட்டியைவெகுவாகப் பிடித்துக் கொண்டது . அக்குட்டிக்கு 'மணி' என்று பெயர் வைத்து கூப்பிடத் தொடங்கினாள் ருக்கு. அதை குளிப்பாட்டுவதும், இலைகுழை போடுவதும், கட்டித்தழுவிஅடிக்கடி முத்தம் கொடுபதும்ருக்கு தினமும் தவறாது செய்வாள். அவள் ஸ்கூல் விட்டுவரும் வரை மணி சாப்பிடாது வாசலில் காத்திருக்கும் . மாலையில்வயல்வெளியில் மணியோடு ஓடிப்பிடித்து விளையடுவது ருக்குவுக்கு பிடித்தமான செயல்.மணிக்குருக்கு தமிழில் பேசுவது விளங்கும். ''மணி இரு''''மணி படு'' , '' எழும்பு, தண்ணி குடி'' ,'' இலை சாப்பிடு'' என்றால்அது புரிந்துச்செயல்படும்.''மணிக்கு பசிக்குதா ? ''என்று ருக்கு கேட்டால் , ஆம் / இல்லை என்று தலையை ஆட்டிக் காட்டும். ஸ்கூல் விட்டு ருக்கு வரத்தாமதித்தால் மணி நிலைகொள்ளாது,'ம்மா'என்று சத்தம் போட்டப் படி அங்கும் இங்கும் அவளைத்தேடித் திரியும்.ருக்கு ஒருவளுக்கே அது கீழ் படியும். குடும்பத்தில்மற்றவர்கள் சொன்னால் முகத்தைத் திருப்பிக் கொன்டு போய் விடும். தோட்டத்துக்கு வரும் அணில், முயல், பறவைகளைக் கண்டால் மணிக்கு பிடிக்காது. சத்தம் போட்டு ஆரவாரப் படும். எங்கேஅவைதன் ருக்குவின் அன்பைப் பெற்று விடுமோ! என்ற பயம் மணிக்கு.

இரவில் ருக்கு படுக்கும் போதுமணிக்கு அவள் அருகே படுக்க வேண்டும். காலையில்ருக்குவின் முகத்தை தன் நாக்கால் நக்கி நித்திரையால் எழுப்புவான்மணி. அந்த இரு

ஜீவன்களும்முற்பிறவியில் சகோதரர்களாக இருந்ததோதெரியாது. ருக்குவின் சொற்படி அது நடக்கும்.. வேறுயாருடையசொல்லையும்அது கேட்காது.

"ம்மே ம்மே ,ம்மே ம்மே , என்று மணி சத்தம் போட்டால் அது ருக்குவைத் தேடுகிறது என்பது அர்த்தம் . துரையின் வளவைச் சுற்றி நிறைய பூவரசு, கிளுவ மரக் கதியால்கள், வளவில்இரு கறுத்த கொளும்பனும் அம்பலவியும், ஒரு பிலா மரம். அந்தக் கிளுவ மரத்தில் இருந்து,மூத்தவன் மகன் படிக்காததுக்கு கிளுவம் தடியால்,துரை பலமுறை அடித்ததும் உண்டு.

வளவில்கிளுவம் குழைக்கும், பிலா இலைக்கும் பஞ்சமில்லாமல், பின் வளவு முழுவதும் அருகம் புல்லும்,கோரைப் புல்லும் கொள்ளையா வளர்ந்து கிடந்த காணியில் ‘மணிக்கு’ மூன்று நேரமும்உணவுக்குப் பஞ்சம் இல்லை . ஆனால்,மணிக்கு இலைகுழையைருக்குவின் கையால் வாங்கித்தின்பதுபோல் அதுக்குதிருப்தி இல்லை.

துரையின் வீட்டு வளவின் ,தென்மேற்கு மூலையில் தங்கம்மா வாஸ்துசாத்திரம் பார்த்துக்கட்டிய ஆட்டுக் கொட்டில் இருந்தது. அதில்ருக்கு பள்ளிக்கு போனபின் எப்பவும் மணி சோகமானமுகத்தோடு படுத்திருப்பான் .

துரையின்வீட்டுக்குஇருநூறுயார்தள்ளி, வேம்படி சந்தியில் ‘‘ஆட்டுக்கு விடுற ஆறு’’ என்று அழைக்கப்படும் ஆறுமுகம்வீடு இருந்தது. அவனிடம்மூன்று ஆண் ஆடுகள் இருந்தன. ஆறுமுகத்துக்கு மனைவியும்ஒருவைப்பாட்டியும் தான்எல்லாம்.பிள்ளைகள் இல்லை. ‘‘ஆட்டுக்கு விடுகிற ஆறுமுகம் " என்றால்அளவெட்டியில் எல்லோருக்கும் தெரியும். சீமைக் கிடாய் வைத்து ஆட்கள் கொண்டு வரும் மறியாடுகளுக்கு கொஞ்ச நேரம் உடலுறவுசெய்ய வைப்பதால் அவனை அப்படி சொல்லுவார்கள். ஆறுமுகம்கலியாணத்தரகர் வேலையும் செய்பவன்.அளவெட்டியிலும் சுற்று புறக் கிராமங்களிலும் எந்தவீட்டில் திறமான கிடாய் இருக்கிறது என்பது ஆறுமுகத்தின்கழுகு கண்களுக்குத்தெரியும்

ஆறுமுகம்சிவலை நிற ஆம்பிளை. கிருதா மீசை,கறுத்த தலை முடி.,வாட்ட சாட்டமான தோற்றம்உள்ள ஆம்பிளை,சாரத்தை உயர்த்திக் கட்டிக் கொண்டு ,மீசையை எப்பவும் தடவிக்கொண்டு இருப்பான்.

அன்றுசனிக்கிழமை துரையும் தங்கம்மாவும்தங்கள் வீட்டில் ஆறுமுகத்தை எதிர்பார்க்கவில்லை.

‘‘ என்னஆறுமுகம்இந்த பக்கம் . ஏதும் தங்கத்திடம்கலியாணப் பொருத்தம் பார்க்க வந்தனியே?’’ துரைகேட்டான்.

‘‘ எல்லாம் உங்கடை மணிக்கு கலியாணம் பேசி வந்தேன்’’ என்றான் ஆறுமுகம்சிரித்தபடி.

துரைக்குஆறுமுகத்தின் நக்கல் பேச்சு புரிந்து விட்டது . தங்கம்மா உடனே ருக்குவை பார்த்து‘‘ பிள்ளை நீ அறைக்குள் போய் படி . பெரிய ஆட்கள் பேசுவதை நீ கேட்கக் கூடாது’’ என்றார்

துரை.தகப்பனின் சொல்லைஏற்று பேசாமல் ‘ருக்கு’அறைக்குள் போனாள். மணியின் பெயர் அடிபட்டது மட்டும் அவளுக்குக் கேட்டது.

ருக்குஅறைக்குள் போன பின் துரை ஆறுமுகத்தை பார்த்து,

“ இங்கே பார் ஆறுமுகம், மணிக்கு இப்போ வயசு இரண்டு. எண்டை மகள் ருக்குவின்செல்லபிள்ளை. அவனை சுடலை வைரவருக்கு நேர்ந்து வைத்திருக்கிறேன். எண்டைமனுசி என் ஜாதகத்ததை பார்த்து விட்டு சொன்னாள், வைரவருக்கு பலி கொடுத்தால் நான்கேசில்வெற்றி பெற்று பக்கத்துக் காணியும் எனக்குச்சொந்தமாகும் என்று, அதுக்குமணியை சுடலை வைரவருக்கு பலி கொடுக்கநேர்ந்துவைத்திருக்கிறோம். இது என் மகளுக்குத்தெரியாது. இப்பமணி போல் ஒரு உயர் சாதிகிடாய் வாங்க, குறைந்தது பத்தாயிரம் வேண்டும். மணியைஆட்டுக்கு விட முடியாது. அவன் இன்னும் குட்டி . தீட்டோடு மணியை வைரவர் ஏற்க மாட்டார்.” துரை சொன்னார்

“ என்னதுரை, பாவம் மணி சாகும் முன்பாவது ஒருக்காசந்தோஷமாய், உறவு வைக்கட்டுமே”

“ விசர் கதைகதையாதே ஆறுமுகம். தெய்வக் குற்றம் பொல்லாதது. பிறகுஎங்கடை குடும்பத்துக்கு நடக்காதது ஏதும் நடந்து விடும். நீ போய் விதானையார் விசுவலிங்கம் வீட்டில்மூன்றுவயதில் நல்ல உயர் சாதி கிடாய் ஒன்று இருக்கு . அவரைப்போய் கேட்டுப் பார் .காசு கொடுத்தால் அவர் சிலவேளை சம்மதிப்பார்” என்றார் துரை. ஆறுமுகம்ஒன்றும் பேசாமல் எழும்பிப்போனான்.

****

“ஆடிவந்தது, ஆட்டுக்கிடாசெத்தது” என்றதுபோல்ஆடி மாதத்தில் வைரவருக்கு பொங்கல். நூற்றுக் கணக்கானகிடாய்கள், சேவல்கள் பலிமேடைக்கு தயாராக இருந்தன . ருக்குவை ஊரெழுவில் இருந்தஅவளின் சின்னம்மா வீட்டுக்கு அனுப்பி விட்டார்கள் துரையும்தங்கம்மாவும். தனது ஆசை மணிக்கு மரண தண்டனை விதித்தாகி விட்டது, என்பது ருக்குவுக்குத் தெரியாது. சின்னம்மாவீட்டுக்குப் போகும்முன் மணியையும் தன் கூடவே கூட்டிச் செல்ல தாயிடம்ருக்கு அனுமதிகேட்டாள்.

“ருக்குஉன் சின்னம்மாவுக்கு ஆடு, மாடு என்றால் பிடிக்காது. அதனாலைநீ மணியை அங்கை கூட்டிப் போக வேண்டாம். நாங்கள்அவனைக் கவனித்து கொள்ளுகிறோம். நீஒன்றுக்கும்யோசிக்காதே. இரண்டுநாளிலை திரும்பி வா” என்றாள் தங்கம்மா.

சின்னம்மா வீட்டுக்கு போகும்முன் கிளுவம்குழையும்,தான்குத்திவந்த பிலா இலைகளையும்மணிக்குக் கொடுத்து அவனைக் கட்டித் தழுவி முகத்தில் முத்தம் கொடுத்து பிரியமனம் இல்லாமல் பிரிந்தாள் ருக்கு. மணியும்,“ ம்மேம்மே” என்று பலதடவைக் கதறியது. அது அக்கா போகதே! என்னை விட்டு போகாதே! என்பதுபோல் ருக்குவுக்கு இருந்தது.

_****

இரு நாட்களுக்கு பின் ருக்கு வீடு திரும்பினாள். நேரேஆட்டுக் கொட்டிலுக்கு மணியைதேடிப்போனாள்.மணியைக் காணவில்லை. வளவு முழுவதும் சுற்றியப்படி “ மணி

*மணி,உன் ருக்கு அக்காவந்திட்டேன். எங்கை இருக்கிறாய் ?வா விளையாட" என்று கூவி வளவு முழுவதும் திரிந்தாள். மணியைக் காணமுடியவில்லை.*

*" எங்கேஅம்மா என் மணி" ?. பதட்டத்தோடுருக்கு தாயைக் கேட்டாள்.*

*" ருக்கு உன் மணியை வைரவர் கேடு வாங்கி விட்டார். இனி அவன் வைரவர் சாமியின் சொத்து" என்றாள்தங்கம்மா ருக்குவின்குவின்முகத்தைப் பாராமல் அமைதியாக.*

*" என்னம்மா சொல்லுகிறாய்?*

*நீ சின்னம்மா வீட்டுக்கு போய் இருந்தபோது உன் அப்பாவழக்குவெல்வதற்கு மணியைவைரவருக்குபலி கொடுத்து விட்டோம். இனிமணி வரமாட்டான்" என்றாள் தங்கம்மா.*

*ருக்கு பதில் சொல்லவில்லை. அவள் கண்கள் இருண்டன .அவளுக்கு பேச்சு வரவில்லை ;நடுக்கத்தோடு மயங்கி கீழே விழுந்தாள். உடல்எல்லாம்ஒரேவியர்வை.என் மணி ...!என் மணி...! என்று அவள் வாய் முணு முணுத்தது. துரையின் குடும்பம் பயந்துபோய்*

*"எடை சோமு உன் தங்கச்சிக்கு எதோ செய்யுது. உடனே சைக்கிளிலை போய் நாட்டு வைத்தியர் வைத்தியலிங்கத்தாரை அவசிரம் என்றுசொல்லி உடனே கூட்டி வாடா" மகனுக்கு துரை பதட்டத்துடன் கட்டளைஇட்டார் .*

*வைத்தியர் வந்து துரையிடம் நடந்த விபரம் கேட்டார். ருக்குவின்நாடியைப் பிடித்து பார்த்தார். நாக்கை பார்த்தார். அவளை உசிப்பிப் பார்த்தார். கிள்ளிப் பார்த்தார். ருக்கு அசையவில்லை.*

*"என்ன வைத்தியர்என் மகள் ருக்குவுக்குஎன்ன நடந்திருக்குது"?*

*துரைகவலையோடு கேட்டார். தங்கம்மாஅதிர்ச்சியில் பேசாது நின்றாள்.*

*நாடி துடிப்பு வெகுவாக் குறைந்துஇருக்கு உடலில் சுரணை இல்லை. பேச்சு இல்லை ;உடலில் சூடு குறைந்து இருக்கு;நான் நினைக்கிறேன் ,உங்கடை மகளுக்கு அவளுடையஆட்டுக் குட்டிக்குநடந்ததைக் கேட்டஅதிர்ச்சி, அவள் மூளையைப் பாதித்து விட்டதுஎன்று.. நீங்கள் இந்த பிள்ளை ஆசையாய் வளர்த்த ஆட்டுகுட்டியைவைரவருக்கு பலி கொடுத்திருக்கக்கூடாது. உடனே உங்கள் மகளையாழ்ப்பாணம்பெரிய ஆஸ்பத்திரிக்கு தாமதிக்காமல்மணியத்தின் காரில் உடனே கொண்டு போங்கள் . அவர்கள் பரிசோதனை செய்து பார்த்து விட்டு உங்களுடைய மகள் பிழைப்பாளா? இல்லையா ?என்று முடிவு சொல்லட்டும்" என்றார் வைத்தியர் வைத்தியலிங்கம்.*

*துரை குடும்பம் வாயடைத்துப் போய் நின்றது.*

*********

# *கதை 12 பூஜாவின் பூனைக்குட்டி*

*என் பங்கஜம் பாட்டி அனுசாரம் பார்ப்பவள். அவளுக்கு மூட நம்பிக்கைகள் அதிகம். எதாவது வேலை விசயமாக என் குடும்பத்தில் எவராவது புறப்பட்டால் முதலில் வாசலுக்குப் போய் யார் போகிறர்கள்? என்று இரு பக்கமும் பார்த்து அவளின் மனதுக்குத் திருப்தி என்றால் அவர்களுக்கு போக பச்சைக் கொடி காட்டுவாள்.*

*" பூனை குறுக்கே ஓடினால் அல்லது ஒரு விதவை எதிரே வந்தால் போகிற காரியம் உருப்பட்டமாதிரி தான் . உள்ளே வா. ஒரு கிளாஸ் தண்ணி குடிச்சிட்டு போ" என்பாள் பாட்டி . அட்டமி நவமி வரும் தினங்களில் அவள் ஒன்றையும் விசேசமாக செய்ய விட மாட்டாள். பாட்டி சரியான பஞ்சாங்கம். ஓரளவுக்கு ஜாதகம் பார்ப்பாள்.*
*என் மகள் பூஜாவுக்கு டாம் அண்ட் ஜெரி( Tom & Jerry) கார்டூன் என்றால் பிடிக்கும். வீட்டில் எலிகளின் தொல்லை தாங்கமுடியாது, எதாவது செய்யுங்கள் என்று எனக்கு சொன்னதினை கேட்டுக் கொண்டிருந்த பூஜா " அப்பா ஒரு பூனையை நம் வீட்டில் வளர்த்தால் , எலிகள் தொல்லைப் போகும்" என்றாள் .*

*நல்ல யோசனை தான் மகள், ஆனால் பாட்டிக்குப் பூனை, நாய் என்றால் பிடிக்காதே. அதோடை பூனையோடு வீட்டுக்குப் போனால் பிறகு வீடே போர்க்களமாயிடும்.*

*"அப்பா பூனையை வளர்த்தால் இருதய நோய்க்காரருக்கு நல்லது, என்று வாசித்திருக்கிறேன். இருதய நோயினால் வீட்டில் படுத்திருக்கிற தாத்தாவின் ஆயுளுக்கு பூனை வீட்டில் வளர்த்தால் நல்லது, என்று பாட்டிக்குச் சொல்லி அவர்களைச் சம்மதிக்க வைக்கலாம்."*

*நானும் என் மனைவியோடு வீட்டில் பூனை வளர்ப்பது பற்றி பேசி இறுதியில், வீட்டில் பூனை வளர்பது என்று தீர்மானித்தோம்'.*

****

*பூனைக் குட்டி ஒன்று வாங்க நானும், மனைவியும், பூஜாவும் செல்லப் பிராணிகள் விற்கும் கடை ஒன்றுக்குப் போனோம்.*
*அந்தக் கடையில் நாய் , சுண்டெலி , பூனை, கிளி , பலவித குருவிகள், மீன் போன்றவை விற்க இருந்தன. கடைக்கு வந்திருந்தவர்களில் பலர் சிறுவர்களும் அவர்களின் பெற்றோரும். ஒரு கிழவியும் நாய் குட்டி வாங்க வந்திருந்தாள். அவளை என் மனைவிக்குத் தெரியும். அவளிடம்*

*ஆங்கிலத்தில், "என்ன மேரி அதிசயமாக இந்தக் கடைப் பக்கம் . ஏதும் ஒரு செல்லப் பிராணி பேத்திக்கு வாங்க வந்திருக்கிறீர்களா?" என் மனைவி கேட்டாள்.*
*"இல்லை ஜோதி, என்டை கணவரின் மறைவுக்குப் பின் நான் தனித்துப் போனேன். என்னுடையப் பிள்ளைகள் என்னைக் கவனிப்பதில்லை. எனக்கு துணைக்கும் பாதுகாப்புக்கும் ஒரு நாய் குட்டி வாங்க வந்திருக்கிறேன்."*

*அவளின் பதில் எனக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது.பிள்ளைகள் கவனிக்கத் தவறிய இந்த கிழவிக்கு நாய்ஒன்று துணைக்கு இருந்து கவனிக்கப் போகிறதாக்கும். நல்ல முடிவு" என்றேன், என் மனைவிக்கு நான்.*

*"வீட்டில் செல்லப் பிராணி வளர்ப்பது ஒரு காரணத்துக்குத்தான். நாங்கள் பூனை வளர்க்கப் போவது எலிகளின் தொல்லை இல்லாமல் இருக்கவும், மகள் பூஜாவின் ஆசையைத் திருப்தி படுத்தவும். உன் அம்மாவை சமாளிப்பது ,அது உன் பொறுப்பு" என்றேன் ,மனைவிக்கு நான்.*

*கடையில் பூனை குட்டிகள் இருக்கும் பகுதிக்குப் போனோம் .*

*கடையில் வேலை செய்யும் விற்பனையாளர் பெண்மணி ,எங்கள் பின்னால் வந்தாள். அவளுக்கு தெரிந்து விட்டது 'நாங்கள் பூனைக்குட்டி ஒன்று வாங்க தேடுகிறோம்' என்று.*

*" என் பெயர் ஜேன். நான் இந்தக் கடையின் சேல்ஸ் கேர்ள். நான் எந்த விதத்தில் உங்களுக்கு விரும்பிய பூனையை வாங்க உதவ முடியும்? இந்த கடையில் மாதம் முடியும் வரை ,இருபது விகிதம்(20 %) கழிவுக்கு விற்கிறோம். எந்த இனப் பூனையை தேடுகிறீர்கள்?" ஜேன் கேட்டாள்.*

*"வீட்டில் எலித் தொல்லையைப் போக்கவும், என் மகளின் பூனை ஆசைக்காக ஒரு பூனைக் குட்டி தேடுகிறோம்" என்றேன் நான்.*

*" இங்கு பெர்சியன், மெயின், பொம்பே, பங்காளி இன வகை பூனைகள் மட்டுமே உண்டு. 'அஷ்ஹரா' இனம் மிகவும் விலை உயர்ந்த பூனை இனம் . அது இங்கு இல்லை".*

*"அப்பா, எனக்கு அந்த கருப்பு பூனைக்குட்டி தான் பிடித்திருக்கு. இரவில் அது இருப்பது ஒருவருக்கும் தெரியாது". என்றாள் பூஜா.*

*"உங்கள் மகள் சொல்வது 'பொம்பே' இனப்பூனை. பல இந்தியர்கள் வாங்கிப் போனார்கள். இது ஆர்வமுள்ள பூனை. இந்த இனப் பூனைகள், வளர்ப்பவர்கள் மேல் மிகவும் பாசமாக இருக்கும் .பாம்பே பூனை இனம்,தோற்றத்திலும் உணர்ச்சியிலும் மிகுந்த பூனை இனம் .பெரும்*

*வலிமைக் கொண்டது. துணிவுமிக்க,உற்சாகமான பூனை மற்றும் உடல் பருமனை தடுக்க அதன் ஊட்டச்சத்தை கவனமாக பார்க்க வேண்டும் . குறிப்பாக போதுமான உடற்பயிற்சியைப் கொடுக்கவில்லை என்றால் அது குண்டாகி விடும்" என்று சொல்லியபடி, பூஜா சுட்டிக் காட்டிய பூனை குட்டியை கூட்டில் இருந்து வெளியே எடுத்தாள் ஜேன்.*

*"எங்கள் வீட்டுக்கு பாதுகாப்புக்கு ,ஒரு கரும்புலிக்கு பதிலாக ஒரு கரும் பூனை ஒன்று வரப்போகிறது" என்றேன் நான் சிரித்தபடி.*

*"இடம் தெரியாமல் பகிடி விடாதீர்கள்" என்றாள் என் மனைவி.*

*"எத்தனை மாதக் குட்டி இது" என் மகள் கேட்டாள்.*

*"இந்தப் பூனைக் குட்டி பிறந்து மூன்று மாதம் ஆகிறது . தாய் பூனைக்குப் பிறந்த மூன்று குட்டிகளில் இது மட்டுமே சுறு சுறுப்பான ஆண் குட்டி" .*

*" நான் இந்தக் குட்டியைத் தடவிப் பார்க்கலாமா"? பூஜா கேட்டாள்.*

*"நிட்சயமாக கையில் தூக்கி தடவிப் பாருங்கள்" ஜேன் பூனைக் குட்டியை பூஜாவிடம் கொடுத்தாள் .*

*பூஜாவிடம் பூனை குட்டி கை மாறியதும் " ஹலோ பிளக் டைகர்" ( Black Tiger) என்று பெயர் சொல்லி வரவேற்றாள் ,என் மகள்.*

*பூஜா சொன்னதை அந்த பூனை குட்டிக்கு புரிந்ததோ என்னவோ " மியாவ், மியாவ், மியாவ் என்று தன் குரலில் மூன்று முறை பதில் சொல்லி பூஜாவின் கையை நக்கியது.*

*" அப்பனைப் போல் மகளும்டைகர் அனுதாபி" என்றாள் என் மனைவி.*

*"இந்த பூனை இனத்துக்கும் பாம்பாய் நகருக்கும் என்ன தொடர்பு"? நான் ஜேனிடம் கேட்டேன்.*

*" அது ஒரு சுவரசியமான கதை . கென்டக்கி, லூயிஸ்வில்லேயில் பூனை இனங்களை உருவாக்கும் நிக்கி ஹார்னர் என்ற பெண்மணி 1950-களின் பிற்பகுதியில் தொடங்கி, பாம்பே பூனை இனத்தை உருவாக்கியதாக வரலாறு சொல்கிறது .அவரது குறிக்கோள் ஒரு மெல்லிய, பளபளப்பான ஒரு தசை உடல் மற்றும் நட்பு குணமாக இருக்கும் கருப்பு பூனை இனம் ஒன்றை உருவாக்குவதே.*

*பாம்பே பூனை பர்மீய பூனை இனத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்ட, உள்நாட்டு பூனைக்குரிய இனமாகும். பாம்பே பூனைகள் பொதுவாக அனைத்தும் கருப்பு தோல், கருப்பு உள்ளங்கால்கள், கருப்பு மூக்கு மற்றும் வாய், தாமிரம் அல்லது பச்சை கண்கள் கொண்டது. ஒரு பம்பாய் பூனை வேண்டுமெனில் நீங்கள் கருப்பு நிறத்தை விரும்புகிறீர்கள் என்பது அர்த்தம் , ஏனென்றால் இந்த பளபளப்பான கருப்பு நிறத்தில்  பொதுவாக வேறு  பூனை இனத்தில் இல்லை. நான் "பொதுவாக" என்று சொல்கிறேன், ஏனென்றால் ஒரு பல நிறமுள்ள பூனை குட்டிகள் எப்போதாவது பாம்பே குப்பைத் தொட்டில்களில் காணலாம் . பம்பாய் பூனை இரு கலப்புகளின்  இனமாக இருப்பதால், அது பழுப்பு நிற பர்மிஸ் மற்றும் கருப்பு அமெரிக்க ஷோர்ட்ஹேயர் கலப்பால் உருவாகிய, ஒரு கலப்புப் பூனை இனம். இந்தியாவின் கருப்பு சிறுத்தை (Black Cheetah) போல் தோற்றமளிப்பதால் உருவாக்கியவர் இந்தியாவில் பிரபலமான பாம்பே நகரத்தின் பெயரில்  அவரது கற்பனையை செலுத்தி பெயரிட்டார்.*
*அமெரிக்க பூனை வளர்ப்பாளர் நிக்கி ஹார்னர் இந்த இனத்தை 1970 களில் உருவாக்கியிருந்தார். 1976 ஆம் ஆண்டில் பம்பாய் இனத்தை அங்கீகரித்தது; 1979 இல் சர்வதேசப் பூனை சங்கம் இந்த இனத்தை அங்கீகரித்தது,'' ஜானே ஒரே மூச்சில் நான் கேட்ட கேள்விக்கு ஜேன் பதில் சொல்லி முடித்தாள்.*

*நாங்கள் இந்தக் குட்டியை வாங்க முடிவு எடுத்து விட்டோம் . கழிவிக்குப் பின் இதன் விலை என்ன ஜேன் ''?*

*''கழிவு போக முந்நூறு கனேடியன் டாலர்கள் தாருங்கள் . வீட்டு சாப்பாட்டை பூனைக்கு கொடுத்து பழக்கவேண்டாம். சில பூனை இனங்களுக்கு அது ஒத்து வராது. பூனைக்கு என ஒரு தனிக் கூடும் இருந்தால் நல்லது .அதுக்கும் கழிவு உண்டு'' என்றாள் ஜேன்.*

*''ஜேன்.நீர் சரியான கெட்டிக்கார சேல்ஸ் கேர்ள் . உமது விற்பனைத் திறமை பாராட்டுக்குரியது'' என்றேன்.*

*அவள் எங்கள் தலையில் பூனைக் குட்டியோடு ஒரு கூட்டையும், அது படுக்க ஒரு சிறு மெத்தையும் பூனைக்கு ஒரு மாதத்துக்கு தேவையான உணவு வகைகள் எல்லாம் சேர்த்து கட்டி விட்டாள். ஐநூறு டாலர்கள் கொடுத்து பூனை குட்டியையும் அதுக்கு தேவையான பொருட்களையும்  வாங்கிக் கொண்டு  வீட்டில் பாட்டியால் வரப் போகும் போராட்டத்தை எதிர்ப்பார்த்து வீடு திரும்பினோம்.*
*****

*தாத்தாவுக்கும் பாட்டிக்கும் எங்கள் பெரிய வீட்டில் தனி அறை. அந்த ஒரு அறையின் ஓரத்தில் பாட்டியின் பூஜை செய்யும் இடம் உண்டு. தினமும் தானே பிரசாதம் செய்து பல தெய்வங்களுக்கு தினமும் மூன்று தடவை பூஜை செய்வாள் பாட்டி.*

*"ஏண்டி பூஜா நிறம் இல்லாமல் கருப்பு நிற பூனையை ஏன் வாங்கி வந்தாய்? வேறு நிற பூனை உனக்கு கிடைக்கவில்லையா? . நான் செத்த வீட்டுக்கு போகும் போது மட்டுமே வெள்ளை நிறத்தில் சேலை உடுத்தி போவேன். கருப்பு நிற சேலை உடுப்பதில்லை".*

*"பாட்டி இந்தப் பூனையின் கண்ணுரெண்டும்என்னைமயக்கும்பார்வை .'கருப்புதான்எனக்குபிடிச்சகலரு' என்ற சினிமா பாட்டு உங்களுக்கு போட்டுக் காட்டட்டுமா பாட்டி . கருப்பும் வெள்ளையும் நிறங்கள் இல்லை. உங்கள் சாமிகருப்பு;உங்கள் பூஜை அறையில் உள்ள சாமிசிலையும்கருப்பு;சனி பகவான் கருப்பு ;அவரின் வாகனம் காகம் கருப்பு. கணபதி உருவத்தில் உள்ள யானைகருப்பு; கூவும்குயிலும்கருப்புதான்;என் கூந்தலும் கருப்புதான் ;நான் எழுதும் மையும் விலை உயர்ந்த கருப்பு ;முத்தும் கருப்பு தான் தான் பாட்டி .*

*கருப்பானது பயம், மர்மம், வலிமை, அதிகாரம், நேர்த்தியுடன், சம்பிரதாயம், மரணம், தீமை, ஆக்கிரமிப்பு, அதிகாரம், கிளர்ச்சி மற்றும் நுட்பங்களுடன் தொடர்புடையது. கருப்பு வலுவான உணர்ச்சிகளை தூண்டுகிறது . வெள்ளை மற்றும் கருப்பு வண்ணங்கள் அல்ல; அவை வெளிச்சத்தின் அம்சங்களாக இருக்கின்றன. வெள்ளை அனைத்து வண்ணங்களையும் பிரதிபலிக்கிறது. அதன் கலவையால் உருவாகிறது. ஆனால் கருப்பு அவற்றை உறிஞ்சி கொள்கிறது. வான்வெளியில் உள்ள கருந்துளை உறிஞ்சும் தன்மை உள்ளது" பூஜா சொன்னாள்.*
*" எடியே பூஜா! நாம் ஒரு காலத்தில் அறிவியல் ஆசிரியராக இருந்தவள் . எனக்கு விளக்கம் சொல்ல வராதே . என் பூஜை அறைக்குள் உன் பூனை குட்டி வராமல் பார்த்துக் கொள்; என்றாள் பாட்டி .*
*" அது சரி பாட்டி ,என் பூனை குட்டி உன் அறைக்குள் வராது. ஆனா எலிகள் உன் அறைக்குள்வந்து உன் பூஜைக்கு வைத்தபிரசாதத்தை சுவைத்துப் பார்க்குமே!*
*அதை நான் பார்த்துக் கொள்கிறேன். நீ கவலைப் படாதே!*
*****
*ஒரு நாள் தாத்தாவை வைத்திய பரிசோதனைக்கு பாட்டி வைத்தியசாலலைக்குப் கூட்டிப் போகும் போது பூஜாவின் கருப்பு டைகர் குறுக்கே ஓடிற்று. உடனே பாட்டி தாத்தாவோடு வீட்டுக்குள் திரும்பி வந்து பத்து நிமிடம் இருந்து விட்டு திரும்பவும் வைத்தியசாலைக்குத் தாத்தாவோடு போனாள்.*

*பரிசோதனை முடிந்து அவர்கள் இருவரும் வீடு திரும்பினார். பூஜா பாட்டியைப் பார்த்து கேட்டாள், "டாக்டர் தாத்தாவுக்கு ஆபரேஷன் செய்வதைப் பற்றி டாக்டர் என்ன சொன்னார் பாட்டி"?*

*நல்ல காலம்உன் பூனை குறுக்கே ஓடியும், கெட்டதுஒன்றும் நான் எதிர்பார்த்தது போல் தாத்தாவுக்கு ஒன்றும் நடக்கவில்லை. அவருக்கு பைபாஸ் ஆப்பரேசன் தேவை இல்லையாம். மருந்தாலும் உணவாலும் குணப்படுத்த முடியுமாம்."*
*"பாட்டி இதைப் பார்த்தால் பூனை குறுக்கே போனது நல்ல சகுனம் தானே" பூஜா கேட்டாள்.*

*பாட்டி பதில் சொல்லாமல் தாத்தாவோடு தன் அறைக்குள் போய் விட்டாள்.*

*கருப்பு டைகர் வீட்டுக்கு வந்து சில மாதங்களில் பாட்டிக்கு சந்தோசம். அவள் சாமிக்கு வைக்கும் பிரசாதத்தை சுவைத்து அசுத்தமாக்க எலிகள் இல்லையே என்று. இதை என் மனைவிக்குச் சொல்லி அவள் மன திருப்தி அடைந்தை நான் கவனித்தேன். இப்போ பாட்டியும் தாத்தாவும் வெளியே போகும் பொது கருப்பு டைகர் குறுக்கே போனால் அவர்கள் சிரித்தப்படியே போய் விடுவார்கள்.*

*ஒரு நாள் பூஜாவுக்கு பாட்டி சொன்னாள். "பூஜா உன் கருப்பு டைகரை கவனமாக கவனித்துக் கொள். அடுத்த மாதம் அதுக்கு உணவு வாங்கும் போது என் பென்சனில் நான் அதுக்கு பணம் தருகிறேன்".*

*நானும், என் மனைவியும் ,பூஜாவும் ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்தோம்*

*பாட்டி சொன்னதைக் கேட்டோ என்னவோ பூஜாவின் கருப்பு டைகர் 'மியாவ்' என்று குரல் கொடுத்தது.*

*******

# கதை 13 கரும்பலகையும் கணினியும்

*காலம் மாறுகிறது. கரும்பலகை மறைந்து கணினி மூலம் கல்வி கற்கும் முறை வந்து விட்டது . வீட்டில் இருந்து படிக்கலாம் . வருங்காலத்தில் ஆசிரியர் தேவை இல்லை போலும் . ஒரு காலத்தில் திண்ணைப் பள்ளி, இப்போது மேசைப் படிப்பு ஆகிவிட்டது.*

*என்ன சொன்னாலும் ஆசிரியரிடம் திட்டும், அடியும், குட்டும் வாங்குவது போன்ற அனுபவம் கணினி தருமா.? முக்கியமாகக் கரும்பலகையில் எழுதும் வெண் கட்டியின் (Chalk) தூசி மூக்குக்குள் போய் தும்மும் அனுபவத்தை இன்றும் மறக்க முடியாது. அடிக்கடி மூக்கு பொடி போடும் ஆசிரியரின் முக பாவனையைப் பார்த்து ரசித்த காலமும் உண்டு . அவர் மேசையில் இருக்கும் பிரம்பு பீதியைக் கிளப்பும். ஆசிரியர் வருமுன் கரும்பலகையில் ஆசிரியரின் கேலிச் சித்திரம் வரைவது போன்ற இன்பம் கிடைக்குமா? ஆசிரியருக்குப் புளிச்சல் ,பனியர், மூக்கர், கொக்கு, யமன், சல் சல் மாமா போன்ற அடைப் பெயர்கள் வைத்து அழைத்தக் காலமும் உண்டு . எது எப்படி இருந்தாலும் வயது வந்தாலும் ஆசிரியரை வீதியில் கண்டவுடன் அவருக்குக் கொடுக்கும் மரியாதை மட்டும் குறையாது .*
*பல வருடங்களுக்குப் பின் கல்வி இலாக்காவில் உயர் அதிகாரியாக வந்தப் பின், நான் ஐந்தாம் வகுப்பு வரை படித்த ,கிராமத்துப் பாடசாலைக்கு எதாவது நல்லது செய்ய வேண்டும் என்று சென்றேன். பாடசாலையில் ஒரு மாற்றமும் இல்லை . என் வகுப்பு கரும்பலகை என்னைப் பார்த்துக் கேட்டது:*
*“ நீ சௌக்கியமா” ? என்று.*

*நான் சொன்னேன் “ நான் சௌக்கியம். உனக்கு என்ன வேண்டும் ?சொல் செய்கிறேன்” பதில் சொன்னேன்.*

*“என்னை இருக்கும் இடத்தில் இருக்க விடு .என்னிடத்தில் கணினியைக் கொண்டு வந்துவிடாதே” என்றது .*

# *கதை 14 மௌனி டீச்சர்*

*இலங்கையில் வடக்கே உள்ள வன்னிப் பகுதியில் விவசாயிகள் வாழும் கிராமம் துணக்காய். யாழ்ப்பாணத்திலிருந்து தெற்கே ,மாங்குளம் என்ற ஊர் அறுபது மைல் தூரத்தில் உள்ளது. மாங்குளத்திலிருந்து மேற்கே, பதினொரு மைல் தூரத்தில் 'துணக்காய் கிராமம்' அமைந்துள்ளது. அக்கிராமத்துக்கு அருகே மூன்று மைல் தூரத்தில், சுமார் 6000 மக்களைக் கொண்ட 'மல்லாவி' கிராமமுண்டு. விடுதலைப் புலிகளின் ஆதிக்கத்தின் கீழ் அப்பகுதி ஒருகாலத்தில் இருந்தது.*

*பழமைவாதிகளான அவ்வூர் மக்களின் பிரதானத் தொழில் விவசாயம் .தமிழைத்தவிர பிறமொழிகளை விரும்பாதவர்கள். எவராவது வேறு கிராமங்களிலிருந்து தம் ஊருக்கு வந்து வாழ்வதை அதிகம் வரவேற்கமாட்டார்கள். தங்கள் கிராமத்துக் கலாச்சாரம் பாதிக்கப்படலாம் ,என்ற பயம் அவர்களுக்கு.*

*தினத்துக்கு மூன்று பஸ்கள் மாங்குளம் ஊடாக துணக்காயிலிருந்து யாழ்ப்பாணம் போய் வரும். சுமார் இரண்டு மணித்தியாலப் பயணம். வன்னிப் பிரதேசத்தில் பல கிராமத்துப் பாடச்சாலைகள் பின்னடைவுகளை எதிர் நோக்க வேண்டியிருந்தது. அதனால் உயர்கல்வியானது கிராமப் பிள்ளைகளுக்கு கிடைத்து பல்கலைக் கழகம் செல்வது மிகக் குறைவு. துணக்காய் பாடசாலைக்குத் தமிழும் ஆங்கிலமும் நன்கு தெரிந்த ஆசிரியர் ஒருவரை நியமிப்பது ஒரு சவாலாக இருந்தது. காரணம் யாழ்ப்பாணம் அல்லது வவுனியாமன்னாரிலிருந்து துணக்காயுக்கு மாற்றலாகி ஆசிரியராக வருவதற்கு ஆங்கில ஆசிரியர்கள் தயங்குவதேயாகும். அவர்கள் வன்னிப் பிரதேசத்தில் வேலை செய்ய மறுப்பதற்கு பல காரணங்கள் இருந்தது.*

*கிராமத்துப் பள்ளிக்கூடத்தில் ஆங்கிலம் படிப்பிப்பதென்றால் அதற்கு பொறுமையும் எதையும் தாங்கும் மனநிலையும் தேவை. யாழ்குடாநாட்டில் வாழும் எல்லா ஆசிரியர்களும் வன்னிக்கு ஆசிரியராகப் போக விரும்புவதில்லை. அதுவும் ஆங்கிலம் கற்பிக்க போவதென்றால் அது ஒரு சவாலாக அமைகிறது. துணக்காய் கிராமத்து மக்கள் தமிழ்ப்பற்று மிக்கவர்கள். ஆசிரியர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து துணக்காயுக்கு போய் கல்விகற்பிக்க மறுப்பதற்கு முக்கிய காரணம் ,மலேரியா காய்ச்சல். அதோடு மருத்துவ வசதிகள் அங்கு குறைவு. ஊர்வாசிகள் வேறு இடங்களில் இருந்து தங்கள் கிராமத்துக்கு வந்தவர்களோடு சிரித்துப் பழகுவதும் குறைவு.*

*"மௌனி" என்ற செல்லப் பெயரால் அழைக்கப்படும் ,ஜெயமணி டீச்சரின் தந்தை இரத்தினம் என்ற செல்வரத்தினம்ஒரு இந்து. அவர் மனைவி நேசமணி கிறிஸ்தவ மதத்தவள். இருவரும் யாழ்ப்பாணக் கச்சேரியில் ஒன்றாக வேலை செய்த போது ஏற்பட்ட நட்பு காதலாக மலர்ந்து திருமணத்தில் போய் முடிந்தது . இரத்தினத்தின் பெற்றோருக்கு, மகன் ஒரு கிறிஸ்தவப் பெண்ணை திருமணம் செய்தது அதிருப்தியைக் கொடுத்தது. அவர்கள் எவ்வளவோ தடுத்தும் இரத்தினம்,அவர்களின் எதிர்பபை மீறி நேசமணியைத் திருமணம் செய்தார். அதனால் மகன் இரத்தினத்தோடு அவர்கள் பேசுவது கிடையாது.*

*உடுவில் கிராமத்தில் பெரும்பாலும் கிறிஸ்த்தவர்களே வாழ்ந்தார்கள். கிராமத்தில் நேசமணியின் பெற்றோர் சொந்த வீட்டில் வாழ்ந்தவர்கள். நேசமணியின் தாய் பூமணி உடுவில் மகளிர்கல்லூரியில் ஆங்கில ஆசிரியையாக கடமையாற்றி ரிட்டையாரனவள். நேசமணியின் தந்தை உடுவில்லில் விதானாயராக இருந்தவர். அக்கிராமவாசிகள் பலரை அவருக்குத் தெரியும் .*

*"தன்னைப் போல் தன் பேத்தியும் ஆங்கில ஆசிரியாராக வர வேண்டும்" என்பது பூமணியின் ஆசை. பூமணி தான் படிப்பித்த உடுவில் மகளிர்கல்லூரியிலேயே மெலனியையும் கல்வி பயில வைத்தாள்.*

*மெலனி எல்லாப் பாடங்களையும் விட ஆங்கிலப்பாடத்தில் திறமையான மாணவியாக திகழ்ந்தாள். ஆங்கிலப் பேச்சு கட்டுரைப் போட்டிகளில் பரிசுகள் பல பெற்றவள். ஆங்கிலப் புத்தகம் வாசிப்பதே அவளது பொழுதுப்போக்கு. தன் பேத்தி விரும்பிக் கேட்கும் ஆங்கில நூல்களை வாங்கிக் கொடுக்க பூமணி தயங்கமாட்டாள். மெலனிக்கும் பூமணிக்குமிடையே இறுக்கமான உறவு இருந்து வந்தது. எதையும் பாட்டியாரோடு கலந்து பேசி முடிவெடுக்க மெலனி தயங்கமாட்டாள்.*

*ஆரம்பத்தில் மல்லாகம் இராமனாதன் கல்லூரியில் ஆசிரியையாக சேர்ந்த மெலனி,பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில்ஆங்கில ஆசிரியையாகப் பயிற்சி பெறும் வாய்ப்பு கிட்டியது. இரு வருட பயிற்சிக்குப் பின்னர் தனது பாட்டியார் படிப்பித்த உடுவில் மகளிர் கல்லூரிக்கே அவள் ஆசிரியையாகப் போக விரும்பினாள். ஆனால் அவள் விரும்பியது ஒன்று; நடந்தது வேறொன்று. துணக்காயில் உள்ள பாடச்சாலை ஒன்றுக்கு ஆங்கில ஆசிரியையாக நியமனக் கடிதம் கல்வி இலாக்காவில் இருந்து அவளுக்கு வந்தபோது என்ன செய்வது என்று மெலினுக்குத்தெரியவில்லை. துணக்காய் கிராமம் எங்கிருக்கிறது என்பதே அவளுக்குத் தெரியாது. யாழ்ப்பாணமும் ,வலிகாமம் பகுதிக் கிராமங்களையும்தவிர தெற்கே உள்ள வன்னிப் மாவட்டத்தைப் பற்றி அவள் அறிந்திருக்கவில்லை.*

*கிளிநொச்சியில் ஆசிரியராக வேலைப் பார்த்து உடுவிலுக்கு மாற்றலாகி வந்த மெலினியின் உறவினர் ஒருவர்துணுக்காய் கிராமத்தைப்பற்றி முழு விபரமும் அவளுக்குச் சொன்ன பின்னரே அக்கிராமம் எங்கிருக்கிறது?அவ்வூர் வாசிகள் எப்படிப்பட்டவர்கள் என்பது அவளுக்குத் தெரியவந்தது. தனது பாட்டியாரிடம் துணுக்காயுக்கு ஆசிரியர் பதவியை ஏற்றுப் போவதா? இல்லையா? என்று ஆலோசனைக் கேட்டாள் மெலனி.*

*"மெலனிநீ ஒரு பயிற்சி பெற்ற ஆங்கில ஆசிரியை என்பதை மறந்துவிடாதே. துணுக்காய் கிராம மக்கள் தமிழ்பற்று உள்ளவர்கள். ஆங்கில அறிவில் சற்று குறைந்தவர்கள். இந்த நியமனத்தை நீ ஒரு சவாலாக ஏற்று துணக்காயுக்குச் செல்வது தான் நல்லது. சில வருடங்கள் அங்கு வேலை செய்து, அக் கிராமத்துப் பிள்ளைகளுக்குத் தேவையான ஆங்கில அறிவைப்போதித்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதை ஒரு புனித சேவையாக நீ கருத வேண்டும். அதனால் அப் பிள்ளைகளுக்கு வேலை வாய்ப்பு அதிகரிக்கும். மாதம் ஒரு முறை உடுவிலுக்கு நீ வந்து போகலாம். தயங்காமல் நியமனத்தை ஏற்றுக் கொள்" என்றாள் மெலனி ஜெயமணியின் பூமணி பாட்டியார். பாட்டியார் சொன்னபடி நியமனத்தை ஏற்று துணுக்காயுக்குப் போக மெலனி முடிவுசெய்தாள்.*

*****

*கையில் ஒரு சூட்கேசுடன் துணக்காயுக்கு பஸ் ஏறினாள் ஜெயமணி என்ற மெலனி. துணக்காயில் எங்கு தங்குவது என்பதை அவள் முடிவெடுக்க வில்லை. பாடசாலை தலைமை ஆசிரியர் மூலம் அவருக்குத் தெரிந்த ஒரு குடும்பத்தின் வீட்டில் தங்க திட்டமிட்டிருந்தாள். பஸ் மாங்குளம் ஊடாகத் துணக்காயுக்கு போய் சேர இரு மணித்தியாலங்களுக்கு மேல் எடுத்தது. மாங்குளம் துணக்காய் பாதையின் இருபக்கங்களிலும்பச்சைப் பசேல் என்ற வயல் வெளிகள். இரண்டொரு குளங்கள். வயலை உழும் விவசாயிகளின் காட்சி அவளுக்குப் புதியது. அங்கொன்றும் இங்கொன்றுமாக வெள்ளை நிற கொக்குகளின்கூட்டம். கிராமத்து இயற்கையின்*

*தோற்றம்,அவளை வெகுவாகக் கவர்ந்தது. போகும் பாதையில் பாம்புகள் வாகனங்களால் அடிபட்டு இறந்து கிடந்ததை கண்டதும் அவளுக்கு தன் உறவினர் சொன்ன எச்சரிக்கையே நினைவுக்கு வந்தது. '' மெலனிதுணுக்காயில் பாம்புகள் அதிகம். பலர் பாம்பு கடியால் இறந்து போயிருக்கினம். கொஞ்சம் கவனமாயிரு'' இது அவர் சொன்ன எச்சரிக்கை.*

*பாடசாலை தலைமை ஆசிரியர் சிவராசா அதிகம் பேசமாட்டார். இருபத்தைந்து வருடங்களாக ஆசிரியராக சேவை செய்து வருபவர். வன்னியில் முல்லைதீவு,உருத்திரபுரம்,நெடுங்கேணி,பூனகரி அகிய இடங்களில் ஆசிரியராக வேலை செய்து,இறுதியாகத் தன் சொந்த ஊரான துணக்காயுக்கு மாற்றலாகி அவர் வந்து இரு வருடங்களாகிவிட்டது. தமிழ் பற்று மிக்கவர். அவருக்கு ஆங்கிலம்ஓரளவுக்குத் தெரிந்திருந்தாலும் பேசுவதற்கு பின் வாங்குவார்.*

*சுமார் 400 மாணவர்களைக் கொண்ட பாடச்சாலையில் பெரும்பாலும் துணுக்காய்,மலாவி கிராமத்து மாணவர்களே கல்விப்பயின்றனர். அம்மாணவர்களின் பெற்றோரை அவர் நன்கு தெரிந்து வைத்திருந்தார். வேட்டியும் அரைக்கை வெள்ளை நிறச் சேர்ட்டோடும்நெற்றியில் திருநீற்றோடும்செருப்பணிந்தே அவர் தினமும் பாடசாலைக்குச் செல்வார். சிவராசா ஒரு நேர்மையான மனிதர். பிறருக்கு உதவும் மனம் உள்ளவர். எளிமையானவர், ஆனால் கண்டிப்பான பேர்வளி.*

*பத்தாம் வகுப்பு வரை பாடச்சாலையில் படிக்கும் வசதியிருந்ததால் மாணவ மாணவிகள் உயர் கல்வி கற்கும் வசதி அங்கு இருக்கவில்லை. வசதி படைத்த மாணவர்கள் வவுனியாவுக்கோ, கிளிநொச்சிக்கோ அல்லது மன்னாருக்கோ சென்று உயர் கல்வி பயின்றனர். மற்றமாணவர்கள் தந்தைக்கு உதவியாக விவசாயத்தில் ஈடுபட்டனர். தலைமை ஆசிரியர் உட்பட பாடச்சாலையில் பத்து ஆசிரியர்கள் இருந்தனர். அவர்கள் அனைவரும் வன்னிப் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். அதிகம் ஆங்கிலம் பேச மாட்டார்கள். பாடச்சாலைக்கு ஒரு ஆங்கிலம் படிப்பிக்கும் டீச்சர் உடுவில் இருந்துவருகிறதாகக் கேள்விப்பட்டு, எப்படி அவரோடு தமிழில் பேசிப் பழகுவது என்று தங்களுக்கிடையே கதைத்துக்கொண்டார்கள்.*

*தலைமை ஆசிரியரின் அறைக்கதவை ''உள்ளே வரலாமா சேர்'' என்ற நல்ல தமிழ்உச்சரிப்போடு தட்டினாள் மெலினி.*

*'' தாராளமாய் உள்ளே வரலாம்'' என்று பதில் அளித்தார் சிவராசா மாஸ்டர். அவருக்கு சுமார் ஐம்பது வயதிருக்கும். தலை சற்று நரைத்து இருந்தது. அறைக்குள் ஒரு கையில்சூட்கேசும் கையும் மறுகையில் கைப்பையுமாக நுழைந்த மெலனியை மேலும்கீழுமாக ஒரு கண்ணோட்டம் விட்டார் சிவராசா. அவர் எதிர்பார்த்த தோற்றம் வேறு. ஆங்கில ஆசிரியை என்ற படியால் பரங்கிப் பெண்ணைப்போல் கவுன் போட்டிருப்பாள் என்று நினைத்த அவருக்கு, இளம் மஞ்சள் நிற கறுப்புக் கரை வைத்த பருத்திச் சேலை அணிந்து, நீண்ட பின்னலோடு ஒரு அசல் தமிழ் பெண்ணைப் போல் மெலனி தொற்றமளித்தது அவருக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது.*

*''அமருங்கள் டீச்சர்'' என்று தனக்குள் முன் இருந்த கதிரையைக் காட்டினார் சிவராசா.*

*'' நன்றி சேர். இதோ எனக்கு கல்வி இலாக்காவில் இருந்து வந்த நியமனக் கடிதம்'' என்று நியமனக்கடிதத்தைக் கொடுத்தபடி பனிவோடு சூட்கேசைத் தன்னருகே வைத்தவாறு கதிரையில் மெலனி அமர்ந்தாள்.*

*“ டீச்சர் உங்கள் முழுபெயர் என்ன?” சிவராசா கேட்டார். “செல்வரத்தினம் ஜெயமணி. ஆனால் மெலனி என்று என்னை பெற்றோர்கள் அழைப்பார்கள். எனது தாயரின் அம்மா உடுவில் மகளிர் கல்லூரியில் ஆங்கிலம் படிப்பித்து ரிட்டையரான பூமணி டீச்சர். என்னை நீங்கள் மெலனி என்றே சுருக்கமாகக் கூப்பிடலாம்.”*

*“மெலனி நீங்கள் நல்லாகப்பாடக் கூடிய பூமணி டீச்சரின் பேத்தியா? எனக்கு அவரை நான் முல்லைத்தீவில் படிப்பித்த போது தெரியும். அது சரி எப்படி பஸ் பயணம் இருந்தது?. காலை போசனம் சாப்பிட்டீர்களா”? கரிசனையோடு சிவராசா கேட்டார்.*

*“ யாழ்ப்பாணத்திருந்து இங்கு வர சுமார் இரு மணித்தியாலங்கள் எடுத்தது. கிளிநொச்சியில்சில நேரம்காலை உணவுக்காக பஸ் நின்றது.”*

*“ அப்போ உங்கள் காலை உணவு கிளிநொச்சியிலா?”*

*“ இல்லை சேர். என் அம்மா காலை உணவு செய்து தந்தார் . கடைகளிலை சாப்பிடக் கூடாது என்று சொன்னார்” என்றாள் மெலனி.*

*“அது நல்லது. துணக்காயில் நீர் எங்கு தங்கப் போவதாக உத்தேசம்? உமக்குத் தெரிந்தவர்கள்எவராவது இருக்கிறார்களா” ?*

*“இல்லை சேர். உங்களை தான் தங்குவதற்கு உதவி கேட்கயிருக்கிறன்” பதில் சொன்னாள் மெலனி.*

*“மெலனி நீர் ஒன்றுக்கும் யோசிக்காதையும். மாற்றலாகி நீர் இங்கு வருவதைத் தெரிந்து, நீர் தங்குவதற்கு என் சகோதரி வீட்டில் ஒரு அறை ஒழுங்கு செய்திருக்கிறன். அவளுடைய வீட்டில் நீர் தங்கலாம். அவளின் கணவர் ஒருவருடத்துக்கு முன்பே இறந்துவிட்டார். என் அக்கா ஆசிரியையாக பல வருடங்கள் வேலை செய்தவ. இப்போ ரிட்யைராகிவிட்டா. கிடைக்கும் பென்சனோடு டியூசன் கொடுத்து வரும் வரும்படி அவளுக்குப் போதுமானது. அவளுடைய வீடு இரண்டு அறைகளைக்கொண்டது. பாடசாலையில் இருந்து வீடு வெகு தூரத்தில் இல்லை. அவ வீட்டுக்கு இங்கிருந்து நடந்தே போகலாம். நான் அவளோடு ஏற்கனவே நீர் அங்கு தங்குவதைப் பற்றிப் பேசிவிட்டேன்” என்றார் சிவராசா.*

*“அவர்களுக்குப் பிள்ளைகள் இல்லையா சார்?.*

*“ இல்லை. என் மூன்று பிள்ளைகளும்,என் குடும்பமும் தான் அவளுக்கு எல்லாம். சொல்ல மறந்திட்டன். உங்கள் உணவை அவளுடைய வீட்டில் வைத்துக் கொள்ளலாம். என்ன சொல்லுகிறீர் மெலனி?”*
*தலைமை ஆசிரியர் தனக்கு முன்கூட்டியே தங்குவதற்கும்,தனது உணவுக்கும் தேவையான ஒழுங்குகள் செய்வார் என்று மெலனி எதிர்பார்த்திருக்வில்லை.*
*“ உங்களிண்டை பெரிய உதவிக்கு மிகவும் நன்றி சார். எவ்வளவு பணம் நான் மாதம் மாதம் அவர்களுக்கு கொடுக்கவேண்டும?” மெலினிகேட்டாள்.*
*“ முதலிலை அவவைச் சந்தியும் மெலினிஅதன் பிறகு அவ கேட்கும் தொகையைக் கொடும் . அக்கா உம்மிடம் அதிக பணம் கேட்க மாட்டா. அவளுக்கும் வீட்டுத்துணைக்கும் ஒருபெண்தேவை” என்றார் சிவராசா.*
*“ அவர்களுடைய பெயரை சொல்ல மறந்திட்டியளே சார்?”*

*“ அவவை கமலா அக்கா என்றுதான் நான் கூப்பிடுவன். அவவுடைய முழுபெயர் கமலாதேவி. அவவுடைய இறந்த கணவன் பெயர் செல்லத்துரை. கிளிநொச்சியிலை அப்போத்திக்கு அதிகாரியாக இருந்தவர். முதலில் என்னோடு வாரும் .மற்றைய டீச்சர்களை அறிமுகப் படுத்துகிறன். இப்பாடசாலையில் என்னைத் தவிர பத்து டீச்சர்கள் இருக்கிறார்கள். அதில் ஆறு பேர் பெண் டீச்சர்கள். அவர்கள் எல்லோருக்கும் ஆங்கிலம் அவ்வளவுக்குப் பேச வராது. அவர்களோடு ஆங்கிலத்தில் பேசாதையும். நீர் நல்லாய் தமிழ் பேசுகிறீரே....! அது போதும்” சிவராசா மாஸ்டர் சிரித்தப்படி சொன்னார். அவரது சிரிப்பிலிருந்து அவருக்குச் மெலனி டீச்சரை வெகுவாக பிடித்துக் கொண்டது, என்பதைக்காட்டியது. சிவராசா மாஸ்டர்மெலனியை மற்றைய ஆசிரியர்களுக்கு அறிமுகப்படுத்த அழைத்துச் சென்றார்.*

*****

*மெலனி ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியையாக கடமையாற்றித் தொடகிய மூன்று மாதத்துக்குள் வெல்கம் (Welcome) ,எக்ஸ்கியூஸ் மீ ( Excuse me), பிளீஸ் (Please),தங்கியூ ( Thank You). ஐ ஆம் வெரி சாரி ( Iam am Very sorry), டோன்ட் மென்சன் பிளீஸ் ( Don’t mention please) கேன் ஐ ஹெல்ப் யூ பிளீஸ் (Can I help you please) போன்ற கண்ணியமான ஆங்கில வார்த்தைகளை மாணவர்களுக்கு பேசக் கற்றுக்கொடுத்தாள். மாணவர்களுக்கு ஆங்கிலப்புத்தங்களை வாசிக்கும் ஆவலைத் தூண்டுவதற்காக தன் செலவில் ஆங்கில காமிக்ஸ் புத்தகங்களை ஆரம்பத்தில் அறிமுகப்படுத்தினாள். படிப்படியாக மாணவ மாணவிகளுக்கு ஆங்கிலப் கதைப்புத்தகங்கள் வாசிக்கவேண்டும் என்ற ஆசை உருவாகியது. தலைமை ஆசிரியரோடு கலந்தாலோசித்து ஒரு ஆங்கில,தமிழ் நூல்களைக் கொண்ட வாசக சாலையை பாடச்சாலையில் உருவாக்கினாள். வாசிப்பு அறிவுப் பெருக்கத்தின் அஸ்த்திவாரம் என்பது மெலனியின் கருத்து. வாசகச்சாலைக்குப் பொறுப்பாக பத்தாம் வகுப்பு படிக்கும் மாணவன் ஒருவனை நியமித்தாள். உடுவிலில் தன்னிடம் இருந்த ஆங்கில நூல்களை வாசகச்சாலைக்கு இனாமாகக் கொடுத்தாள். மற்றைய ஆசிரியர்களும் அதற்கு ஆதரவு அளித்தனர்.*

*ஒரு வருடத்துக்குள் “எனது கிராமம்” என்ற தலைப்பில் ஒரு ஆங்கிலக் கட்டுரைப் போட்டியொன்றை வைத்தாள். மெலனியின் ஆர்வத்தைக் கண்ட தலைமை ஆசிரியர் சிவராசாவும் மற்றைய ஆசிரியர்களும் முதல் மூன்று பரிசுகளுக்காக நிதி உதவி செய்ய முன்வந்தனர். மாணவர்கள் தமிழ் ஆங்கில டிக்சனெரியை பாவிக்கும் முறையைச்சொல்லிக் கொடுத்தாள்.ஒருவருடத்துக்குள் மெலனியின் வருகையால் மாணவர்களும் ஆசிரியர்களும் கூச்சமின்றி ஆங்கிலம் பேசக் கற்றுக்கொண்டனர். மாணவர்களின் பெற்றோருக்கு தங்கள் பிள்ளைகளில் ஏறபட்ட மாற்றம் அதிசயப்படவைத்தது. நாளடைவில் ஆங்கில டீச்சர் மெலனி என்ற ஜெயமணி இரத்தினத்தின் பெயர் துணக்காய் கிராமவாசிகளின் மனதில் ஒரு இடத்தைப்பிடித்துக் கொண்டது. மாலை நேரங்களில் வயல் வெளிகளில் மெலனி உலாவி வருவாள். சில மாணவர்கள் வயலில் தந்தைமாரோடு வேலை செய்வதைக் கண்டு பெருமைப்பட்டாள்.*

*ஆரம்பத்தில் “மிஸ்ஸியம்மா” என்று மெலனியை கேலியாக அழைத்த சில மாணவர்கள் மனம் மாறி மரியாதையாக “ மெலனி டீச்சர்” என்று அன்போடு அழைக்கத் தொடங்கினார்கள். எப்போதும் ஒரு ஆங்கிலப் புத்தகத்தை தன் கைபையுக்குள் மெலனி எடுத்துச்செல்வது வழக்கம். நேரம் கிடைத்த போது அப்புத்தகம் தான் அவளுக்குத் துணை. சிவராசாவின் அக்கா கமலாவுக்கு மெலனியை வெகுவாகப் பிடித்துக்கொண்டது. தனது ரேடியோவை பாவிப்பதற்கு அனுமதித்தாள். மெலனிக்கு விரும்பிய உணவை சமைத்துக்கொடுத்தாள். நேரம் கிடைத்த போதெல்லாம் கமலாவுக்கு சமையலறையில் மெலனி உதவி செய்தாள். வீட்டை கூட்டிப் பெருக்கினாள்..*

****

*ஒரு நாள் கல்வி இலாக்காவில் இருந்து அமைச்சின் செயலாளரும் இன்னும் இரு அதிகாரிகளும் பாடசாலையின் தேவைகளைக் கண்டறிய வரப்போவதாக தலைமை ஆசிரியர் சிவராசா*

*மெலனியை அழைத்துச் சொன்னார். "டீச்சர், வரும் அதிகாரிகள் மூவரும் சிங்களவர்கள். அவர்களுக்குத் தமிழ் பேச வராது. சிங்களமும் ஆங்கிலமும் மட்டுமே பேசத் தெரியும். அதனால் அவர்களோடு உரையாடி எமது பாடசாலையின் தேவைகளை ஆங்கிலத்தில் எடுத்துச்சொல்ல உமது உதவி எனக்குத் தேவை" என்றார் சிவராசா..*

*" இந்த உதவியை நான் பாடசாலை முன்னேற அவசியம் செய்வேன்" என்று சிவராசாவுக்கு வாக்குறுதி அளித்தாள் மெலனி.*

*" மெலனி உமக்கு சிங்களமும் ஓரளவுக்கு விளங்கும். அதுவும் உதவியாக இருக்கும்."*

*" சிங்களம் அவ்வளவுக்கு பேச மாட்டேன், ஆனால் சொல்வது விளங்கும்" என்றாள் மெலினி.*

*கல்வியிலாக்கா அதிகாரிகள் பாடசாலைக்கு வந்தபோது சிவராசா அவர்களுக்கு மெலனியை பாடசாலையில் ஆங்கிலம் படிப்பிக்கும் ஆசிரியையென அறிமுகப்படுத்தி வைத்தார். அதிகாரிகள் உரையாடியபோது மெலனியின் அடக்கமான பேச்சும், ஆங்கில உச்சரிப்பும் அவர்களை வெகுவாகக் கவர்ந்தது? பாடசாலையின் தரத்தை உயர்த்தி உயர் வகுப்புகள் நடத்தவும்விஞ்ஞான லப்போரட்டரி ஒன்றை ஸ்தாபிக்கவும்மூன்று கம்பியூட்டர்களை மாணவர்களுக்கு பாவிப்பதற்கு தேவையெனவும் வேண்டுகோள்களை அதிகாரிகளுக்கு விடுத்தாள்.*

*"கம்பியூட்டர் பாடசாலைக்குத் தந்தால் அதைப் பாவிக்கும் முறையைக் காட்டி கொடுக்க ஒரு ஆசிரியர் தேவை. அதற்கு அதிக பணம் செலவாகுமே?" என்றார் வந்திருந்த செயலாளாளர்.*

*"கவலைப்படாதையுங்கோ சார். நான் பலாலி டிரெயினிங் காலேஜ்ஜில் படிக்கும் போது கம்பியூட்டரைப் பாவிப்பது எப்படி? என்று பழகிவிட்டேன். அதனால் மாணவர்களுக்கு சொல்லிக் கொடுக்கத் நான் தயார்." என்றாள் மெலனி. மெலனியின் ஆர்வத்தைக் கண்டு செயலாளர் பெருமைப்பட்டார்.*

*"என்னால் இயன்றளவுக்கு பாடசாலை முன்னேற நீர்கேட்ட தேவைகளை அமைச்சரோடு பேசி தர முயலுகிறேன்" என்றார் செயலாளர்.*

*கல்வி அமைச்சு அதிகாரி வாக்குறுதி கொடுத்தப் படி இரு மாதங்களில் மூன்று கம்பியூட்டர்கள் பாடச்சாலைக்கு கிடைத்ததையிட்டு மாணவர்களும் ஆசிரியர்களும் மெலனியின் கெட்டித்தனத்தை மெச்சினர். மாதம் ஒரு முறை சனி ஞாயிறு தினங்களில் உடுவிலுக்குப் போவதைக் மெலனி குறைத்துக் கொண்டாள். மாணவர்களுக்கு கம்பியூட்டர் பாவிக்கும் முறையைக் கற்றுக்கொடுத்தாள். சில ஆசிரியர்களும் மாணவர்களோடு சேர்ந்து கற்றனர். ஒருவருடத்துக்குள் பாடசாலையில் உயர்தர வகுப்புகள் நடக்கும் அளவுக்குத் தரம் உயர்த்தப்பட்டு,விஞ்ஞானப் பாடங்களும்,உயர் கணிதமும் சொல்லிக் கொடுக்க இரு ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர். மெலனியின் துணக்காய் பாடச்சாலை சேவை காலத்துக்குள் இருமாணவர்கள் யாழ்ப்பாணம் பல்கலைக்ழகத்தில் பொறியியல் துறைக்கும்விஞ்ஞான துறைக்கும் தெரிவு செய்யப் பட்டனர். ஆனால் அது மெலனிக்கு பூரண திருப்தியைக் கொடுக்கவில்லை. எப்படியும் ஒரு மாணவனாவது மருத்துவத்துறைக்கு தெரிவு செய்யப்பட வேண்டும் என்பதே அவளது குறிக்கோள். அவள் விரும்பியப்படி அவளது துணக்காய் சேவை காலத்துக்குள்மாணவன் ஒருவன் கொழும்பு வைத்தியக் கல்லூரிக்கு தேர்ந்தெடுக்கப் பட்டான். தலைமை ஆசிரியருக்கோ கட்டுக்கடங்காத சந்தோஷம். தன் அறைக்குள் மெலனியை அழைத்து பாரட்டினார்.*

*"மெலனிநீர் இவ்வூருக்கு மாற்றலாகி வந்த ஐந்து வருட காலத்துக்குள் இந்த பாடசாலைக்குச் செய்த சாதனைகள் பாராட்டுக்குரியது. இனி அதிக மாணவர்கள் அக்கிராமத்தில் இருந்து கல்விமான்களாக வரக்கூடிய சந்தர்ப்பத்தை உருவாக்கிக் கொடுத்திருக்கிறீர். இக்கிராம மக்கள் உமது சேவையை ஒரு போதும் மறக்க மாட்டார்கள். ஆனால் ஒரு செய்தியை உமக்கு சொல்ல விரும்புகிறேன்" என்றார் கண் கலங்க சிவராசா.*

*சிவராசா கண் கலங்குவதை மெலனி கவனித்துவிட்டாள்.*

*" ஏன் சார் கண் கலங்குகிறீர்கள்"? மெலனி கேட்டாள். "மெலனி உமக்கு உடுவில் மகளிர் கல்லூரிக்கு டிரான்ஸ்பர் ஆடர் வந்திருக்கு. அடுத்தமாதம் முதற் கொண்டு உமக்கு உடுவில்*

*மகளிர் கல்லூரியில் ஆங்கில ஆசிரியையாக மாறுதல் ஆர்டர் வந்திருக்கு'' என்றார் பேச்சு தழும்ப. சிவராசா. ''எனக்கு உடுவிலுக்கு டிரான்ஸ்பரா?. இந்தப் பாடச்சாலையையும்,மாணவர்களையும்,துணக்காய் கிராமத்தையும் விட்டு நான் எப்படி உடுவிலுக்குப் போக முடியும் சேர்? எனக்கு டிரான்ஸ்பரில் உடுவிலுக்குப் போக விருப்பமில்லை'' என்றாள் மெலனி.*

*'' மெலனி எனக்குத் தெரியும் ,நீர் உமக்கும் துணக்காயுக்கு இடையே ஒரு பலமான உறவை உருவாக்கிவிட்டீர் என்று. ஆனால் நீர் இனிஉமது வருங்காலத்தைப் பற்றியும் சிந்திக்க வேண்டும். சொந்த ஊருக்கு நீர் போனால் உமக்குத் திருமணம்செய்து வைத்து நல்ல குடும்ப வாழ்க்கையை உமது பெற்றோரும்பூமணி டீச்சரும் ஒழுங்கு செய்து கொடுக்கமுடியும். மறுக்காமல் டிரான்ஸ்பர் ஆடரைப் பெற்றுக் கொள்ளும்'' என்று சொல்லி ஆடரை மெலனியின் கையில் கொடுத்தார் தலைமை ஆசிரியர் சிவராசா. கண்களில் கண்ணீர் மல்க கடிதத்தை வாங்கிக் கொண்டாள் மெலனி.*

*****

# கதை 15 நடராஜவுக்கு நல்ல மனசு

கொழும்பில் உள்ள பிரபல ஏற்றுமதி இறக்குமதி 'ராஜ்எக்ஸ்போர்ட்ஸ் இம்போர்ட்ஸ்' நிறுவனத்தின் உரிமையாளர் ராஜதுரைக்கு கொழும்பு 7 என்ற பகுதியில் உள்ள பார்ன்ஸ் பிலெசில் ஆறுஅறைகள் கொண்ட முன்னுக்கும் பின்னுக்கும் தோட்டத்துடன் பெரிய வீடு இருந்தது .அந்த வீட்டில் பத்து பேர் வாழ்ந்தனர். அவர்களில் ராஜதுரையின் மனைவி சுகந்தி,சுகந்தியின் எண்பது வயது தாய் , ராஜதுரை மகன் ராஜா என்ற நடராஜா , ராஜாவின் இரு சகோதரிகள், வீட்டு சமையல்காரி புஞ்சி மெனிக்கே,வேலைக்கரன் வேலு ,டிரைவர் டயசும் வசித்தனர். காலை ராஜாவை ராயல் கல்லூரிக்கு காரில் கூட்டிச் சென்று மாலை வகுப்பு முடிந்ததும் வீட்டுக்கு அழைத்துச் செல்வது டிரைவர் டயசின் வழமை .
பத்தாம் வகுப்பு படிக்கும் ராஜா, தான் ஒரு பணக்காரனின் மகன்என்ற தலைக்கனம் இல்லாதவன். இன வித்தியாசம் காட்டாமல் தான் படிக்கும் கொழும்பு ராயல் கல்லூரியில்உள்ள தன் வகுப்பு மாணவர்களோடு பழகுபவன். மற்றவர்களுக்கு தன்னால் பிரச்சனை ஏதும் வரக் கூடாது என்ற நோக்கம் உள்ளவன். சட்டத்தை மதிப்பவன் அவனின் நெருங்கிய நண்பன் கொழும்பு பம்பலபிட்டியாவில் 'கிரேட்வோல்' என்ற சீன உணவகம் நடத்தும் உரிமையானின் மகன் வைசாங் . சனி கிழமைகளில் உணவகத்தில் தந்தைக்கு வைசாங் உதவி செய்வான் .கிரேட்வோல் உணவகத்துக்கு பல சீனர்கள், சுற்றுலாப் பயணிகள் வருவார்கள். அந்த உணவகத்துக்கு ராஜாவை இரு தடவைகள் அழைத்து சென்று, பெற்றோருக்கு அறிமுகப் படுத்தி , சீன உணவை ராஜாவுக்கு வைசாங் பரிமாறி இருக்கிறான். வைசாங் ராஜாவுக்கு, சீன மொழி பேசக் கற்றுக் கொடுத்தான். பதிலுக்கு வைசாங்கிற்கு ராஜா தமிழ் பேசக் கற்றுக் கொடுத்தா ன்.
சில நாட்கள் வைசாங் கல்லூரிக்கு வராதது ராஜாவுக்கு கவலையைக் கொடுத்து.சக மாணவர்களிடம் விசாரித்த போது "வைசாங் கோவிட் 19 நோயினால் பாதிக்கப் பட்டு அவனின் வீடு தனிமைப் படுத்தப் பட்டு விட்டது" என்றார் ராஜாவின் வகுப்புஆசிரியர். இனி எல்லோரும் முக கவசம் அணிந்து நாளை முதல் வகுப்புக்குள் வரமுன் கை கால் கழுவிய பின்னரே வரலாம் ." என்றார் ஆசிரியர்
மேலும் ராஜாவின் நண்பன் மோகன், ராஜாவுக்கு சொன்னான் "போலீஸ் விசாரித்த போது வைசாங்குக்கு அந்த நோய் அவனுடைய தந்தையின் உணவகத்துக்கு உணவு உண்ண சீனாவில் இருந்து வந்த சுற்றலாப் பயணி ஒருவர் மூலம் வந்திருக்கலாம் எனவும் உணவகம் தற்காலிமாக போலீசாரால் மூடப்பட்டு விட்டது" அந்த மோகன் சொன்ன செய்தி ராஜாவுக்கு கவலையைக் கொடுத்தது.
*****
இன்று மாலை ராஜாவை ராயல் கலூரியில் இருந்து அழைத்து வரச் சென்ற டிரைவர் டயசுக்கு ராஜ் கல்லூரியில் இல்லாது அதிர்ச்சியை கொடுத்தது. ராஜவின் வகுப்பு ஆசிரியரிடம் விசாரித்த போது அவர் "இன்று ராஜ் தனக்கு காய்ச்சலாகவும் சோர்வவாகவும் தொண்டை வலிப்பதாகவும் இருப்பதால் தான்டாக்ஸி பிடித்து வீட்டுக்குப்போவதாகச்சொல்லி தன்னிடம் அனுமதி பெற்று மத்தியயானைமே போய் விட்டான்" என்றுசொன்னார்
அந்த செய்தியுடன்வீடு திரும்பிய டிரைவர் டயஸ் " அம்மா சின்ன ஐயா ஸ்கூலில் இருக்கவில்லை தனக்கு காய்ச்சலாக இருக்கு ,உடம்பு வலிக்குது வீட்டுக்கு போறேன் என்று சொல்லி ஆசிரியரிடம் சொல்லிப் போட்டு போய்விட்டாரம் அவர் எங்கே போனார் என்று ஆசிரியருக்குத் தெரியாதாம்" .

"அப்படியா !அவர் இங்கு வரவில்லை நேற்று முழுவதும் " தனக்கு இருமலும் உடம்பு வலிகிறது" , என்று சொன்னான் அவனுக்கு அவனின் சீன நண்பன் கோவிட் வருத்தத்தை கொடுத்து விட்டான் போல் தெரிகிறது. அது அவனுக்கு தெரிந்த படியால் எங்கள் வீட்டுக்கு வந்து அந்த வருத்தத்தை எங்களுக்கு தர என் மகன் ராஜா விரும்பவில்லைபோல இருக்கு . என்மகனுக்கு நல்ல மனசு .எண்டை அவரை அவரின் நண்பர் 'போலீஸ் இன்ஸ்பெக்டர்' சொய்சா விடம் சொல்லி ராஜாவை தேடும் படி சொல்லுறேன் அவரும் ராஜாவை கண்டுப்பிடிக்க உதவுவார் . ஒரு சமயம் ராஜாவுக்கு கோவிட் நோய் வந்திருக்கலாம் என நினைக்கிறேன் .அதனால் சிகிச்சை பெற வைத்தியமனை ஒன்றில் இருப்பான், என்று என் மனசு சொல்லுது டயஸ்"

"உண்மையாக இருக்கலாம் .அம்மா சின்ன ஐயாவின் நண்பன் ஒரு சீன பையன் . அந்த பையனின் தந்தையின் சீன உணவகம் கோவிட் காரணத்தால் மூடப்பட்டதாக நான் அறிந்தேன்" டயஸ் தான் அறிந்த செய்தியை சொன்னான் .

****

தனக்கு எற்பட்ட தேக நலக் குறைவைக் கண்ட ராஜா தனக்கு கோவிட் வியாதி வந்திருக்கலாம் என்ற சந்தேகத்தில் களுபோவில் வைத்திய சாலைக்கு சென்று தன்னைப் பரிசோதித்து தனக்கு கோவிட் வியாதி இருப்பதை உறுதிப் படுத்தினான். அந்த வருத்தத்தோடு தான் வீட்டுக்கு சென்றால் வீட்டில் உள்ள எல்லோருக்கும் கோவிட் நோயைக் கொடுத்து விடுவோம், என்ற பயம் அவனுக்கு வந்தது.

அன்று ராஜா கல்லூரின் வீடு திரும்பாதது அவனின் பெற்றோர் கவலை பட்டனர் .உறவினர் வீட்டில் தேடினார்ககள். அவன் கிடைக்கவில்லை யாழ்ப்பாணத்தில் உள்ள அவனின் பாட்டனார் வீட்டில் தேடினார்கள் அவன் அங்கும் இருக்கவில்லை . அவன் காணமல் போன காரணம் ராஜாவின் தாயுக்கு புரிந்து விட்டது .அவளுக்குத் தெரியும் தன் மகனின் நல்ல மனசு பற்றி. ராஜாவின் திடீர் பிரிவுவீட்டில் உள்ளோரை வாட்டியது . இரு நாட்களில் கையில் இருக்கும் காசு முடிந்ததும் வீடு திரும்புவான் என்று எதிர்பார்த்தும் அவன் திரும்பவில்லை. ராஜாவின் தந்தை மகனைத் தேட கொழும்பு 7 பகுதியில் உள்ள சினமன் கார்டன்ஸ் போலீஸ் நிலையத்தின் பொறுப்பு அதிகாரி தன் நண்பன் போலீஸ் இன்ஸ்பெக்டர் பெரேராவை நாடி தன்மகன் ராஜா காணாமல் போன செய்தியை முறையிட்டு கடிதம் ஒன்று எழுதிக் கொடுத்தார். இன்ஸ்பெக்டர் பெரேராவை ராஜாவை அவனின் வீட்டில் சந்தித்து இருக்கிறார். ராஜா தன்னுடன் அன்பாக பழகியது அவர் நினைவுக்கு உடனே வந்தது . உடனே ராஜாவை தேட போலீஸ் நிலையங்களுக்கு அவனின் படத்தோடு தலைமை போலீஸ் நிலையத்தின் மூலம் செய்தி அனுப்பினார் . அந்த செய்தியில் அவனுக்கு கோவிட் வியாதி இருக்கலாம் எனவும் அதனால் வைத்தியசாலைகளில் தேடும் படி குறிப்பிட்டு எழுதினார் .

போலீஸ் கொழும்பை சுற்றி உள்ள வைத்தியசாலைகளில் தேடினார்கள். சில மணி நேரத்தில் களுபோவில் ஆஸ்பத்திரில் ராஜா இருப்பதாக தகவல்போலீஸ் அறிவித்துத்து அங்கு பெரேராவும் ராஜாவின் தந்தையும் முகமூடிஅணிந்து சென்ற போது ராஜா அவசர வார்ட்டில் கோவிட் நோயினால் பாதிக்கப்பட்டவர்களுடன் இருப்பதைக் கண்டார்கள். சுவாசக் குழாய்பொருத்திய நிலையில் ராஜா இருப்பதைக் கண்டனர்.

மகனை கண்டவுடன் கண்களில் கண்ணீர் மல்க ஆறடி தூரத்தில் நின்று அவனின் தந்தை அவனிடம் கேட்டார் " என்ன ராஜா உனக்கு என்ன குறை நானும் உன் அம்மாவும் வைத்தோம். நீ எதற்காக வீட்டுக்கு சொல்லமால் ஓடிப்போனாய்?" .

"அப்பா என்னை மன்னித்து விடுங்கள் .என் வீட்டில் உங்களையும் அம்மாவையும் சேர்த்து பல பேர் வாழ்கின்றோம். எனக்கு என் நண்பன் வைசாங் மூலம் கோவிட் வந்து விட்டது, என்பதை அறிகுறிகள் மூலம் அறிந்தேன். எனக்கு என் வீட்டுக்கு போய் உங்கள் அனைவருக்கும் கோவிட் நோயை கொடுக்க என் மனம் இடம் கொடுக்கவில்லை .எனக்கு வந்த வியாதி

என்னோடு இருந்து போகட்டும் ,என்று நினைத்து வீட்டுக்கு வர வில்லை'' ராஜா தான் கல்லூரியில் இருந்து வீட்டுக்கு வராத காரணத்தை அமைதியாக சொன்னான்.

''ராஜா உனக்கு நல்ல மனசு .உன்னை மகனாக பெற நான் கொடுத்து வைத்திருக்கிறேன் .நீ வெகு விரைவில் சுகமாகி வீட்டுக்கு வா'' என்றார் ராஜவின் தந்தை .
''ராஜா உன் தந்தை பணக்காரன் . அவரால் தனி நர்ஸ் ஒருத்தியை வைத்து உன்னை கவனிக்க முடியும்'' என்றார் இன்ஸ்பெக்டர் பெரேரா .
''இல்லை அங்கிள் வீட்டில் உள்ளவர்களுக்கு இந்த நோய் வரக் கூடாது .நான் இந்த ஆஸ்பத்திரியில் இருந்து சுகமாகி பின் வீட்டுக்கு போறேன். அதுவரை அது வரை என் வீட்டில் இருந்து ஒருவரும் என்னை பார்க்க வரவேண்டாம்'' என்றான் ராஜா .
அவன் சொன்னதை கேட்டு இன்ஸ்பெக்டர் பெரேரா கண் கலங்கிப் போனார் ,ராஜாவின் நல்ல உள்ளத்தினை நினைத்து.
*****

# கதை 16 தெரு நாய்

*நான் தினமும் ஆபீசுக்குப் போவதற்கு, கொழும்பில் உள்ள வெள்ளவத்தை விவேகானந்தா வீதி வழியே, என் வீட்டில் இருந்து நடந்து சென்று, பிரதான வீதியான காலி வீதியில் உள்ள பஸ் தரிப்பில் பஸ் எடுப்பது வழக்கம். விவேகானந்தா வீதியின் இருபக்கத்திலும் விலை உயர்ந்த வீடுகள். நிட்சயமாக அதன் உரிமையாளர்கள் செல்வந்தவர்களாகவே இருக்க வேண்டும். அவ்வீடுகளில், இரு வீடுகளுக்கு செக்கியூரிட்டி கார்ட்ஸ். சில வீடுகளின் கேட்டுகளில் "நாய் ஜாக்கிரதை" என்று எழுதப்பட்டப் பலகை அலங்கரிக்கும். இக்காட்சிகளை இரசித்தபடி நடந்து போகும் எனக்கு, "சாந்தி நிலையம்" என்ற பெயர் பலகையோடு சேர்ந்து வீட்டு சொந்தக்காரர் வைத்தியத் துறையில் பெற்ற பட்டங்கள் கொண்ட பெயர் பலகையும் ஜொலித்தது. அப்பலகையின் கீழ் "நாய் ஜாக்கிரதை" என்று எழுதிய பலகையும் என் கவனத்தைக் கவர்ந்தது. பெயருக்கு ஏற்ப அமைதியான வீடாக அவ்வீடு இருக்கும், என நினைத்த எனக்கு, தினமும் அவ்வீட்டைத் தாண்டி போகும் போது கம்பீரமான ஒரு நாயின் குரல் கேட்கும். கம்பி போட்ட கேட்டுக்குப்பின்னால் இருந்தவாறே இப்படி உரத்த குரலில் குரைக்கும் நாய் , எப்போது என்மேல் பாய்ந்து, கடித்துக் குதறித் தள்ள வேண்டும் என்ற பார்வையொடு பார்க்கும். ஒரு காலத்தில் ரொடேசியா (Rhodesia)) என்ற பெயரில் இருந்த சிம்பாப்வே தேசத்தில் நான் சில ஆண்டுகள் தொலைபேசி நிறுவனம் ஒன்றில் ஆலோசகராக வேலை செய்ததால்,என்னை வேட்டையாடும் நோக்கத்தோடு குரைக்கும் கறுப்பு நிற, இரண்டரை அடி உயரமுள்ள, ஆண் வேட்டை நாய், நிட்சயமாக "ரொடேசியன் டோபர்மன் ரிட்ஜ்பாக்" (Rhodesian Dhorman Ridgeback) என்ற உயர்சாதியைச் சேர்ந்த வேட்டை நாயாகத் தான் இருக்கும் என்பது என் அனுமானம். அதை உறுதிப்படுத்துவது போல் அதன் முதுகில் பெயருக்கு ஏற்ற, இரண்டரை அங்குலத்துக்கு, நீண்ட, அகலமான, மயிர் வரம்பானது, அதற்கு பிரத்தியேக அடையாளத்தைக் கொடுத்தது. அதனாலை தானோ என்னவோ அச்சாதி நாயுக்கு அப் பெயர் வந்திருக்கலாம். அதோடு மட்டுமல்ல என்னோடு சிம்பாப்பேயில் வேலை செய்தவர்களிடம் அச்சாதி நாயைப் பற்றி விசாரித்த போது, அச் சாதி நாய் சிங்கத்தை வேட்டையாடும் போது அவ்வூர் சோனா இன குடிமக்களால் பாவிக்கப்படும் வேட்டை நாய். அதனால் சிங்க வேட்டைக்காரன் (Lion Hunter) என்ற பெயரும் உண்டு என்றார்கள். அவர்கள் சொன்ன விளக்கம் உடனே என் நினைவுக்கு வந்தது . ஒரு வேளை எனது பெயரான ராஜசிங்கத்தில், சிங்கம் கலந்திருப்பதாலோ என்னவோ, என்னை வேட்டையாட அந்த நாய் எதிர்பார்த்திருக்கலாம் என்று நினைத்தேன்.*

*என்னைக் கண்டு தொடர்ந்து நாய் குரைப்பதைக் கேட்டு அவ்வீட்டு எஜமாட்டி நாயின் குரலை விட தன் பெருத்த குரலில் " சோனா, குரைக்கிறதை நிறுத்திவிட்டு கூட்டுக்குள் போ" என்றாள் ஆங்கிலத்தில். நாயுக்கு ஆங்கிலம் மட்டுமே புரியுமோ என்னவோ. நாயின் பெயரைக்*

*கேட்டவுடன்நல்ல பொருத்தமான பெயரைத்தான் வைத்திருக்கிறார்கள், என நினைத்தேன். காரணம் சிம்பாப்வேயில் வாழும் இனங்களில் 'சோனா' என்ற பெரும்பான்மை இனமும் உண்டு. அவர்கள் பந்து மொழி பேசுபவர்கள்.*

*பிரதான காலி வீதியில் உள்ள பஸ் தரிப்பு நிலையத்துக்குப் போகும்முன் , அதற்கு அருகே உள்ள காந்தி விலாசில் காப்பி அருந்திவிட்டு, இரண்டு வடைகளை வாங்கிக் கொண்டு, வெளியே வருவேன். அப்போது தினமும் நான் சந்திப்பது கடைக்கு முன்னால், உள்ள குப்பைத் தொட்டிக்கு அருகே, சுருண்டு படுத்திருக்கும் ஒரு பெண் தெருநாய். வெள்ளையும் பிரவுனும் கலந்த நிறம். அதன் பார்வையில் ஒரு சாந்தம் தெரிந்தது. நான் சில வருடங்களுக்கு முன் 'ராணி' என்ற பெண் நாய் ஒன்றை வீட்டில் வளர்த்தேன். எனக்கும் நாயுக்கும் பொறுத்தமில்லையோ என்னவோ இரண்டு வருடத்துக்குள் காரில் அடிபட்டு அந்நாய் இறந்து விட்டது.*

*நான் விவேகானந்தா வீதியில், சாந்தி நிலையத்தில், கண்ட நாயுக்குப் பெயர் இருந்தது. கொடுத்து வைத்த நாய். பாவம் இது பெயரில்லாத, அனாதையான தெருநாய். இதன் பரம்பரை, தெருநாயைச் சேர்ந்ததாக இருக்கலாம். ஆனால் தினமும் அந்நாயை காணும் போது அது குரைக்காமல் என்னைப் பார்த்து தன் வாலை ஆட்டும். அதனால் எனக்கு அதுமேல் பிரியம் ஏற்பட்டது. குப்பைத் தொட்டியில், காந்தி விலாசில் இருந்து வந்து விழும் சாப்பாட்டுக் கழிவுகளை நம்பி உயிர் வாழும் தெருநாய் மேல் எனக்கு பரிதாபம் ஏற்பட்டது. தினமும் நான் வாங்கும் இரண்டு வடைகளை அதற்கு உண்ணக் கொடுப்பேன். இந்த தெருநாயுக்கு ஒரு பெயர் வைத்தால் என்ன? என்று யோசித்த போது நான் வளர்த்த ராணியின் பெயர் என் ஞாபகம் வந்தது. பொருத்தமான பெயர். அந்தப் பெயரை வைத்தால் என்ன?. ஒவ்வொரு தினமும் வடையை கொடுத்து " ராணி சாப்பிடு" என்பேன். காலப்போக்கில் அதற்கு நான் பெயர் சொல்லிக் கூப்பிடுவது புரியத் தொடங்கி விட்டதுக்கு அடையாளமாக வடையைக் கண்டதும் இருதடவை குரைத்து நன்றி தெரிவிக்கும்.*

*ஒரு நாள் ராணியை சாந்தி நிலையத்தின் கேட்டருகே சோனவோடு நின்றதைக் கண்டேன். ஓகோ! பெரிய வீட்டு நாய் மேல் ராணிக்கு காதலா? "ஏய் ராணி நீ இங்கை என்ன செய்கிறாய்? கனவு காணாதே. உண்டை இடத்துக்கு ஓடிப்போ" என்ற விரட்டினேன்.*

******

*மாதங்கள் உருண்டோடியது. ராணியின் வயிறு பெருக்கத் தொடங்கியதை நான் அவதானித்தேன். பாவம் ராணி ஏமாற்றப்பட்டுவிட்டளா? நான் தினமும் கொடுக்கும் வடை அவளுக்கும் அவள் வயிற்றில் வளரும் ஜீவனுக்கும் போதாமல் இருக்கலாம். காந்தி விலாஸ் முதலாளியிடம் சொன்னேன், " ஐயா உங்கள் கடையைக் காவல் காக்கும் அந்த தெருநாயுக்கு*

*தினமும் இரண்டு தோசைகள், என் கணக்கில் போடுங்கள். செலவை நான் தாரன்'' என்றேன்.*

*காந்தி விலாஸ் முதலாளிக்கு என் செயல் ஆச்சரியமாகப்பட்டது.*

*ஒரு நாள் ஆபீசுக்குப் போக பஸ்தரிக்கும் இடத்துக்குப்போன போது ராணியை ஒரு அழகான குட்டியோடு கண்டதும் எனக்கு பெரும் மகிழ்ச்சி. ராணி தன் குட்டியை நக்கியபடி பால் கொடுத்துக் கொண்டிருந்தது. கறுப்பு நிறக்குட்டியின் தோற்றத்தால் கவரப்பட்டேன். தெரு நாயுக்குப் பிறந்த குட்டியின் முதுகில் அதே மயிர் வரம்பு இருந்தது.*

*''அப்போ இக்குட்டியின் தந்தை உயர் சாதியைச் சேர்ந்த சோனாவா? மிருகங்களிடையே சாதிக்கு இடமில்லை போலும். இந்த சாதி, மதம், இனம், அதன் வேற்றுமையால்நடக்கும் கொலைகள்,எல்லாம் மனித இனத்தில் மட்டும் தானா''? என்றது என் மனம்.*

******

*@@@@@@@@@@@@@@@@@@*

## *கதை 17 எனக்கு நேரமில்லை*

*எதாவதைச் செய்யச்சொன்னால் "எனக்கு நேரமில்லை. நான் பிசியாக இருக்கிறன். நிறைய ஹோம் வேர்க் செய்ய இருக்குது. செய்து முடிக்காமல் ஸ்கூலுக்குப் போக முடியாது". இது போன்று பல காரணங்களைக் காட்டி சாக்குப் போக்கு சொல்லிக் கடத்திவிடுவாள் என் மகள் ராதா. அவளுக்கு கம்பியூட்டர் கேம்ஸ் என்றால் நல்ல விருப்பம். அதோடு மட்டுமல்ல ஆங்கில இசை கேட்பது பிடிக்கும். அடுத்தது பிடித்தமான விஷயம் சினேகிதிகளோடு டெலிபோனில் அரட்டை அடிப்பது. ஆனால் படிப்பில் மட்டும் ராதா கவனம். 12 ஆம் வகுப்பில் ராதா படித்துக்கொண்டிருந்தாள். ஒரு நாள் அவளுக்குத் தெரியாமல் ஸ்கூலில் அவள் எழுதிய சில ஆங்கிலக் கட்டுரைகளை வாசித்தேன். அவள் எழுதிய எல்லாக் கட்டுரைகளுக்கும் ஆங்கில டீச்சர் A+ போட்டிருந்தாள். அப்படி என்ன கட்டுரைகளில் இருக்கிறது, என்று இரண்டொன்றை வாசித்துப்பார்த்தேன் .என்னால் நம்பமுடியவில்லை. மிக எளிமையான முறையில், இலக்கணப் பிழைகளும், எழுத்துப் பிழைகளும் இல்லாது வாசிப்பவர்கள் தொடர்ந்து வாசிக்க வேண்டும் என்ற ஆர்வத்தைத் தூண்டக் கூடிய விதத்தில், தர்க்க ரீதியாக, கட்டுரைகள் நகைச்சுவை கலந்து இருந்தன. பெரிய ஆங்கில வார்த்தைகள் பாவிக்கப்படவில்லை. ராதாவுக்குள் புதைந்து கிடந்த எழுத்துத் திறமை என்னைப் பெருமைப்பட வைத்தது.*

*அன்று பிரபல்யமான "ரொறன்ரோ ஸ்டார்" ஆங்கிலப் பத்திரிகையில் வருடாவருடம் நடக்க விருக்கும் சிறுகதை போட்டி பற்றிய விளம்பரம் வந்திருந்தது. நல்ல சிறுகதைகளுக்கு 3 பரிசுகள். முதற்பரிசு 1000 டாலர்கள். இரண்டாம் பரிசு 500 டாலர்கள். மூன்றாம் பரிசு 200 டாலர்கள். உடனே ராதாவின் ஆங்கில எழுத்துத் திறமை என் சிந்னைக்கு வந்தது. இப்போட்டியில் ராதா கலந்து கொண்டால் என்ன? அவளைக் கேட்டுப்பார்ப்போமே. கதையை இரண்டு கிழமைக்குள் அனுப்ப வேண்டும். " ராதா இன்றைய ரொறன்றோ ஸ்டார் பேப்பரிலை சிறுகதை போட்டி பற்றிய விளம்பரம் வந்திருக்கிறது. வாசித்தாயா? நான் அவளைக் கேட்டேன். வழமை போல் அவள் " அப்பா நான் சரியான பிசியாக இருக்கிறேன். ஹோம் வொர்க்நிறைய செய்ய இருக்குது" என்று அவளிடமிருந்து பதில் வந்தது. " நல்லகதைகளுக்கு மூன்று பரிசுகள் உண்டு. முதல் பரிசு 1000 டாலர்கள்" என்று அவள் ஆசையைத் தூண்டினேன். அவள் மசியவில்லை.*

*சில மணி நேரங்களில் என் மனைவியின் மூத்த சகோதரன் சண்முகம் வந்தார். அவருக்குப் பெண்குழந்தைகள் இல்லை. இரு ஆண் பிள்ளைகள் மட்டுமே. அதனால் ராதா மேல் அளவற்ற*

*பற்று வைத்திருந்தார். ராதாவுக்கும் சண்முகம் மாமா தான் உலகம். அவர் எதைக் கேட்டாலும் மறுக்காமல் செய்வாள். அவரும் அவள் எதைக்கேட்டாலும் வாங்கிக் கொடுப்பார். அவள் அவருடைய செல்லப் பிள்ளை. இது எனக்குத் தெரியும்.*

*என் மைத்துனர் சண்முகம் வாசிக்காத புத்தகங்களும் பத்திரிகைகளும் கிடையாது. இலக்கியத்துறையில் அவருக்கு ஆர்வம் அதிகம். அவரும்பத்திரிகையில் வந்திருந்த விளம்பரத்தை வாசித்திருந்தார் .அவர் ராதாவுக்கு அதைப்பற்றி குறிப்பிட்டதிலிருந்து எனக்குத் தெரியவந்தது. ''ராதா குட்டி, ரொறன்ரோ ஸ்டார்பேப்பரில் வந்திருக்கும் விளம்பரத்தைப் பார்த்தாயா'' சண்முகம் மருமகளைக் கேட்டார். '' இல்லை மாமா. எதைப்பற்றிய விளம்பரம்? ''சிறுகதை போட்டி பற்றியது. நீ தான் திறமையான ஆங்கிலக் கட்டுரைகள் எழுதி A+ வாங்கியிருக்கிறாயே. இந்தச் சிறுகதைப் போட்டியில் பங்கு கொள்ளலாமே. முதல் பரிசு 1000 டாலர்கள். மூன்று பரிசுகள் உண்டு''. ''எனக்குச் சிறுகதை எழுதி அனுபவம் இல்லை மாமா'' ராதாவிடமிருந்து பதில் வந்தது. ''சிறுகதை எழுதுவது சுலபம். தினமும் நடக்கும் சம்பவங்களை அவதானித்தால் அதில் பல கதைகள் அடங்கும். அந்த சம்பவங்களில் ஒன்றை கருவாக வைத்து கற்பனையும் கலந்து எழுது. நல்ல கவர்ச்சிகரமான தலையங்கம் கொடு. தேவையென்றால் நான் உதவி செய்கிறேன்'' சண்முகம் அவளை விடவில்லை. என்னால் கொடுக்க முடியாது என்ற பதிலை ராதாவால் மாமானுக்குச் சொல்ல முடியவில்லை. ''நான் யோசிக்கிறன் மாமா'' . ''நீ கதை எழுதினால் நீ விரும்பிய படத்துக்குப் போவதற்கு டிக்கட் வாங்கித்தருவேன்'' இறால் போட்டு சுறா பிடிக்கிறது மாதிரி சண்முகம் தனது சாணக்கியத்தைப் பிரயோகித்தார். ''எவ்வளவு காலம் டைமிருக்கிறது மாமா?'' ''இன்னும் இரண்டு கிழமைகளில் போட்டிமுடிவடைகிறது. நீ மனம் வைத்தால சில நாட்களில் எழுதி விடுவாய்'' ''நான் முயற்சிக்கிறன். பரிசுக்காக நான் எழுதவில்லை. நீங்கள் கேட்டதுக்காக எழுதுகிறன்'' என்று சிறுகதைப் போட்டியில் பங்கு கொள்ள மாமனுக்கு ஒப்புதல் கொடுத்தாள் ராதா.*

*****

*அடுத்த நாள் பாரம் நிறைந்த பாக்குடன் ஸ்கூலுக்கு புறப்பட்டாள் ராதா. அன்று என்றும் இல்லாதவாறு ஸ்னோ கொட்டிகொண்டிருந்தது. ''ராதா கவனமாய் ரோட்டில் நட . சருக்கப் பார்க்கும்'' என்று என் மனைவி மகளை எச்சரித்தாள். பஸ் ஸ்டாண்டுக்குப் போகும் வழியில் காலையில் அவசரமாக வேலைக்கு போவோர் விழுந்தடித்துக் கொண்டு பஸ்சைப் பிடிக்கப் போவதைக்கண்டாள். அப்போது வெள்ளை இன மூதாட்டி ஒருத்தி அவள் முன்னே சற்று தூரத்தில் நடந்து போய் கொண்டிருந்தாள். அம்மூதாட்டி எதிர்பாராதவாறு திடீரென ஸ்னோவில் சறுக்கி கீழே விழுந்தாள். மூதாட்டியின் ஹாண்ட் பாக் வீசப்பட்டு ஸ்னோவில் ஓரத்தில் கிடந்தது. வழிப்போக்கர்கள் அப் பெண் கீழே விழுந்து கிடந்ததை அவதானியாது பஸ்சை பிடிக்க அவசரம் அவசரமாக ஓடினார்கள். அவர்களுக்கு தங்கள் வேலை முக்கியம். ராதாவுக்கு ஸ்னோவில் முணங்கி கொண்டுகிடந்த அந்த மூதாட்டியைப் பார்க்க உதவ வேண்டும்*

போலிருந்தது. அதே நேரம் அவள் போக இருந்த பஸ்சும் வந்தது. ராதா பிறருக்கு உதவி செய்வதில் முன் நிற்பாள். இளகிய மனசு. தயங்காது கீழே விழுந்து கிடந்த மூதாட்டிக்கு கைகொடுத்து தூக்கி விட்டாள். "தாங்கியூ குழந்தை. எனக்கு உதவிசெய்வதால் பஸ்சை தவறவிட்டு விட்டு விட்டீர். ஸ்கூலுக்கு லேட்டாக போகப்போறீர்" மூதாட்டி கவலைப்பட்டாள்" பரவாயில்லை மேடம். ஸ்கூலுக்கு லேட்டாகப்போனால், நடந்ததை சொன்னால் ஏற்றுக்கொள்வார்கள். உங்களை இந்த நிலையில் கைவிட்டுவிட்டு எனக்குப் போக மனம்வரவில்லை." ராதா மூதாட்டியின் கையைபிடித்து பக்கத்தில் இருந்த வாங்கொன்றில் அமரச்செய்தாள். "நல்லகாலம்; கால் ஒன்றும்முறியவில்லையா? நடக்கக் கூடியதாக இருக்கிறதா?" ராதா கேட்டாள். "நல்லகாலம் அப்படி ஒன்றும் நடக்கவில்லை போலத் தெரியுது" மூதாட்டி சொன்னாள். "மேடம் ஆம்பியூலன்சைக் கூப்பிடவா? ராதா கேட்டாள். "தேவையில்லை. நான் டாக்சியிலை வீட்டை போறன்." ராதா தன் செல் போனில் டாக்சியை அழைத்து மூதாட்டியை கைகொடுத்து ஏற்றி, போகும் இடத்தைச் சொல்லி பத்திரமாக கூட்டிப்போகும்படி டாக்சி டிரைவருக்குச் சொன்னாள். ராதாவுக்கு ஒரு வயதுவந்த பெண்ணுக்கு உதவி செய்ததில் மன திருப்தி. அடுத்த பஸ் வரும் வரை பஸ்டாண்டில் காத்திருந்தாள். அந்த நேரம்ஆம்பியூலன்சினதும், போலீசினதும் வாகனங்களின் சைரன் சத்தம் கேட்டது. ராதாவுக்கு காரணம் தெரியவில்லை. பக்கத்தில் நின்றவரைப் பார்த்து கேட்டாள். "ஏன் இந்த சைரன்? ஏதாவது பிரச்சனையா? "சற்று முன்பு சென்ற பஸ். இன்னோரு வாகனத்தோடு மோதி பெரிய ஆக்சிடென்ட் நடந்திருக்குது. பஸ்சில் பயணம் செய்த பலருக்கு காயம். அது தான் போலீசும் ஆம்பியூலன்சும் போகுது" என்றார். தான் மூதாட்டிக்கு செய்த உதவிதான் கடவுள் தன்னை அந்த விபத்தில் இருந்து காப்பாற்றிவிட்டது ,என மனதுக்குள் ராதா நினைத்துக் கொண்டாள். ஸ்கூலுக்குப் போனதும் நடந்த முழு சம்பவத்தையும் விபரமாய் பிரின்சிபலுக்கு சொன்னாள். அவரும் ராதாவின் சேவையைப் பாராட்டினார்.

ஓஓஓஓஓ

அன்று மாலை வீடு திரும்பிய ராதாவுக்கு காலையில் நடந்த சம்பவம் நினைவை விட்டு அகலவில்லை. பெற்றோருக்கும் மாமனுக்கும் நடந்த சம்பவத்தை விபரமாகச் சொன்னாள். " ராதா உனக்கு சிறு கதைக்கு கரு கிடைத்துவிட்டது. இந்தச் சம்பவத்தை கருவாக வைத்து கதை ஒன்று எழுது." என்றார் சண்முகம்.

"மாமா, அந்த மூதாட்டியின் பெயரைக் கேட்க மறந்துவிட்டேனே!". "அதுக்கென்ன இப்ப. அந்த மூதாட்டியின் தோற்றத்தை நீ விபரிக்கும் போது ரோட் அக்சிடென்டில ஒரு வருடத்துக்கு முன்னர் இறந்த உன் பாட்டி இராசம்மாவைப் போல இருந்ததாக சொன்னாயே. அவருடைய பெயரை அம்மூதாட்டிக்கு வைத்து கதையை எழுது. இராசம்மா பாட்டியின் ஆசீர்வாதமும் உனக்கு நிட்சயம் கிட்டும்" என்றேன் நான். ராதாவும் அப்பெயரை வைக்க ஒப்புக்கொண்டாள். ஐந்து நாட்களுக்குள் கதையை ராதா எழுதி முடித்துவிட்டு மாமனாருக்கு காட்டினாள். அவரும்

அதை வாசித்துவிட்டு பிரமாதம் என்றார். குறிப்பிட்ட போட்டி முடிவு தினத்துக்கு ஒரு கிழமைக்கு முன்னரே கதையை ரொன்றோ ஸ்டார் பத்திரிகைக்கு அனுப்பி வைத்தேன்.
****

இரு மாதங்கள் உருண்டோடின. ஒரு நாள் ரொன்ரோ ஸ்டார் பத்திரிகை எடிட்டரின் ஆபிசில் இருந்து ஒரு தொலை பேசி அழைப்பு வந்தது ராதாவின் கதைக்கு முதல் பரிசு 1000 டாலர்கள் கிடைத்துள்ளதாக எடிட்டர் அறிவித்தார். என்னால் அதை நம்ப முடியவில்லை .ராதாவின் சாதனையை நினைத்து பெருமைப்பட்டேன். சண்முகத்துக்கு தன் மருமகளைப் பற்றி பூரிப்பு.

கதை மூன்று நாட்களில் பேப்பரில் பிரசுரமாகியிருந்தது. கதை வெளிவந்த சில நாட்களுக்குப் பின்னர் திரும்பவும் எடிட்டரிடம் இருந்து டெலிபோன் கால் ஒன்று வந்தது. அவர் சொன்னதை என்னால் நம்ப முடியவில்லை. ராதாவுக்கு இன்னொரு பரிசும் கிடைத்திருக்கிறது என்றார் எடிட்டர். விளக்கம் கேட்ட போது, கதையை வாசித்த ஜெனிபர் என்ற பெண் ஒருத்தி கதை தத்ரூபமாய் இருந்தது என்றும் ,தனக்கும் கதையில் சொன்னது போல் ஒரு சம்பவம் நடந்தது என்றும், கதையை எழுதியவருக்குப் பாராட்டி தன் அன்பளிப்பாக நூறு டாலர்கள் இணைத்துள்ளதாகவும் கடிதத்தில் கதையை வாசித்த ரசிகை ஜெனிபர் என்பவள் எழுதியிருந்தாள் என்றார் எடிட்டர். என்னால் அவர் சொன்னதை நம்பமுடியவில்லை. அது நடந்து சில நாட்களுக்குள் சிறுகதைகள் எழுதுவதில் பிசியாக இருந்தாள் ராதா.

## *கதை 18 குக்கூ கடிகாரம்*

*மஞ்சுவின் மாமா ஸ்ரீதர் சுவிட்சர்லாந்தில் ஜெனீவாவில் ஐ.நா. நிறுவனம் ஒன்றில் பணிபுரிபவர். விடுமுறைக்காக அவர் வீட்டிற்கு வந்தபோது மஞ்சுவுக்கு ஒரு பரிசைக் கொண்டு வந்தார். அவள் பெட்டியைத் திறந்தபோது குக்கூ கடிகாரத்தைக் கண்டாள். அது எவ்வாறு இயங்குகிறது ? என்பது அவளுக்குத் தெரியாது.அதுவே அவள் முதல் தடவை அப்படி ஒரு கடிகாரத்தை கண்டாள்.*

*"மாமா தயவுசெய்து இது எவ்வாறு இயங்குகிறது? என்பதை எனக்கு காட்டுங்கள்"*

*“நிச்சயம் எப்படி இது வேலை செய்கிறது என்று உனக்கு காட்டுகிறேன்.” மாமா சொன்னார். அவர் மஞ்சுவின் படுக்கையறை சுவரில் குக்கூ கடிகாரத்தை பொருத்தினார்.*

*“மஞ்சு இப்போ பகல் 11:58 . இன்னும் இரண்டு நிமிடத்தில் குக்கூ பறவை என்ன செய்கிறது ! என்று பார்.*

*இரண்டு நிமிடத்தில் கூட்டின் கதவு திறந்து ஒரு குக்கூ வெளியே வந்து பன்னிரண்டு முறை குக்கூ குக்கூ .. என்று சத்தம் போட்டு கூட்டுக்குள் சென்றது.*

*“மாமா, பன்னிரண்டு மணி என்று குக்கூ பறவைக்கு எப்படித் தெரியும்” ?*

*"கடிகாரத்தை உருவாக்கிய கடிகாரத் தயாரிப்பாளர் பறவைக்கு நேரத்தை எப்படி வைத்திருக்க வேண்டும் என்று கற்றுக் கொடுத்தார்" என்று மாமா பதிலளித்தார்*

*“இது ஒவ்வொரு மணி நேரமும் கொக்கு ஒலிக்குமா?*

*" ஏன்இல்லை . ஒவ்வொரு மணிக்கும் .. பறவை வெளியே வந்து ஒரே ஒரு தடவை குக்கூ ஒலியை உருவாக்கும் .”*

*குக்கூ பறவையின் செயலில் மஞ்சு மகிழ்ச்சியடைந்தார்.*

*“மாமா எனக்கு ஒரு யோசனை இருக்கிறது.”*

*“மஞ்சு என்ன என்று சொல்” .*

*"கொக்கு பறவைக்கு பதிலாக ஒரு சிறிய கோமாளி பையன் வெளியே வந்து ஒரு மணி நேரத்தின் ஒவ்வொரு கால் மணி நேரத்தை அறிவிக்க வேண்டும்" . இது காலை ஆறு-பதினைந்து, இது காலை பத்து-முப்பது, மாலை நான்கு-முப்பது, இது இரவு பதினொன்று போன்றவை ."*

''அது ஒரு சிறந்த யோசனை மஞ்சு. நான் மீண்டும் சுவிட்சர்லாந்திற்குச் செல்லும்போது, அந்த அம்சத்துடன் ஒன்றை உருவாக்க கடிகாரத் தயாரிப்பாளரைக் கேட்பேன்.இது நல்ல சந்தையைக் கொண்டிருக்கும். "பேசும் கடிகாரம்" என்று பெயரிடுமாறு அவரிடம் கேட்பேன்.

அவள் மாமாவிடம் கேட்டாள் ''மாமா நான் விதைகளை பறவைக்கு உணவளிக்க முடியுமா?

''மஞ்சு , இது ஒரு நிஜ பறவை அல்ல. தயவுசெய்து அதை ஒன்றும் செய்ய வேண்டாம்.'' மாமா கூறினார்.

ஒவ்வொரு நாளும் குக்கூ பறவை கூட்டுக்கு வெளியே வந்து சரியான நேரத்தில் தனது கடமையைச் செய்தது. மஞ்சுவின் பூனை டோமி, பறவையைப் பார்த்துக் கொண்டிருந்தது . மஞ்சுவின் பாசம் தன் மீது இல்லமல் குக்கூ பறவை மீது இருந்ததால் டோமி பொறாமைப்பட்டான். வீட்டில் எல்லோரும் குக்கூ பறவையை பற்றியே பேசினர்.

****

ஒரு நாள் மஞ்சு மாலை நான்கு மணிக்கு பள்ளியிலிருந்து திரும்பினாள். குக்கூ பறவை நான்கு முறை ஒலிக்கவில்லை. கடிகாரம் தரையில் இருந்தது. யாரோ குக்கூ பறவையை கூண்டிலிருந்து வெளியே எடுத்து துண்டுகளாக உடைத்திருந்தார்கள் .

டோமியின் கள்ளப் பார்வையில் இருந்து , மஞ்சுக்கு அது தனது பூனையின் வேலை என்பதை உணர்ந்தாள் . அது உண்மையான பறவை என்று டோமி நினைத்தது.

****

# *கதை 19  அப்பாவின் பரிசோதனை*

*அன்று ஞாயிற்றுக் கிழமை. தன் வீட்டுத் தோட்டத்தில் கதிரையில் அமர்ந்த எழுபது வயதான சுந்தரம் இயற்கையை இரசித்தபடி இருந்தார். அவருடைய பட்டதாரி மகள் மேகலா, அவர் கூடவே இருந்தாள்.*
*காகம் ஒன்று பறந்து வந்து தோட்டத்தில் துணிகள் உலரப்போடும் கயிற்றில் அமர்ந்தது. கா... கா... என்று கரைந்தவாரே உலரப்போட்ட துணிமேல் எச்சம் போட்டது. அதை பார்த்த சுந்தரம், "மேகலா இதென்ன"?.*
*"காகம் அப்பா." .*
*திரும்பவும் சுந்தரம் அதே கேள்வியைக் கேட்டார்.*
*"இப்பத்தானே அப்பா சொன்னேன் காகம் என்று"*
*" மறுபடியும் அதே கேள்வியை பல தடவை சுந்தரம் கேட்டார்.*
*மேகலா பொறுமையை இழந்தாள்.*
*"ஒரே கேள்வியை பல தடவை கேட்டியள். இப்போது திரும்பவும் சொல்லுகிறேன் காகம் என்று" உரக்கச் சொன்னாள் மேகலா. அவளின் பொறுமை எல்லையைத் தாண்டிவிட்டது.*
*"நான் அது காகம் என்று பல முறை சொன்னது விளங்கவில்லையா"?,கோபத்தோடு உரத்து சொன்னாள்.*
*மேகலாவை பார்த்து புன்னகையித்து, எழும்பி வீட்டுக்குள் போனார் சுந்தரம்.*
*சில நிமிடங்களுக்கு பின்கையில் ஒரு பழைய டையரியோடு திரும்பவும் தோட்டத்துக்கு வந்தார் .*
*"என்னப்பா கையில்"?.*
*"நீ மூன்று வயதாக இருந்த போது நான் எழுதிய டயரி"*
*"அது இப்ப எதற்கு".*
*"அவர் டயரியின் ஒரு தினப் பக்கத்தைக் கண்டு பிடித்து தான் எழுதிய குறிப்பை வாசித்துவிட்டு மேகலாவிடம் கொடுத்தார் சுந்தரம் ..*
*" மேகலா இதை உரக்க வாசி".*
*மேகலா அதில் எழுதியிருந்ததை வாசித்தாள்.*
*"இன்றைய தினம் மேகலாவக்கு மூன்று வயது. ஒரு காகத்தை தோட்டத்தில் கண்ட அவள் என்னைப் பார்த்து அதென்னப்பா? என்று கேட்டாள். நான் காகம் என்றேன். அதே கேள்வியைக் குறைந்தது இருபது தடவைகள் அவள் கேட்டாள். நானும் அவளின் கேள்விகளுக்கு பொறுமையாக பதில் சொன்னேன் .ஒவ்வொரு தடவையும் அவளை அணைத்து முத்தம் கொடுத்து பதில் சொன்னேன்."*

*வாசித்து முடித்தவுடன் தகப்பனைப் பார்த்து "அப்பா அந்த சம்பவம் நடந்தது எனக்கு நினைவில்லை."*

*"நான் உண்மையைத் தான் எழுதியிருக்கிறன். நான் நான்கு தடவை அதே கேள்வியைக் கேட்டதுக்கு நீ பொறுமையை இழந்து கோபத்தோடு பதில் அளித்தாய். உன் பொறுமையை பரிசோதிக்கவே அதே கேள்வியைக் திருப்பித் திருப்பிக் கேட்டேன்".*

*மேகலா கண்ணீரோடு, "அப்பா என்னை மன்னித்துவிடுங்கள். இனி நான் பொறுமையைக் கடைப்பிடிக்கிறேன்" என்றாள்.*

# *கதை20 பொம்மை*

*என் பேத்தி மைத்திரேயியின் இவ்வுலக வருகையை வரவேற்கத்தானோ என்னவோ இயற்கை ஸ்னோவைப் பொழிந்துதனது கைவரிசையைக் காட்டிக் கொண்டிருந்தது. இந்த முறை 'வெள்ளைக் கிறிஸ்த்துமஸ்' என்று பலர் சொன்னது உண்மையாகுமோ...! என நான் நினைத்தேன். கிறிஸ்த்துமஸ்சுக்கு இன்னும் மூன்று தினங்களே இருந்தன. ஸ்னோ தொடர்ந்து கொட்டோ கொட்டென்று கொட்டிக் கொண்டிருந்தது. முதல் தடவையாக நான் என் பேத்தியைப் பார்த்தபோது அவள் அமைதியாக தொட்டிலில் விரல் சூப்பியபடி தூங்கிக் கொண்டிருந்தாள். மைத்திரேயியுக்கு பிறக்கும் போது தலை நிரம்ப கறுத்த தலை முடி . கொழு கொழு' வென்ற சிவந்த கன்னங்கள். உருண்ட கண்கள். சிறிய வாய். அவள் ஒன்பது இறாத்தல் குழந்தை. அவள் பிறந்து ஒரு தினம் கூட ஆகவில்லை. கண்களைத் திறந்து உலகைப் பார்க்க அவள் விருப்பப் படவில்லை. பெண் பிறந்தால்என் மகள் என் பேத்திக்கு "மைத்திரேயி என்ற பெயர் வைக்க ஏற்கனவே தீர்மானித்துவிட்டாள். எனக்கும் என்மனைவிக்கும் அப்பெயர் பிடித்துக்கொண்டது.*

*" என்னப்பா யோசிக்கிறியள்? உங்களுடைய பேத்தியின் பெயரைப்பற்றித் தானே?. மைத்திரேயி என்ற பெயரை வைக்க தீர்மானித்திருக்கிறேன். மைத்திரேயி கி.மு700 ஆம் நாற்றாண்டில் வாழ்ந்த ஒரு பெண் தத்துவ ஞானி. அவளைப் பற்றி ரிக் வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. யுக்னஞவல்கிய மஹாரிஷி என்பவரிடம் இருந்து அறிவைப் பெறவே மைத்திரேயி அவரது இரண்டாவது மனைவியானாள். ஆனால் தாம்பத்திய வாழ்க்கை நடத்தவில்லை. நான்கு வேதங்களை நன்கு தெரிந்தவள் .மைத்திரேயி" என்று எனக்கு விளக்கம் கொடுத்தாள் என் மகள்.*

*"நல்ல ஆழமான கருத்துள்ள பெயர்தான் வைத்திருக்கிறாய். உன் மகளும் வருங்காலத்தில் ஒரு தத்துவஞானியாக வருவாள் ,என்று எதிர்பார்க்கிறேன். வீட்டிலை இவளை "மைத்தி" என்று செல்லமாகக் கூப்பிடலாம்" என்றேன்.*

*தொட்டிலில் மைத்திக்குப் பக்கத்தில் துணையாக ஒரு அழகிய பொம்மையிருந்தது.*

*"யார்இந்த அழகான பொம்மையைக் பரிசாகக் கொடுத்தது?விலை உயர்ந்த பொம்மை போல் இருக்கிறதே!" நான் என் மகளிடம் கேட்டேன்.*

*" வேறு யார்? என் சினேகிதிசுசிலா தான். மைத்திரேயி பிறந்த நாளன்றே குழந்தையை பார்க்க வரும் போது கொண்டு வந்து கொடுத்த பரிசு."*

*"இது ஒரு விலை உயர்ந்த பார்பி ( Barbie) பொம்மை. இதை 1959 ஆம் ஆண்டு 'ரூத்' என்பவர் தன் மகள் பாபரா (டீயசடிசய) ஞாபகமாக உருவாக்கினார். அது தெரியுமா உனக்கு? நான் மகளைக் கேட்டேன்.*

*“தெரியும் அப்பா .எனக்குப் பிறக்கப் போகும் குழந்தைக்கு என்ன பரிசு கொடுக்கலாம்? என்று கிச்சினரில் உள்ள மாலில் கடைகளைத் தேடியபோது ஒரு கடையில் தனித்து இருந்த ஒரே ஒரு பார்பி பொம்மையைத் தான் கண்டதாகவும்பார்க்க அழகாக இருந்தபடியால் உடனே கடைக்காரன் சொன்ன விலைக்குத் தான் வாங்கிவிட்டதாக சுசிலா சொன்னாள்” என்றாள் என் மகள்.*

*“ பொம்மைக்கு என்ன பெயர் வைக்க யோசித்திருக்கிறாய்?” நான் கேட்டேன்.*

*“ பார்பி என்ற பெயர் அழகான,சுருக்கமான,பொருத்தமான பெயர்”என்றாள் என் மகள்.*

*“ நல்ல பெயர் தான்” என்றேன்.*

*என் பேத்தி பிறக்கும் முன்பே தாயின் கருவில் இருக்கும் போது துடியாட்டம் உள்ளவளாக இருந்தாள். அவளுடைய அசைவுகளை அல்டிராசவுன்டில் (Ultra Sound) பார்க்கக் கூடியதாக இருந்தது. பிறந்தவுடன்நர்ஸ் பரிசோதனைக்கு காலில் இரத்தம் எடுக்க முயன்ற போது காலால் அவளை உதைத்து தன் எதிர்ப்பைக் காட்டினாள் மைத்திரேயி.*

*பிறந்து சில நாட்களுக்குள் தனக்கு பக்கத்தில் இருந்த பார்பியை முறைத்துப் பார்க்க தொடங்கினாள் மைத்திரேயி. “ நீ யார் என்னோடு படுக்கையைப் பங்கு கொள்வதற்கு”? என்பது போல இருந்தது அவளது பார்வை.*

*மைத்திக்கு தன்னுடைய படுக்கையை பங்கு கொள்ளும் பொம்மையின் பெயர் தெரியாத வயது. சுசிலா மைத்திரேயியைப் பார்த்து “இது உனது சினேகிதி பார்பி. இனி இவளோடு நீ விளையாடலாம். பார்பி பேசாவிட்டாலும் நீ அவளோடு பேசலாம்.” என்று பார்பியை மைத்திக்கு அறிமுகப்படுத்தி வைத்தாள். பார்பியின் சிமிட்டாத பெரிய கண்களும்,போட்டிருந்த புள்ளிகள் போட்ட சட்டையும் மைத்தியை வெகுவாகக் கவர்ந்து விட்டது.*

*ஒருமாதத்துக்குள் மைத்திரேயி பார்பியோடு தன் பாஷையில் ஆ .. ஊ என்று பேசத் தொடங்கிளாள். “எனக்கு என் அம்மா அடிக்கடி உடுப்பை மாற்றுவாள்,ஆனால் பார்பிக்கு உடுப்பு மாற்ற ஒருவருமே இல்லை. பார்பி தன்*

*உடுப்பையும்,நிக்கரையும்மாற்றுவதில்லை;குளிப்பதுமில்லை என்று மைத்திரேயி கவலைப்பட்டுதன் கவலையை தன் செயல் மூலம் காட்ட முயற்சித்தாள். பார்பியின் வருகையால் மைத்தியிடம் ஒரு மாற்றம் தெரிந்தது. மைத்தி தன் பெரு விரல் சூப்பும் பழக்கத்தை நிறுத்திவிட்டாள். பார்பியை இறுக்க அணைத்தபடி கொஞ்சுவாள். மைத்திரேயி நித்திரை செய்யும் போது எப்போதும் பார்பி அவள் அருகே இருந்தாக வேண்டும்.*

******

*ஒரு நாள்பார்பி பேசுவதைக்கண்டு மைத்திரேயி ஆச்சரியப்பட்டாள்.*

*“ஹலோ மைத்தி எப்படியிருக்கிறாய்?” கீச்சிட்ட குரல் கேட்டது.*

*மைத்திரேயி பார்பி பேசுவதைக் கேட்டு ஆச்சரியத்துடன் பார்த்து சிரித்தாள்.*

*“ மைத்தி உனக்கு ஒரு முத்தம் தர எனக்கு உன் கன்னத்தைத் தா ”பார்பி மைத்தியை நோக்கி அசைந்து முத்தம் கேட்டது. மைத்தி தன் ஒரு கன்னத்தை பார்பிக்கு அருகே அசைந்து கொடுத்தாள்.*

*பார்பி மைத்திக்கு கன்னத்தில் ஒரு முத்தம் கொடுத்தது.*

*“ பார்பி உம்மா..” என்று அவளும் பதிலுக்கு பார்பிக்கு முத்தம் கொடுத்தாள். தொடர்ந்து பார்பி மைத்தியோடு கதைத்தது. தனது தாத்தா தான் பார்பி கதைப்பது போலத் தன் குரலை குழந்தையின் குரல் போல் மாற்றி பொம்மையை அசைத்து பேசுவது போல் செய்கிறார் என்பது அவளுக்குத் தெரியவில்லை. எனக்கு குரலைமாற்றி வென்டிரிலோக்கிஸ்ட் (Ventriloquist) போல செயலாற்றும் கலைத் திறன் இருக்கிறது ,என்பதைக் குழந்தை மைத்திரேயி அறிவாளா என்ன? பார்பி தன்னோடு பேசுவதாக நினைத்து மைத்தி கைதட்டி சிரித்து மகிழ்ந்தாள். இந்த சம்பவம் நடக்கும் போது மைத்திரேயி ஒன்பது மாதக் குழந்தை. திரும்பத் திருப்ப மைத்திரேயி பார்பிக்கு முத்தம் கொடுத்தாள். அவள் செயல் பார்பிமேல் மைத்திரேயி எவ்வளவுக்கு அன்பு வைத்திருக்கிறாள் ,என்பதைக் காட்டியது. தாயோடு மைத்தி வெளியேசெல்லும் நேரமெல்லாம் பார்பியையும் தன் கூடவே அழைத்துச் செல்வாள். அன்று மழை பெய்து கொண்டிருந்தது. வெளியே மைத்தி தாயோடு சென்ற போது கைதவறி பார்பியை கீழே போட்டுவிட்டாள். மழை நீரில் பார்பி நனைந்துவிட்டது. பார்பியைக் தன் பிஞ்சுக் விரல்களால் காட்டி பார்பி, பார்பி என்று மைத்தி அழத்தொடங்கினாள். அவள் அழுகையை நிறுத்தமுடியாத என் மனைவி பார்பியை எடுத்து ஹேர் டிராயரில் காயவத்து கொடுத்த பின்னரே மைத்தி அழுகையை நிறுத்தினாள். பார்பி திரும்பவும் கையில் கிடைத்தவுடன் மைத்தியின் முகத்தில் ஒரு சிரிப்பு. அவளது ஆனந்தக் கண்ணீர் துளிகள் பார்பிமேல் விழுந்தன. பார்பிக்கு முத்தங்கள் பொழிந்தாள். அக்காட்சி என் மனதைத் தொட்டுவிட்டது.*

*ஒரு வயதானதும் மைத்தி பார்பியை பெயர் சொல்லி அழைக்கத் தொடங்கினாள். ஒரு நாள் என் மகள்,மனைவியோடு நான் மாலுக்கு போகும் போது தன் சினேகிதி பார்பியையும் மைத்தி எடுத்துவந்தாள். வீடு திரும்பிய போது மைத்திக்கு பாட்டிலில் பால் குடிக்க கொடுக்கும் முன்புமைத்தியின் கையில் பார்பி இருக்காததை என் மனைவி கண்டு விட்டாள். பார்பியில்லாவிட்டால் பால் குடிக்க முடியாது, என்று அடம் பிடித்து மைத்தி அழத் தொடங்கினாள். வீட்டில் எல்லோரும் பார்பியைக் காணாமல் பீதியடைந்தனர். வீடு அல்லோகல்லோலப் படுமென எல்லோருக்கும் தெரியும். பார்பியை உடனே எல்லோரும் தேடத் தொடங்கினோம். என் மனைவி தன்னிடம் இருந்த பார்பி போன்ற தோற்றமுள்ள வேறு பொம்மையை மைத்தியிடம் கொடுத்து அவளை சமாதானப்படுத்த முயற்சித்தாள். அது முடியவில்லை. இது பார்பியில்லை என்று என் மனைவி கொடுத்த பொம்மையை வாங்க மறுத்தாள் மைத்தி. சிலசமயம் மாலுக்குப் போன இடத்தில் மைத்தி பார்பியை தொலைத்து இருப்பாளோ !என நினைத்து என் மனைவியும் மகளும் மைத்தியும் பார்பியைத் தேடி மாலுக்குப் போனார்கள். நானும் அவர்களோடு பார்பியைத் தேடப் போனேன். கடைகள் மூடுவதற்கு ஒரு மணித்தியாலமே இருந்தது . அவர்கள் போயிருந்த எல்லாக் கடைகளிலும் சல்லடை போட்டுத் தேடினோம். பார்பி கிடைக்கவில்லை. என் மகள் தன் சினேகிதி*

*சுசிலாவோடு தொடர்பு கொண்டு பார்பி வாங்கிய கடைக்காரனிடம் இன்னொரு பார்பி பொம்மை ஒன்றை வாங்க முடியமா? என்று முயற்சிப்பதாகச் சொன்னாள்.*
*பார்பியை தேடி அலுத்துப்போய் நாங்கள் கார் பாக்கிற்கு போகும் போது, மைத்தி எங்களுக்கு முன்னால் நடந்து போய்க்கொண்டிருந்த கனேடியப் பெண் ஒருத்தியைச் சுட்டிக்காட்டி ஆங்கிலத்தில் “ மை பார்பி. மை பார்பி” என்று குளரிஅழத் தொடங்கினாள். என் மனைவி அப்பெண்ணியின் கையில் பார்பி இருப்பதைக் கண்டுவிட்டாள்.*
*ஆங்கிலத்தில் “மன்னிக்கவும் மேடம். எனக்கு என் பேத்தியால் ஒரு பிரச்சனை. வெகுநேரமாக அழுதுகொண்டே இருகிறாள்” என்றாள் என் மனைவி.*
*“ ஏன் பசியால் அழுகிறாளா? அல்லது குழந்தைக்கு ஏதும்சுகமில்லையா”? அப்பெண்மணி கேட்டாள்.*
*“ அப்படி ஒன்றுமில்லை மேடம். அவள் தன் சினேகிதி பார்பியைத் தேடி அழுகிறாள். ஒரு மணித்தியாலத்துக்கு முன் அவள் சினேகிதி காணாமல் போய்விட்டாள்” என்றேன் நான்.*
*“ அப்படியா?. போலீசிலை போய் உடனே முறையிட வேண்டியதுதானே” என்றாள் அப்பெண்மணி.*
*“ மன்னிக்கவும். போலீஸ் உதவ முடியாது” என்றேன் நான்.*
*“ ஏன் அப்படி?”அப் பெண்மணி கேட்டாள்.*
*“ எனது பேத்தியின் சினேகிதி உங்கள் கையில் இருக்கும் பார்பி என்ற பொம்மை. அந்தப் பொம்மை தான் அவள் சினேகிதி. பார்பி மேல் அவளுக்கு உயிர்.” என்றேன் நான்.*

*“ ஓ அப்படியா?. இந்தப் பொம்மையை கார் பார்க் செய்யும் இடத்தில் நான் கண்டெடுத்தேன். பொம்மையை எடுத்து பார்த்தபோது கார் ஒன்று பொம்மை மேல் போயிருந்தது தெரிந்தது. அழுக்கு படிந்து போன பொம்மையை குப்பைக் கூடைக்குள் எறிய இருந்தேன். நல்லகாலம் அதற்கு முன்னமே என் கையிலுள்ள பார்பி பொம்மையைக் கண்டுவீட்டீர்கள்” என்றாள் அப்பெண்மணி*
*மைத்தி கவனமாக எங்கள் சம்பாஷணையைக் கேட்டுக் கொண்டிருந்தாள். அவள் பார்வை முழுவதும் அப்பெண்மணியின் கையில் இருந்த அழுக்குப்படிந்த பார்பிமேலேயே இருந்தது.*
*“பார்பிமேல் கார் போய் அழுக்காகியிருந்தாலும் மைத்திக்கு பரவாயில்லை. பார்பி திரும்பவும் கிடைத்ததே அவளுக்குத் திருப்தியாக இருக்கும்” என்றாள், என்னோடு இருந்த என் மகள்.*
*அப்பெண்மணி சிரித்துவிட்டு என் மகள் கையிலிருந்த மைத்தியை நோக்கிப்போனாள். மைத்தியும் அழுகையை நிறுத்திவிட்டு பார்பியை அப்பெண்மணியிடம் இருந்து வாங்கத் தயாராக இருந்தாள்.*
*அதற்கு மைத்தி, தன் விரல்களை பார்பியை நோக்கிக் காட்டி “மை பார்பி. கிவ் மீ மை பார்பி ;” என்றாள் ஆங்கிலத்தில் தன் மழலையில்.*

மைத்தியின் வேண்டுகோளைப் பூர்த்தி செய்யதாமதிக்காமல் " குழந்தை இதோ உன் சினேகிதி பார்பி. திரும்பவும் பார்பியைத் தொலைத்து போடாதே" என்று சொல்லி பார்பி பொம்மையை மைத்தியின் கையில் கொடுத்து அவள் கன்னத்தில் முத்தம் கொடுத்தாள் அப்பெண்மணி. கையில் பார்பி கிடைத்தவுடன்மைத்திமாறி மாறி பொம்மைக்கு முத்தம் சொரிந்தாள். அழுகை நின்றுவிட்டது. அந்த சந்தர்ப்பத்தை நழுவ விடாமல் என் மகள் தன் கை பையுக்குள் இருந்த பால் பாட்டிலை எடுத்து மைத்திக்கு பால் கொடுக்கத் தொடங்கினாள். அப்பெண்மணி எங்கள் கண்களுக்கு ஆபத்தில் உதவிய தேவதையாகப் பட்டாள்.

******

# கதை 21 கஸ்தூரியின் காலணி

பெண்கள் எதாவது ஒரு பொருள் மேல் ஆசை வைப்பது சகஜம் . சேலை , வளையல்கள், கைப்பை நகைகள் ஆகியவற்றில் ஆசை உள்ளவர்கள் அனேகர். அவர்களில் சற்று வித்தியாசமான ஆசை உள்ளவள் பிரபல வர்த்தகர் மகேந்திரனின் ஒரே மகள் கஸ்தூரி . காலணிகள் மேல் கஸ்தூரிக்கு விருப்பம் அதிகம். அந்த ஆசை உருவானதே ஒரு தனிக் கதை.

ஒரு நாள் வீட்டில் கஸ்தூரி தொலைக்காட்சியைப் பார்த்துக் கொண்டு இருக்கும் போது அப்போது பிலிப்பைன் நாட்டு முன்னைய தலைவர் ‘மார்கோஸ்’ என்பவரின் பணக்கார மனைவி இமெல்டாவை பற்றிய ஆவணப் படம் போய்க்கொண்டு இருந்தது . இமெல்டா மார்கோஸ் ,21 ஆண்டுகளாக பிலிப்பைன்ஸின் முதல் பெண்மணியாக இருந்தவள் .இந்த சமயத்தில் அவளும் அவளது கணவரும் சட்டவிரோதமாகச் சொத்து பலவற்றைச் சேகரித்ததாகப் பரவலாக நம்பப்படுகிறது. நாட்டில் பொருளாதார நெருக்கடி. மற்றும் உள்நாட்டு அமைதியின்மை ஆகியவற்றின் போதும் கூட அவளும் அவரது குடும்பத்தினரும் ஒரு பகட்டான வாழ்க்கை முறையை வாழ்ந்ததாகக் குற்றம் சாட்டப் பட்டனர் . இமெல்டா தனது பெரும்பாலான நேரத்தை வெளிநாடுகளிலும் ,அரசு வருகைகள், ஆடம்பரமான கேளிக்கைகளில் , ஷாப்பிங் ஸ்பிரீஸ்களுக்காக செலவிட்டாள். மேலும் நாட்டின் செல்வத்தின் பெரும்பகுதியை அவளது தனிப்பட்ட நகைகள் மற்றும் காலணி சேகரிப்புகளுக்காக செலவிட்டாள். 1,200 க்கும் மேற்பட்ட ஆடம்பர காலணிகளின் சேகரிப்பு ,அவளுக்கு "மேரி அன்டோனெட்காலணிகளுடன்" என்ற பெயரை ஊடகங்கள் கொடுத்தது. இமெல்டாவின் காலணிகளைத் தொலைக் காட்சியில் பார்த்ததும் கஸ்தூரிக்கு காலணிகள் பிரியம் வந்தது.

விதம் விதமான காலணிகளை அவளும் சேகரிக்கத் தொடங்கினாள் அவளின் அதிர்ஷ்டமோ என்னவோ அவளின் பிறந்த நாளுக்குக் கஸ்தூரியின் தந்தை வியாபார விசயமாகச் சிங்கப்பூருக்கு போய் வந்த போது 200 டாலர்கள் கொடுத்து ‘இமெல்டா காலணி’ என்ற பெயரில் , தனது ஒரே மகளுக்கு ஒரு அழகான காலணி வாங்கி வந்து கொடுத்தார். அது கஸ்தூரிக்குப் பிடித்துக் கொண்டது அதற்கு பொருத்தமான நிற ஆடை அணிந்து தன் சிநேகிதி ஜமுனாவின் பிறந்த நாள் கொண்டாட்டத்துக்குக் கஸ்தூரி போனாள். அந்த பிறந்த நாள் கொண்டாட்டத்துக்கு அவளின் சினேகிதிகள் பலர் வந்திருந்தார்கள் .அவர்களின் பார்வை கஸ்தூரி அணிந்திருந்த இமெல்டா பிராண்ட் காலணி மேல் விழுந்தது.

*"அடேயப்பபா ......!கஸ்தூரி நீ எவ்வளவு கொடுத்து வைத்தவள் இந்த அழகிய விலை உயர்ந்த காலணியை அணிவதற்க்கு" கஸ்தூரியின் சினேகிதி தேவகி சொன்னாள்.*

*" ஆமாண்டிதேவகி, இது வெளி நாட்டில் இவளின் அப்பா வாங்கிய காலணி என நினைக்கிறேன்" கங்கா சொன்னாள்.*

*"அதன் அடிப்பாகம் மிருக தோலினால் தயாரிக்கப் பட்டதென நான் நினைக்கிறேன் .இது போன்ற காலணியை எனக்குத் தெரிந்த எவரும் அணிந்ததை நான் காணவில்லை" என்று சித்ரா சொன்னாள்.*

*கஸ்தூரியின் பல சினேகிதிகளிடம் இருந்து அவள் அணிந்திருந்த காலணி பற்றி விமர்சனங்கள் வந்தன. கஸ்தூரிக்கு மனதுக்குள் பெரும் சந்தோசம் .*

*" எங்கையடி இதை வங்கினாய்" ?சுமித்திரா கேட்டாள்.*

*" என் அப்பா சிங்கப்பூருக்குப் போன போது 200 டாலர் கொடுத்து வாங்கி வந்தார்" பெருமையாக கஸ்தூரி சொன்னாள்".*

*"உன் ஆடைக்கும், கை பையுக்கும், வளையல்களுக்கும் ,நோட்டுக்கும் பொருத்தமாக இருக்குதடி இந்த காலணி" செல்வி சொன்னாள்.*

*கஸ்தூரிக்கு தன் காலணியைப் பார்த்து பலர் ரசித்து விமர்சித்ததில் பெரும் மகிழ்ச்சி. பிறந்த நாள் கொண்டாட்டம் முடிந்து வீடு திரும்பும்முன் ஒரு சினேகிதி வந்து கஸ்தூரியிடம் கேட்டாள்.*

*"கஸ்தூரி உன்னிடம் இது போல் எத்தனை காலணிகள் இருக்கு ?"*

*"சுமார் இருபது . என் அப்பா வெளிநாடு போய் வரும் போது விதம் விதமான காலணி வாங்கி வருவார்"*

*என் அப்பாவுக்கு . நான் ஒரு மகள் மட்டுமே.*

*" நீ கொடுத்து வைத்தவள் கஸ்தூரி . நான் போட்டு இருக்கும் பழைய காலணி பல தடவை மாற்ற அப்பாவைக் கேட்டும் அதை மாற்ற என் அப்பா பணம் தரவில்லை ."*
*தன் பெற்றோரைக் குறை சொன்னாள் கஸ்தூரியின் சினேகிதி மாலதி*
*"இந்தக் காலணி நீண்ட காலம் பாவிக்கக் கூடியது": பெருமையாகக் கஸ்தூரி சொன்னாள்.*

*கஸ்தூரி பணக்காரி ஆனாலும் இரக்கச் சுபாவம் உள்ளவள். கோவிலுக்குப் போனால் பிச்சை எடுப்பவர்களுக்குக் காசும் உணவும் கொடுக்கத் தவற மாட்டாள். அன்று பிறந்த நாள் கொண்ட்டாட்டம் முடிந்து அவளைக் கூட்டிச் செல்ல கார் வராததால் அருகில் உள்ள தன் வீட்டுக்கு குடையைப் பிடித்தப் படியே நடக்கத் தொடக்கினாள். போகும் வழியில் ஒரு முதிய பெண் ஒருத்தி தலையிலொரு கூடையோடு, காலணி இல்லாமல், கொதிக்கும் தாரில் நடக்க முடியாமல் நடந்து செல்வதைக் கஸ்தூரி கண்டாள். அவள் நிலையைக் கண்டு கஸ்தூரி பரிதாபப் பட்டாள்*

*அந்த முதிய பெண்ணுக்கு வயது எழுபதுக்கு மேல் இருக்கும். கிழிந்த சேலை, சட்டை அணிந்திருந்தாள் . வறுமை அவள் தோற்றத்தில் தெரிந்தது .*

*ஐயோ...! பாவம் இந்த கொதிக்கும்வெய்யலில் இந்த தார் ரோட்டில் நடந்து போகிறாளே, இந்தக்கிழவி . அவள் காலில் காலணி இல்லை. அவளை அணுகி கஸ்தூரி கேட்டாள்.*

*''ஆச்சி தலையில் சுமையோடு காலில் காலணி இல்லாமல் நடந்து போகிறாயே, உனக்குகால் பாதம் சுடவில்லையா ''?*

*'' அம்மா ,காலணி வாங்க என்னிடம் பணம் இல்லை. என் கணவர் தேக நலம் இல்லாமல் வேலைக்குப் போகாமல் வீட்டில் படுத்திருக்கிறார் . நான் இந்த கூடையில் உள்ள பழங்களை விற்றால் தான் என் குடிசை அடுப்பில் நெருப்பு எரியும்'' .*

*'' ம்.... அவ்வளவுக்கு வசதி இல்லையா உனக்கு ? உன் கணவனுக்கு என்ன தொழில் ஆச்சி ''?*

*''அம்மா அவர் ஒரு செருப்பு தைக்கும் தொழில் செய்பவர் . கடந்த இரண்டு மாதமாய் வருத்தம் காரணத்தால் அவர் வேலைக்குப் போகவில்லை .வீட்டில் ஒரு பழுதடைந்த காலணி ஒன்று உண்டு. அதைத் திருத்தி எனக்குத் தர அவரால் முடியவில்லை .அதுதான் வெறும் காலில் வியாபாரம் செய்யப் புறப் பட்டுவிட்டேன்'' கிழவி தன் நிலையைச் சொன்னாள்.*

*கஸ்தூரி ஒரு கணம் யோசித்தாள் . வசதி உள்ள என் அப்பாவிடம் கேட்டால் அப்பா எனக்கு உடனே ஒன்று வாங்கித் தருவார். என் காலணியை இந்த கிழவிக்குக் கொடுத்தால் என்ன? புண்ணியமாக போகும். கிழவியிடம் கஸ்தூரி கேட்டாள்: ''ஆச்சி என் காலில் உள்ள காலணி உனக்கு பிடித்திருக்கா'' ?:*

*''அம்மா இந்த காலணியைப் பார்த்தால் பிற நாட்டில் வாங்கிய விலை உயர்ந்த காலணி போல் இருக்கிறது. என் கணவர் இதைப் பார்த்தால் இதன் மதிப்பைச் சொல்லுவார்'' .*

*''உனக்கு இந்த காலணி பிடித்திருக்கா''?*

*எனக்கு பிடித்திருக்கு ஆனால் இது எனக்குப் பொருத்தம் இல்லை . இது போன்ற காலணியை அணிய எனக்கு எங்கே பணம் இருக்கு?. அப்படி பணம் இருந்தால் நான் இந்த கொதிக்கும் வெயிலில் வெறும் காலில் நடந்து போக வேண்டிய அவசியம் இல்லை''.*

*'' நீ சொல்வது உண்மை ஆச்சி. நான் என் காலணியை நீ அணிய என் பரிசாகத் தரப்போகிறேன். இது உனக்கு அளவாக இருக்கும், என நினைக்கிறேன் . நீ என்ன சொல்லுகிறாய்.''?*

*அம்மா உண்மையாகச் சொல்லுகிறீர்களா ''?*
*''ஆம் .உண்மையாகத் தான் சொல்லுறேன்*
*''அம்மா அப்ப உங்களுக்குக் காலணி ''?*
*''என் அப்பாவிடம் பணம் இருக்கிறது. இந்த காலணி போல் ஒன்று கேட்டால், அப்பா எனக்கு வாங்கித் தருவார். கிழவிக்குக் கஸ்தூரி சொன்னதை நம்ப முடியவில்லை .கஸ்தூரியை அணைத்து முத்தம் கொடுத்தாள்.*
*''அதுசரி அம்மா, காலணி இல்லாமல் எப்படி உங்களால் இந்த கொதிக்கும் வெயிலில் நடக்க முடியும் .உங்களுக்குக் காலணி இல்லாமல் நடந்து பழக்கம் இருக்காதே .''?*
*''காலணி இல்லாமல் நடந்தால் எப்படி இருக்கும் என்று அனுபவித்து பாப்போமே!'' என்றாள் கஸ்தூரி சிரித்த படி .*
*கஸ்தூரியின் காலணி ஆச்சிக்கு அளவாக இருந்தது .சுமையோடு தன் காலணியை அணிந்து கிழவி நடப்பதைப் பார்த்து இரசித்தாள் கஸ்தூரி*
*அந்த கொதிக்கும்வெயிலில் காலணி இல்லாமல் கஷ்டப்பட்டு நடந்தாள் கஸ்தூரி. அது அவளுக்கு புது அனுபவம் வேறு. யார் நடந்தாலும் அவளால் மேலும் நடக்க முடியவில்லை . வெகு தூரம் நடக்க முடியாமல் மரத்துக்கு கீழ் உள்ள சீட்டில் உட்கார்ந்து விட்டாள். அவளின் அதிர்ஷ்டமோ என்னவோ அந்த வழியே அவளின் மாமன் காரில் வந்தார்.*
*''என்ன கஸ்தூரி !இந்த வெயிலில் உன்காலில் காலணி இல்லாமல் உட்கார்ந்து இருக்கிறாய்''? மாமன் காரில் இருந்து இறங்கி வந்து அவளிடம் கேட்டார்.*
*கஸ்தூரி நடந்ததை அவருக்குச் சொன்னாள் அதைக் கேட்டதும் கஸ்தூரி செய்த காலணி தானத்தை எண்ணி பெருமைப் பட்டார் .*

*இந்த சிறு வயதிலும் தர்மம் செய்யும் குணம் தன் மருமகளுக்கு இருப்பதை அவரால் எண்ணிப் பார்க்க முடியவில்லை*
*வா கஸ்தூரி ,வந்து காரில் ஏறு. உனக்குக் கடையில் உனக்குப் பிடித்த காலணி வாங்கித்தாறன்'' மாமா சொன்னார்.*
*''நன்றி மாமா'' என்று கஸ்தூரி சொல்லியப்படியே அவரின் காரில் போய் ஏறினாள். கார் பிரபல காலணிக் கடை நோக்கிப் பயணித்தது.*

*காலணிக்கடையில் இருந்து திரும்பும் போது ,அதே கிழவி காலணி இல்லாமல் நடந்து போவதைக் கஸ்தூரி கண்டாள்.*
*மாமாவிடம் காரை நிறுத்தச் சொல்லி, இறங்கி கிழவி இடம்போய் ''ஆச்சி எங்கே நான் தந்த காலணி''? கஸ்தூரி கேட்டாள் .*
*அம்மா உங்கள் காலணியை பார்த்து ஒரு நல்ல விலைக்கு ஒரு பெண் கேட்டாள் . விற்று விட்டேன் இனி சில நாட்களுக்கு என் வீட்டு அடுப்பு எரியும்'' என்றாள் அந்தக் கிழவி.*

*கஸ்தூரி அந்த பதிலைக் கிழவியிடம் இருந்து எதிர் பார்க்கவில்லை. தன் காலணி ஒரு குடும்பத்தின் பசியை சில நாட்களுக்கு போக்கிற்றே! எனச் சந்தோசப் பட்டாள்.*

****

## *கதை 22  நத்தார்  தாத்தாவுக்கு  ஒரு கடிதம்*

*வருடா வருடம் நான் தூங்கும் போது என் கட்டிலில் எனக்குத் தெரியாமல் பரிசுகளை வைத்துவிட்டு போகும் என் அருமை நத்தார் தாத்தாவுக்கு மரியா எழுதுவது.*
*நான் என் தாத்தாவை மூன்று வயதுக்கு பின் காணவில்லை . "அவர் ஒரு பிரபல புற்று நோய் வைத்தியர்" என்று ,நான் வளர்ந்தப் பின் அம்மாவும் அம்மம்மாவும் சொல்லிக் கேள்விப்பட்டேன் . அவர் பல உயிர்களை நீண்ட காலம் வாழ வைத்திருக்கிறார் .அவரின் படத்தை என் அம்மா ஸ்டெதெஸ்கோப்புடன் எனக்கு காட்டினாள் . என்ன கம்பீரமான பார்வை. அவர் மக்களுக்கு சேவை செய்யவே பிறந்தார், என அம்மா சொல்லுவாள் . அவர் உயிரோடு இருக்கும் போது அவர் சம்பாதித்த பணமும் ,பரிசுகளும், விருதுகளும் ஏராளம். அவர் இறக்கும் முன் தன் உடலை புற்று நோய் ஆராய்ச்சிக்கு தானம் செய்து விட்டார். தன் செல்வத்தை புற்று நோய் ஆஸ்பத்திரிக்கு கொடுத்து விட்டார். அப்படிப்பட்ட நல்ல குணமும்,உள்ளமும் உள்ள படைத்த மாமனிதர் அவர். அவர் இறந்தது இரத்த புற்று நோயால். நான் பிறக்கும் அவர் எனக்கு வைத்த பெயர் தான் மரியா . அது அவரின் தாயின் பெயர் கூட .*
*நான் மூன்று வயது சிறுமியாக இருக்கும் போது ,என் தாத்தா எங்களை விட்டு போய் விட்டார். அவருக்கு நான் " அவரைப் போல் படித்து பிரபல டாக்டராக வரவேண்டும் என்று ஆசை" என்று என் அம்மா சொலுவாள்.*
*இங்கு கடும் குளிர். இந்த முறை வெள்ளை நத்தார் இல்லை, என்று என நினைக்கிறேன் . நாங்கள் எல்லோரும் இரவு பன்னிரெண்டு மணி பூசைக்கு சர்சுக்குப் போக இருக்கிறோம் . என் அப்பாவும் அம்மாவும் டாக்டர்கள். நான் ஒருத்தி தான் அவர்களுக்கு மகள் . நான் கேட்டதெல்லாம் வாங்கித்தருவார்கள் . லாப்டாப், ஐ போன் எல்லாம் எனக்கு பரிசாக கிடைத்தது. போன வருடம் நீங்கள் தந்த பார்பி பொம்மை தான் என் சகோதரி .அவளுக்கு 'சில்வியா' என்று பெயர் வைத்திருக்கிறேன் . என்னோடு தூங்குவாள் .நான் அவளோடு பேசுவேன். அவள் பேசமாட்டாள். அவளோடு சேர்ந்து உணவு உண்பேன்.விதம் விதமான ஆடை அவளுக்கு அணிவிப்பேன்.*
*அடுத்த வருடம் எனக்குப் பரிசுகள் வேண்டாம் . ஏன் என்று கேட்குறீர்களா? . எனக்கு உங்களுக்கு சொல்ல கவலையாக இருக்கு. சில மாதங்களுக்கு முன் எனக்கு 'இரத்த புற்று' என்று டாக்டர்கள் கண்டுப்பிடித்தார்கள் . என் தாத்தா இறந்ததும், இரத்த புற்று நோயினால். இது மரபணுவோடு தொடர்புள்ளது. அதனால் எனக்கு அந்த நோய் வந்தது, என்று என் அப்பா சொன்னார்.*
*எனக்கு கடந்த ஒரு மாதமாக 'கீமோதெரபி சிகிச்சை நடக்குது ; கருமையான நீண்ட என் தலைமயிர் கொட்டி விட்டது. நான் தினமும் மெலிந்து வருகிறேன். சாப்பிட மனமில்லை . 'யேசுவிடம் என்னை காப்பாற்று' என்று தினமும் மன்றாடுகிறேன். அவர் ,என்னை பல*

வருடங்கள் வாழ்ந்து டாக்டராக வர விடுவார் ,என்ற நம்பிக்கை உண்டு. உங்களுக்கு தான் அவர் தெரிந்தவர், அவரிடம் என் நிலைமைப் பற்றி கொஞ்சம் சொல்லுங்கள்.

நீங்கள் எனக்கு தரும்  நத்தார் பரிசை என்னால் அனுபவிக்க முடியாது . அடுத்த வருடம் நீங்கள் எனக்கு நத்தார் பரிசு தரும் போது நான் இருப்பனோ தெரியாது. என் பிறந்த நாள் நத்தார் தினமன்று. என் சிநேகிதினை கூப்பிட்டு ஒரு பெரிய கொண்டாட்டம் ,வீட்டில் என் அம்மாவும் அப்பாவும் வைக்க இருக்கிறார்கள்.. அடுத்த வருடம் என் பதினோராவது பிறந்தநாள் கொண்டாட நான் இருப்பனோ தெரியாது. உங்களிடம் என் ஒரு வேண்டுகோள் . நான் உயிரோடு இல்லாவிட்டால் எனக்கு தரும் பரிசை புற்று நோயால் கஷ்டப்படும் என்னை போன்ற பிள்ளைகளுக்கு கொடுங்கள். எனக்காக பிரார்த்தனை செய்யுங்கள்;

உங்களுக்கும், பாட்டிக்கும் என் புதுவருட, நத்தார் வாழ்த்துக்கள்...

இப்படிக்கு,

செல்வி .மரியா ஜெபநேசன் .

******

# கதை 23  எனது பார்க்கர் 51 பேனா

*நான் தினமும் ஆபீசுக்குப் போவதற்கு, கொழும்பில் உள்ள வெள்ளவத்தை விவேகானந்தா வீதி வழியே, என் வீட்டில் இருந்து நடந்து சென்று, பிரதான வீதியான காலி வீதியில் உள்ள பஸ் தரிப்பில் பஸ் எடுப்பது வழக்கம். விவேகானந்தா வீதியின் இருபக்கத்திலும் விலை உயர்ந்த வீடுகள். நிட்சயமாக அதன் உரிமையாளர்கள் செல்வந்தவர்களாகவே இருக்க வேண்டும். அவ்வீடுகளில், இரு வீடுகளுக்கு செக்கியூரிட்டி கார்ட்ஸ். சில வீடுகளின் கேட்டுகளில் "நாய் ஜாக்கிரதை" என்று எழுதப்பட்டப் பலகை அலங்கரிக்கும். இக்காட்சிகளை இரசித்தபடி நடந்து போகும் எனக்கு, "சாந்தி நிலையம்" என்ற பெயர் பலகையோடு சேர்ந்து வீட்டு சொந்தக்காரர் வைத்தியத் துறையில் பெற்ற பட்டங்கள் கொண்ட பெயர் பலகையும் ஜொலித்தது. அப்பலகையின் கீழ் "நாய் ஜாக்கிரதை" என்று எழுதிய பலகையும் என் கவனத்தைக் கவர்ந்தது. பெயருக்கு ஏற்ப அமைதியான வீடாக அவ்வீடு இருக்கும், என நினைத்த எனக்கு, தினமும் அவ்வீட்டைத் தாண்டி போகும் போது கம்பீரமான ஒரு நாயின் குரல் கேட்கும். கம்பி போட்ட கேட்டுக்குப்பின்னால் இருந்தவாறே இப்படி உரத்த குரலில் குரைக்கும் நாய் , எப்போது என்மேல் பாய்ந்து, கடித்துக் குதறித் தள்ள வேண்டும் என்ற பார்வையொடு பார்க்கும். ஒரு காலத்தில் றொடேசியா (Rhodesia)) என்ற பெயரில் இருந்த சிம்பாப்வே தேசத்தில் நான் சில ஆண்டுகள் தொலைபேசி நிறுவனம் ஒன்றில் ஆலோசகராக வேலை செய்ததால்,என்னை வேட்டையாடும் நோக்கத்தோடு குரைக்கும் கறுப்பு நிற, இரண்டரை அடி உயரமுள்ள, ஆண் வேட்டை நாய், நிட்சயமாக "றொடேசியன் டோபர்மன் ரிட்ஜ்பாக்" (Rhodesian Dhorman Ridgeback) என்ற உயர்சாதியைச் சேர்ந்த வேட்டை நாயாகத் தான் இருக்கும் என்பது என் அனுமானம். அதை உறுதிப்படுத்துவது போல் அதன் முதுகில் பெயருக்கு ஏற்ற, இரண்டரை அங்குலத்துக்கு, நீண்ட, அகலமான, மயிர் வரம்பானது, அதற்கு பிரத்தியேக அடையாளத்தைக் கொடுத்தது. அதனாலை தானோ என்னவோ அச்சாதி நாயுக்கு அப் பெயர் வந்திருக்கலாம். அதோடு மட்டுமல்ல என்னோடு சிம்பாப்பேயில் வேலை செய்தவர்களிடம் அச்சாதி நாயைப் பற்றி விசாரித்த போது, அச் சாதி நாய் சிங்கத்தை வேட்டையாடும் போது அவ்வூர் சோனா இன குடிமக்களால் பாவிக்கப்படும் வேட்டை நாய். அதனால் சிங்க வேட்டைக்காரன் (Lion Hunter) என்ற பெயரும் உண்டு என்றார்கள். அவர்கள் சொன்ன விளக்கம் உடனே என் நினைவுக்கு வந்தது . ஒரு வேளை எனது பெயரான ராஜசிங்கத்தில், சிங்கம் கலந்திருப்பதாலோ என்னவோ, என்னை வேட்டையாட அந்த நாய் எதிர்பார்த்திருக்கலாம் என்று நினைத்தேன்.*

*என்னைக் கண்டு தொடர்ந்து நாய் குரைப்பதைக் கேட்டு அவ்வீட்டு எஜமாட்டி நாயின் குரலை விட தன் பெருத்த குரலில் " சோனா, குரைக்கிறதை நிறுத்திவிட்டு கூட்டுக்குள் போ" என்றாள் ஆங்கிலத்தில். நாயுக்கு ஆங்கிலம் மட்டுமே புரியுமோ என்னவோ. நாயின் பெயரைக்*

கேட்டவுடன்நல்ல பொருத்தமான பெயரைத்தான் வைத்திருக்கிறார்கள், என நினைத்தேன். காரணம் சிம்பாப்வேயில் வாழும் இனங்களில் 'சோனா' என்ற பெரும்பான்மை இனமும் உண்டு. அவர்கள் பந்து மொழி பேசுபவர்கள்.

பிரதான காலி வீதியில் உள்ள பஸ் தரிப்பு நிலையத்துக்குப் போகும்முன் , அதற்கு அருகே உள்ள காந்தி விலாசில் காப்பி அருந்திவிட்டு, இரண்டு வடைகளை வாங்கிக் கொண்டு, வெளியே வருவேன். அப்போது தினமும் நான் சந்திப்பது கடைக்கு முன்னால், உள்ள குப்பைத் தொட்டிக்கு அருகே, சுருண்டு படுத்திருக்கும் ஒரு பெண் தெருநாய். வெள்ளையும் பிரவுனும் கலந்த நிறம். அதன் பார்வையில் ஒரு சாந்தம் தெரிந்தது. நான் சில வருடங்களுக்கு முன் 'ராணி' என்ற பெண் நாய் ஒன்றை வீட்டில் வளர்த்தேன். எனக்கும் நாயுக்கும் பொறுத்தமில்லையோ என்னவோ இரண்டு வருடத்துக்குள் காரில் அடிபட்டு அந்நாய் இறந்து விட்டது.

நான் விவேகானந்தா வீதியில், சாந்தி நிலையத்தில், கண்ட நாயுக்குப் பெயர் இருந்தது. கொடுத்து வைத்த நாய். பாவம் இது பெயரில்லாத, அனாதையான தெருநாய். இதன் பரம்பரை, தெருநாயைச் சேர்ந்ததாக இருக்கலாம். ஆனால் தினமும் அந்நாயை காணும் போது அது குரைக்காமல் என்னைப் பார்த்து தன் வாலை ஆட்டும். அதனால் எனக்கு அதுமேல் பிரியம் ஏற்பட்டது. குப்பைத் தொட்டியில், காந்தி விலாசில் இருந்து வந்து விழும் சாப்பாட்டுக் கழிவுகளை நம்பி உயிர் வாழும் தெருநாய் மேல் எனக்கு பரிதாபம் ஏற்பட்டது. தினமும் நான் வாங்கும் இரண்டு வடைகளை அதற்கு உண்ணக் கொடுப்பேன். இந்த தெருநாயுக்கு ஒரு பெயர் யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த ஒல்லாந்தரிடமிருந்து அதனைக் கைப்பற்றியதிலிருந்து யாழ்ப்பாணத்தில் பிரித்தானியரின் சுமார் 150 வருட ஆட்சி ஆரம்பமானது. 1948 -ல் யாழ்ப்பாணத்தையும் இலங்கையின் ஒரு பகுதியாக விட்டுச் செல்லும் வரை இவ்வாட்சி நீடித்தது. தேசாதிபதிகளே யாழ்ப்பாணத்தின் நிர்வாகத்துக்கும் பொறுப்பாக இருந்துவந்தனர். இவர்கள் இலங்கையை 5 மாகாணங்களாகப் பிரித்து ஒவ்வொரு மாகாணத்தையும் ஒரு அரசப் பிரதிநிதியின் (Government Agent) நிர்வாகத்தின் கீழ்க் கொண்டுவந்தார்கள். அக்காலத்தில் அவர்கள் ஆரம்பித்த 'கச்சேரி' என்ற அரச பரிபாலன அலுவலகம்சுண்டுக்குளி ஓல்ட் பார்க் என்ற தற்போதைய பிரதான யாழ்ப்பாண - கண்டி வீதியில் ஆரம்பித்தது. அரச ஊழியரான எனது தந்தை வேலைக்கு நல்லூரில் இருந்து ரெலி சைக்கிளில் போய் வருவார் . மாலையில் வீடு திரும்பும் போது கச்சேரிக்கு அருகில் இருந்த புத்தகச்சாலையில் கல்கி, ஆனந்தவிகடன், கலைமகள், அம்புலிமாமா , ஹிந்து, ஆங்கிலப் பேப்பர் வாங்கி வர தவறமாட்டார் .

ஒரு நாள் எனது வேண்டுகோளுக்கு இணங்க அவரின் கச்சேரிக்கு என்னை அழைத்துச்சென்றார். லிகிதர்கள் தங்கள் மேசையில் இருந்து கோப்புகளை புரட்டி பார்த்துக் கொண்டு இருந்தனர் . சில தடித்த கோப்புகளுக்கு சிவப்பு ரிப்பன் கட்டி இருந்தது . அந்த பெரிய அறையில்சுமார் ஆறு லிகிதர்கள் வேலை செய்தனர் .அவர்களில் என் தந்தையும் ஒருவர். அறையின் சுவர் ஓரத்தில் மூன்று அலமாரிகளில் வரிசையாக கோப்புகள் அடுக்கி இருந்தன.

*லிகிதர்கள் எழுத பாவித்த பேனா 'ஜி நிப்' என்ற அலகினை கொண்ட குச்சி போன்ற பேனா. பாட்டிலில் உள்ளகருப்பு அல்லது நீல நிற மையில் தோய்த்து எழுதுவார்கள். சிவப்பு நிற மை ,சரி பிழை பார்த்ததை குறிக்க பாவிப்பதுண்டு. மிக சிலர் ஊதா நிற மையை பாவிப்பார்கள்.எனக்கு அந்த கலர் மையில் எழுதுவது மிகவும் பிடிக்கும். நேர் கோடிட்ட ரூலராக பாவிப்பதற்கு ஒரு அடி நீளமுள்ள மர உருளை இருந்தது. அதோடு மை கூடு . மையைஉறிஞ்சு எடுக்கும் ஃபுலோட்டிங்க் பேப்பர் கொண்ட அரை தோற்றத்தில் உருளை . என் தந்தை வேலைசெய்யும் கதிரைக்கு முன் அவரை கண்டு உரையாட வருபவர்கள் இருக்க இரு கதிரைகள் போடப் பட்டிருந்தன. தந்தை இருந்த இடத்துக்குப் பின்னல் உள்ள சுவரில் ஒரு பெரிய கடிகாரம்.மேசையில் சில கோப்புகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன . மேசையின் வலது பக்கத்தில் ஆங்கிலத்தில் 'இன் (உள்ளே), அவுட் (வெளியே)' என எழுதப் பட்டு மரத்தினால் செய்யப்பட்ட ட்ரே தட்டுகள் இருந்தன. அதில் வெளி ட்ரேயில் பியூன் வந்து எடுத்துச் செல்லும் வரை காத்திருக்கும் மூன்று கடிதங்கள். பியூன் மணி அடித்து கூப்பிட காலிங் பெல். அவையெல்லாம் எனக்கு பார்க்க புதுமையாக இருந்தது.*

*கடிதங்கள் ரெமிங்டன் டைப்ரைட்டரில் ஆங்கிலத்தில் அச்சடித்து, 'உங்களின் கீழ்படிந்த ஊழியன்' என கையொப்பமிட்டு பொது மக்களுக்குச்செல்லும் காலம் அது. கால்க்குலேட்டர் கூட இருக்க வில்லை. எல்லா கணக்குகளையும் மனதால் கூட்டி, கழித்து, பெருக்கி பிரித்தனர் லிகிதர்கள். அதில் என் தந்தை மிகவும் கெட்டிக்காரன். "நானும் அவரைப் போல் வர வேண்டும்" என அவர் விரும்பினார்.*

*யாழ்ப்பாணத்தில் பறங்கித்தெரு என்பது, யாழ்ப்பாண நகரத்தில் ஐரோப்பியர் வாழ்ந்த பகுதியைக் குறிப்பதற்க்கு உள்ளூர் மக்கள் வழங்கிய பெயர் ஆகும். இப்பகுதி தற்போதைய A9 பிரதான வீதியையும், அதை அண்டியப் பகுதிகளையும் குறிக்கும். போர்ச்சுக்கீசியர் காலத்தில் உருவான இது, ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகியோரின் ஆட்சிக்காலத்திலும், ஐரோப்பியர் குடியிருப்பாக இருந்துவந்தது. ஆங்கிலேயர் ஆட்சியின் தொடக்க காலம் வரை யாழ்ப்பாண நகரம் இப்பகுதிக்குள்ளேயே அடங்கியதாக இருந்தது. இதனால், நகரம் என்பதைக் குறிக்கும் போர்ச்சுக்கீசியச் சொல்லைத் தழுவி "சீதாரி" என்னும் பெயராலும் மக்கள் இப்பகுதியை அழைத்தனர்.*

*பறங்கித்தெருப் பகுதியின் முக்கியமான வீதி 'பிரதான வீதி'. பிரதான வீதிக்கு இணையாக கரையோரமாக பாங்சால் வீதியும், எதிர்ப் பக்கத்தில் சப்பல் வீதியும் உள்ளன. இவற்றுக்குச் செங்குத்தாக முன்கூறிய மூன்று வீதிகளையும் வெட்டிச்செல்லும் விதமாக மேற்கில் முன் வீதியும், அதற்குத் தெற்கே ஒன்றுக்கு அடுத்து மற்றொன்றாக முதலாம், இரண்டாம், மூன்றாம், நான்காம், ஐந்தாம் குறுக்குத் தெருக்களும் அமைந்து ஒரு வலைப்பின்னல் சாலையமைப்பை உருவாக்குகின்றன.*

*அக்காலத்தில் பிரித்தானியாவில் உற்பத்தியான பொருட்களில் ரெலி சைக்கிள் ஆஸ்டின் , மொரிஸ் மைனர் வான்கார்ட், ஹில்மன், போர்ட் பிரிபெக்ட் பிராண்ட் கார், சிங்கர் மெசின், பார்க்கர்பேனா, சுவான் பேனாபோன்ற பிராண்டுகளை மக்கள் அதிகம் பாவித்தனர். ஜப்பானிய அமெரிக்க பொருட்களை காண்பது அரிது . அரசில் வேலை செய்பவர்கள் அனேகர் கோர்ட்டும் சூட்டும் டையும் தொப்பியும் அணிவர்.வசதி உள்ளவர்கள் ரிக்ஷாவிலும், காரிலும் ,குதிரை வண்டியிலும் பயணித்தனர் . பிரித்தானியாவில் உற்பத்தியான பொருட்களை பறங்கித்தெருவை சுற்றியுள்ள குறுக்குத் தெருக்களில் வாங்கலாம்.*

*அப்போது நான் மத்திய கல்லூரியில் பத்தாம் வகுப்பில் படித்துக் கொண்டு இருந்த காலம் . கணிதம் ,அறிவியல் பாடங்களை படிப்பித்தவர்கள் பெரும்பாலும் தமிழ்நாடு, கேரளாவில் இருந்து வந்த பட்டதாரி ஆசிரியர்கள். அவர்களுக்கு அரசு நிரந்தரமில்லாது வசிக்கும் பெர்மிட் கொடுத்திருந்தது.*

*அட்சர கணிதம், கேத்திர கணிதம், சூழல், சுகாதரம், இரசாயனம், பௌதிகம், நுண்கணிதம் என்று புத்தக லிஸ்டடையும் புது வகுப்பிற்கு போகும் முன்பு, மார்கழி மாதம் எனது தகப்பனாரிடம், ஏனைய உபகரணங்கள் பென்சில் பேனா என்பனவற்றை லிஸ்ட் போட்டு கொடுத்தால் அவர் யாழ்ப்பாணம் சென்று கே.கே.எஸ் வீதியில் வண்ணை வைத்தீஸ்வரன் கோவிலுக்கு அண்மையில் அமைந்த சிறீலங்கா புத்தகக் கடையில் மொத்தமாக வாங்கி வருவார் .அவற்றை வீட்டிற்கு வந்ததும் இந்த புத்தக கட்டை பிரித்து எடுப்பதில் உள்ள மகிழ்ச்சி சொல்லி மாளாது. கூடவே அப்பா கொண்டு வரும் மாட்டுத்தாள் பேப்பரில் அழகாக உறை போட்டுப் பாதுகாத்த பக்குவம் ஆகட்டும், பெயர் பொறித்து எழுதியதாகட்டும் அது ஒரு தனிக்கலை. புத்தகத்தை பாதுகாத்தல், புத்தகத்தின் பெறுமதியை உணர்த்துவது என்பதே இந்த புத்தகத்திற்கான உறையாகும். தற்போதெல்லாம் யாரும் புத்தகத்திற்கு உறை போடுகின்றார்களா? என்றால் இல்லை என்பதாகவே பதில் வரும்.*

*`கத்தியைவிடக் கூர்மையானது பேனா முனை', ஏவுகணையைவிடச் சக்திவாய்ந்தது நாம் பயன்படுத்தும் சொல்' என, பேனா மற்றும் சொற்களின் முக்கியத்துவத்தை நம் வாழ்வில் பலமுறை உணர்ந்திருப்போம். சொற்களின் கண்டுபிடிப்புக்கு முன், ஆதிகால மனிதர்கள் சைகை மூலமாகத்தான் கருத்துகளைப் பரிமாறி வந்தனர். பிறகு, படங்கள் வரைந்து தங்களின் கருத்துகளைப் பதிவுசெய்தனர். நாளடைவில் இடத்துக்கு ஏற்ப மொழி நடைமுறைக்கு வந்தது. ஆதிகால மனிதர்கள் உபயோகப்படுத்திய உருவப்படங்களிலிருந்தே எழுத்துக்கள் உருவாக்கப்பட்டன. அவரவரின் கருத்துகளைப் பதிவுசெய்யவும் ,பரிமாறிக்கொள்ளவும் உதவுவது, பேனாக்கள்தான். அதன் பரிணாம வளர்ச்சியும், உலகின் நம்பர் ஒன் பேனா உற்பத்தியாளர் பற்றிய கதை இது .*

*ஆதிகால மனிதர்களின் முதல் எழுதுகோல், எலும்பு, மரக்கட்டை அல்லது யானைத் தந்தத்தால் ஆனது. சுமார் 4,000-ம் ஆண்டுகளுக்கு முந்தைய காலக்கட்டத்தில் பாபிலோனிய மக்கள்,*

*ஈரப்பதமிக்க களிமண் மேற்பரப்பில் இத்தகைய எழுதுகோல்களைப் பயன்படுத்தி எழுதியுள்ளனர். சுமார் 3000-ம் ஆண்டுகளுக்கு முன்பு, எகிப்திய மக்கள் 'பாப்பிரஸ் மெட்டிரியலின்' மேல் 'நாணல்' கொண்டு எழுதியுள்ளனர். கி.பி.1300-ம் காலகட்டத்தில், மரப்பலகையின்மேல் மெழுகுத்துகள்களை நன்கு தேய்த்து, அதன்மேல் நாணல் பயன்படுத்தி எழுதியுள்ளனர் ரோமானியர்கள்.*

*சிறகின் அடிப்பகுதியில் சிறு பிளவு உண்டாக்கி, மையில் நனைத்துப் பரவலாக எழுத ஆரம்பித்தனர். பிறகு, உலோகத் தகடுகளைக் கூர்மைப்படுத்தி, அதைப் பிளந்தும் விதவிதமாக வடிவமைத்தும் மையில் நனைத்து எழுத ஆரம்பித்தனர். இப்படித்தான் பேனாவின் அலகு (Nib) உருவானது. 18-ம் நூற்றாண்டில் எலும்பு, உலோகங்கள் மற்றும் பிளாஸ்டிக்கால் கைப்பிடியை உருவாக்கி எழுதுகோலின் அலகோடு இணைத்து, முதல் முழு வடிவப் பேனாவை உபயோகப்படுத்த ஆரம்பித்தனர். இதைத் தொடர்ந்து, பேனாவுக்கு மூடி, பிஸ்டன், இன்க் டியூப், கார்ட்ரிட்ஜ் போன்ற சிறப்பம்சங்களைப் பொருத்த ஆரம்பித்தனர்.*

*1884-ம் ஆண்டு, இன்று நாம் அனைவரும் பயன்படுத்தும் `Fountain Pen' கண்டுபிடிக்கப்பட்டது. 1888-ம் ஆண்டு `பால்பாயின்ட்'. 1960-ம் ஆண்டு, நாற்பொருள்களில் மைகளை நிரப்பிப் பயன்படுத்தும் `Felt Tip Pen' நடைமுறைக்கு வந்தது. தற்போது டேப்ளேட்டுகளில் பயன்படுத்தும் `ஸ்டைல்ஸ்' வரை நீண்டிருக்கிறது எழுதுகோலின் வளர்ச்சி.*

****

*பேனா உலகில் புதுமையைப் புகுத்தியவர் ஜார்ஜ் சாஃபோர்டு பார்க்கர். 1863-ம் ஆண்டு, நவம்பர் மாதம் பிறந்த பார்க்கர், தந்தி பயிற்றுனராகப் பணிபுரிந்து வந்தார். அதேசமயத்தில் பௌண்டைன் பேனாக்களைச் சரிசெய்யும் வேலையையும் செய்துவந்தார். அப்போதுதான் பேனாவிலிருந்து அடிக்கடி மை வழியும் குறையை முற்றிலுமாகத் தீர்க்க வேண்டும், என நினைத்தார். வழக்கத்தில் இருந்த பேனாக்களில் ` செருகி  ஒன்றை பொருத்தி பிரச்னைக்குத் தீர்வுக் கொண்டுவந்தார். 1888-ம் ஆண்டு, தான் வடிவமைத்த பேனாவுக்கு முதல் காப்புரிமையைப் பெற்றார். பார்க்கரின் படைப்புகள் பெருமளவில் அனைவரையும் கவர்ந்தன. இவரின் ஓய்வில்லா உழைப்பே, உலகின் 'நம்பர் ஒன் பேனா தொழிற்சாலை' வரை உயர்த்தியது.*

*தொடர்ந்து 'பால் பாயின்ட் பேனா', 'குவிங்க்', 'பார்க்கர் 51'போன்ற பேனாக்களை அறிமுகம் செய்து எழுதுகோல் தயாரிப்பில் புதிய முத்திரைகளைப் பதித்தார் பார்க்கர். அனைவரும் பயன்படுத்தும் சாதாரணப் பொருள்தான். ஆனால், 'பேனா என்றாலே பார்க்கர்'என்று உலக மக்கள் அனைவரின் மனதிலும் பதியும் அளவுக்குப் பல புதுமைகளைப் புகுத்தி சாதனை படைத்த ஜார்ஜ் பார்க்கர், 1937-ம் ஆண்டு காலமானார்.  பாக்கர்  பேனா பற்றிய  இவ்வளவு விபரத்தை  சொன்னவர்  சிங்கப்பூரில் இருந்து வந்த என் மாணிக்கம் மாமா, அவர் என் அம்மாவின்  ஒரே ஒரு அண்ணன் . பல வருடங்களுக்கு முன் சிங்கப்பூருக்கு  வேலை கிடைத்து*

சென்றவர் . அவர் பல பிரானண்ட் பேனாக்களை சேகரிப்பதில் விருப்பம் உள்ளவர் .அவரின் சேர்ட் பையில் எப்போதும் மூன்று பேனாக்கள் இருக்கும் . ஒவ்வொன்றிலும் கருப்பு,நீலம், ஊதா நிற மை இருக்கும்.அவரிடம் இருந்த பேனாக்களில் ஊதா நிற மை விட்டு எழுதும் 'பார்க்கர் 51' பேனாவை எனக்கு மிகவும் பிடித்தது. அதை அடக்கடி வாங்கி எழுதுவேன், நான் அந்த பேனாவை விரும்புவதை கண்ட என் மாமா ,அதை எனக்கு என் பிறந்தநாளுக்கு பரிசாகாத் தந்தார் . அதை தரும் போது அவர் சொன்னார்,

''மகேஷ் இந்த சிவப்பு நிற, தங்க மூடி உள்ள 'பாக்கர் 51'பேனாவை நான் வாங்கி பல வருடங்கள் ஆகிவிட்டது . இது விலைஉயர்ந்த அதிர்ஷ்டம் உள்ள பேனா. இது என் கையுக்கு வந்த அன்று எனக்கு பதவி உயர்வு கிடைத்தது .இதில் எப்போதும் ஊதா நிற மை விட்டு பாவிப்பேன் . நீ விரும்பியதால் இதை உனக்குப் பரிசாகத் தருகிறேன். கவனமாக இதை கவனித்து கொள். யாரும் திருடி விடுவார்கள்'' என்று சொல்லி எனக்கு பேனாவைத் தந்தார் .

.****

''நான் விரும்பிய பொருள்'' என்ற தலைப்பில் ஆங்கில கட்டுரை ஒன்று எழுதி மூன்று நாட்களில் தரும்படி என் ஆங்கில ஆசிரியர் வகுப்பில் சொன்னார். அவர் சொன்ன சில குறிப்புகளை எனது நோட் புத்தகத்தில் எழுதியப்பின் சலம் கழிக்க வந்த படியால் மறந்து போய் நான் எழுதிய என் பார்க்கர் பேனாவை மேசையில் நோட் புத்தகத்தின் மேல் வைத்து விட்டு சென்றேன் . பத்து நிமிடம் கழித்துவகுப்புக்கு திரும்பிய போது வகுப்பு முடிந்து மாணவர்கள் வகுப்பில் இருந்து போய் விட்டார்கள். என் நோட் புத்தகம் மட்டும் மேசையில் இருந்தது எனது பார்க்கர் பேனாவை காணவில்லை . எனக்கு மனம் திக்' என்றது . முறையிட ஆசிரியர் இருக்கவில்லை. விசாரிக்க மாணவர்களும் இல்லை . வகுப்பு முழுவதும் தேடினேன், என் பேனாவைக் காணவில்லை. வகுப்பில் யாரை சந்தேகிப்பது என்று எனக்கு தெரியவில்லை. என் வகுப்பு மாணவர்கள் எல்லோரும் என் நண்பர்கள் . வசதி உள்ளவர்கள். அவர்கள் எனக்கு தெரியாமல் என் பேனவை எடுத்து இருக்க மாட்டார்கள். என் வகுப்பு மாணவர்களில் மூவர் என் குடும்ப நண்பர்கள். ராஜன் ஒரு டாக்டரின் மகன் . செல்வன் ஒரு போலீஸ் அதிகாரியின் மகன் .தேவன் என் அம்மாவின் சினேகிதியின் மகன் .

கவலையோடு வீடு திரும்பிய நான்,அடுத்த நாள் ஆசிரியரிடம் முறையிடலாம், என தீர்மானித்தேன் . அன்று வீடு திரும்பிய போது பேப்பரில் ஒரு செய்தியை வாசித்தேன் .

அதில் ''லண்டனில் ஒரு பிரபல போலீஸ் அதிகாரி ஒருவர் ,உணவகம் ஒன்றில் ஸ்பூன், கத்தி, பூக்கள் வைக்கும் வாஸ் ஆகியவற்றை திருடியதுக்காக போலீஸ் அவரை கைது செய்தது'' என்று இருந்தது அந்த செய்தியை என் மனநிலை டாக்டர் சித்தப்பாவிடம் காட்டி அந்த திருட்டின் விளக்கம் கேட்டேன் . அவர்சொன்னார்,

'' மகேஷ் சில பொருட்களை கடைகள் அல்லது உணவகத்தில் இருந்து தம்மை அறியாமல் எடுத்து செல்வது சிலரின் பழக்கம். இதை ஆங்கிலத்தில் க்ளெப்டோமேனியா (Kliptomania )

*என்பர். எனக்கு தெரிந்த என் நண்பருக்கு இந்த வியாதி உண்டு. அதை போக்க அவர் என்னிடம் ஆலோசனை கேட்பார்".*

*"இது மனநிலை சம்பந்தப்பட்ட வியாதியா சித்தப்பா"? நான் கேட்டேன்.*

*"ஆமாம் மகேஷ் . அதே போல் வியாதி உள்ள ஒரு மாணவன் உன் பேனாவை எடுத்து சென்று இருக்கலாம்" .*

*"சித்தாப்பா, அந்த வியாதி உள்ளவர் எப்படி இருப்பார்? அவரின் குணாதிசியம் என்ன "?*

*"பொதுவாக தனிப்பட்ட பாவனை அல்லது நிதி ஆதாயத்தைத் தவிர வேறு காரணங்களுக்காக, பொருட்களைத் திருடுவதற்கான தூண்டுதலை எதிர்க்க இயலாமை 'க்ளெப்டோமேனியா' வியாதி உள்ளவர்களின் குணமாகும். முதன்முதலில் 1816 இல் விவரிக்கப்பட்டது. கிளெப்டோமேனியா மனநல மருத்துவத்தில் ஒரு உந்துவிசைக் கட்டுப்பாட்டுக் கோளாறு என வகைப்படுத்தப்பட்டுள்ளது. கோளாறின் சில முக்கிய குணாதிசயங்கள் ஒரு வெறித்தனமான, இதை நான் செய்து பார்த்தால் என்ன?, என்ற கட்டாய கோளாறாக இருக்கலாம் . ஆனால் போதை மற்றும் மனநிலைக் கோளாறுகளுடன் ஒற்றுமையைப் பகிர்ந்து கொள்கின்றன . க்ளெப்டோமேனியாவின் சில அடிப்படை கூறுகள், மீண்டும் மீண்டும் ஊடுருவும் எண்ணங்கள், திருடுவதில் ஈடுபடுவதற்கான நிர்ப்பந்தத்தை எதிர்ப்பதற்கான இயலாமை மற்றும் செயலைத் தொடர்ந்து உள் அழுத்தத்தை விடுவித்தல் ஆகியவை அடங்கும். இந்த அறிகுறிகள் க்ளெப்டோமேனியா ஒரு வெறித்தனமான-கட்டாய வகை கோளாறாக கருதப்படலாம்.*

*க்ளெப்டோமேனியா நோயால் கண்டறியப்பட்டவர்களுக்கு பெரும்பாலும் மனநிலை, பதட்டம், உணவு, உந்துவிசை கட்டுப்பாடு மற்றும் போதைப்பொருள் பயன்பாடு போன்ற பிற குறைபாடுகள் உள்ளன. அவர்கள் மன அழுத்தம், குற்றவுணர்வு, குற்ற உணர்வுடன் பெரிய நிலைகள், மற்றும் திருடும் செயல் அதனுடன் தனியுரிமை சிக்கல்கள் வேண்டும். திருடுதலுடன் தொடர்புடைய நடத்தைகளின் பண்புகள் பிற சிக்கல்களுக்கும் வழிவகுக்கும், இதில் சமூகப் பிரித்தல் மற்றும் பொருள் துஷ்பிரயோகம் ஆகியவை அடங்கும். க்ளெப்டோமேனியாவுடன் அடிக்கடி நிகழும் பல வகையான பிற கோளாறுகள் பொதுவாக மருத்துவ நோயறிதலை நிச்சயமற்றதாக ஆக்குகின்றன. "*

*" சித்தப்பா ,இப்படி பொருட்களை எடுப்பது திருட்டா"?*

*"சாதாரண. திருட்டு திட்டமிடப்பட்டதாக இருந்தாலும் அல்லது உந்துதலாக இருந்தாலும் வேண்டுமென்றே செய்யப்படுகிற செயல் அல்ல. பொருளின் பயன் அல்லது அதன் பண மதிப்பு ஆகியவற்றால் தூண்டப்படுகிற செயலும் அல்ல. தனிப்பட்ட பயன்பாட்டிற்கோ அல்லது அவற்றின் பண மதிப்பிற்கோ பொருட்கள் தேவையில்லை என்றாலும் பொருட்களைத் த உந்துதலின் காரணத்தால் எடுக்கிறார்கள். தமது செயலின் விளைவினை அவர்கள் அறிவதில்லை .*

*இருபதாம் நூற்றாண்டின் போது,*

*கிளெப்டோமேனியாஎன்பதுடிபார்ட்மென்ட்ஸ்டோர்களின்பரவலுடன்வலுவாக இணைக்கப்பட்டுள்ளது.மேலும் "டிபார்ட்மென்ட் ஸ்டோர் க்ளெப்டோமேனியாக்ஸ்" என்பது அரசியல் தாக்கங்களைக் கொண்ட ஒரு பரவலான சமூக ஸ்டீரியோடைப் ஆகும்.'' மகேஷின் சித்தப்பா சொன்னார்.*

***

*என் அம்மாவின் நெருங்கிய சினேகிதி தர்மினியின் கணவர் ராஜதுரை ஒரு பிரபல ஏற்றுமதி இறக்குமதி வணிகர். தர்மினி மாமி ,அம்மாவோடு ஒன்றாக படித்தவள். அடிக்கடி எங்கள் வீட்டுக்கு வந்து அம்மாவோடு தனது குடும்ப விஷயங்களை பற்றி பேசுவாள். ராஜதுரை தம்பதிகளுக்கு 'தேவன் என்ற மகாதேவன்' ஒரே ஒரு மகன். அவனுக்கு என் வயது . என் வகுப்பு மாணவன். அமைதியானவன். எப்போதும் சிந்தித்த படியே இருப்பான்.அதிகம் எவரோடும் பேசமாட்டான். என்னோடு மட்டும் பாடங்களை பற்றி விளக்கம் கேட்பான். அவனின் போக்கை பற்றி தர்மினி மாமி அம்மாவுக்குபல தடவை கவலையோடு முறையிட்டு இருக்கிறாள் . ஒரு தடவை அவள் என் டாக்டர் சித்தப்பாவுடன் தன் மகனைப் பற்றி பேசியதை கண்டிருக்கிறேன் .*

***

*நான் பேனாவை தொலைத்த நாள் மாலை தர்மினி மாமி எங்கள் வீட்டுக்கு வந்தாள் .*

*''மகேஷ் உன்னோடு நான் ஒரே வகுப்பில் படிக்கும் என் மகன் தேவனைபற்றி பேச வேண்டும்'' என்றாள்.*

*''என்ன மாமி தேவனைப் பற்றி என்னிடம் என்னை கேட்கப் போகுறீர்கள்?''*

*''அவன் உன்வகுப்பில் எப்படி நடக்கிறான் ?''*

*'' தேவன் அமைதியாக சிந்தித்தப்படியே இருப்பான். என்னிடம் சில சமயம் பாடங்களைப் பற்றி கேட்டு தெரிந்து கொள்வான். ஒரு நாள் தேவன் ,மாஸ்டரின் புத்தத்தை அவருக்கு சொல்லாமல் எடுத்ததுக்கு அவரிடம் நல்ல பேச்சு வாங்கினான். அவன் அதை திருடவில்லை என்று வகுப்பில் எல்லோருக்கும் தெரியும்'' நான் சொன்னேன்.*

*''அவனுக்கு அவன்கேட்டதை எல்லாம் நானும் மாமவும் வாங்கி கொடுத்தும் , அவன் ஏன்இப்படி ஏன் நடக்கிறான் என்று எனக்கும் மாமாவுக்கும் புரியவில்லை மகேஷ்'' .*

*'' என்ன மாமி சொல்லுகிறீர்கள். தேவனுக்கு இருப்பது ஒரு மனோவியாதியா''?*

*''அப்படி தான் உன் சித்தப்பா,'' பொருட்களை சில நேரம் எடுக்க வேண்டும் என்ற மனதில் தோன்றும் உந்தல் விதியாக இருக்கலாம்'' என்று சொன்னார் .அது இருக்கட்டும் மகேஷ், இது உன் பார்க்கர் பேனாவா? பார்த்துச் சொல்''*

*அன்று நான் தொலைந்த என் பாக்கர் பேனாவை தர்மினி மாமி தன் கை பையில் இருந்து எடுத்து என்னிடம் நீட்டியதும் என்னால் நம்ப முடியவில்லை .*

*"ஐயோ மாமி இது எனக்கு சிங்கப்பூர் மாமா பரிசாக தந்த 'பாக்கர் 51'பேனா. இதை நான் இன்று வகுப்பில் தொலைத்து விட்டேன்.நாளை ஆசிரியரிடம் முறையிட இருந்தேன். இது எப்படி உங்களிடம் வந்தது"?*

*"இதை நான் தேவன் வீட்டில் வைத்து எழுதுவதைக் கண்டேன். இந்த பேனா அவனிடம் எப்படி வந்தது? என்று அவனை அதட்டிக் கேட்டேன். அவன் சொன்னான் இந்த பேனாவை நீ இல்லாத போது உன்மேசையில் கண்டதும் ,அதை எடுக்க வேண்டும் என்ற உந்தல் தனக்கு வந்தது என்றான் . இது அவனுக்கு உள்ள , 'திடீர்' எனத் தோன்றும் உந்தல் வியாதி . அதனால் ஏற்படும் விளைவுகளைப் பற்றி அவன் பொருட்களை எடுக்கும் போது சிந்திப்பதில்லை .தேவனின் வருங்காலத்தை நினைத்தால் எனக்குப் பயமாக இருக்கு மகேஷ்" மாமி கவலையோடு சொன்னாள்.*

*"எனக்கு அவன் நிலை புரிகிறது மாமி. பாவம் தேவன், அவனுக்கு இருக்கும் இந்த உந்தல் மன வியாதி விரைவில் குணமடைய இறைவனைப் பிரார்த்திக்கிறேன். .தேவனை தண்டிக்க வேண்டாம்" என்றேன் நான் . எனக்கு என் பார்க்கர் பேனா திரும்பவும் கிடைத்த மனதிருப்தி.*

***

# *கதை 24  கழுதையும்  ராஜாவும்*

*ஒரு ராஜா , ராணியோடு மீன்பிடிக்க செல்ல விரும்பினார் . அவர் அரண்மனைவானிலை முன்னறிவிப்பாளரிடம் கேட்டார் .*

*“நானும் ராணியும் இன்று மீன் பிடிக்க போக திட்டம் போட்டிருக்கிறோம் .இன்று மழை பெய்யுமா”?*

*மகாராஜா அடுத்த சில மணிநேரங்களுக்கு,*

*மழை பெய்ய வாய்ப்பில்லை என்று அரண்மனை வானிலை ஆய்வாளர் அவருக்கு உறுதியளித்தார்.*

*எனவே ராஜாவும் ராணியும் மீன்பிடிக்கச் சென்றனர்.*

*வழியில், கழுதையில் சவாரி செய்யும் மீன்பிடி கம்பத்துடன் ஒரு மனிதரை அவர் சந்தித்தார்.*

*அவரை பார்த்து , “ என்ன நீரும் மீன் பிடிக்கவா போகிறீர்”? என்று அந்த மனிதனிடம் கேட்டார்.*

*அவன் அதற்கு , “மகாராஜா, நீங்கள் அரண்மனைக்கு உடனே திரும்ப வேண்டும்! ஒரு குறுகிய நேரத்தில் நான் ஒரு பெரிய மழைக்காலத்தை எதிர்பார்க்கிறேன். "*

*மன்னர் பதிலளித்தார்: "அரண்மனை வானிலை ஆய்வாளரை நான் மிகவும் மதிக்கிறேன்.*

*அவர் ஒரு படித்த மற்றும் அனுபவம் வாய்ந்த தொழில்முறை.தெரிந்தவர் , நான் அவருக்கு மிக அதிக ஊதியம்கொடுக்கிறேன் .*

*அவர் எனக்கு மிகவும் வித்தியாசமான முன்னறிவிப்பைக் கொடுத்தார். நான் அவரை நம்புகிறேன். "*

*என்று மனதுக்குள் சிந்தித்தபடி மன்னர் தனது வழியில் தொடர்ந்தார்.*

*திடீர் என்று, வானத்திலிருந்து மழை பெய்தது.*

*ராஜாவும் ராணியும் நனைந்தனர்.*

*ஆத்திரமடைந்த மன்னர் அரண்மனைக்குத் திரும்பி வானிலை ஆய்வாளரை வேலையில் இருந்து நிறுத்தினார்.*

*பின்னர் அவர் கழுதையில் சென்றவரை வரவழைத்து அவருக்கு மதிப்புமிக்க வானிலை ஆய்வாளர் பதவியை வழங்கினார்*

.

*கழுதையில் சென்றவர் சொன்னார் , ''மாட்சிமை, தாங்கிய ராஜாவே! வானிலை முன்னறிவிப்பு பற்றி எனக்கு எதுவும் தெரியாது.*

*எனது கழுதையிலிருந்து எனது தகவல்களைப் பெறுகிறேன்.*

*என் கழுதையின் காதுகள் வீழ்ச்சியடைவதை நான் கண்டால், அன்று நிச்சயம் மழை பெய்யும்."*

*'' அப்பபடியா !நல்லது, எனவே மன்னர் கழுதையை வேலைக்கு அமர்த்தினார்.*

*இதனால் புத்தி*

இல்லாத கழுதைகளை செல்வாக்கு உள்ள வேலைக்கு அமர்த்தும் நடைமுறை தொடங்கியது.

இந்த தேதி வரை நடைமுறை உடைக்கப்படவில்லை ..

****

# கதை 25  அணில் பிள்ளை

முகவுரை

*வீட்டில் பலவித மிருகங்களையும், ஊர்வனவையும் பறவைகளையும் வளர்ப்பது சிலருக்கு பொழுது போக்கிற்கு பிடித்த செயல்களில் ஒன்று. தனிமை போக்க ஒரு முதியவருக்கும் ஒரு அணிலுக்கும் ஒரு நாயுக்கும் உள்ள உறவை எடுத்துச் சொல்கிறது இக்கதை.*

குமாரதேவன் ( தேவன்) இலங்கை அரசில் முப்பது வருடங்கள் பல ஊர்களில் வேலை செய்த ஒரு கால்நடை வைத்தியர் . மிருகங்கள், பாலூட்டிகள், பறவைகள் மேல் அவருக்கு தனிப்பிரியம். அவருக்கு திருமணமாகி அகிலன். முகிலன் என இரு ஆண் பிள்ளைகள் , இருவரும் தங்கள் குடும்பத்தோடு அமெரிக்காவிலும் கனடாவிலும் வசித்து வந்தனர். தந்தையை தங்களோடு வந்து இருக்கும் படி அவர்கள் கேட்டும், அவர் தன் உயிர் கண்டியில் தன் வீடான குமாரபவனத்தில் தான் பிரிய வேண்டும் , என்பது அவர் விருப்பம்.அதனால் பிறநாடு போக மறுத்து விட்டார் .

கண்டியில், பேராதனை பூங்காவுக்கு அருகே ,அரை ஏக்கர் காணி வாங்கி பல வருடங்களுக்கு முன் அவர் கட்டிய நான்கு அறைகள் கொண்ட வீடு குமாரபவனம். வீட்டுக்கு பின்னாலும் முன்னாலும் பெரும் தோட்டம் , தோட்டத்தில் ஒரு சிறு நீர்த்தொட்டி. அதன் அருகே பறவைகளும் அணில்களும் உண்ணும் ஒரு தானியம் வைக்கும் கூடு ,அதன் அருகே தொங்கிக் கொண்டு இருந்தது .முயல்கள், பறவைகள் அணில்கள், பூனைகள் வந்து நீர் தொட்டியில் குளித்து விட்டுப் போகும் .

சில வருடங்களுக்கு முன் அவரின் மனைவி துளசி, புற்று நோயினால் காலமானாள் . அவள் இருந்த காலத்தில் கணவனையோ பிள்ளைகளையோ நாயோ பூனையோ வீட்டில் வளர்க்க விடவில்லை. ஓய்வு பெற்ற தேவனுக்கு மனைவியின் மறைவுக்குப் பின் பொழுது லாப்ரோடர் இனத்தை சேர்ந்த கருப்பு நிற மெலடி என்ற நாய் குட்டி மட்டுமே இருந்தது. அந்த குட்டியை அவரோடு கால்நடை வைத்தியராக மாத்தளையில் வேலை செய்த சிங்கள நண்பர் மேர்வின் பெரோரா தேவனுக்கு பரிசாகக் கொடுத்தது .

இளையராஜாவின் இசையில் தேவனுக்கு ஆர்வம் அதிகம் .அந்த நாய் குட்டிக்கு இளையராஜாவின் இன்னிசை நினைவாக “மெலடி” என்று பெயர் வைத்து வளர்த்தார். வீட்டில் சமையலுக்கும் தோட்டத்தை கவனிக்கவும் சிவா என்ற , பதுளையை சேர்ந்த 15 வயது சிறுவன் ஒருவன் இருந்தான்.

ஆரம்பத்தில் மெலடிக்கு தோட்டத்துக்கு வரும் முயல்கள் குருவிகளை கண்டால் பிடிக்காது வீட்டுக்குள் இருந்தப்படியே குரைத்து, அதைத் தோட்டத்திலிருந்து துரத்த தன்னை வெளியே விடும்படி ஆராவாரப்படும். தோட்டத்துக்குப் போகும் கதவைத் திறந்து விடும்படி ,வாசற் கதவில் தொங்கும் மணியை மெலடி அடிக்கும். குருவிகளையும் முயல்களையும் போய் பயமுறுத்த அதற்கு ஆவல். அவைகளைத்துரத்திய பின்னர் திரும்பி வந்து வீட்டுக்குள் வர கண்ணாடிக் கதவை மெலடி தன் கால்களால் தட்டும்.

''கதவைத் திறவுங்கள் எனக்கு பசிக்கிறது. நான் சாப்பிட வேண்டும்'' என்பது போல் இருக்கும் அதன் செயல். மெலடி வீட்டுக்குள் வர கதவைத் திறந்து விட்டால், உடனே அது உணவும் தண்ணீரும் வைத்திருக்கும் இடத்துக்கு ஓடும். தண்ணீரை மடக் மடக் என்று குடித்தப்பின்னரே தன் உணவைச் சாப்பிடும்.

மெலடிக்கு ஆங்கலத்திலும் தமிழிலும் தேவன் பேசுவது விளங்கும். ''மெலடி இரு'' என்று ஆங்கிலத்தில் சொன்னால் பதுமையாக இருக்கும். '' மெலடி சத்தம் போடாதே'' என்று தமிழில் சொன்னால் குரைப்பதை நிறுத்திவிடும். ''மெலடி யூ ஆர் ஏ குட் பாய்'' என்றால் வாலை ஆட்டியபடி தனது மகிழ்ச்சியைக் காட்டியவாறு என் அருகே வந்து தன்னைத் தடவச் சொல்லி முகத்தை நீட்டும். அறிவு பள்ளிக்கூடத்துக்கு போய் திரும்பும் வரை முணுமுணுத்தபடியே இருக்கும் .அறிவு வீடு திரும்பியப்பின் சந்தோஷத்தால் அங்கும் இங்கும் ஓடி தன் கவனத்தை அவனிடம் இருந்து கவரப்பார்க்கும். அதற்கு சத்தம் போடும் பொம்மை ஒன்றைத் தேவன் வாங்கிக் கொடுத்திருந்தார். தனது மகிழ்ச்சியை அந்த பொம்மையைக் கவ்வியப் படி ஓடி சத்தம் போட வைத்து காட்டும்.

****

ஒரு நாள் தேவன் மெலடியோடு தோட்டத்தில் உலாவும் போது ... க்ரீச் எனும் சத்தத்தோடு பொத்தென்று, இன்னமும் கண் விழிக்காத ஒரு அணில் குட்டி அவர் காலருகில் விழுந்தது .பூனை ஒன்று அதை உணவாக்க பார்த்துக் கொண்டிருந்தது... மெலடிக்கு பூனைகள் என்றால் பிடிக்காது.. பூனையைக் கண்டவுடன் தன் குரலை உயர்த்தி குரைத்து துரத்தி விட்டது .

அணில் குட்டியை விட்டுச் செல்ல மனமில்லாமல் தேவன் யோசித்தபோது தோட்டதுக்கு வந்த சிவா தேவனைப் பார்த்து, ''பாவம் ஐயா ... இப்ப இந்த குட்டியை கீழ விட்டாலும் அதோட அம்மா வரும்முன் எதாவது ஒரு பூனை வந்து பிடிச்சு சாப்பிட்டு விடும்... நாங்கள் வீட்டுக்கு எடுத்துட்டுபோயிட்டு நாளைக்கி கொண்டு வந்து விட்டிடலாம்'' என்று சொன்னான்..

தேவனும் சரியென்று கொண்டு சென்ற பையில் குட்டியை போட்டு லேசாக மூடி வீட்டுக்கு எடுத்துச் சென்றார்.

*வீட்டுக்குள் போனதும் “சிவா இந்த அணில் குட்டிக்கு என்ன உணவு கொடுப்பது ?”. தேவன் கேட்டார்.*

*“ஐயா !பிறந்த குட்டிக்கு இங்க் பில்லரில் பாலை கொடுப்போம் .*

*“நல்ல யோசனை சிவா” , என்று சொல்லி தன் அறையில் இருந்த இங்க் பில்லரை கொண்டு வந்து அதன் வாயைத் திறந்து பாலைச் சொட்டு சொட்டாக கொடுத்தப் பின் .. அதற்காக உருவாக்கிய துணிக்குவியலில் தூங்க வைத்தார் . இதை மெலடி பார்த்துக் கொண்டு இருந்தது.*

*“ஐயா, இந்த அணில் குட்டிக்கு என்ன பெயர் வைப்போம்” ?சிவா கேட்டான்*

*“சில வினாடிகள் சிந்தித்து விட்டு பிள்ளை போல் பால் குடித்த படியால் “பிள்ளை” என்று பெயர் வைப்போம் . மெலடிக்கு சேர்ந்து விளையாட ஒரு தம்பி வந்து விட்டான்,” என்றார் தேவன்.அவர் சொன்னதை கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்த மெலடி ஓடிப் போய் தூங்கிக் கொண்டிருந்த அணில்பிள்ளையை கொஞ்சியது. அதை தேவனும் சிவாவும் எதிர்பார்க்கவில்லை.*

*“ பார்த்தாயா சிவா . நான் சொன்னது மெலடிக்கு புரிந்து விட்டது . சரியான புத்திசாலியான நாய். இனி மெலடி எங்கள் வீட்டுக்கு மட்டுமல்ல; அணில்பிள்ளைக்கும் பாதுகாவலன்.”*

*அதற்கு ‘அணில்பிள்ளை’ என்று செல்லப்பெயரிட்டு தேவன் அழைத்தார் . சிறிது நாட்களில் அது அவர் வீட்டில் ஒரு செல்லப்பிள்ளை ஆயிற்று . அதன் சேட்டைகளைப் பார்க்கவே ஏகப்பட்ட அக்கம் பக்கத்து வீட்டு நண்பர்கள் வருவார்கள் . தேவனால்  நன்கு பழக்கப்படுத்தியமையால் கையை*
*நீட்டினால் அதில் ஏறி அமர்ந்து கொண்டு அப்படியே தோளில் மேல் ஏறி ஒய்யாரமாய் உட்கார்ந்து கொள்ளும்.... அப்படியே எவ்வளவு நேரெமென்றாலும்...*

*தேவன் ஒரு நிலக்கடலை கொடுத்தால் ,வந்து வாங்கிக்கொண்டு மீண்டும் தேவன் தோள்பட்டைக்கு வந்து சாப்பிட்டு முடித்தவுடன் அவர் மடியில் உரிமையாய் வந்து படுத்து உறங்கும்... பின் அவர் அதை இறக்கி விட்டால் சோபாவின் மேல் இருக்கும் துணியின் அடியில் கதகதப்பான இடத்தில் படுத்திருக்கும் .. ...*

*தேவன் வீட்டில் ஒரு புது ஜீவன் நுழைந்தது. முதலில் ஒரு மாதத்திற்கு இங்க் பில்லர் பால்தான். அந்த வளர்ந்த குட்டி வீட்டுக்குள் ஓட ஆரம்பித்தது... பின் மெலடியின் முதுகில் ஏறி விளையாடியது . மெலடிக்கு சந்தோசம் . அணில்பிள்ளையை தன் முதுகில் வைத்துக் கொண்டு வீட்டுக்குள் மெலடி பவனி வரும். அவர்களின் சகோதர பாசத்தைக் கண்டு தேவன் வியந்தார் .காலையில் அட்டைப்பெட்டிக்குள் வைத்த குட்டி, மாலை வரும்போது ஏதோ ஒரு ரூமிற்குள் ஒளிந்து கொண்டிருக்கும். நாம் வந்த சத்தம் கேட்டால் எட்டிப் பார்க்கும். சில நேரங்களில் எங்காவது துணிமூட்டைக்குள் நன்கு தூங்கிக்கொண்டிருக்கும் .அதுக்குப் பக்கத்தில் மெலடி காவல் இருக்கும்.*

*ஒருமுறை மாத்தளையக்கு உறவினர் வீட்டுக்கு செல்லும்போது பிள்ளையை என்ன செய்வதென்று தெரியாமல் ஒரு கூடையில் போட்டு காரில் ஒய்யாரமாய் மெலடியோடு கூடி சென்றார் ..உறவினர் வீட்டிலும் அதன் குறும்புகள்...*

*அப்போது சரி ,அதன் வாழ்வியல் அதற்கு வேண்டும். மரத்தில் ஏறி ஓடி விளையாடுவது ,அதற்கு மரம் ஏறக் கற்றுத் தரலாம் என்று ஒரு முறை தேவன் தோட்டத்தில் இருந்த மா மரத்தில் ஏற விட்டார் .முதலில் ஏற மறுத்த பிள்ளை அதன் இனத்தின் சத்தம் மரத்தின் மேலே கேட்டதும் ஏறி இறங்கி மூன்று முறை விளையாடியது... நான்காம் முறை மேலே போன பிள்ளையை ஒரு பருந்து கவ்விச் சென்றது.... அய்யோ அதன் வாழ்க்கை முடிந்து விட்டதெனக் கருதினாலும் , ஐந்தாறு பேர் அந்தப் பருந்தை கத்தியவாறே துரத்தினோம்.... என்ன நினைத்ததோ கவ்விய பிள்ளையை ஒரு சிறிது தூரத்தில் போட்டுச் சென்றது... பயத்தில் இருந்த அதனை கொண்டு வந்து தேவன் ஆசுவாசப்படுத்தினார் ....இந்த நிகழ்ச்சிக்குப் பின் தேவனையும், மெலடியையும் விடாமல் பின் தொடர்ந்த வண்ணமே இருந்தது.... யாரேனும் ஒருவர் அதனுடன் கட்டாயம் இருக்க வேண்டும்.... தேவன் பெப்பர் வாசிக்கும் ஷேவ் செய்யும்போது என பின்னாடியே இருக்கும் .... எத்தனை தடவை தெரியாமல் மிதி பட்டாலும் தேவனை விட்டு விலகாமல்..இருக்கும் .*

*இப்படியாகச் சென்ற அதன் வாழ்வில் அதன் எதிரிகள் யார்? என எங்களால் அடையாளம் காட்ட முடியவில்லை... அதற்கு நாமும் ஒன்றுதான் பூனையும் ஒன்றுதான்.*

*ஒரு நாள் அதன் வழக்கமான கண்டுபிடி விளையாட்டைத் தொடங்கியது...ஆம் பருந்து பயத்திலிருந்து விடுபட்டு ... வீட்டிற்கு வெளியில் ஓடும்.... நாம் கூப்பிட்டவுடன் வந்து எட்டிப் பார்க்கும் .... பின் திரும்பவும் ஓடும். இதில் மெலடி அதுக்கு கற்றுக்கொடுத்ததுபோல் தேவனுக்கு இருந்தது ... இப்படியாக ஓடி உள்வந்து என்று இருக்கும்போது ஒருமுறை வெளியே சென்ற பிள்ளை வெகு நேரமாகக் கூப்பிட்டும் வரவில்லை.... சரியென்று வெளியே சென்று பார்த்தபோது பக்கத்துவீட்டுப் பூனை வாயின் ஓரத்தில் இரத்தத்தோடு தன் வாயை நாக்கால் தடவிக்கொண்டிருந்தது....*

*என்ன நடந்திருக்கும் எனப் புரிந்தது... நம்மிடம் விளையாடுவது போலவே பூனையிடமும் அருகில் சென்று மாட்டி தன் உயிரை இழந்தது அந்த ஜீவன்.*

*அணில்பிள்ளை மறைந்த சில நாட்களுக்கு மெலடி உணவு உண்ண மறுத்து சோகமான முகத்தோடு இருந்தது.. அதன் பொம்மை ஓரத்தில் கவனிப்பார் அற்று இருந்தது . மெலடியும் ஒரு வாரத்தில் இறந்தது . தேவன் திரும்பவும் தனிமையானர்.*

அன்று கனடா மிசிசாகவில் இருக்கும் மகனிடம் இருந்து கால் வந்தது: ''அப்பா உங்களுக்கு கனடாவுக்கு என் ஸ்போன்சரில் வர விசா கிடைத்து விட்டது . இனியாவது முடியாது என்று சொல்லாமல் வாருங்கோ. உங்கள் பேரன் ரமேஷு ம் அவனின் அணில் குட்டியும் உங்களை எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள்'' .

தேவன் சற்று நேரம் சிந்தித்து விட்டு, ''சரி மகன், நான் கனடாவுக்கு வாறேன்'' என்றார்.

''அப்போ சிவா என்ன செய்யப்போகிறான்''?.

''என் நண்பர் மேர்வின் அங்கிள் வீட்டில் வேலை செய்வான். என் வீட்டை ஒரு வெளி நாட்டவருக்கு வாடகைக்கு கொடுத்து விடுவேன். லீவில் கண்டிக்கு வரும் போது நான் தங்குவதற்கு முன் அறையை எனக்கு என்று பிடித்து வைத்துக் கொண்டு தான் வாடகைக்கு கொடுப்பேன்'' என்றார் குமாரதேவன் .

'' சரி அப்பா ,உங்கள் விருப்பப் படி செய்யுங்கள்.'' என்றான் மகன் அகிலன்.

***

## *கதை 26  என் தம்பி*

*அன்று வெள்ளிக்கிழமை. நான் பள்ளிக் கூடம் முடிந்து வீடு திரும்பியபோது மணி நான்கு. தம்பி என் கூட வரவில்லை. வாசலில் நான் வரும் மட்டும் என்றும் இல்லாத மாதிரி அம்மா காத்திருந்தாள். வழக்கத்தில் அவள் சமையல் அறையில் வேலை செய்து கொண்டு இருப்பாள். அப்பா வேலையினை முடித்து வர குறைந்தது ஏழுமணியாகும். அவளின் முகத்தில் எதோ பயமும் கோபமும் கலந்து தெரிந்தது.*

*"என்னம்மா இந்த நேரம் வாசிலிலை நிக்கிறாய்?" என்னால் என் பொறுமையை அடக்க முடியவில்லை. வாயில் விரலை வைத்து "உஷ்" என்றாள்அம்மா. இவள் ஏன் சத்தம் போடதே, என்கிறாள்? எதாவது அப்பாவோடை பிரச்சனையோ?என்றது என் மனம்.*

*"ஏன் அம்மா சத்தம் போடவேண்டாம் என்கிறாய். என்ன விஷயம். எனக்குச் சொல்லேன்" நான் அவளைக் கேட்டேன்.*

*கிட்ட வா என்றுசைகை காட்டினாள் அவள். நான் கொண்டு வந்த புத்தகப் பையுடன் அவள் அருகே போனேன்.*

*"அப்பா இண்டைக்கு கெதியிலை வேலையிலிருந்து வந்திட்டார். வரக்கை சரியான கோபத்தோடை வந்தார்".*

*" ஏன்...? என்ன அம்மா நடந்தது அவருக்கு? சொல்லேன்"*

*" அது சரி உண்டை தம்பி எங்கே. அவன் ஸ்கூலாலை உன்னோடை வரவில்லையா?"*

*"அம்மா இதென்ன விசர் கதை கதைக்கிறாய்.  என்டை தம்பிஸ்கூல் பாஸ்கட் பால்(basket ball) டீமிலை இருக்கிறது உனக்குத் தெரியும் தானே. அது தான் பிரக்டிக்சுக்காக நிக்கிறான். நாளைக்கு மேட்ச் இருக்கு. அது சரி ,அப்பா ஏன் கோபமாய் இருக்கிறார்? வேலையிலை அவருக்கு எதும் பிரச்சனையா? அதை முதலிலை சொல்லு." நான் அவளை விடவில்லை.*

*" பிரச்சனைக்குக் காரணமே உன் தம்பிதான்."*

*" எண்டை தம்பியோ? ஏன் ....அவன் ,உனக்கும் அப்பாவுக்கும் அவன் மகன் இல்லையோ. என்ன நடந்தது என்று சொன்னால் தானே எனக்குத் தெரியும்."*

*" எங்கடை மகன் உண்டை தம்பி  மாதிரியே நடக்கிறான்? அவன் போக்கு கொஞ்சக் காலம் சரியில்லை. அப்பாவுக்கும் எனக்கும் அவனை பற்றி சரியான கவலை. அப்பாவிண்டை சினேகிதர் முருகேசு மாமாவை உனக்குத் தெரியும் தானே?"*

முருகேசு மாமாவின் பெயர் சொன்னவுடன் பிரச்சனை உருவாக அவர்தான் காரணம் என்று எனக்கு விளங்கிவிட்டது. அப்பாவும் அவரும் ஒட்டென்றால் ஒட்டு. கனடா வரும்முன்பே அப்பாவுக்கு முருகேசு மாமாவைத் தெரியும். இருவரும் ஊரிலை ஒன்றாக படித்தவர்கள். பல காலச் சினேகிதம். நாங்கள் கனடாவுக்கு வரும் முன்பே முருகேசு மாமா கனடாவுக்கு வந்துவிட்டார். நாங்கள் கனடாவுக்கு வந்தவுடன் அப்பாவுக்கு வேலை கிடைக்க அதிக காலம் எடுக்கவில்லை. முருகேசு மாமா வேலை செய்த இடத்தில் அப்பாவுக்கு செக்கியூரிட்டி வேலை எடுத்துக் கொடுத்தார். அதாலை அப்பா அவர் கீறின கோட்டை தாண்டமாட்டார். எனக்கு முருகேசு மாமாவைப் பிடிக்காது. ஏன் என்றால் ,வீட்டுக்கு வந்தால் துருவித் துருவி நானும் தம்பியும் எப்படி படிக்கிறோம், யார் யார் எங்கடை நண்பர்கள் , என்று தேவையில்லாமல் விசாரிப்பார். தம்பி ஸ்கூல் பாஸ்கெட்பால் டீமிலை இருக்கிறது அவருக்கு தெரியும். முருகேசு மாமாவின் மகன் ரவி எவ்வளவு முயற்ச்சித்தும் டீமில் அவனுக்கு இடம் கிடைக்கவில்லை. அதாலையோ என்னவோ தம்பியை சந்திக்கும் போது " ஸ்போர்ட்சை விட படிப்பு தான் முக்கியம், பாஸ்கட்பாலிலை உன் முழுக்கவனத்தையும் செலுத்தி படிப்பிலை கோட்டை விட்டிடாதே" என்பார்,என் தம்பியிடம் .

தம்பி என்னைப் போல அமைதியானவன் இல்லை. முகத்தை முறிக்கிற மாதிரி கதைப்பான். ஆனால் நல்லவன். அவனின் வித்தியாசமானப் போக்குக்கு காரணம் அவன் பிறந்து வளர்ந்தது முழுவதும் கனடாவில். ஊர் பழக்க வழக்கங்கள் தெரியாது. தமிழில்என்னைப்போல் சரளமாக பேச மாட்டான். கனடாவுக்கு வரும் போது எனக்கு வயது மூன்று. தம்பி என்னுடன் மட்டும் தன் படிப்பைப்பற்றியும் தனது விருப்பு வெறுப்புகளைப் பற்றி கதைப்பான். அப்பாவுக்கு அவனுடைய போக்கு பிடியாது.

"உவன் வெள்ளைக் கனேடியன் போல வாழப்பார்க்கிறான். சாப்பாடும் அப்படிதான். தமிழ்பேச பழகென்றால் முகத்தைச் சுழித்துப்போட்டு போகிறான். கோயிலுக்கு போவோம்;வாடா வென்றால் சாக்குப் போக்குச் சொல்லுவான்." என்று அடிக்கடி சொல்லி அப்பா குறைப்படுவார். அவருக்கும் தம்பிக்கும் இடையே இடைவெளி விரிவடைந்து வருவதை என்னால் அறிய முடிந்தது. அப்பாவும் என் மூலமே அவனுடன் தொடர்பு கொள்வதை என்னால் அறிய முடிந்தது. அம்மாவுக்கோ ஒரு இக்கட்டான நிலை. என்ன சொன்னாலும் தம்பியும் அவள் வயிற்றில் பிறந்தவன் தானே. அதோடு அவனது தோற்றம் என் அப்பாவை போன்றது. இருவரும் ஒரே நட்சத்திரம் அது தான் இருவருக்கும் பொருத்தமில்லை என்பாள் அம்மா. ஆனால் நான் அதை ஏற்கவில்லை. காரணம் தம்பி பிறந்த மூன்றாம் மாதம் தான் அப்பாவுக்கு வேலை செய்யும் இடத்தில் சூப்பவைசராக பதவி உயர்வு கிடைத்தது. தம்பிக்கு என்னை விட்டால் தனது பிரச்சனைகளை சொல்ல வீட்டில் ஒருவருமில்லை என்ற நிலை. படிப்பில் அவன் என்னைப் போல் கெட்டிக்காரன் இல்லாவிட்டாலும் பரீட்சைகளை எப்படியோ பாஸ் செய்து விடுவான். விளையாட்டில் மட்டும் அவனது திறமை வியக்கத்தக்கது. காரணம் அவனது வளர்த்தி வயதுக்கு கூட இருக்கும். என்னிலும் பார்க்க ஆறடி\உயரம்.

*அம்மா அடிக்கடி சொல்லுவாள் "அவன் தன்னுடைய அப்பாவைப் போல என்று. ஆறடிக்கும் கூடுதலான உயரமானவர் .ஊரிலை அவர்திறமையான கால்பந்தாட்ட விளையாட்டு வீரர். அதே போல் தம்பியும் விளையாட்டில் வீரன்" என்று. அம்மாவும் அப்பாவை விட உயரம். நான் அப்பா வழிபோல் உயரம் குறைவு.*

*தம்பி பாஸ்கெட் பாலில் அதி திறமைசாலி என்பதால் அவனுக்கு மற்றைய இனத்தைச் சேர்ந்த சினேகிதர்கள் பலர்இருந்தனர். அவர்கள் கூடவே அவனை அதிகம் காணலாம். தம்பி மேல் அப்பாவுக்கு வெறுப்பு வருவதற்கு முருகேசு மாமா தான் காரணம், என்று எனக்குத் தெரியும். "கொக்கு போல் வளர்ந்திருக்கிறானே தவிர ,வளர்த்திக்கு ஏற்ற படிப்பில் வளர்ச்சியில்லை" என்பார். என் மேல் கூடிய அளவுக்கு அன்பு காட்டி, படிப்பில் எனது கெட்டித்தனத்தை அவனுக்கு சுட்டிக்காட்டுவார். அம்மாவுக்கு உள்ளுக்குள் தம்பி மேலே அன்பு இருந்தாலும் அப்பாவுக்கு பயந்து வெளியிலை காட்டி கொள்ளத்தயங்குவாள். முருகேசு மாமா மேல் அவளுக்கு தனி மரியாதை. எப்பவோ அவர் செய்த உதவிக்கு வாழ்நாள் முழுவதும் அவருக்கு அந்த மரியாதை கொடுக்கவேண்டுமா? குடும்பத்திலை சகோதரர்களுக்கிடையே பாகுபாட்டை வளர்க்க அவர்தான் காரணம் ,என்றது என்மனம்.*

*ஏன் தெரியாது. அப்பாவோடை வேலை செய்கிற முருகேசு மாமாதானே?. அவருடைய மகன் ரவியும் எங்கடை ஸ்கூலிலை தான் படிக்கிறான். இப்ப அந்த மாமாவுக்கு என்ன அப்படி தம்பி மேல் எரிச்சல் ?" என்று அம்மாவைக் கேட்டேன்.*

*"முருகேசு மாமா எதைச் சொன்னாலும் அப்பா முழுக்க நம்புவார். அவர் தான் உன் தம்பியைப் பற்றி கோல் மூட்டி வைத்திருக்கிறார் எனநினைக்கிறேன்"என்றாள் அம்மா.*

*"என் தம்பியைப் பற்றி முருகேசு மாமா ,அப்பாவுக்குச் என்ன சொன்னார்?"*

*" உன் தம்பியை அடிக்கடி கறுவல் பொடியன்களோடு டீம் ஹோட்டன்சிலை காப்பி குடிக்க போகக்கை சிரிச்சு பேசிக் கொண்டிருக்கிறதை தான் கண்டாராம். அதோடு நேற்று அவங்களோடை சேர்ந்து சிகரட் பிடிக்கிறதைக் கண்டதாக முருகேசு மாமாவுடைய மகன் அவருக்குச் சொல்ல அவர் போய் அப்பாவுக்கு சொல்லியிருக்கிறார். அது போதும் அப்பாவுக்கு. ஏற்கனவே உன் தம்பிமேல் அப்பாவுக்கு வெறுப்பு. தான் சொல்லுகிற படி அவன் உன்னைப் போல் கேட்டு நடப்பதில்லை என்று" அம்மா கவலைப்பட்டாள்.*

*"இப்ப எனக்கு விளங்குது நீங்கள் ஏன் இப்படிப் பதட்டப் படுகிறீயள் என்று. அம்மா ஒன்று மட்டும் உங்களுக்குச் சொல்லுகிறேன். உங்கடை இரண்டு பேருடைய புறக்கணித்து நடக்கும் போக்கால், தம்பி உங்களை விட்டுத் தூர விலகிப் போகிறான். சில சமயம் எனக்குச் சொல்லி கவலைப்படுவான். அப்பாவும்அம்மாவும் தன்னைச் சரியாக விளங்கிக் கொள்ளினம் இல்லையென்று. வீட்டிலை அவனோடு அன்பாக நடக்கிறது நான் மட்டும் தான். அதனாலை ஒரு நாள் "அண்ணா நீ மட்டும் வீட்டிலை இல்லாவிட்டால் எனக்கு வீட்டிலை இருக்கவே பிடிப்பதில்லை. ஓடிப் போவோமோ,என்று எனக்கு சிலசமயம் தோன்றுகிறது" என்று சொல்லிக் குறைப்பட்டான்.*

"ராசா, நான் என்ன செய்ய?.அப்பாவின் முன்கோபக் குணம் உனக்குத் தெரியும் தானே. அதோடை தான் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்ற பிடிவாதக் குணம் வேறு. நான் அவரோடை ஒத்துப்போகாவிட்டால் வீட்டிலை ஒரே சண்டையும் சச்சரவுமாகஇருக்கும். இப்ப உண்டை தம்பி சிகரட் குடிப்பான் ; நாளைக்கு அந்த கறுவல்களோடை சேர்ந்து போதை மருந்தும் எடுப்பான். உங்கடை பள்ளிக்கூடத்து பிளே கிரவுண்டிலை பின்னேரம் பள்ளி விட்ட பிறகு போதை மருந்து கூடத்தில் வியாபாரம் நடக்குதாம். அதிலை ஒரு வேளை உண்டை தம்பியும் இருக்கலாம்" என்று அப்பாவுக்கு செய்தி கிடைத்திருக்கு. அப்பாவுக்கு அது கேட்ட நேரம் முதல் கொண்டு வேலை செய்ய முடியவில்லையாம். அது தான் தனக்கு தலையிடி என்று சொல்லிப் போட்டு நேரத்தோடை வீட்டுக்கு வந்து படுத்திருக்கிறார். எனக்கு முழு விஷயமும் சொன்ன போது அவருடைய முகம் கோபத்தாலை சிவந்து போச்சு. அவருக்கு பிளட் பிரசர் வேற. அந்த நேரம் உண்டை தம்பி கிட்ட இருந்திருந்தால் அவன் மேலை கையும் வைச்சிருப்பார்." என்றாள் அம்மா.

" அம்மா பிள்ளைகள் மேல் கைவைக்கிற பழக்கம் இங்கை சரிப்பட்டு வராது என்று அப்பாவுக்குச் சொல்லி வையுங்கோ. அவனும் தோளுக்கு மேலே வளந்திட்டான். உங்க பழக்கமெல்லாம் ஊரிலை. இங்கை பள்ளிக் கூடத்திலை கூட டீச்சர்மார் ஸ்டுடன்சிலை கைவைக்க மாட்டினம். பிறகு போலீசுக்குத்தான் போக வேண்டிவரும். தம்பியிண்டை குணம் உங்களுக்குத் தெரியும் தானே. அவனுக்கு என்னைப் போல பொறுமையில்லை. அப்பா அவன் மேல் சொன்ன குற்றைச்சாட்டை நான் விசாரிக்கிறேன். அப்பாவை ,அவனோடு சிகரட், போதை மருந்து பற்றி கதைக்க வேண்டாம் என்று சொல்லுங்கோ. முருகேசு மாமா சொன்ன அந்த கதையிலை உண்மையிருக்கா? என்று நான் கண்டுபிடிக்கிறேன். அது மட்டும், அப்பாவை தெரிந்தும் தெரியாதது போல இருக்கச் சொல்லுங்கோ. அம்மாவுக்கு ஆறுதல் கொடுத்தேன்.

அம்மா யோசித்தாள். என் மூலமாக அப்பாவின் தலையீடு இல்லாமல் பிரச்சனைக்கு தீர்வு காண்பது தான் நல்லது ,என்று நினைத்தாளோ என்னவோ,

"எண்டை ராசா. உன்னைப் போல பொறுப்புள்ள மகனாக, தாய் தகப்பன் மாருடைய சொல்லுக்கு கட்டுப்பட்டு எப்ப அவன் வரப்போகிறானோ தெரியாது. நாங்கள் இரண்டு பேரும் கண்மூடின பிறகு அவன் பொறுப்பு உன் மேல் தான் வந்து விழப்போகுது போல ,எனக்குத் தெரியுது. எதுக்கும் நான் அப்பா எழும்பினவுடன் கதைக்கிறேன். நீ சொன்னதாக சொன்னால் அவர் கேட்பார். உன் சொல்லுக்கு அவர் கொஞ்சம் மரியாதை தருவார் ."

"எனக்கு நீ இப்ப ஐஸ் வைக்கிறதை விட்டிட்டு,சாப்பிட ஏதும் இருந்தால் தா. மத்தியானம் சாண்விச் தான் சாப்பிட்டேன். நான் வாஷ் ரூமக்கு போயிட்டு வாரன். தம்பி வர ஆறுமணியாகும்" என்று என் அறைக்குள் போனேன். நானும்தம்பியும் ஒரே அறையைத்தான் பாவித்தோம். அவனது படுக்கை வழக்கம் போல் அலங்கோலமாக இருந்தது. புத்தகங்கள் கிழே கிடந்தன. படுக்கைக்கு அருகே உள்ள சுவரில் பாஸ்கட் போல் விளையாட்டு வீரர்களின் படம் அலங்கரித்தன. அவர்களின் பெயர்கள் அவனுக்கு மட்டும் தான் தெரியும். தம்பி நல்லவன்.

எனக்கு அண்ணன் என்று, நல்ல மரியாதை கொடுப்பான். நான் எனது புத்தகப்பையை என் மேசையில் வைத்துவிட்டு அவனது படுக்கையை சரிசெய்தேன். பாவம் !விளையாடி களைத்துப் போய் வருவான் .சாப்பிட்டு விட்டு நேரே படுக்கைக்கு போவான். படுக்கையை சரி செய்ய எங்கே அவனுக்கு நேரம் இருக்கப்போகுது. கீழே பரவிக் கிடந்த புத்தகங்களை பொறுக்கி எடுத்து அவனது மேசையில் ஒழுங்காக அடுக்கினேன். அவனது நோட் புத்தகங்களை மேசையின் லாச்சிக்குள் வைக்க அதைத் திறந்தேன். அதில் நான் கண்ட சிகரட் பாக்கெட் என்னை திடுக்கிட வைத்தது. என்னால் நம்பமுடியவில்லை. எப்படி சிகரட் பாக்கெட் அங்கு வந்தது?. போய் அறைக் கதவை சாத்திப்போட்டு வந்து சிகரெட் பக்கட்டுக்குள்ள என்ன இருக்கிறது ?என்று பார்த்த போது இன்னொரு அதிர்ச்சி எனக்கு காத்திருந்தது.. சிகரட்டுகளை அங்கு காணவில்லை. அதற்குப் பதிலாக இரண்டு சரைகள் இருந்தன. அவற்றில் ஒன்றை திறந்து பார்த்த போது பிரவுன்நிற தூள்இருப்பதைக் கண்டேன். என் கைகள் நடுங்கத் தொடங்கின. அந்தப் பவுடரின் மணத்தில் இருந்து எதோ ஒரு வகைப் போதை மருந்து என என்னால் ஊகிக்க முடிந்தது.இதைத் தான் பிரவுன் சுகர் என்கிறார்களோ?. அப்போ முருகேசு மாமா சொன்னது சரியா?. தம்பி போதை மருந்து எடுக்கத் தொடங்கிவிட்டானா? அட கடவுளே !சில விளையாட்டு வீரர்களைப் போல் தனது சக்தியை அதிகரித்து விளையாட்டில் திறமையைக் காட்ட இதை பழக்கமாக்கிக் கொண்டானா? அல்லது வீட்டில் நிம்மதி இல்லை என்பதற்காக கவலையைப் போக்க இதை எடுக்கிறானா? பல கேள்விகள் என் மனதில் மோதின. மெதுவாக சிகரட் பாக்கெட்டை நான் எடுத்து பரிசோதித்ததை தம்பி அடையாளம் காணாத வாறு திரும்பவும் இருந்த இடத்தில் வைத்தேன். என் தம்பி இந்த நிலைக்கு போவான் ,என்று நான் எதிர்பார்க்கவில்லை. எனக்கு தெரியும், சில மேற்கிந்திய மாணவர்களும், சீன மாணவர்களும் இரண்டொரு தமிழ் மாணவர்களும் போதை மருந்து பாவிப்பதை. ஆனால் என்தம்பியும் அவர்களில் ஒருவன் என்று என்னால் நினைத்துப் பார்க்க முடியவில்லை. இது வீட்டில் தெரிந்தால் வீடே போர்க்களமாக மாறிவிடும். நல்ல காலம் அம்மா எங்கள் அறைக்குள் வருவதில்லை. அவள் கண்டிருந்தால் நிலைமை என்னவாக மாறியிருக்கும்.

வந்த பசி எனக்குப் போய்விட்டது.

****

'' ராசா சாப்பாடு ரெடி. வா வந்து சாப்பிடு'' என்று அம்மா கூப்பிட்டாள். சாப்பிட மேசைக்கு போன நான் அப்பாவும் படுத்தெழும்பி காப்பியும் கையுமாகச் சாப்பாட்டு மேசைக் கதிரையில் இருப்பதைக் கண்டேன்.

''என்னப்பா நன்றாக தூங்கினீங்களா''? என்று அவரை கேட்டப்படி போய் அவருக்கு முன் உள்ள கதிரையில் அமர்ந்தேன்.

பதிலுக்கு ஆம் ,என்று தலையாட்டினார். இன்னும் அவர் கோபம் தனியவில்லை என்று எனக்குத் தெரிந்தது. நானும் அவரை விடவில்லை. எதாவது சந்தோஷமான விஷயத்தை சொல்லி அவர்

*கோபத்தைத் தணிப்போம் என்று “அப்பா இந்த முறையும் வகுப்பிலை எனக்கு தான் கணக்கிலையும் சயன்சிலையும் முதல் மார்க்ஸ்” என்றேன்.*

*“நீ முந்துவாய் என்று எனக்குத் தெரியும்” என்றார் சுருக்கமாக அப்பா.*

*“ கம்பியூட்டர் சையன்ஸ்தான் ,நான் அடுத்த வருஷம் யூனிவர்சிட்டி கோர்சுக்கு செய்ய நினைத்திருக்கிறேன். டீச்சரும் அதை தான் செய்யச் சொல்லுகிறார்” நான் அவர் கவனத்தை என்பால் இழுக்கக் கதையைத் தொடர்ந்தேன்.*

*“அது சரி உன் தம்பி வந்திட்டானா?”*

*“ இல்லை. எந்த நேரமும் பாஸ்கட்பால் பிராக்டிஸ் முடித்து அவன் வரக்கூடும்”*

*“அவனைப்பற்றி உனக்கு அம்மா சொல்லியிருப்பா என்று நினைக்கிறேன். எனக்கு அவன்டை வருங்காலத்தைப்பற்றி நினைக்க கவலையாக இருக்கு. அவன் சேருகிற கூட்டாளிமார் அவ்வளவு சரியில்லை. படிப்பிலை கூட அவன் அவ்வளவுக்கு கவனம் செலுத்தவில்லை போல கிடக்கு. உன்னிடம் கூட கேட்டு படிக்கலாம். வேண்டுமென்றால் அவன் அதை செய்கிறான் இல்லை .டியூசனுக்கு கூட நான் அவனை அனுப்ப ரெடி. ஆனால் விளையாட்டு என்று அதிலை முழுக்கவனமும் செலுத்துகிறான். அவன் வந்ததும் நீ அவனோடை கதைச்சு விளங்கப்படுத்து.” என்றார் ,கோபம் தணிந்து என் அப்பா அமைதியாக.*

*“சரியப்பா. அவன் பிரச்சனையை என்னோடை விடுங்கள். அவனை அணுக வேண்டிய விதம் எனக்குத் தெரியும்” என்றேன் நான்..*

****

*வீட்டுக் கதவுதட்டும் சத்தம் கேட்டது. அம்மா போய் கதவைத் திறந்தாள். தம்பி விளையாடி களைத்துப்போய் உள்ளே வந்தான்.*

*“எப்படி இருந்தது பிராக்டிஸ் மேட்ச் என்றேன்” அவனை நோக்கி.*

*“நல்லது அண்ணா. எண்டை பக்கத்துக்கு 70 யும் மற்ற டீமுக்கு 35 யும் கிடைத்தது. எண்டை பக்கத்திலை நான் மட்டும் 30 ஸ்கோர் பண்ணினேன்.*

*“கெட்டிக்காரன். கலைத்துப்போய்விட்டாய்; போய் வாஷ் எடுத்துப் போட்டு வந்து சாப்பிடு என்றேன்” ஒரு தாயைப்போல். அம்மா ஒன்றுமே பேசவில்லை.*

*“அண்ணா ஐயாம் டயர்ட்” என்று எனக்கு மட்டும் என்னைப் பார்த்து ஆங்கிலத்தில் பதில் சொல்லிவிட்டு அறைக்குள் போய்விட்டான். அப்பாவும் அம்மாவும் பேசாமல் இருந்தனர்.*

*டெலிபோன் மணி அடித்தது. நான் போய் எடுத்தேன். என்னோடு ஒரே வகுப்பில் படிக்கும் என் நண்பன் முகுந்தன் பேசினான்.*

*“ராஜா. உனக்கு விஷயம் தெரியுமே. இண்டைக்கு பின்னேரம் எங்டை ஸ்கூல் பிளே கிரவுண்டிலை போதை மருந்து கடத்தினபோது மூன்று பேர் போலீசிலை பிடிப்பட்டார்கள்*

*,என்று எனக்கு நியூஸ் வந்திருக்கு. உன் தம்பி வீட்டை வந்திட்டானா" ? முகுந்தன் பதட்டத்துடன் கேட்டான்.*

*" ஆம் வந்திட்டான். நாம் இப்ப சாப்பிட்டுக்கொண்டிருக்கிறான். பிறகு நீ டெலிபோன் செய்யேன், என்று பதில் சுருக்கமாக பதில் சொல்லிவிட்டு போய் என் சாப்பாட்டைதொடர்ந்தேன். அப்பா என்னைப் பார்த்தார், யாருடைய கால் என்ற பார்வையில்.*

*"அது முகுந்தன்டை கால். சயன்ஸ் புராஜெக்ட் வொர்க் செய்துபோட்டேனா? என்று கேட்டான்" என்றேன். அவருக்கு முகுந்தன் சொன்னதை சொல்ல விருப்பமில்லை. பிறகு அதை தம்பிமேல் ஆயுதமாக பாவிக்க தொடங்கி பிரச்சனையைப் பெரிது படுத்துவார். சாப்பாட்டை விரைவாக முடித்துக் கொண்டு என் அறைக்குள் போனேன்.*

********

*தம்பி குளித்துப்போட்டு உடுப்பு மாற்றிக்கொண்டிருந்தான். நான் என் பேச்சை ஆரம்பித்தேன்.*

*"தம்பி ஸ்கூல் பிளே கிரவுண்டிலை இண்டைக்கு பின்னேரம் என்ன நடந்தது"?*

*"ஏன் அண்ணா தெரியாத மாதிரி கேட்கிறீயள்?. பாஸ்கெட் பால் பிரக்டிஸ் மேட்ச்தான் நடந்தது" என்றான்.*

*"அதில்லை. இப்ப முகுந்தன் எனக்கு போன் செய்தவன். இண்டைக்கு பின்னேரம், பிளே கிரவுண்டிலை, மூன்று பொடியங்கள் போதை மருந்து வாங்கிற போது போலீசிலை பிடிப்பட்டு போனாங்கலாம். நீ அங்கை இருக்கக்கையிலேயேஅது நடந்தது?" நான் தம்பியைக் கேட்டேன்.*

*"இல்லை அண்ணா. அது நடந்தது எனக்குத் தெரியாது. ஒருவேளை நான் வீட்டை வெளிக்கிட்டு வந்த பிறகு நடந்திருக்கலாம். நான் வரும்போது ஒரு மூலையிலை நாலைந்து பொடியன்கள் கதைத்து கொண்டு நின்றார்கள். ஒரு ஹொண்டா ஸ்போர்ட்ஸ் கார் கூட அங்கை நின்றது. யாருடைய கார் என்று எனக்குத் தெரியாது." என்றான் தம்பி.*

*" அது சரி உனக்கு அந்த கூட்டத்தோடை தொடர்பு இருக்கே"?*

*"அதிலை என்னோடை பாஸ்கெட் பால் விளையாடுகிற ராபர்ட் என்ற ஜமைக்கன் பொடியன் தான் என் நண்பன். ஆனால் அவன் இப்போ போதை மருந்து எடுப்பதில்லை என்று என் தலை மேல் அடித்து போன மாதம் சத்தியம் செய்து தந்தவன். ராபர்ட் சொன்ன வாக்கு தவறாதவன்."*

*"நீ என்ன சொல்லுகிறாய். உன் நண்பனை போதை மருந்து எடுக்கவேண்டாம் என்று நீ தடுத்தாயா?"*

*"கொஞ்சம் பொறு அண்ணா" என்று போய் தன் மேசை டிரோயரைத் திறந்து நான் முதலிலை பார்த்த சிகெரட் பாக்கெட்டை எடுத்து வந்தான். வரும் போது எங்கள் அறைக் கதவைமுடிவிட்டு வந்தான். நான் பேசாமல் அதிர்ச்சியில் நின்றேன்.*

*" அண்ணா இது என்ன என்று உனக்குத் தெரியுமா ?"*

*“ சிகரட் பக்கெட் என்று தெரியும். அதெப்படி சிகெரட் குடிக்காத உன் மேசைக்குள் வந்தது?” என்றேன் ஒன்றும் தெரியாதவன் போல்.*

*“ இதுக்குள் சிகரட் இல்லை. இதோ இது இரண்டு பாக்கெட்டிலையும் இருக்கிறது பிரவுண் சுகர் என்ற போதை மருந்து. இதுக்குத்தான் என் நண்பன் ராபர்ட் அடிமையாகியிருந்தான். இதை எடுத்தால் தன்னால் உற்சாகமாக விளையாடமுடியுமாம். என்னயும் எடுத்துப் பார்க்கச் சொன்னான் .நான் மாட்டேன் எண்டிட்டன். அவனைப் பேசி நிறுத்தப்பார்த்தேன் முடியவில்லை. இரண்டு கிழமை அவனோடு கதைப்பதை நிறுத்தினேன். அவனால் என்னோடு கதைக்காமல் இருக்க முடியவில்லை. எவ்வளவோ என்னோடு கதைக்கப் பார்த்தான். முடியவில்லை. கடைசியிலை தான் பிரவுண் சுகர் எடுக்கிறதை நிப்பாட்டுகிறேன் ,என்று என் தலைமேல் அடித்துச் சத்தியம் செய்து தன்னிடம் இருந்த இந்த இரண்டு சுகர்பாக்கெட்டுகளையும் தந்தவன். அதை நான் எடுத்து கொண்டு இங்கை பத்திரமாக வைத்திருக்கிறேன். எப்போ அவன் தனது வாக்குறுதியை மீறி திரும்பவும் எடுக்கத் தொடங்குறானோ அப்போ இதை கொண்டு போய் அவன் முகத்திலை வீசி எறிந்து, “இதை எவ்வளவு வேண்டுமானாலும் தின்று சீரழிந்து போ. உன் நட்பு எனக்கு வேண்டாம் என்று சொல்ல இருக்கிறேன்” என்றான் தம்பி.*

*நான் செய்வது அறியாமல் திகைத்துப் போய் நின்றேன். நானும் மற்றவர்களின் பேச்சைக் கேட்டு என் அருமைத் தம்பி மேல் சந்தேகப்பட்டேனே!. என் தம்பி தன் நண்பனைத் போதை மருந்து அருந்தாமல் செய்யும் அளவுக்கு தன் நட்பை ஆயுதமாக பாவித்த நல்ல மனம் படைத்தவன், என்று அப்பா அம்மாவுக்கு தெரிந்தால் எவ்வளவுக்கு சந்தோஷப்படுவார்கள்.*

*உடனே நான் அவனை இறுகக் கட்டிப்பிடித்து கன்னத்தில் முத்தம் கொடுத்தேன். எனது கண்களில் இருந்த கண்ணீர் அவன் கன்னத்தை நனைத்தது...*

**********

# கதை26 கழுகு மனிதன்

அந்த அடர்ந்த காட்டில் ஒரு பெரிய குன்றம், பலவிதமான பறவைகள், மிருகங்கள், ஊர்வன காட்டு மலர்கள் நிறைந்து இருந்தன. அந்தக் காட்டுக்கு அருகில் ஒரு கிராமம், அந்த கிராமத்தில் ஒரு தாமரைக் குளம்,சடைத்த ஆலமரங்கள், ஒரு வளைந்து ஓடும் ஆறு. பச்சை பசேல் என்ற வயல்கள். அந்த காட்டில் ஒரு சித்தர் பலரின் கண்களுக்கு தெரியாமல் தவம் செய்து வந்தார். அவரை 'காணா சித்தர்' என்பர் ஊர்வாசிகள்.

அந்த காட்டில் கழுகன் என்ற ஒரு வேடன் வசித்து வந்தான். அவன் மாமிசம் உண்பதில்லை. காட்டில் கிடைக்கும் பழங்களும், கிழங்குகளும், இலைகளுமே அவன் உணவு. அவன் தனித்து ஒரு குடிசையில் வாழ்ந்து வந்தான். ஒரு நாள் இரவு அவன் கனவில் தாடி

வைத்த 'காணா சித்தர்' தோன்றினார்.

கழுகன் கனவில் அவரோடு பேசத் தொடங்கினான்.

"ஐயா பெரியவரே நீர் யார்? என்னைத் தவிர வேறு ஒருவரும் இல்லாத இந்தக் காட்டில் உமக்கு என்ன வேலை" கழுகன் கனவில் அவரைக் கேட்டான்.

"உன் பெயர் கழுகன் தானே"?

" ஆமாம் அது என் பெயர் என்று உமக்கு எப்படித் தெரியும்"?

"நான் எல்லாம் அறிந்த சித்தர். அந்த குன்றத்தின் உச்சியில் பல வருடங்களாக தவம் இருக்கிறேன்".

"அப்படியா?நான் பல தடவை குன்றத்தின் உச்சிக்கு போய் இருகிறேன். வெகு தூரத்தில் உள்ள கிராமவாசிகள் பயத்தில் அந்த குன்றத்துக்கு சென்றதில்லை. அனால் அங்கு துணிந்து சில தடவைகள் செல்வேன். உம்மை ஒரு நாளும் நான் காணவில்லையே".

"நான் எவரது கண்களுக்கும் தெரியமாட்டேன். எனக்கு பிடித்தவர் கனவில் மட்டுமே தோன்றுவேன்".

"அப்ப என்னை எப்படி உமக்கு பிடித்தது "?

"நீ ஒரு வேடனாக இருந்தும் மிருகங்களை வேட்டையாடி உண்பதில்லை. அதனால் உன் கனவில் தோன்றினேன்.நீ தினமும் உண்பதில் எனக்கு ஒரு பகுதி தருவாயா"?

" தருகிறேன். அதுக்கு எனக்கு என்ன செய்வாய்"?

"என்ன வேண்டும் உனக்கு கேள்"?

*“நான் இந்த பறவைகளைப் போல் உருமாறி வேகமாக எங்கு வேண்டுமானாலும் பறந்து சென்று ஆபத்தில் இருப்பவர்களுக்கு உதவிட ஆசை .அதுக்கு தேவையான சக்தி எனக்கு இருக்க வேண்டும்.”*

*“உனக்கு நல்ல நோக்கம் உள்ள மனசு .நீ வேண்டும் வரத்தை நான் தருவேன் , ஆனால் எனக்கு குன்றின் உச்சியில் உள்ள வேப்பம் மரத்தின் கீழ் தினமும்நீ உண்ணும் உணவில் ஒரு பங்கு வைக்க வேண்டும் . அதை செய்ய உனக்குச் சம்மதமா”?*

*“சம்மதம் .நான் உருமாறி சக்தி பெற நான் என்ன செய்யவேண்டும் “?*

*“ இதோ இந்த மந்திரத்தை மூச்சுப்பிடித்து மூன்று தடவை தியான நிலையில் இருந்து“ஓம் ரீம் கரீம் நான் வேண்டுவதை தா சிவாய ஓம்” என்று சொல் . நீ நினைத்த உருமாற வேண்டிய பலம் பெறுவாய். இது நீ செய்யும் நல்ல காரியத்துக்கு மட்டுமே பயன் படும்” என்று கனவில் வந்த சித்தர் சொல்லி மறைந்தார் .*

****

*காட்டுக்கு அருகில் உள்ள செழிப்பான கிராமத்தை அடிக்கடி கொள்ளைகாரர்கள் நால்வர் தாக்கி சூறையாடினர் . அந்த ஊரில் வசித்த பெண் ஒருத்தியின் கணவன் கொள்ளைக்காரர்களால் கொலை செய்யப்பட்டான் என்பது அவளின் மகன் முருகன் மூலம் கழுகனுக்கு தெரியவந்தது . அந்த விதவை பெண்ணின் மகன் கழுகனுக்குதெரிந்தவன் . தன் அம்மாவின் பரிதாப நிலையை கழுகனுக்கு முருகன் சொன்னான் .*

*“ ஐயா, வருகிற பௌர்ணமி தினமன்று திரும்பவும் அவர்கள் வந்து எனது அழகிய அம்மாவை தமது இச்சைக்கு இறையாக்குவார்கள் , என்று சொல்லி அந்த சிறுவன் முருகன் அழுதான் .*

*“ தம்பி நீ பயப்படாதே , உன் அம்மாவை அந்த கொள்ளைக்காரர்களிடம் இருந்து காப்பாற்றுவேன்” என்றான் கழுகன்.*

*பௌர்ணமி தினம் வந்தது , நான்கு கொள்ளைக்காரர்கள் குதிரையில் வந்தார்கள் . ஊர்வாசிகள் ஓலம் இட்டனர் . அவர்களின் வருகைக்கு காத்திருந்த கழுகன், சித்தர் கனவில் அவனுக்கு சொல்லிக் கொடுத்த மந்திரத்தை தியான நிலையில் இருந்து , தான் இருபதடி உயரமுள்ள மிகவும் பலம் உள்ள கழுகுவாக மாற வேண்டும், என்று ஜபித்தான் . மறு நிமிடம் அவன் மிக பெரிய கூர்மையான அலகும் , நீண்ட சிறகுகளும், கால்களும் கொண்ட கழுகு மனிதனின் உருவம் பெற்றான். கிராமத்துக்கு வந்த கொள்ளைக்காரர்கள் பயங்கர தோற்றமுள்ள் பிரமாண்டமாமான கழுகு மனிதனின் உருவத்தை கண்டு பயந்து திரும்பவும் வந்த வழியே ஓட முயற்சித்தனர் . கழுகு மனிதன் அவர்களை ஒட விடவில்லை . பறந்து சென்று தன் கூர்மையான அலகினாலும் கால்களினாலும் தாக்கிக் கொன்றான். அவர்கள் வந்த குதிரைகள் காட்டுக்குள் தப்பி ஓடின . நான்கு கொள்ளைக்காரர்களும் உடலில் சதை கிழிந்து இரத்தம் ஒட தப்பி ஓட்ட பார்த்தனர் . கழுகு மனிதன் அவர்களை விடவில்லை. தொடர்ந்து தாக்கி*

அவர்களைக் கொன்றான். அவர்களின் உடல்களை தன் பலம் மிக்க கால்களினால் தூக்கி உயரே பறந்து தூரத்தில் இருந்த கடலில் கொண்டு போய் போட்டான். கிராம மக்கள் நிம்மதி அடைந்தனர். கிராமத்துக்கு திரும்பவும் சுயரூபம் பெற்று வந்தான். கிராமவாசிகள் அந்த அதிசய மனிதனின் வீரச்செயலைக் கண்டு ஆச்சரியப்பட்டனர். கழுகன் காட்டுக்குள்` சென்றான்.

****

இன்னொரு நாள் கிராமத்தில் உள்ள பாதையில் மாட்டு வண்டிகள் போய் வர ஒரு பெரிய பாராங்கல் ஒன்று தடையாக இருந்தது. அந்த ஊர்வாசிகள் விதவையின் மகன் முருகன் மூலம் கழுகனிடம் உதவி கேட்னர். ஒரு நாள் இரவு அமாவாசை இரவு ஊர்வாசிகள் தூங்கும் போது பாராங்கல் அருகே சென்று தியான நிலையில் மந்திரம் ஜபித்து கழுகு மனிதன் உருவம் பெற்றான். அந்த கல்லை தனது கழுகு பறவையின் கால்களால் தூக்கி உயரே பறந்து சென்று கடலில் போட்டான். அடுத்த நாள் காலை ஊர்வாசிகள் பாதையில் கல் இல்லாததை கண்டு கழுகு மனிதனுக்கு நன்றி சொல்லி வணங்கினர்.

****

கிராமத்துக்கு அருகில் உள்ள காட்டில் ஒரு புலி இருந்தது. அது அடிக்கடி ஊர்வாசிகளையும், அவர்களின் ஆடு மாடுகளை தாக்கி, கொன்றுத்தின்றது .ஊர்வாசிகள் முருகனை கழுகு மனிதனிடம் உதவி கேட்டு அனுப்பினார்கள் .இரு நாட்களில் கிராமத்தைத் தாக்கிய புலி பாதை ஓரத்தில் உடல் கிழிந்து இறந்து கிடந்தது .புலியின் உடல் முழுவதும் கழுகு மனிதனின் நகத்தின் அடை யாளங்கள் தெரிந்தன.

***

அந்த கிராமம் கழுகு மனுதனின் பாதுகாப்புடன் செழித்து வளரத் தொடங்கியது. அக்கிராமத்தின் வளர்ச்சி மேல் பொறமை கொண்ட பக்கத்து ஊர் செல்வம் படைத்த ஊர். வளரும் கிராமக்களை பூண்டோடு அழிக்க ஒரு சீன நிறுவனத்தின் உதவியை நாடியது. அவர்கள் ஒரு இரசாயன தொழிற்சாலை ஒன்றை தமது பணம் வசதி உள்ள ஊரில் நிறுவி கழிவு நீரை கழுகு மனிதனின் பாதுகாப்புடன் வளரும் கிராமத்தின் ஊடாக செல்லும் ஆற்றில் விட முடிவு செய்தனர். `அந்த வளரும் கிராமம் விவசாயத்துக்கும், குளிப்பதுக்கும், வீட்டு பாவனைக்கும் அந்த ஆற்று நீரை நம்பி வாழ்ந்தனர். இரசாயனம் கலந்த ஆற்று நீரால் ஊர் மக்கள் இறக்கத் தொடங்கினர் விவசாய பயிர்கள் நாசமாகின. வறுமை கிராமத்தை தழுவத் தொடங்கிற்று. ஊர் மக்கள் அரசுக்கு முறையிட்டும் பயன்கிட்டவில்லை. காரணம் பண வசதி உள்ள அந்த சீன நிறுவனம் அரசியல்வாதிகளுக்கு பணம் கொடுத்து நடவடிக்கை எடுக்காமல் தடுத்து விட்டது. பாதிக்கப் பட்ட கிராமவாசிகள் அந்த சிறுவன் மூலம் கழுகுமனிதனிடம்உதவி கேட்டு அனுப்பினர். இரு நாட்களில் அந்த இரசாயன தொழிற்சாலை எரிவதைக் கண்டனர். அதன் பின் தொடர்ந்து சில நாட்கள் மழை

பெய்ததினால் இரசாயனம் கலந்த ஆற்று நீர் மறைந்தது. கிராமம் சுயநிலைக்கு திரும்பியது .

****

அந்த கிராமத்தில் சுமார் கி .பி முதலாம் நூற்றாண்டு சிவன் சிலை ஒன்று இருந்தது . அது விலை மதிக்க முடியாதது . அதை வெளிநாட்டவர் இருவர், உள்ளூர் திருடனின் உதவியோடு திருட திட்டம் போட்டதை முருகன் ஒளிந்து இருந்து கேட்டுவிட்டான் . அதை முருகன், வேடன் கழுகனுக்கு சொன்னான் . அடுத்த நாள் காலை வெளிநாட்டவர் இருவரும் திருடன் என்று ஊர்வாசிகளினால் கருதப்பட்டவனும் குளத்தில் பிணமாக மிதந்தனர் . ஊர்வாசிகளுக்கு புரிந்தது யார் அதை செய்தது என்று .

ஊர்வாசிகள் தம் கிராமத்தைப் பல தாக்குதல்களில் இருந்து கழுகு மனிதன் காப்பாற்றியதன் நினைவாக இருபது அடி உயரத்தில் கழுகு ஒன்றின் சிலை வைத்து வணங்கத் தொடங்கினர் . தமது ஊருக்கு கழுகுபுரம் என்று பெயர் சூட்டி, சிலைக்கு பொங்கி படைத்து வணங்கினர் . கழுகு மனிதன் ஊருக்கு காவல் தெய்வம் ஆனார்.